

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டம்

(262 ஆம் அத்தியாயம்)

(2025 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதி வரையிலான அனைத்து திருத்தங்களையும் உள்ளடக்கியது.)

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள்

முன்னுரை

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) இம்மறுபதிப்பில் 2025, பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட எல்லாத் திருத்தங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆயினும் இது நியதிச் சட்ட மறுபதிப்பொன்றல்ல. வசதியின் நோக்கத்திற்காகவே இது வெளியிடப்படுகின்றது.

தேர்தல் ஆணைக்குழு.

LGE 250031- 3,000 (2025/02)

உள்ளடக்கம்

பிரிவு	விபரம்	பக்கங்கள்
1.	சுருக்கப் பெயர்	1
2.	கட்டளைச்சட்டத்தின் ஏற்புடைமை	1
3.	தேர்தற் பிரதேசங்கள்	1

பாகம் I

தேசிய எல்லை நிர்ணயக் குழுவொன்றைத் தாபித்தல்

3அ.	தேசிய எல்லை நிர்ணயக் குழுவொன்றைத் தாபித்தல்	2
3ஆ.	தேசிய குழுவின் பணிப்பாணையும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கையும்	2
3இ.	உள்ளூர் அதிகார சபை ஒவ்வொன்றிற்கும் உருவாக்கப்பட்ட வட்டாரம் ஒவ்வொன்றினதும் எல்லா எல்லைகளையும் பெயர்களையும் இலக்கங்களையும் எழுத்துக்களையும் பற்றிய கட்டளையை வெளிப்படுத்துதல்	3
3ஈ.	அமைச்சர் ஏதேனும் வட்டாரத்தின் எல்லைகளை மாற்றுதல்	3
3உ.	மாவட்ட மட்டத்தில் மாவட்ட எல்லை நிர்ணயக் குழுக்களைத் தயாரித்தல்	4

பாகம் I அ

கண்காணிக்கும் பணியாட்டொகுதி

4.	அலுவலர்கள் மற்றும் பணியாட் குழுக்கள்	4
5.	அலுவலர்களின் தத்துவங்களும், கடமைகளும்	5

பாகம் II

வாக்காளர்களினதும் உறுப்பினர்களினதும் தகைமைகளும் உறுப்பினர்களின் பதவியை வறிதாக்குதலும் வாக்காளர்களின் தகைமைகள்

6.	வாக்காளர்களின் தகைமையீனங்கள்	5
7.	தேர்தற் பிரதேசங்களின் தேருநர் நிரல்களிற் பெயர்களைச் சேர்த்தல்	5
8.	உறுப்பாண்மைக்கான பொதுத் தகைமைகள்	6
9.	உறுப்பினராக இருக்கமுடியாமற் செய்யும் தகைமையீனங்கள்	6

பதவியை வறிதாக்குதல்

10.	உறுப்பாண்மையை வறிதாக்குதல்	14
10அ.	அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினது உறுப்பினராக இல்லாதொழிந்ததன் மேல் பதவியை வறிதாக்குதல்	14
11.	பதவியை வறிதாக்கிய பின்னர் உறுப்பினராகக் கடமையாற்றுவதற்கான தண்டம்	15

பக்கங்கள்

பாகம் III

வாக்கெடுப்பு மாவட்டங்களாகப் பிரித்தலும் தேருநர் நிரல்களைத் தயாரித்தலும்

12. உள்ளூர் தேர்தல்களுக்குப் பாராளுமன்ற வாக்கெடுப்பு மாவட்டம், வாக்கெடுப்பு மாவட்டமாகக் கருதப்படுதல் *15*

12அ. ஓர் உள்ளூர் அதிகார சபையின் அல்லது ஒரு வட்டாரத்தின் நிருவாக எல்லைகளை மாற்றுதல் *17*

நிரல்களைத் தயாரித்தல்

12ஆ. உள்ளூர் தேர்தல்களுக்குப் பாராளுமன்ற இடாப்புக்களை பயன்படுத்துதல் *17*

12ஈ. தேருநர் நிரல் பார்வையிடக் கூடியதாக இருத்தல் *17*

12உ. தேர்தல்கள் அலுவலர் எழுத்துப் பிழைகளைத் திருத்துதல் *18*

12ஊ. நிரல்களை தயாரித்தல் தொடர்பான ஏற்பாடுகளின் ஏற்புடைமை *18*

13.
14. நீக்கஞ் செய்யப்பட்டுள்ளது.
15.

நிரல்களைத் தயாரித்து முடித்தமை பற்றிய அறிவித்தல்

16. தேருநர் நிரல் தயாரித்து முடிந்தமை பற்றிய அறிவித்தல் *18*

உரிமைக் கோரிக்கைகளும் ஆட்சேபனைகளும்

17. உரிமைக் கோரிக்கைகளும் ஆட்சேபனைகளும் *18*

18. உரிமைக் கோரிக்கைகளும் ஆட்சேபனைகளும் வெளியிடுதலும் விசாரித்தலும் *19*

19. தேர்தல் நிரல்களில் ஆள் ஒருவரின் பெயர் காணப்படுதல் பற்றிய சிறப்பேற்பாடு *21*

மேன்முறையீடுகள்

20. தேர்தல்கள் அலுவலரின் முடிவுகளுக்கு எதிராகச் செய்யப்படும் மேன்முறையீடுகள் *23*

21. உயர் நீதிமன்றத்தின் கட்டளை *24*

நிரல்களை அத்தாட்சிப்படுத்துதல்

22. தேருநர் நிரலை அத்தாட்சிப்படுத்துதல் *25*

23. தேருநர் நிரல் வலுவுக்கு வரும் தேதி *25*

பக்கங்கள்

பாகம் IV

தேர்தல்கள்

24. தேர்தல்கள் இக்கட்டளைச்சட்டத்தின் கீழ் நடாத்தப்பட வேண்டும் *26*

25. தேர்தல்கள் நடாத்தும் தேதி *26*

நியமனங்கள் பற்றிய அறிவித்தல்

26. நியமனக் காலப்பகுதி பற்றிய அறிவித்தல் *26*

தெரிவத்தாட்சி அலுவலர்களை நியமித்தல்

27. தெரிவத்தாட்சி அலுவலர்களை நியமித்தல் *26*

அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள்

27அ. அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள் *27*

27உ. உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்களின் நோக்கத்திற்கென அங்கீகரிக்கப்பட்ட கட்சியொன்றின் பிளவுபட்ட பிரிவுகள் சம்பந்தமாக ஆணையாளருக்குள்ள தத்துவம் *28*

27ஊ. மொத்த எண்ணிக்கையினரான பெண் உறுப்பினர்கள் *28*

நியமனப் பத்திரங்கள்

28. நியமனப் பத்திரங்கள் *29*

29. வேட்பாளர்களின் சார்பில் செலுத்தப்பட்ட வைப்புப் பணங்கள் *33*

30. வைப்புப் பணத்தொகைகளைக் கையாளுதல் *34*

நியமன காலப்பகுதிக்குப் பின்னரான நடவடிக்கைகள்

31. நியமனப் பத்திரங்களை நிராகரித்தல் *35*

32. நீக்கஞ் செய்யப்பட்டுள்ளது

33. நீக்கஞ் செய்யப்பட்டுள்ளது

34. நீக்கஞ் செய்யப்பட்டுள்ளது

35. நியமனப் பத்திரங்களெவையும் பெற்றுக் கொள்ளப்படாத விடத்திலான நடவடிக்கை முறை *37*

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள்

பக்கங்கள்

போட்டியில்லாத தேர்தல்கள்

36. போட்டியில்லாத தேர்தல்கள் *38*

போட்டியுள்ள தேர்தல்கள்

37. போட்டியுள்ள தேர்தல்கள் *39*

38. வாக்கெடுப்புப் பற்றிய அறிவித்தல் *40*

39. பெயர் நியமனத்திற்குப் பின்னர் வேட்பாளர் ஒருவர் இறத்தல் *41*

39அ. வாக்காளரது இலக்கம், வாக்களிக்கும் நிலையம், வாக்களிக்கும் நேரம் முதலியன பற்றி வாக்காளருக்கு அறிவித்தல் *41*

39ஆ. அஞ்சல் மூலம் வாக்களித்தல் *43*

40. தலைமை தாங்கும் அலுவலர்களை நியமித்தல் *46*

41. வாக்கெடுப்பு நேரங்கள் *46*

42. வாக்குச்சீட்டின் மூலம் வாக்குகள் அளிக்கப்படுதல் *46*

43. வாக்களிக்கும் உரிமைக்குத் தேருநர் நிரல் முடிவான சான்றாதல் *47*

44. வாக்குப் பெட்டிகள் முதலியனவற்றை வழங்குதல் *47*

45. வாக்கெடுப்பு நிலையங்களில் வெளிக்காட்டி வைக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் *48*

46. வாக்குச்சீட்டுப் பெட்டிகள் *48*

47. வாக்குச் சீட்டுக்கள் *49*

48. அலுவலக குறியீடு *49*

49. வாக்கெடுப்பு முகவர்களை நியமித்தல் *49*

50. வாக்கெடுப்பு நிலையத்தினுட் செல்லவிடுதல் *50*

51. வாக்குச்சீட்டுப் பெட்டிகளில் இலச்சினையிடுதல் *51*

52. வெளிப்படுத்துகையைச் செய்யுமாறு செல்லுபடியான ஆளடையாள ஆவணமொன்றைக் காண்பிக்குமாறும் வாக்காளரைத் தேவைப்படுத்துவதற்குள்ள தத்துவம் *51*

53. வாக்களிக்கும் முறை *53*

53அ. வாக்காளரைப் பரிசோதித்தலும் தோதான குறியீட்டை இடுதலும் *53*

54. வாக்காளர்கள் வாக்களிப்பதை இயலச் செய்வதற்கு உதவி புரிதல் *55*

55. பதிலிமூலம் வாக்களித்தல் தடை செய்யப்பட்டுள்ளது *56*

56. கேட்டுப்பெறும் வாக்குச்சீட்டுக்கள் *57*

57. பழுதுபட்ட வாக்குச்சீட்டுக்கள் *57*

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள்

வாக்கெடுப்பை முடித்தல்

		பக்கங்கள்
58.	வாக்கெடுப்பை முடித்தல்	57
59.	வாக்கெடுப்பை முடித்த பின்னரான நடவடிக்கை முறை	58
59அ.	வாக்கெண்ணல்	59
59ஆ.	வாக்குகளை எண்ணுவதற்கான இடத்தை மாற்றுதல்	60
60.	வாக்கெண்ணும் முகவர்களை நியமித்தல்	61
61.	வாக்கெண்ணும் நேரமும் பெறுபேற்றை வெளியிடுதலும்	61
61அ.	அஞ்சல் வாக்குச் சீட்டுக்களை எண்ணுதல்	61
62.	வாக்கெண்ணுதல்	62
63.	நிராகரிக்கப்படும் வாக்குச்சீட்டுக்கள்	62
63அ.	62 ஆம் அல்லது 63 ஆம் பிரிவின் கீழான தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகள் தொடர்பான சிறப்பு ஏற்பாடுகள்	64
64.	வாக்கெண்ணுதலை முடிவுறுத்தல்	64
65.	ஆகக் கூடுதலான வாக்குகளைப் பெறுகின்ற வேட்பாளரை உறுப்பினரொருவராக வெளிப்படுத்துதல்	64
65அ.	பல்லுறுப்பினர் வட்டாரமொன்றுக்கு தேர்ந்தெடுக்கப்படவுள்ள உறுப்பினர்களை வெளிப்படுத்துதல்	65
65அஅ.	பெண் உறுப்பினர்களைப் பதிவு செய்தல்	66
65ஆ.	தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது தெரிந்தனுப்பப்படுவதற்கு உரித்துள்ள வேட்பாளர்கள்	67
66.	முடிவை வெளியிடுதல்	68
66அ.	உள்ளூர் அதிகார சபைகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்புதல்	69
66ஆ.	அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்று அல்லது சுயேச்சைக் குழுவொன்று ஐம்பது சதவீதத்திற்கும் அதிகமான ஆசனங்களை பெறுமிடத்து மாநகர முதல்வரை வெளிப்படுத்துதல்	71
66இ.	உள்ளூர் அதிகார சபையின் முதலாவது கூட்டம்	72
66ஈ.	மாநகர முதல்வரையும், பிரதி முதல்வரையும் ஓர் உள்ளூர் அதிகார சபையின் முதலாவது கூட்டத்தின் அல்லது வேறு கூட்டத்தில் தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கை முறை	73
66உ.	உறுப்பினரெவரும் தேவைப்பட்ட எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெறாதவிடத்து	75
66ஊ.	பிரதி மாநகர முதல்வரைத் தேர்ந்தெடுத்தல்	76
66எ.	மாநகர முதல்வர் அல்லது பிரதி மாநகர முதல்வர் பதவியிலான வெற்றிடம்	76

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள்

		பக்கங்கள்
67.	வாக்கெடுப்பு முடிவடைந்த பின்னர் வாக்குச்சீட்டுக்கள் முதலியவற்றை கையாளுதல்	76
68.	நீக்கஞ் செய்யப்பட்டுள்ளது	

தேர்தல்கள் பற்றிய பொது ஏற்பாடுகள்

69.	கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாமை	77
70.	பாடசாலைகளை வாக்கெடுப்பு நிலையங்களாக உபயோகித்தல்	77
72.	தலைமை தாங்கும் அலுவலருக்கு உதவி புரிவதற்கென நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மூலம் தலைமை தாங்கும் அலுவலர் கடமையாற்றலாம்	78
72அ.	வாக்கெடுப்பு நிலையங்களிலான குழப்பங்கள்	78
73.	வேட்பாளர் அவரது சொந்த வாக்கெடுப்பு முகவராக அல்லது வாக்கெண்ணும் முகவராகச் செயலாற்றலாம் அல்லது அத்தகைய முகவருக்கு உதவியளிக்கலாம்	79
74.	வேட்பாளர்களின் முகவர்கள் வருகை தராமை	79
75.	வாக்கு வெளிக்காட்டப்படுவதனை தடை செய்தல்	79
75அ.	குழுத்தலைவர்	80
76.	தேர்தல்கள் இரகசியத்தை பேணுதல்	80
76அ.	ஆணையாளர் பணிப்புக்களை வழங்குதல்	82

தேர்தல்கள் சம்பந்தமான தவறுகள்

77.	இரகசியம் பேணுதல் பற்றிய ஏற்பாடுகளை மீறுதல்	82
78.	நியமனப் பத்திரங்கள், வாக்குச்சீட்டுக்கள் முதலியன தொடர்பான தவறுகள்	82
81அ.	வாக்கெடுக்கும் நாளன்று குறிப்பிட்ட சில செயல்கள் புரிதலை தடை செய்தல்	84
81ஆ.	துண்டுப் பிரச்சாரங்கள், சுவரொட்டிகள் முதலியனவற்றை வெளிக்காட்டி வைத்தல் தொடர்பான ஏற்பாடுகள்	86
82.	பன்முறை வாக்களித்தல்	88

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள்

பக்கங்கள்

ஊழல் பழக்கங்கள்

82அ. ஆள்மாறாட்ட வாக்களிப்பு 88

82ஆ. உபசாரஞ் செய்தல் 89

82இ. தகாத செல்வாக்கு 90

82ஈ. இலஞ்சம் 92

82உ. ஊழல் பழக்கத்திற்கான தண்டனைகளும் தகுதியீனங்களும் 95

82ஊ. தேர்தலொன்றின் வெற்றியீட்டாத ஒரு வேட்பாளரின் ஊழல் பழக்கமொன்றிற்கான தண்டனையும், தகுதியீனங்களும் தொடர்பான சிறப்பேற்பாடுகள் 96

சட்டமுரணான பழக்கங்கள்

82எ. குறித்த சில செலவினங்கள் சட்ட முரணான பழக்கமாதல் 98

82ஏ. செய்தித் தாள்களிலும் இலத்திரனியல் ஊடகங்களிலும் உள்ள பொய்யான அறிக்கைகள் 100

82ஐ. குறித்த சில தொழிலுக்கமர்த்துகை சட்டமுரணாதல் 101

82ஒ. தேர்தல் வெளியீடுகளை அச்சிடுதல் ஆகியன 102

82ஓ. சட்டமுரணான பழக்க வழக்கமொன்றிற்கு குற்றவாளியாருமிடத்து தண்டனை 102

82ஔ. தேர்தலொன்றின் வெற்றியீட்டாத வேட்பாளரின் சட்டமுரணான பழக்கம் ஒன்றிற்கான தண்டனையும், தகுதியீனங்களும் தொடர்பான சிறப்பேற்பாடுகள் 102

82க. குறித்த சில தவறுகளுக்கான மேலதிகத் தண்டம் 104

பாகம் IV அ

தேர்தல்கள் மனுக்கள்

82ங. வேட்பாளரின் குற்றத் தீர்ப்பினால் வறிதாக்கப்படுதல் 104

82ச. தேர்தல் மனு மீது தேர்தல் வறிதாக்கப்படுதல் 104

82ஞ. தேர்தல் மனுக்களை 154ஞ என்னும் உறுப்புரையால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றம் விளக்குதல் 106

82ட. எவர் மனுவைச் சமர்ப்பிக்கலாம் என்பது 106

82ண. கோரப்படக்கூடிய நிவாரணம் 106

பக்கங்கள்

82த. மனுவொன்றிற்கான கட்சிக்காரர்கள் 106

82ந. மனுவின் பொருடளக்கம் 107

82ப. தேர்தல் நீதிபதியொருவர் முன்னரான குறித்த சில நடவடிக்கை முறை பற்றிய சிறப்பான ஏற்பாடுகள் 108

82ம. தேர்தல் நீதிபதியின் தீர்மானம் 108

82ய. ஊழல் பழக்கம் அல்லது சட்டமுரணான பழக்கம் பற்றிய நீதிபதியின் அறிக்கை 108

82ர. 82ம என்னும் பிரிவின் கீழான தீர்மானத்துக்கும் தேர்தல் நீதிபதியின் வேறேதேனும் முடிவுக்கும் அல்லது கட்டளைக்கும் எதிரான மேன்முறையீடு 109

82ல. விண்ணப்பத்தின் செலவுத் தொகைகளும் பிறவற்றிற்குமாக விண்ணப்பக்காரர் பிணைப்பொறுப்புக் கொடுத்தல் 110

82வ. மேன்முறையீட்டின் தீர்ப்பு 111

82ள. மேன்முறையீட்டில் உயர் நீதிமன்றத்தின் தத்துவம் 111

82ழ. சான்றுப்பத்திரமும் அறிக்கையும் சனாதிபதிக்கு அனுப்பப்படுதல் 112

82ர. சான்றிதழின் பயன் 113

82ன. அறிக்கையின் பயன் 113

82கா. சமர்ப்பிப்பதற்கான காலம் 114

82ஙா. வெளியிடுவதற்கெதிரான தடை 114

82சா. பரிசீலனையொன்றின் போது வாக்குகள் நீக்கப்படுதல் 114

82ஞா. தேர்தல் மனுக்கள் மீதான நடவடிக்கை முறையும் நடைமுறையும் 115

82டா. வாக்குச்சீட்டு வாக்கெண்ணும் அலுவலரால் நிராகரிக்கப்படுதல் இறுதியானதாதல் 115

82ணா. குறித்த சில ஊழல் அல்லது சட்டமுரணான பழக்கங்களின் விடயத்தில் வேட்பாளர் தொடர்பில் பழிவிலக்கும் அறிக்கை 115

82தா. மாசற்ற செயலுக்குச் சட்டமுரணினின்றும் விதி விலக்களிக்க நீதிமன்றத்துக்கு உள்ள தத்துவம் 116

பாகம் V

நானாவிதமானவை

84. கட்டளைச் சட்டத்தை திரிபு செய்வதற்கான அல்லது குறைநிரப்புவதற்கான தத்துவம் 117

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள்

பக்கங்கள்

84அ. வாக்களிப்பதற்கென வேலையாட்களுக்கு லீவு வழங்குதல் வேலைக்கு அமர்த்துவோரின் கடமை 117

84ஆ. ஆட்கள், இடங்கள், பற்றிய தவறான விபரணம் 118

84இ. வாக்கெடுப்பு நிலையங்களாக உபயோகிப்பதற்கென வளவுகளைத் தேவைக்கெடுத்தல் 118

84ஈ. வளவுகளைத் தேவைக்கெடுப்பதற்கான நட்டஈடு 118

85. அறிவித்தல்களை வெளியிடுதல் 119

85அ. அறிவித்தல்களை அல்லது ஆவணங்களை அழித்து விடுதல் முதலியன 119

86. தேர்தலுக்கான செலவுகள் 120

87. குற்றப்பணங்கள் திரட்டு நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும் 120

89. பொருள் கோடல் 120

முதலாம் அட்டவணை

I - நியமனப்பத்திரப் படிவம் 123

II - மேலதிக நியமனப்பத்திரம் 124

இரண்டாம் அட்டவணை

ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்துக்கும் வெளியே மற்றும் ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்தினதும் ஒவ்வொரு வாக்களிப்பு அறைக்கும் வெளியே வெளிக்காட்டி வைக்கப்பட வேண்டிய, வாக்களிப்பதில் வாக்காளரொருவரின் வழிகாட்டுகைக்கான பணிப்புகளின் படிவம். 125

மூன்றாம் அட்டவணை

வாக்குச்சீட்டின் முகப்புப் படிவம் 126

நான்காம் அட்டவணை

இரகசியம் பேணல் பற்றிய வெளிப்படுத்துகைப் படிவம் 126

ஏழாம் அட்டவணை

வேட்புமனு நிரலின் படிவம் 126

பக்கங்கள்

ஒன்பதாம் அட்டவணை

ஒழுங்கு விதிகள்

1.	சுருக்கப்பெயர்	127
2.	பொருள் கோடல்	127
3.	அஞ்சல் வாக்காளர் ஒருவராக கருதப்படுவதற்கான விண்ணப்பத்தின் படிவம்	127
4.	அஞ்சல் வாக்காளர் தொடர்பான அறிக்கையும் அவர்களின் நிரலும்	128
5.	அஞ்சல் வாக்குச்சீட்டுப்படிவம்	128
6.	ஆளடையாளம் பற்றிய வெளிப்படுத்துகைப் படிவம்	128
7.	எழுதுவினைஞர்களை நியமித்தல்	128
8.	அஞ்சல் வாக்குச்சீட்டுக்களின் வழங்குகையிலும் பெறுகையிலும் சமூகமாய் இருப்பதற்கு உரித்துடையவரான ஆட்கள்	128
9.	இரகசியம் பேணல் பற்றிய வெளிப்படுத்துகை	130
10.	வாக்குச்சீட்டுகளின் வாங்குகை பற்றிய அறிவித்தல்	131
11.	அஞ்சல் வாக்குச்சீட்டுக்களில் அலுவலக முறையான குறியீடு பொறிக்கப்படுதல்	131
12.	அஞ்சல் வாக்குச்சீட்டை வழங்க மறுத்தல்	132
13.	வாக்குச்சீட்டு உறையின் மீது குறிப்பிடப்பட்டுள்ள இலக்கம் என்ற சொல் அமைப்பினதும் மேலுறை என்ற சொல்லமைப்பினதும் பொருள் கோடல்	132
14.	அஞ்சல் வாக்காளர்களுக்கு முகவரியிடப்பட்ட உறைகளை அஞ்சல் அலுவலகத்திற்கு ஒப்படைத்தல்	132
15.	அஞ்சல் வாக்காளர் நிரலையும் அடியிதழ்களையும் இலச்சனையிடுதல்	132
16.	அஞ்சல் வாக்காளரின் வாக்குச் சீட்டுப் பெட்டிக்கான ஏற்பாடுகள்	133
17.	அஞ்சல் வாக்காளரிடமிருந்து மேலுறைகள் கிடைக்கப்பெறுதல்	133
18.	அஞ்சல் வாக்குச்சீட்டுக்களை கொண்டுள்ள மேலுறைகள் வட்டாரங்களின் படி தனிவேறாக்கப்படுதல்	133
19.	அஞ்சல் வாக்குச்சீட்டுக்களை எண்ணுதல்	134
25.	வாக்குச்சீட்டு உறைகளைத் திறத்தல்	138
26.	நிராகரிக்கப்பட்ட வாக்குகளையும் ஆளடையாள வெளிப்படுத்தல்களையும் இலச்சினையிடுதல்	138
27.	வாக்கெண்ணுதல்	138
28.	வாக்கெண்ணுதலை முடிவுறுத்துதல்	139

பக்கங்கள்

இவ்வொழுங்கு விதிகளுக்கான அட்டவணை

படிவம் அ *139*

படிவம் ஆ *142*

ஆளடையாள வெளிப்படுத்துகைப் படிவம்

படிவத்தின் முன்பக்கம் *142*

படிவத்தின் பின்பக்கம் *144*

(அ) வாக்குச்சீட்டும் மற்றைய ஆவணங்களும், எவ்வாக்காளர் தொடர்பில் அவரின் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் மேற்பார்த்து அனுப்பப் பட்டுள்ளனவோ அவ்வாக்காளருக்கான அறிவுறுத்துரைகள் *144*

(ஆ) வாக்குச்சீட்டும் மற்றைய ஆவணங்களும் எவ்வாக்காளர் தொடர்பில் அவரின் அலுவலக முறையான பதவிப் பெயரினதும், முகவரியினதும் கீழ் நேரடியாக அனுப்பப்பட்டனவோ அவ்வாக்காளருக்கான அறிவுறுத்துரைகள். *145*

படிவம் இ

இரகசியம் பேணுவதற்கான வெளிப்படுத்துகைப் படிவம். *147*

பத்தாம் அட்டவணை

வலிமையிழப்பிற்கு உட்பட்ட ஆளொருவராக வாக்களிப்பதற்கென உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி வழங்கப்படும் தகுதிச்சான்றிதழ். *147*

பாகம் I

விண்ணப்பதாரரின்/வாக்காளரின் வெளிப்படுத்துகை *147*

கிராம அலுவலரின் சான்றிதழ் *148*

பாகம் II

அரசாங்க மருத்துவ அலுவலரின் சான்றிதழ். *148*

அத்தியாயம் 262

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள்

உள்ளூர் அதிகார சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் தொடர்பிலான சட்டத்தைத் திருத்துவதற்கும் திரட்டுவதற்குமானதொரு கட்டளைச்சட்டம்.

கட்டளைச்சட்டம்: இல. 1946 இன் 53 சட்டங்கள் : இல. 1949 இன் 5, 1953 இன் 25, 1955 இன் 22, 1961 இன் 60, 1963 இன் 9, 1965 இன் 15, 1970 இன் 30, 1972 இன் 9, தேசிய அரசுப் பேரவைச் சட்டம் இல. : 1977 இன் 24, 1978 இன் 35, சட்டங்கள் 1983 இன் 48, 1987 இன் 20, 1987 இன் 24, 1990 இன் 24, 1990 இன் 25, 2002 இன் 01, 2004 இன் 14, 2006 இன் 02, 2007 இன் 16, 2011 இன் 28, 2012 இன் 22, 2013 இன் 30, 2016 இன் 01, 2017 இன் 16, 2017 இன் 31, 2023 இன் 21, 2023 இன் 30. 2025 இன் 1.

(1947, பெப்புருவரி 10)

சுருக்கப் பெயர்.

1. இக்கட்டளைச்சட்டமானது, உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

கட்டளைச்சட்டத்தின் ஏற்புடைமை, (பி2, 1977 இன் 24) (பி2, 1987 இன் 20)

2. மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை ஆகிய ஒவ்வொன்றுக்கும் ஏற்புடையதாகின்ற எழுத்திலான ஏதேனும் சட்டத்தினது ஏற்பாடுகளின் கீழ் அமைக்கப்பட்ட அல்லது அமைக்கப்படவுள்ள மாநகர சபை, நகர சபை, அத்துடன் பிரதேச சபை ஒவ்வொன்றுக்கும் இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

தேர்தற் பிரதேசங்கள், (பி2, 1987 இன் 20).

3. மாநகர சபைப் பிரதேசம், பட்டின அல்லது பிரதேச சபை இடப்பரப்பு ஒவ்வொன்றும் இக்கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்கென தேர்தற் பிரதேசமொன்றாக இருத்தல் வேண்டும்.

பாகம் I

தேசிய எல்லை நிர்ணயக் குழுவொன்றைத் தாபித்தல்

தேசிய எல்லை நிர்ணயக் குழுவொன்றைத் தாபித்தல். [பி2, 2012இன் 22]

†3அ. (1) அமைச்சர் இப்பிரிவு நடைமுறைக்கு வருவதன்மீது வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின்மூலம் தேசிய எல்லை நிர்ணயக் குழுவொன்றைத் தாபித்தல் வேண்டும். (இது இப் பாகத்தில் "தேசிய குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்). இக்குழு அமைச்சரால் நியமிக்கப்படவேண்டிய ஐந்து ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும். இவர்களுள் ஒருவர் தேசிய குழுவின் தவிசாளராக இருப்பதற்கென அவரால் பெயர் குறித்து நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

(2) அவர்களின் பதவிக்காலத்தின்போது தேசிய குழுவின் உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றிடம் ஏற்படும் பட்சத்தில் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு அமைச்சர் வேறோர் ஆளை நியமித்தல் வேண்டும்.

(3) தேசிய குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்டநடப்பெண் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும் என்பதுடன் அதன் தவிசாளர் அத்தகைய குழுவின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதல் வேண்டும். தேசிய குழுவின் ஏதேனும் கூட்டத்தில் தவிசாளர் சமுகமாயில்லாத விடத்து, கூட்டத்தில் சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை தாங்குவதற்கு அவர்களிடையேயிருந்து உறுப்பினர் ஒருவரைப் பெயர் குறித்து நியமித்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தேசிய குழு அதன் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களை நிறைவேற்றுதல் தொடர்பிலான நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்தலாம்.

தேசிய குழுவின் பணிப்பாணையும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கையும். [பி2, 2012இன் 22]

3ஆ. (1) தேசிய குழுவின் பணிப்பாணையாவது, (2) ஆம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு ஒவ்வொரு உள்ளூர் அதிகாரசபையின் இடப்பரப்பை வட்டாரங்களாகப் பிரிப்பதற்காக அமைச்சருக்கு விதப்புரை செய்தலும் ஒவ்வொரு வட்டாரத்தினதும் எல்லைகளைத் தீர்மானித்தலும் அத்தகைய வட்டாரம் ஒவ்வொன்றினதும் எல்லைகளை நிர்ணயிப்பதும் அத்தகைய வட்டாரம் ஒவ்வொன்றுக்கும் பெயர் ஒன்றையும் இலக்கம் ஒன்றையும் குறித்தொதுக்குவதும் ஆதல் வேண்டும்.

(2) தேசிய குழு உள்ளூர் அதிகாரசபை இடப்பரப்பொன்றை வட்டாரங்களாகப் பிரிப்பதற்கான விதப்புரையைச் செய்கையில் பின்வருவனவற்றைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும் :-

(அ) சம்பந்தப்பட்ட உள்ளூரதிகார சபை இடப்பரப்பின் இன ரீதியிலான அமைப்பின் விகிதாசாரத்தைக் கருத்திற்கொண்ட அத்தகைய இன விகிதாசாரத்தின் அடிப்படை மீதான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யும் அவசியம்;

(ஆ) உள்ளூர் அதிகார சபையின் புவியியல் இடப்பரப்பும் அதன் இயற்பியல் அம்சங்களும்;

†3அ, 3ஆ, 3இ, 3ஈ மற்றும் 3உ ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகள் 2012, நவெம்பர் மாதம் 15 ஆந் தேதி முதல் அமுலாகும். (2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சட்டத்தின் 1 ஆம் பிரிவின் (2) ஆம் உபபிரிவைப் பார்க்கவும்.)

(இ) உள்ளூர் அதிகாரசபை இடப்பரப்பின் சனத்தொகையும் அத்தகைய சனத்தொகையின் செறிவும்; அத்துடன்

(ஈ) உள்ளூர் அதிகாரசபை இடப்பரப்பின் பொருளாதார அபிவிருத்தியின் மட்டம்.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளைக் கருத்திற் கொண்டு ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களைத் தேர்ந்தனுப்ப உரித்துடைய வட்டாரமொன்றை உருவாக்குவது தோதானதென தேசியகுழு கருதுமிடத்து, குழு ஏதேனும் உள்ளூர் அதிகார சபை இடப்பரப்பின் விடயத்திற்கேற்ப பல உறுப்பினர் வட்டாரமொன்று அல்லது வட்டாரங்கள் உருவாக்கப்படுவதை விதப்புரை செய்தல் வேண்டும்.

(4) தேசிய குழுவின் நடவடிக்கைகள் குறித்துரைக்கப்பட வேண்டிய அத்தகைய முறையில் நடாத்தப்படுதல் வேண்டும்.

(5) பிரிவு 3அ என்பதன் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய குழுவொன்று அமைச்சரால் தீர்மானிக்கப்படவேண்டியவாறான அத்தகைய திகதியளவில் அதன் பணிப்பாணையை நிறைவேற்றுதலும் அத்தகைய பணிப்பாணை பூர்த்தியடைவதன்மீது விதப்புரைகளைப் பற்றிய அறிக்கையொன்றை அமைச்சருக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

உள்ளூர் அதிகாரசபை ஒவ்வொன்றிற்கும் உருவாக்கப்பட்ட வட்டாரம் ஒவ்வொன்றினதும் எல்லா எல்லைகளையும் பெயர்களையும் இலக்கங்களையும் எழுத்துக்களையும் பற்றிய கட்டளை வெளியிடப்படுதல். [பி2, 2012இன் 22] [பி2, 2017இன் 16]

3இ. (1) தேசிய குழுவின் விதப்புரைகள் மீதான அறிக்கை கிடைக்கப்பெற்றதும், அமைச்சர் அத்தகைய விதப்புரைகள் மீதான அறிக்கையை சனாதிபதிக்கு உடனடுத்துச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) விதப்புரைகள் மீதான அறிக்கை கிடைக்கப்பெற்றதும் சனாதிபதி வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் உள்ளூர் அதிகாரசபை ஒவ்வொன்றினதும் தொடர்பில் தேசிய குழுவினால் செய்யப்பட்ட விதப்புரைகளின்மீது அவ்வாறு உருவாக்கப்பட்ட வட்டாரங்களின் எண்ணிக்கையையும் வட்டாரம் ஒவ்வொன்றுக்கும் குறித்தொதுக்கப்பட்ட எல்லைகளை, பெயர்களை, இலக்கங்களை வெளியிடுதல் வேண்டும். தேசிய குழு பல்லுறுப்பினர் வட்டாரங்கள் உருவாக்கப்படுவதை விதந்துரைத்திருக்குமிடத்து, அத்தகைய பல்லுறுப்பினர் வட்டாரங்கள் ஒவ்வொன்றுக்கும் குறித்தொதுக்கப்பட்ட பெயர் மற்றும் இலக்கம், அந்தந்த உள்ளூர் அதிகாரசபையின் பெயர் மற்றும் அத்தகைய பல்லுறுப்பினர் வட்டாரம் ஒவ்வொன்றுக்கும் தேர்ந்தெடுக்கப்படவுள்ள உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை அவ்வாறு குறித்துரைக்கப்படுதல் வேண்டும்.

அமைச்சர் ஏதேனும் வட்டாரத்தின் எல்லைகளை மாற்றுதல். [பி2, 2012இன் 22]

3ஈ. (1) அமைச்சரானவர், 3இ என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையில் வெளியிடப்பட்டவாறு வட்டாரங்களின் எல்லைகளுக்கு மாற்றம் ஒன்றை செய்விக்கலாம். மேலும் அம்மாற்றங்கள், அமைச்சரால் நியமிக்கப்படும் ஐவரைக் கொண்ட குழுவொன்றின் விதப்புரையின் மீது செய்யப்படுதல் வேண்டும். அத்துடன் 3 ஆ என்னும் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகள் செய்யப்படும் ஏதேனும் அத்தகைய மாற்றங்களுக்கும் அவை தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) ஓராம் பிரிவின் கீழ் எந்த வட்டாரத்தின் எல்லைகள் மாற்றஞ் செய்யப்பட்டனவோ அந்த வட்டாரம் ஒவ்வொன்றினதும் புதிய எல்லைகள், பெயர்கள் மற்றும் இலக்கங்கள் அமைச்சரினால் [பி3, 2017இன் 16]

வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய மாற்றங்கள் செய்யப்பட்டதன் உடன்பின்னர் இக்கட்டளைச்சட்டத்தின் கீழ் நடாத்தப்படும் ஒரு தேர்தல் தொடர்பில் அது பயனுறுதலும் வேண்டும்.

மாவட்ட மட்டத்தில் மாவட்ட எல்லை நிர்ணயக் குழுக்களைத் தாபித்தல்[பி2, 2012இன் 22]

3உ. (1) தேசிய குழுவொன்று அதன் பணிப்பாணையை நிறை வேற்றுகையில் அதற்குத் துணைபுரியும் நோக்கத்திற்காக அமைச்சர் மாவட்ட மட்டத்தில் ஒவ்வொன்றுக்கும் எல்லை நிர்ணயக் குழுவொன்றை நியமித்தல் வேண்டும். இது இதனகத்துப்பின்னர் ஒரு "மாவட்டக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும் என்பதுடன் அது அத்தகைய மாவட்டக் குழுவின் தவிசாளராக இருக்க வேண்டிய இயைபான மாவட்டத்தின் மாவட்டச் செயலாளரையும் அமைச்சரால் நியமிக்கப்படவேண்டிய பின்வரும் உறுப்பினர்களையும் கொண்டிருத்தலும் வேண்டும்:-

(அ) தேர்தல்கள் திணைக்களத்தின் பிரதிநிதி ஒருவர் ;

(ஆ) அந்த மாவட்டம் எந்த மாகாண சபைக்குள் அமைந்துள்ளதோ அந்த மாகாணசபையின் மாகாண உள்ளூராட்சி அமைச்சின் பிரதிநிதி ஒருவர்;

(இ) நில அளவையாளர் தலைமையதிபதித் திணைக்களத்தின் பிரதிநிதி ஒருவர்;

(ஈ) தொகை மதிப்பு, புள்ளிவிவரத் திணைக்களத்தின் பிரதிநிதி ஒருவர்; அத்துடன்

(உ) அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பகிரங்க அலுவலர் ஒருவர்.

(2) மாவட்டச் சபையொன்று தேசிய குழுவொன்றால் அதற்குக் குறித்தளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய தேசிய குழுவின் பணிப்பின்கீழும் மேற்பார்வையின்கீழும் செயலாற்றுதலும் வேண்டும்.

(3) பிரிவு 3அ என்பதன் (3)ஆம் (4)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏதேனும் மாவட்டக் குழுவின் கூட்டங்கள் நடத்தப்படுவதற்கும் அது தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

பாகம் I அ

கண்காணிக்கும் பணியாட்டொகுதி

அலுவலர்களும் பணியாட் தொகுதியும் [பி2, 1963 இன் 9] [பி3, 1977 இன் 24] [பி2, 1987 இன் 24] [பி3, 2012இன் 22]

†4 (1) ஆணையாளர் இலங்கையிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்துக்காகவும், மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலராகவிருப்பதற்கு அல்லது செயலாற்றுவதற்குத் தகுதியானவரும் தகுந்தவருமான ஆளொருவரையும், விடயத்துக்கேற்ப, ஒரு மாவட்டத்திலுள்ள உள்ளூர் அதிகாரசபை பிரதேசங்களுள் ஒவ்வொன்றுக்காகவும் அல்லது குறிப்பிட்டவொரு உள்ளூர் அதிகாரசபை பிரதேசத்துக்குக்காகவும் தெரிவத்தாட்சி அலுவலராகவிருப்பதற்கு அல்லது செயலாற்றுவதற்கு வேறோராளையும், அம்

†"தேர்தல்கள் அலுவலருக்கு" அல்லது "உதவித் தேர்தல்கள் அலுவலருக்கு" என்ற ஒவ்வொரு குறிப்பீடும் 1987, மே 15 ஆம் தேதியின் பின்னர், எந்த மாவட்டத்தினுள் தேர்தல் இடப்பரப்பு அமைந்துள்ளதோ அந்த மாவட்டத்தினுள் அமைந்துள்ள மாவட்டத்திற்கென 4 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கு அத்துடன் அந்த மாவட்டத்தினுள் இடப்பரப்பு அமைந்ததோ அந்த மாவட்டத்திற்கென நியமிக்கப்பட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலருக்கும் முறையே செய்யப்பட்ட குறிப்பீடொன்றாக வாசிக்கப்பட்டு பொருள் கொள்ளப்பட வேண்டும்.

மாவட்டத்துக்காக உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாக இருப்பதற்கு அல்லது செயலாற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான வேறு ஆட்களையும் பெயர்கொண்டு அல்லது பதவி கொண்டு நியமிக்கலாம்.

(2) மேற்கூறிய அலுவலர்கள் இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் தமது கடமைகளைப் புரிவதற்கு உதவுமுகமாகத் தேவைப்படக்கூடிய அத்தகைய எழுதுவினைஞர் பணியாட்டொகுதியும், சிற்றூழியர் பணியாட்டொகுதியும் மேலும் நியமிக்கப்படலாம். [பி4, 2012இன் 22]

(3) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் நியமிக்கப்பட்ட ஒவ்வோர் ஆளும், எல்லா நோக்கங்களுக்கும் பகிரங்க சேவையாளர் ஒருவராகக் கருதப்படல் வேண்டும். அத்துடன் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடிய அல்லது அங்கீகரிக்கப்படக் கூடிய அத்தகைய சம்பளமும் படிகளும் திரட்டிய நிதியத்திலிருந்து அவர்களுக்குக் கொடுக்கப்படலும் வேண்டும்.

அலுவலர்களின் தத்துவங்களும் கடமைகளும், [பி3, 1963இன் 9] [பி4, 1977இன் 24]

5. (1) இக்கட்டளைச்சட்டத்தினால் அளிக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட தத்துவங்களை அல்லது கடமைகளைப் பிரயோகிப்பதில் அல்லது நிறைவேற்றுவதில் தேர்தல்கள் அலுவலர் ஒவ்வொருவரும் ஆணையாளரின் பொதுவான கண்காணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைந்தவராக இருத்தல் வேண்டும்.

[பி3, 1987இன் 24] [பி5, 2012இன் 22]

(2) ஆணையாளரின் பொதுவான மேற்பார்வைக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, ஒவ்வோர் உதவித் தெரிவத்தாட்சி அலுவலரும் உதவித் தேர்தல்கள் அலுவலரும், தேர்தல் அலுவலரொருவருக்கு இக்கட்டளைச்சட்டத்தினால் அளிக்கப்பட்ட அல்லது அவர் மீது சுமத்தப்பட்ட தத்துவங்களை அல்லது கடமைகளைப் பிரயோகிக்கலாம் அல்லது புரியலாம்.

பாகம் II

வாக்காளர்களினதும் உறுப்பினர்களினதும் தகைமைகளும் உறுப்பினர்கள் பதவியை வறிதாக்குதலும் வாக்காளர்களின் தகைமைகள்

வாக்காளர்களின் தகைமையீனங்கள். [பி2, 1953இன் 25] [பி5, 1977இன் 24]

6. அப்போதைக்கு நடைமுறையிலிருக்கும் பாராளுமன்ற இடாப்பெதிலும் அவரின் பெயர் பதியப்பட்டிருப்பினன்றி, ஆள் எவரும் இக்கட்டளைச்சட்டத்தின் கீழ் உள்ளூர் அதிகார சபையொன்றின் உறுப்பினர் தேர்தல் எதிலும் வாக்களிப்பதற்குத் தகைமையுடையவராகார்.

தேர்தற் பிரதேசங்களின் தேருநர் நிரல்களிற் பெயர்களைச் சேர்த்தல். [பி6, 1977இன் 24] [பி34. 1987 இன் 24†]

7. (1) (அ) ஏதேனும் தேர்தல் மாவட்டத்திற்கு அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பாராளுமன்ற இடாப்பு எதிலும் அவரது பெயர் பதியப்பட்டுள்ள ஒவ்வோர் ஆளும்; அத்துடன்

[பி6, 2012இன் 22]

(ஆ) அப்பாராளுமன்ற இடாப்புத் தயாரிக்கப்பட அல்லது புதுப்பிக்கப்படத் தொடங்கிய ஆண்டின் யூன் மாதம் முதலாம் நாளன்று தேர்தல் மாவட்டத்திற்குள் முழுமையாக அல்லது பகுதியளவில் அமைந்துள்ள ஏதேனும் வட்டாரத்தில் சாதாரணமாக வதிந்துள்ள ஒவ்வொரு ஆளும்.

அத்தேர்தற் பிரதேசத்துக்கான தேருநர் நிரலில் அவரது பெயரைப் பதிந்துக்கொள்வதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

[பி2, 1965இன் 15] (2) எந்தவோர் ஆண்டிலும் யூன் மாதம் முதலாம் நாளில் ஆள் ஒருவர் எங்கு வசித்தார் என்பது பற்றிய எந்தப் பிரச்சினையையும் தீர்மானிக்கையில், சம்பந்தப்பட்ட முகவரியில் அவர் இருந்தமைக்கான அல்லது இல்லாதிருந்தமைக்கான நோக்கத்திற்கும் ஏனைய சந்தர்ப்பங்களுக்கும் அத்துடன் அவர் இருந்தார் அல்லது அவர் இருக்கவில்லை என்ற நிகழ்வுக்கும், அத்துடன் குறிப்பாக அவரினால் வகிக்கப்பட்ட அல்லது பொறுப்பேற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் பதவி, சேவை அல்லது தொழிலிருந்து எழுகின்ற அல்லது விளைகின்ற ஏதேனும் கடமையைப் புரிவதற்காக அவர் அத்தகைய முகவரியில் இல்லாதிருந்தார் என்பதற்கும் குறிப்பாகக் கவனஞ் செலுத்துதல் வேண்டும்.

(3) ஏதேனும் தேர்தற் பிரதேசத்தில் எந்த ஆண்டிலும் யூன் மாதம் முதலாம் நாளன்று ஆளொருவர் எம்முகவரியில் சாதாரணமாக வதிந்தாரோ அம்முகவரியானது, இக்கட்டளைச் சட்டத்தின் இனிமேல், அவரது "தகைமையளிக்கும் முகவரி" எனக் குறிப்பீடு செய்யப்படும்.

உறுப்பாண்மைக்கான பொதுத் தகைமைகள்.

8. ஒன்பதாம் பிரிவின்மூலம் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகத் தகைமையற்றவராக்கப்படாத ஒவ்வோராளும்-

[பி7, 1977இன் 21] (அ) எத்தேர்தல் மாவட்டத்தில் அத்தேர்தற் பிரதேசம் அல்லது அதன் ஏதேனும் பாகம் அமைந்துள்ளதோ அத்தகைய தேர்தல் மாவட்டம் எதற்கும் அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பாராளுமன்ற இடாப்பைத் தயாரிக்க அல்லது புதுப்பிக்கத் தொடங்கிய தேதியன்று அந்த இடாப்பில் அவரது பெயரைப் பதிந்துகொள்ள அவர் தகைமையுடையவராகவிருந்தால்; அத்துடன்

(ஆ) அந்த இடாப்புத் தயாரிக்கப்படத் தொடங்கிய அல்லது புதுப்பிக்கப்படத் தொடங்கிய ஆண்டில் யூன் மாதம் முதலாம் நாளன்று அத்தேர்தற் பிரதேசத்தில் சாதாரணமாக வசித்திருந்தால்.

அவர் ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினரொருவராக எந்த நேரத்திலும் தெரிவுசெய்யப்படுவதற்குத் தகைமையுடையவராக இருத்தல் வேண்டும்.

உறுப்பினராக இருக்கமுடியாமற் செய்யும் தகைமையீனங்கள்.

* 9. (1) ஆள் ஒருவர் பின்வரும் சூழ்நிலைகளில், இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் எந்த நேரத்திலும் ஏதேனும் உள்ளூரதிகார சபையின் உறுப்பினராக அமரவோ, வாக்களிக்கவோ தகைமையற்றவராதல் வேண்டும்; அதாவது அத்தகைய ஆள் அந்த நேரத்தில்

[பி7, 1983இன் 48] * (1) ஆள் ஒருவர் 1982, சனவரி 1 ஆம் தேதிக்குப் பிந்தியதும் 1983 டிசம்பர் 8 ஆம் தேதிக்கு முந்தியதுமானதாக இருக்கும் உள்ளூரதிகார சபையொன்றுக்கான தேர்தல் தேதியன்று-

(அ) இலங்கைப் பிரசையல்லாதவராயிருப்பின், அல்லது தனது சொந்தச் செயலின் பயனாக ஏதேனும், அந்நிய நாட்டிற்கோ அரசுக்கோ விசுவாசம், பணிவு அல்லது பற்றுறுதி பூண்டவராக இருப்பின்; அல்லது [பி6, 1953இன் 25]

(அ) சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்க சம்பளம் ஆண்டொன்றுக்கு 6,720 ரூபாவாக அல்லது அதிலும் அதிகமாக உள்ள உத்தியோகமொன்றை வகிக்கின்ற அரசாங்க திணைக்களமொன்றின் அலுவலர் ஒருவராக;

(ஆ) சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்க சம்பளம் ஆண்டொன் றுக்கு 7,200 ரூபாவாக அல்லது அதிலும் அதிகமாக உள்ள உத்தியோகமொன்றை வகிக்கின்ற அரசாங்க பகிரங்க கூட்டுத்தாபனத்தின் அலுவலர் ஒருவராக; அல்லது

(இ) சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்க சம்பளம் ஆண்டொன்றுக்கு 6.720 ரூபாவாக அல்லது அதிலும் அதிகமாக உள்ள பதவியொன்றை வகிக்கின்ற அரசாங்க உள்ளூராட்சிச் சேவையின் உறுப்பினர் ஒருவராக;

அத்தகைய ஆள் இருந்தார் என்ற காரணத்துக்காக மட்டும் அவர் உள்ளூர் அதிகார சபையொன்றின் உறுப்பினர் ஒருவராகத் தெரிவு செய்யப்படுவதிலிருந்து தகைமையற்றவராக்கப்பட்டவராகக் கருதப்படுதல் ஆகாது.

(2) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, உள்ளூர் அதிகார சபையொன்றின் உறுப்பினர் ஒருவர் 1982, சனவரி 1 ஆந் தேதியன்று தொடங்குவதும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவடைவதுமான ஏதேனும் காலப்பகுதியின் போது.

(அ) சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளம் ஆண்டொன்றுக்கு 6,720 ரூபாவாக அல்லது அதிலும் அதிகமாக உள்ள உத்தியோக மொன்றை வகிக்கின்ற ஏதேனும் அரசாங்க திணைக்களத்தின் பகிரங்க அலுவலர் ஒருவராக; அல்லது

(ஆ) சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்க சம்பளம் ஆண்டொன்றுக்கு 7,200 ரூபாவாக அல்லது அதிலும் அதிகமாக உள்ள உத்தி யோகமொன்றை வகிக்கின்ற அரசாங்க பகிரங்க கூட்டுத்தாபனத்தின் அலுவலர் ஒருவராக; அல்லது

(இ) சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்க சம்பளம் ஆண்டொன்றுக்கு 6,720 ரூபாவாக அல்லது அதிலும் அதிகமாக உள்ள பதவியொன்றை வகிக்கின்ற அரசாங்க உள்ளூராட்சிச் சேவையின் உறுப்பினர் ஒருவராக,

இருந்தார் என்ற நிகழ்வின் காரணத்துக்காக மட்டும், அத்தகைய உள்ளூர் அதிகார சபையின் உறுப்பினர் ஒருவராக இருப்பதிலிருந்து அல்லது வாக்களிப் பதிலிருந்து தகைமையற்றவராக ஆக்கப்பட்டிருக்கிறா ரென அல்லது தகைமையற்ற வராக்கப்படுவாரெனக் கருதப்படுதல் ஆகாது.

(3) முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 9(1) (ஈ) (V) அல்லது (VI) என்னும் பிரிவின் அல்லது 9 (1) (ஒ) என்னும் பிரிவின் செயற்பாடு காரணமாக உள்ளூரதிகார சபையொன்றில் எழும் ஏதேனும் வெற்றிடத்தை நிரப்புவதற்காக அத்தகைய ஏதேனும் உள்ளூர் அதிகார சபை உறுப்பினர் ஒருவராகச் செய்யப்பட்ட எவரேனும் ஆளின், இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முன்னரான, நியமனத்தை (2) ஆம் உட்பிரிவிலுள்ள எதுவும் பாதித்துள்ளதாக அல்லது பாதிப்பதாகக் கருதப்படுதல் ஆகாது.

[பி4, 1963இன் 9]
[பி2, 1970இன் 30]

(ஆ) பதினெட்டு வயதிற்குக் குறைந்தவராயிருப்பின் ; அல்லது

(ஈ) † (i) நீதித்துறை அலுவலராயிருப்பின், அல்லது

(ii) ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினராயிருப்பின் அல்லது

(iii) பொலிசு அலுவலராயிருப்பின், அல்லது

(iv) குற்றவியல் வழக்கு நடவடிக்கை முறைச் சட்டக்கோவை சட்டத்தின் கீழ் பொலிசுப் பணிகளைப் பிரயோகிக்கும் சமாதான அலுவலராயிருப்பின்.

[பி4, 2017இன் 16]

(iv அ) பகிரங்க அலுவலரொருவர் எந்த உள்ளூர் அதிகார சபைப் பிரதேசத்தில் நியமனத்தை நாடுகின்றாரோ அந்த உள்ளூர் அதிகாரசபைப் பிரதேசத்தினுள் அத்தகைய உள்ளூர் அதிகாரசபைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குக் குறைந்தபட்சம் ஓராண்டுக்கு முன்னரேனும் சேவையாற்றாதொழியாதுள்ள வெளிக்கள அடிப்படையிலான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள பகிரங்க அலுவலரொருவர்.

இவ்வுட்பந்தியின் நோக்கத்துக்காக, ''வெளிக்கள அடிப்படையிலான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள பகிரங்க அலுவலர்'' என்பது, அவரது தொழிலின் நோக்கெல்லையினுள் ஏதேனும் அபிவிருத்தி, சேமநல, பொருளாதார, சமூக, சுகாதார அல்லது அத்தகைய வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள எவரேனுமாளை உள்ளடக்குதல் வேண்டும்.

[பி2, 1983இன் 48]
[பி7, 2012இன் 22]

(v) 2007, யூன் 1 ஆந் தேதிக்கு முன்னர் உருவாக்கப்பட்ட பதவியின் கீழ் 2007, சனவரி 01 ஆந் தேதியன்று ஆண்டொன்றுக்கு 2,27,280 ரூபாவுக்குக் குறையாத சம்பள அளவுத்திட்ட மீளாய்வின் கீழ் அத்தகைய தொடக்கச் சம்பளத்தை நேரொத்ததாக ஆண்டொன்றுக்கு இருக்கும் அத்தகைய வேறு தொகைக்கு குறையாததுமான ஏதேனும் உத்தியோகத்தை; அல்லது

(ஆ) 2007, யூன் 01 ஆந் தேதிக்குப் பின்னர் உருவாக்கப் பட்டதும் அப்பதவி உருவாக்கப்பட்ட தேதியன்று அதற்கான சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளம் (அ) என்னும் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஒரு பதவிக்கு அத்தேதியன்று ஏற்புடைத்தாகும் சம்பள அளவுத் திட்டத்தின் தொடக்கச் சம்பளத்துக்கு அல்லது அடுத்துப்

† பந்தி (இ) நீக்கஞ்செய்யப்பட்டுள்ளது - 1975 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தின் 4 பிரிவைப் பார்க்க.

பின்னரான ஏதேனும் சம்பள அளவுத்திட்ட மீளாய்வின்கீழ் முதலிற் கூறப்பட்ட தொடக்கச் சம்பளத்தை நேரொத்ததாக ஆண்டொன்றுக்கு இருக்கும் அத்தகைய வேறு தொகைக்குக் குறையாததுமான ஏதேனும் உத்தியோகத்தை,

வகிக்கின்ற ஏதேனும் அரசாங்க திணைக்களத்தின் பகிரங்க அலுவலர் ஒருவராயிருப்பின் ; அல்லது

(vi) (அ) 2009, சனவரி 01 ஆந் தேதிக்கு முன்னர் உருவாக்கப்பட்ட பதவியின் கீழ் 2009, சனவரி 01 ஆந் தேதியன்று அதற்கான சம்பள அளவுத் திட்டத்தின் தொடக்கச் சம்பளம் ஆண்டொன்றுக்கு 2,46,300 ரூபாவுக்கு குறையாத அல்லது அடுத்துப் பின்னரான ஏதேனும் சம்பள அளவுத்திட்ட மீளாய்வின் கீழ் அத்தகைய தொடக்கச் சம்பளத்தை நேரொத்ததாக ஆண்டொன்றுக்கு இருக்கும் அத்தகைய வேறு தொகைக்குக் குறையாததுமான ஏதேனும் உத்தியோகத்தை ; அல்லது [பி2, 1983 இன் 48] [பி7, 2012 இன் 22]

(ஆ) 2009, சனவரி 01 ஆந் தேதிக்குப் பின்னர் உருவாக்கப்பட்டதும் அப்பதவி உருவாக்கப்பட்ட தேதியன்று அதற்கான சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளம் (அ) என்னும் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஒரு பதவிக்கு அத்தேதியன்று ஏற்புடையதாகும் சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளத்துக்கு அல்லது அடுத்துப் பின்னரான ஏதேனும் சம்பள அளவுத்திட்ட மீளாய்வின் கீழ் முதலிற் கூறப்பட்ட தொடக்கச் சம்பளத்தை நேரொத்ததாக ஆண்டொன்றுக்கு இருக்கும் அத்தகைய வேறு தொகைக்குக் குறையாததுமான ஏதேனும் உத்தியோகத்தை, [பி7, 2012 இன் 22]

வகிக்கின்ற ஏதேனும் பகிரங்க கூட்டுத்தாபனத்தின் அலுவலர் ஒருவராயிருப்பின்;

(ஈஈ) பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக, அரசியலமைப்பினால் தாபிக்கப்பட்ட மாகாண சபையொன்றின் உறுப்பினர் ஒருவராக, அல்லது வேறேதேனும் உள்ளூர் அதிகாரசபை உறுப்பினர் ஒருவராக இருப்பின்: [பி4, 1963 இன் 9] [பி4, 1987இன் 24] [பி2, 1990இன் 25]

(உ) அத்தகைய அதிகாரசபையினால் உண்மையான வேலைக் கமர்த்தப்பட்டு அத்தகைய அதிகாரசபையிடமிருந்து சம்பளம் பெறுபவரான அத்தகைய அதிகாரசபையின் அலுவலராக அல்லது சேவையாளராக இருப்பின் அல்லது அவ்வதிகார சபைக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேதிக்கு முன்னர் ஓராண்டுக் காலப்பகுதியினுள் அத்தகைய அதிகார சபையினால் அவரது தொழில் முடிவுறுத்தப்பட்ட ஆளொருவராயிருப்பின்; அல்லது [பி2, 1972இன் 9]

(ஊ) நேர்முகமாகவேனும் அல்லது மறைமுகமாகவேனும் தானாக வேனும் அல்லது தனக்காக நம்பிக்கைப்பொறுப்பு என்ற வகையில் அல்லது தனது உபயோகத்துக்காக அல்லது தனது நன்மைக்காக அல்லது தனது சார்பில் வேறொருவர் மூலமாக வேனும் அத்தகைய அதிகாரசபைக்காக அல்லது அதன் சார்பில் எவரேனுமோர் ஆளுடன் செய்துகொண்ட அல்லது நிறைவேற்றிக்கொண்ட அல்லது ஏற்றுக்கொள்ளப் பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தை அல்லது உடன்படிக்கையை அல்லது தரகை முழுவதாக அல்லது ஒரு பகுதியளவில் வைத்திருப்பவராய் அல்லது அனுபவிப்பராயிருப்பின்;

எனினும், இதன்கண் அடங்கியுள்ளது எதுவும், கடந்த காலச் சேவைக்காக அத்தகைய அதிகார சபையினால் வழங்கப்பட்ட ஏதேனும் ஓய்வூதியத்துக்கு அல்லது பணிக்கொடைக்கு அல்லது அத்தகைய ஆள் அதன் உறுப்பினராக அல்லது பங்குதாரராக இருக்கும் ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட வியாபார கம்பனியெதனாலும் அதன் கூட்டிணைப்புத் தலைமையில் செய்து கொள்ளப்பட்ட அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்துக்கு, உடன்படிக்கைக்கு அல்லது தரகுக்கு ஏற்புடையதாகாது; அல்லது

[பி6, 1953இன் 25] (எ) இலங்கையில் வலுவுடையதாயிருக்கும் ஏதேனும் சட்டத்தின் கீழ் சித்தசுவாதீனமற்றவரெனக் காணப்பட்டிருப்பின் அல்லது வெளிப்படுத்தப்பட்டிருப்பின் ; அல்லது

[பி6, 1953இன் 25] (ஏ) சான்றளிக்கப்படாத அல்லது விடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்றவராய் அல்லது வங்குரோத்தானவராய் இருப்பின்; அல்லது

[பி7, 2012இன் 22] (ஐ) (i) பன்னிரண்டு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு மறியற்றண்டணையுடன் தண்டிக்கப்படற்பாலதான தவ றொன்றுக்கு மறியற்றண்டனைத் தீர்ப்பொன்றை அனுபவித் திருப்பாராயின் அல்லது உடன் முற்போந்த ஏழு ஆண்டு காலப்பகுதியின் போது மறியற் தண்டனைத் தீர்ப்பொன்றை அனுபவிப்பதனை பூர்த்தி செய்திருப்பாராயின் அல்லது மரண தண்டனைக்கு உட்பட்டிருப்பாராயின் அல்லது மரண தண்டனை நிறைவேற்றத்திற்குப் பதிலாக அளிக்கப்பட்ட மறியற்தண்டனைத் தீர்ப்பை அனுபவித்திருப்பாராயின் அல்லது உடன் முற்போந்த ஏழு ஆண்டு காலப்பகுதியின்போது மறியற் தண்டனைத் தீர்ப்பொன்றை அனுபவிப்பதனைப் பூர்த்தி செய்திருப்பாராயின் அல்லது ; அத்துடன்

(ஓ) * 1969 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, உள்ளூராட்சிச் சேவைச் சட்டத்தினால் அமைக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவையின் உறுப்பினரொருவராயிருப்பின்: [பி2, 1972இன் 09]

ஆயின் இதனகத்து அடங்கியுள்ள எதுவும்- [பி2, 1983இன் 48]

(i) 2007, யூன் 01 தேதிக்கு முன்னர் உருவாக்கப்பட்ட பதவியொன்றின் விடயத்தில், அத்தேதியன்று அதற்கான சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளம் ஆண்டொன்றுக்கு 2,27,280 ரூபாவுக்கு அல்லது அடுத்துப் பின்னரான ஏதேனும் சம்பள அளவுத்திட்ட மீளாய்வின் கீழ் ஏதேனும் அத்தகைய தொடக்கச் சம்பளத்தை நேரொத்ததாக ஆண்டொன்றுக்கு இருக்கும் அத்தகைய வேறு தொகைக்குக் குறைந்த வேதனதிட்டத்தின் கீழ் 1970, நவெம்பர் மாதம் 18 ஆந் திகதிக்கு முன்னர் தாபிக்கப்பட்ட பதவியொன்றை அத்திகதியன்று வகிக்கின்றதும்; அல்லது [பி7, 2012இன் 22]

(ii) 2007, யூன் 01 ஆந் தேதிக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட பதவியொன்றின் விடயத்தில், அப்பதவி உருவாக்கப்பட்ட தேதியன்று (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு பதவிக்கு ஏற்புடைத்தான சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளத்துக்கு அல்லது அடுத்துப் பின்னரான ஏதேனும் சம்பள அளவுத்திட்ட மீளாய்வின் கீழ் முதலிற் கூறப்பட்ட தொடக்கச் சம்பளத்தை நேரொத்ததாக ஆண்டொன்றுக்கு இருக்கும் அத்தகைய வேறு தொகைக்கு குறையாததும், [பி6, 1953இன் 25]

ஆன பதவியொன்றை வகிக்கின்ற ஆள் ஒருவர், தேர்தல் நேரத்தில் அவர் தொழிலுக்கமர்த்தப்பட்டிராத அல்லது அத்தகைய தேர்தலுக்கு நேர்முந்திய ஓராண்டுக் காலப்பகுதியின்போது தொழிலுக்கமர்த்தப் பட்டிராத உள்ளூரதிகார சபைக்குத் தெரிவு செய்யப்படுவதற்கு அவர் நாடினால், அவருக்கு விசாலித்தல் ஆகாது; அல்லது [பி6, 1953இன் 25]

(ஓ) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் அல்லது இக்கட்டளைச் சட்டத்தின் 83 ஆம் பிரிவின் நடைமுறை காரணமாக ஏதேனும் உள்ளூர் அதிகார சபையின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்படவோ, அமரவோ, வாக்களிக்கவோ தகைமையற்ற வராக்கப்பட்டிருப்பின்; அல்லது

(ஔ) பகிரங்க குழுக்கள் (ஊழற்றடுப்புக்) கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் குற்றத்தீர்ப்பின் காரணமாக அல்லது விசாரணை ஆணைக்குழுவொன்றினால் செய்யப்பட்ட முடிவின் காரணமாக அக்கட்டளைச்சட்டத்தில் வரைவிலக்கணங் கூறப்பட்டவாறான பகிரங்கக் குழுவொன்றின் உறுப்பினரொருவராகத் தெரிவு செய்யப்படவோ, அமரவோ,

*1974 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூராட்சிச் சேவைச் சட்டத்தினால் நீக்கஞ் செய்யப்பட்டு மாற்றீடு செய்யப்பட்டது.

வாக்களிக்கவோ அப்பிரிவினால் தகைமையற்றவராக்கப்பட்டிருப்பின்; அல்லது

(க) குற்றத்தடுப்புக் கட்டளைச்சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட ஏதேனும் ஒரு குற்றத்திற்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு மூன்று மாதங்களுக்கான அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனையை முற்றாகவோ பகுதியாகவோ அனுபவித்து வருபவராயிருப்பின் அல்லது நேர்முற்போந்த ஐந்து ஆண்டுகளில் இவ்வாறான மறியலை அனுபவித்து முடித்தவராயிருப்பின்.

[பி6, 1953இன் 25] (1அ) ஆள் ஒருவரின் பெயர் ஒரே பொதுத் தேர்தலுக்கான ஒன்றுக்கு மேற்பட்ட நியமனப் பத்திரங்களில் வேட்பாளரொருவராகக் காணப்பட்டால், அவ்வாள் ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினரொருவராக அக்கட்டளைச் சட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படுவதற்கோ அல்லது அவ்வுறுப்பினராக இருப்பதற்கோ அல்லது வாக்களிப்பதற்கோ தகைமையுடையவராதலாகாது.

(2) ஆள் எவரும்-

(அ) 1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளையில் அது தொடர்பிலான ஏதேனும் ஏற்பாட்டின்கீழ், அத்தகைய ஏற்பாட்டிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் குற்றத்தீர்ப்பின் காரணத்தினாலோ அல்லது அவ்வரசப்பேரவைக் கட்டளைக்கிணங்கத் தேர்தல் நீதிபதியொருவரினால் செய்யப்பட்ட அறிக்கையின் காரணத்தினாலோ பாராளுமன்ற உறுப்பினரொருவராகத் தெரிவு செய்யப்பட அல்லது நியமிக்கப்பட இயலாதவராயிருப்பின்; அல்லது

(ஆ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 91 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (எ) என்னும் உட்பந்தியினால் பாராளுமன்ற உறுப்பினரொருவாகத் தெரிவு செய்யப்பட பாராளுமன்றத்தில் இருப்பதற்கு அல்லது வாக்களிப்பதற்கு தீர்ப்பொன்றின் காரணத்தினால் தகைமையற்றவராக்கப்பட்டிருப்பின்,

அவர் ஏதேனும் உள்ளூர் அதிகார சபையின் உறுப்பினர் ஒருவராகத் தெரிவு செய்யப்படவோ, இருக்கவோ, வாக்களிக்கவோ இக்கட்டளைச் சட்டத்தின் கீழ், தகைமையற்றவராதல் வேண்டும்.

[பி4, 1987 இன் 24] (3) ஓராம் உட்பிரிவினதும் (2) ஆம் உட்பிரிவினதும் ஏற்பாடுகளின் பொதுத் தன்மைக்குப் பங்கமின்றி, விடயத்துக்கேற்றாற் போன்று மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 277 ஆம் பிரிவின்கீழ் அல்லது அபிவிருத்திச் சபைகள் சட்டத்தின் 63 ஆம் பிரிவின் கீழ் அல்லது நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 184 ஆம் பிரிவின் கீழ் அல்லது பிரதேச சபைச் சட்டத்தின் 185 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் கட்டளைமூலம் நியமிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் எந்த நேரத்திலும் மாநகர முதல்வர் அல்லது மாநகர சபையொன்றின் உறுப்பினர் என்ற பதவியிலிருந்து ஏதேனும் அபிவிருத்திச் சபையின் ஏதேனும் நகர சபையின் அல்லது

ஏதேனும் பிரதேச சபையின், தலைவர் அல்லது உறுப்பினர் என்ற பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ளவரான ஆளெவரும் அவ்வாறு பதவியிலிருந்து அகற்றப்பட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டுக் காலப் பகுதியொன்றிற்கு இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது ஏதேனும் உள்ளூராதிகாரசபையின் உறுப்பினரொருவராக இருப்பதற்கு அல்லது வாக்களிப்பதற்குத் தகைமையுடையவராதலாகாது.

(5) * இப்பிரிவின் நோக்கங்களுக்கென - (பி2, 1970 இன்30)

(அ) "நீதித்துறை அலுவலர்" என்பது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின், கருத்தெல்லைக்குட்பட, நீதித்துறைப் பதவியை வகிக்கும் ஆளெனப் பொருள்படுவதோடு, பின்வருபவர்களை உள்ளடக்காது:

(i) சமாதான நீதவான் ஒருவர்;

(ii) சமாதான நீதவானும் உத்தியோகப்பற்றற்ற நீதிவானும் ஆன ஒருவர்;

(iii) சத்திய ஆணையாளர் ஒருவர்;

(iv) குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 108 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட விசாரணையாளர் ஒருவர்;

(ஆ) "பொலிசு அலுவலர்" என்பது பொலிசுக் கட்டளைச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட பொலிசுப்படை உறுப்பினர் என்று பொருளாகும்.

(இ) "ஆயுதந் தாங்கிய படைகள்" என்பது இலங்கைத் தரைப்படை, இலங்கை அரச கடற்படை, இலங்கை அரச வான் படை என்று பொருளாகும்;

(ஈ) "அரசாங்கக் கூட்டுத்தாபனம்" என்பது. அதன் மூலதனம் முழுமையாகவோ பகுதியாகவோ அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டதாக உள்ள கூட்டுத்தாபனம் என்று பொருளாகும்.

பதவியை வறிதாக்குதல்

10 (1) ஒன்பதாம் பிரிவின் ஏற்பாடுகளுள் ஏதேனும் ஒன்றன் நடைமுறை காரணமாக உள்ளூர் அதிகார சபையொன்றின் உறுப்பினரெவரும் அத்தகைய அதிகாரசபையின் உறுப்பினரொருவராக இருக்கவோ, வாக்களிக்கவோ தகைமையற்றவராகின்றவிடத்து, அவரது ஆசனம் அல்லது பதவி, அந்நிகழ்வு காரணமாகவே வெற்றிடமாகும்.

---

* (4) ஆம் உட்பிரிவு நீக்கஞ் செய்யப்பட்டுள்ளது- 1977 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தின் 8 ஆம் பிரிவைப் பார்க்க.

(உறுப்பாண்மையை வறிதாக்குதல்)

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் நடைமுறை காரணமாக உள்ளூர் அதிகார சபையொன்றின் உறுப்பினரொருவரின் ஆசனம் அல்லது பதவி வெற்றிடமாகுமிடத்து, அத்தகைய அதிகாரசபை, எச்சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளின் கீழ் அல்லது ஏற்பாடுகளினால் அமைக்கப்பட்டதோ அச்சட்டவாக்கத்தின் ஏற்பாடுகள் அத்தகைய உறுப்பினர் அவரது ஆசனத்தை அல்லது பதவியைத் துறந்திருந்தால் அவ்வேற்பாடுகள் எவ்வாறு ஏற்புடையனவாயிருந்திருக்குமோ, அதே விதத்தில் வெற்றிடமான ஆசனத்தை அல்லது பதவியை நிரப்பும் நோக்கத்திற் கென அவ்வாறே ஏற்புடையனவாயிருத்தல் வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினது உறுப்பினராக இல்லாதொழிந்ததன் மேல் பதவியை வறிதாக்குதல். (பி9, 1977 இன் 24)

10அ. (1) அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒன்றினது நியமனப் பத்திரத்தில் ஓர் உள்ளூர் அதிகார சபைக்கு உறுப்பினர் ஒருவராகத் தெரிவு செய்யப்படுவதற்காக எவ்வாளின் பெயர் உள்ளடக்கப்பட்டுள்ளதோ அவ்வாள் எவரும் அக்கட்சியின் உறுப்பினரொருவராக இல்லாதொழிந்துள்ளாரென எம் மாவட்டத்தில் அவ்வுள்ளூர் அதிகாரசபைப் பிரதேசம் அமைந்துள்ளதோ அம்மாவட்டத்துக்கான தேர்தல்கள் அலுவலர் திருப்திப்பட்டால், அத்தேர்தல்கள் அலுவலர், (2) ஆம் உட் பிரிவினது ஏற்பாடுகளுக்கமைவாக, கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம், அத்தகைய ஆள்-

(அ) அவ்வுள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினெருவராகத் தெரிவு செய்யப்பட்டிருப்பின், அவரது உறுப்பினர் பதவியை வறிதாக்கியுள்ளாரென; அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் நியமனப் பத்திரத்தில், அமைய வெற்றிடமெதனையும் நிரப்புவதற்காக அவரது பெயரை வைத்திருப்பதற்கு அவருக்குள்ள உரிமையை இழந்துள்ளாரென,

வெளிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன். அதன்மேல் அத்தகை ஆள், அத்தகைய வெளிப்படுத்துகை எத்தேதியன்று வெளியிடப்பட்டதோ அத்தேதியிலிருந்து விடயத்திற்கேற்றாற்போல் அவ்வுள்ளூரதிகார சபையின் உறுப்பினரென்ற அவரது பதவியை வறிதாக்குதல் வேண்டும். அல்லது அத்தகைய ஆளினது பெயர் அங்கீகரிக்கப்பட்ட அவ்வரசியற் கட்சியின் நியமனப்பத்திரத்திலிருந்து அகற்றப்படுதல் வேண்டும்.

2 (அ) அத்தகைய ஆளுக்கும் அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய அரசியற் கட்சிக்கும் அறிவித்தல் கொடுத்த பின்னரும்; அத்துடன்

(ஆ) அத்தகைய அறிவித்தற்றேதியிலிருந்து 21 நாட்கள் கழிந்ததின் பின்னரும், அல்லாது, தேர்தல்கள் அலுவலர் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட அறிவித்தலை வெளியிடுதலாகாது. அத்தகைய அறிவித்தல் ஒவ்வொன்றும் பதிவஞ்சல் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும்.

(3) எவ்வாளின் பெயர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் நியமனப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதோ அவ்வாள் எவரும் அத்தகைய கட்சியின் உறுப்பினரொருவராக இல்லாதொழியும்

போதிலெல்லாம், அக்கட்சியின் செயலாளர், அந்நியமனப்பத்திரம் தொடர்புபட்ட உள்ளூர் அதிகாரசபை எம்மாவட்டத்தில் அமைந் துள்ளதோ அம்மாவட்டத்துக்கான தேர்தல்கள் அலுவலருக்கு அத்தகைய தகவலைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

பதவியை வறிதாக்கிய பின்னர் உறுப்பினராகக் கடமையாற்றுவதற் கான தண்டம்.

முதலாம் அட்டவணை 2023 இன் 21

11. பத்தாம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் அவரது ஆசனம் அல்லது பதவி வெற்றிடமான பின்னர், ஏதேனும் உள்ளூர் அதிகார சபையின் உறுப்பினரொருவராக மனதறியக் கடமையாற்றும் ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதோடு, நீதிவா னொருவரின் முன்னரான சுருக்க முறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், அவர் அவ்விதம் உறுப்பினராகக் கடமை யாற்றும் ஒவ்வொரு நாளுக்கும் ஐம்பதாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப் பணத்தைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

பாகம் III

வாக்கெடுப்பு மாவட்டங்களாகப் பிரித்தலும் தேருநர் நிரல்களைத் தயாரித்தலும்

வாக்கெடுப்பு மாவட்டங்களாகப் பிரித்தல்

உள்ளூர்த்தேர்தல் களுக்குப் பாராளுமன்ற வாக்கெடுப்பு மாவட்டம். வாக்கெடுப்பு மாவட்டமாகக் கருதப்படுதல். [பி11, 1977 இன் 24]

12.(1) ஏதேனும் உள்ளூரதிகார சபைப் பிரதேசத்தில் அப்போதைக்கு வலுவிலிருக்கும் பாராளுமன்ற வாக்கெடுப்பு மாவட்டம் ஒவ்வொன்றும், அவ்வுள்ளூர் அதிகார சபைக்கான தேர்தல்களின் நோக்கத்திற்காக வாக்கெடுப்பு மாவட்டமாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், உள்ளூர்த் தேர்தல்களின் நோக்கத்திற்காக, தேர்தல்கள் அலுவலர் கசெற்றில் வெளியிடப்படும் அறிவிப்பு மூலம் அத்தகைய ஏதேனும் பாராளுமன்ற வாக்கெடுப்பு மாவட்டத்தை மாற்றலாம் அல்லது திரிபுபடுத்தலாம்.

ஆயின் மேலும்,

(i) உள்ளூர் அதிகாரசபையொன்றின் வட்டாரம் ஒவ்வொன்றும் அந்த உள்ளூர் அதிகாரசபைக்கான தேர்தலொன்றின் நோக்கங்களுக்கு வாக்கெடுப்பு இடப்பரப்பொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன் [பி8, 2012இன் 22]

(ii) வட்டாரம் ஒவ்வொன்றும் பெயர் ஒன்றினாலும் இலக்க மொன்றினாலும் இனங் காணப்படுதல் வேண்டும். [பி5, 2017இன் 16]

(2) மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் - [பி5, 2012இன் 22]

(அ) ஓர் உள்ளூர் அதிகார சபையின் வாக்கெடுப்புப் பிரதேசத்தை, ஆணையாளரினால் வழங்கப்படக்கூடியவாறான பணிப்பு களுக்கிணங்க ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட வாக்கெடுப்பு மாவட்டங்களாகப் பிரித்தல் வேண்டும் ;

(ஆ) ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டத்துக்கும் வேறுபிரித்துக் காட்டும் எழுத்தை அல்லது எழுத்துக்களைக் குறித்தளித்தல் வேண்டும் ;

(இ) அத்தகைய ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டம் தொடர்பிலும், அம்மாவட்டம் தொடர்பிலான வாக்கெடுப்பு நிலையம் எந்த இடத்தில் அமைந்திருக்க வேண்டுமோ அந்த இடத்தைத் தீர்மானித்தல் வேண்டும் ; அத்துடன்

[பி5, 2017இன் 16] (ஈ) மேலே (அ), (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளிற் குறிப்பீடு செய்யப்பட்ட விபரங்களைக் கொண்டுள்ள அறிவித்தலொன்றை வர்த்தமானியில் வெளியிடுதல் வேண்டும்.

[பி6, 2012இன் 22] [பி5, 2017இன் 16] (2அ) ஆணையாளர் வேறு வகையாகப் பணித்தாலொழிய, ஒரு வாக்கெடுப்புப் பிரதேசத்தை வாக்கெடுப்பு மாவட்டங்களாகப் பிரித்தலானது அத்தகைய பிரித்தல் செய்யப்பட்ட நேரத்தில் ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டமும் ஆயிரத்து ஐந்நூறு வாக்காளர்களுக்கு மேற்படாதோரைக் கொண்டிருக்கும் வகையில் அவ்வாறு செய்யப்படுதல் வேண்டும்.

[பி5, 2017இன் 16] (2ஆ) உட்பிரிவு (2அ) என்பதன் ஏற்பாடுகளுக்கமைய, ஒரு வாக்கெடுப்புப் பிரதேசத்தை வாக்கெடுப்பு மாவட்டங்களாகப் பிரித்தலானது, சந்தர்ப்பம் தேவைப் படுத்தக்கூடியவாறு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரினால் மாற்றப்படலாமென்பதுடன், அத்தகைய மாற்றம் செய்யப்படுவதன் மேல், (2) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளிற் குறிப்பீடு செய்யப்பட்ட விபரங்களையும் அத்தகைய மாற்றம் பயனுக்கு வர வேண்டிய தேதியையும் குறித்துரைக்கின்ற அறிவித்தலொன்றை அவர் வர்த்தமானியில் வெளியிடுதலும் வேண்டும்.

(2இ) விடயத்துக்கேற்ப, (2)ஆம் உட் பிரிவின் (ஈ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (3) ஆம் உட்பிரிவின் கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலொன்று, ஆணையாளர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் உத்தேசிக்கப்பட்ட திருத்தங்கள் பற்றிப் பொது மக்களுக்கு அறிவித்த பின்னரும், உத்தேசிக்கப்பட்ட திருத்தங்கள் தொடர்பான முறையீடுகளைச் செய்வதற்குப் பொது மக்களுக்குச் சந்தர்ப்பமொன்றை அளித்த பின்னரும், அவ்வறிவித்தலிற் குறித்துரைக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றவையும், (2)ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்டவையுமான விபரங்கள் தொடர்பாகக் காலத்துக்குக் காலம் திருத்தப்படலாம் ; அத்துடன்

[பி8, 2012 இன் 22] (3) ஏதேனும் விடயத்தினது சிறப்புச் சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு, பெண் வாக்காளர்களுக்கென ஒரு தனியான வாக்கெடுப்பு நிலையத்தை ஏற்பாடு செய்வது அவசியமென அல்லது உசிதமெனத் தேர்தல்கள் அலுவலர் கருதினாலொழிய, ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டத்திற்கும் ஒன்றுக்குக் குறையாத வாக்கெடுப்பு நிலையம் இருத்தல் வேண்டும்.

[பி9, 2012இன் 22] ஓர் உள்ளூர் அதிகார சபையின் அல்லது ஒரு வட்டாரத்தின் நிருவாக எல்லைகளை மாற்றுதல்.

12அ. ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் நிருவாக எல்லைகள், அத்தகைய உள்ளூர் அதிகாரசபை எந்தச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டதோ அந்தச் சட்டத்தின் கீழ் மாற்றப்படுமிடத்து, அல்லது ஓர் உள்ளூர் அதிகாரசபைப் பிரதேசம் எந்த வட்டாரமாகப் பிரிக்கப்படுகின்றதோ அந்த ஏதேனும் வட்டாரத்தின் எல்லைகள் இக்கட்டளைச் சட்டத்தின் 3ஈ என்னும் பிரிவின் கீழ் அமைச்சரால் மாற்றப்பட்டுள்ளவிடத்து, விடயத்துக்கேற்ப, எவ்வுள்ளூரதிகார சபையின் அல்லது வட்டாரத்தின் நிருவாக எல்லைகள் அல்லது எல்லைகள் அவ்வாறு மாற்றப்பட்டனவோ அத்தகைய உள்ளூர் அதிகாரசபைக்கும் அல்லது வட்டாரத்துக்கும் அது தொடர்பிலும் 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

நிரல்களைத் தயாரித்தல்

(பி13, 1977 இன் 24) உள்ளூர்த் தேர்தல்களுக்குப் பாராளுமன்ற இடாப்புக்களைப் பயன்படுத்துதல். (பி14, 1977 இன் 24) (பி10, 2012 இன்22)

12ஆ. ஏதேனும் தேர்தற் பிரதேசத்துக்கான ஏதேனும் உள்ளூர் அதிகாரசபை உறுப்பினர்களின் பொதுத் தேர்தலொன்றின் நோக்கத்திற்காக, தேர்தல்கள் அலுவலர் அத்தகைய தேர்தற் பிரதேசத்தின் ஒவ்வொரு வட்டாரத்துக்குமான தேருநர் நிரல் ஒன்றினை சிங்களத்திலும் தமிழிலும் தயாரித்து அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய நிரலானது, அத்தகைய உள்ளூர் அதிகார சபையின் அத்தகைய தேர்தற் பிரதேசத்தின் அவ்வவ் வட்டாரத்துக்கும் நேரொத்ததாக உள்ளதான நடைமுறையிலுள்ள பாராளுமன்ற இடாப்பை அல்லது இடாப்புக்களை அல்லது இடாப்பொன்றின் பாகத்தை அல்லது இடாப்பொன்றின் பாகங்களை அல்லது அவற்றின் ஏதேனும் சேர்க்கையை உள்ளடக்கியதாயிருத்தல் வேண்டும்.

தேருநர் நிரல் பார்வையிடப்படக் கூடியதாக இருத்தல். (பி14, 1977 இன் 24) (பி3, 1978 இன் 35) [பி11, 2012இன் 22]

*12ஈ. பிரிவு 12 ஆ என்பதன்கீழ் தேருநர் நிரல் அத்தாட்சிப்படுத்தப்பட்டதன்மேல், அந்நிரல் அல்லது அதன் பிரதிகள், அந்நிரல் எத்தேர்தற் பிரதேசம் தொடர்பானதோ அத்தேர்தற் பிரதேசத்தின் உள்ளூர் அதிகாரசபை அலுவலகத்தில், அலுவலக நேரத்தில், கட்டணமின்றிப் பார்வையிடப்படுவதற்காக உடனடியாகக் கிடைக்கக் கூடியதாகவிருத்தல் வேண்டும். அந்நிரல் அவ்வாறு பார்வையிடப் படக்கூடியதாக இருக்கின்றது என்னும் பொருள்பட அமைந்த அறிவித்தலொன்று தேர்தல்கள் அலுவலரினால் வெளியிடப்படுதல் வேண்டும். ஏதேனும் தேர்தல் பிரதேசத்துக்கென 12ஆ என்னும் பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒவ்வொரு வட்டாரத்திற்குமான தேருநர் நிரல் அத்தகைய அத்தாட்சிப்படுத்தப்பட்ட தேதியன்று வலுவுக்கு வருதல் வேண்டும்.

தேர்தல்கள் அலுவலர் எழுத்துப் பிழைகளைத் திருத்துதல். (பி 14, 1977 இன் 24)

12உ. பிரிவின் கீழ் இக்கட்டளைச் சட்டத்திலுள்ளதெதுவும், ஏதேனும் தேருநர் நிரலை அத்தாட்சிப்படுத்துமுன்னர், அதில் காணப்படுவதாகத் தேர்தல்கள் அலுவலருக்குத் தோன்றும் ஏதேனும் எழுத்துப் பிழையைத் திருத்துவதிலிருந்து அவரைத் தடைசெய்வதாகக் கருதப்படுதலாகாது.

நிரல்களைத் தயாரித்தல் தொடர்பான ஏற்பாடுகளின் ஏற்புடைமை. (பி 14, 1977 இன் 24) [பி. 12, 2012 இன் 22]

12ஊ. விடயத்திற்கேற்ப, ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் எல்லைகளில் அல்லது தேர்தற் பிரதேசத்தின் எல்லைகளில் செய்யப் பட்ட மாற்றம் அத்தகையதாதலால் புதிய தேருநர் நிரலொன்றினைத் தயாரிக்கவேண்டியது அவசியமாகவுள்ளதென அமைச்சர் அபிப் பிராயப்படுமிடத்து, அவர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், அத்தகைய கட்டளை வெளியிடப்பட்டதை உடனடுத்து நடாத்தப்பட விருக்கும். அவ்வுள்ளூர் அதிகார சபை உறுப்பினர்களின் தேர்தலுக்குப் பயன்படுத்தப்பட வேண்டிய தேருநர் நிரலானது, இக்கட்டளைச் சட்டத் தின் அடுத்துவரும் ஏற்பாடுகளுக்கிணங்கத் தயாரிக்கப்பட வேண்டு மெனப் பணித்தல் வேண்டும்.

நிரல்களைத் தயாரித்து முடித்தமை பற்றிய அறிவித்தல்

(பி18, 1977 இன் 24) தேருநர் நிரல் தயாரித்து முடித்தமை பற்றிய அறிவித்தல் (பி19, 1977 இன்24) [பி.13, 2012 இன் 22]

16. * தேர்தல்கள் அலுவலர், ஏதேனும் தேர்தற் பிரதேசத்தின் வட்டாரங்களுக்கான தேருநர் நிரல்கள் தயாரித்து முடிவடைந்ததும் அவ்வாறு தயாரித்தல் முடிவடைந்து விட்டதெனக் கூறும் அறிவித்த லொன்றைச் சிங்களத்திலும் தமிழிலும் வெளியிடுதல் வேண்டும். அந்நிரல் அல்லது அதன் பிரதிகள், அத்தகைய பிரதேசத்துக்கான உள்ளூர் அதிகாரசபையின் அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் கட்டணமின்றிப் பார்வையிடுவதற்குக் கிடைக்கக்கூடியதாயிருத்தல் வேண்டும் என்பதுடன், மேலே சொல்லப்பட்ட அறிவித்தலானது, அந்நிரல் அவ்வாறு பார்வையிடுவதற்குக் கிடைக்கக்கூடியதாக இருக்கும் என்னும் பொருள்படக் கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

உரிமைக் கோரிக்கைகளும் ஆட்சேபனைகளும்

உரிமைக் கோரிக்கைகளும் ஆட்சேபனைகளும் [பி20, 1977 இன்24] [பி14, 2012இன் 22]

17(1) ஏதேனும் தேர்தற் பிரதேசத்தின் வட்டாரங்களுக்கான தேருநர் நிரல்கள் தொடர்பாக 16 ஆம் பிரிவின்கீழ் அறிவித்தலொன்று வெளியிடப்பட்டதன் மேல்-

(அ) அத்தகைய ஏதேனும் நிரலில் அவரது பெயரைப் பதியப் பெறுவதற்கு இக்கட்டளைச்சட்டத்தின் கீழ் உரித்துடையவரெனக் கோருகின்றவரும், அவரது பெயர் அவ்வாறு பதியப்படாதவருமான எவரேனும் ஆள், அவரது பெயரை அதன்கண் பதியப்பெறுவதற்காக விண்ணப்பிக்கலாம்;

(ஆ) அத்தகைய ஏதேனும், நிரலில் அவரது பெயர் பதியப்பட்டுள்ளவரும் அதன்கண் காணப்படும் வேறெவரேனும் ஆளின் பெயர் தொடர்பில் ஆட்சேபனை தெரிவிப்பவருமான எவரேனும் ஆள், அத்தகைய வேறு ஆட்களின் பெயரை அதிலிருந்து நீக்கப்பெறுவதற்காக விண்ணப்பிக்கலாம்.

*பிரிவு 12இ 1978 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கச் சட்டத்தினால் நீக்கஞ் செய்யப்பட்டது.
**13, 14 மற்றும் 15 ஆம் பிரிவுகள் நீக்கப்பட்டுள்ளன.
1977 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க சட்டத்தின் 15 மற்றும் 17 ஆம் பிரிவுகளை பார்க்கவும்.

பந்தி (அ) இன் கீழான விண்ணப்பம் ஒவ்வொன்றும் (அது இதனகத்துப்பின்னர் ''உரிமைக்கோரிக்கை'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்துடன் (ஆ) என்னும் பந்தியின் கீழான விண்ணப்பம் ஒவ்வொன்றும் (அது இதனகத்துப்பின்னர் ''ஆட்சேபனை'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) அறிவித்தல் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குப் பிந்தாமல் அப்பிரதேசம் அமைந்துள்ள மாவட்டத்துக்கான தேர்தல்கள் அலுவலருக்கு எழுத்தில் செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவினால் குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் செய்யப்படினன்றி, ஏதேனுமொரு உரிமைக் கோரிக்கையோ ஆட்சேபனையோ தேர்தல்கள் அலுவலரினால் ஏற்றுக்கவனிக்கப் படலாகாது.

உரிமைக் கோரிக்கைகளும் ஆட்சேபனைகளையும் வெளியிடுதலும் விசாரித்தலும். (பி21, 1977 இன் 24)

[பி15, 2012இன் 22]

18. (1) ஏதேனும் தேர்தற் பிரதேசத்தின் வட்டாரங்களுக்கான தேருநர் நிரல்கள் தொடர்பாக 16 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்காலப்பகுதி முடிவடைந்ததன்மேல், அந்நிரல் தொடர்பாக ஏதேனும் உரிமைக் கோரிக்கை அல்லது ஆட்சேபனை முறைப்படி செய்யப்பட்டிருந்தால், அப்பிரதேசம் அமைந்துள்ள மாவட்டத்துக்கான தேர்தல்கள் அலுவலர்-

(அ) அவ்வாறு செய்யப்பட்ட உரிமைக்கோரிக்கை அல்லது ஆட்சேபனை ஒவ்வொன்றையும் எடுத்துக்காட்டுவதும்;

(ஆ) அத்தகைய உரிமைக்கோரிக்கை அல்லது ஆட்சேபனை ஒவ்வொன்றையும் விசாரிக்கும் நோக்கத்திற்காக, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படும் நேரத்திலும், தேதியிலும், அப்பிரதேசத்துக்கான உள்ளூர் அதிகார சபை அலுவலகத்தில் அல்லது அத்தகைய அறிவித்தலில் அவர் குறித்துரைக்கக்கூடிய அத்தகைய வேறு இடத்தில் சமுகமளிப்பாரெனக் காட்டுவதும்; அத்துடன்

(இ) கோரிக்கையாளர் ஒவ்வொருவரையும், எவரேனும் கோரிக்கையாளரை எதிர்க்க விரும்பும் ஆள் ஒவ்வொருவரையும் ஆட்சேபனையாளர். ஒவ்வொருவரையும் எவ்வாள் தொடர்பாக ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளதோ அவ்வாள் ஒவ்வொருவரையும் அவ்வாறு காட்டப்பட்ட தேதியிலும் நேரத்திலும் அவருக்கு முன்பாகத் தோன்றுமாறு அழைப்பதும், ஆன அறிவித்த லொன்றை வெளியிடுதல் வேண்டும்.

(2) (அ) அவ்வறிவித்தலிற் குறிக்கப்பட்ட தேதியிலும், நேரத்திலும் இடத்திலும் தேர்தல்கள் அலுவலர் வந்து இருத்தல் வேண்டும் என்பதோடு, தேவையென அவர் கருதுகின்றவாறான சுருக்க முறை விசாரணைக்குப் பின்னர் அவ்வறிவித்தல் எடுத்துக்காட்டப்பட்ட ஒவ்வொரு உரிமைக்கோரிக்கையையும் அல்லது ஆட்சேபனையையும் பற்றி அத்தேதியன்றோ அல்லது அத்தேதியை அடுத்துவரும் பத்துநாட் காலத்தினுள்ளோ தீர்மானித்தல் வேண்டும்.

(ஆ) இப்பிரிவின் கீழ் ஏதேனும் உரிமைக் கோரிக்கையையோ ஆட்சேபனையையோ தீர்மானிக்குமுன்னர், விடயத்திற்கேற்ப, கோரிக்கையாளருக்கும் உரிமை கோரிக்கையை எதிர்க்க விரும்பும் ஒவ்வோர் ஆளுக்கும் அல்லது ஆட்சேபனை தெரிவிப்பவருக்கும். அத்துடன் ஆட்சேபனை எவர் சம்பந்தமாகச் செய்யப்படுகின்றதோ அவ்வாளுக்கும் அவர் தமது பக்க வழக்கை விளக்குவதற்கான ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்படல் வேண்டும்.

(இ) ஏதேனும் உரிமைக் கோரிக்கையை அல்லது ஆட்சேபனையைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்கென இப்பிரிவின் கீழ்த் தம்மால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளனைத்தையும் கொண்ட எழுத்து வடிவத்திலான பதிவேடொன்றைத் தேர்தல்கள் அலுவலர் வைத்திருத்தல் வேண்டும்.

(3) ஏதேனும் உரிமைக் கோரிக்கையை அல்லது ஆட்சேபனையைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்கென, தேர்தல்கள் அலுவலர் ஒரு சத்தியத்தை அல்லது உறுதியுரையை எடுத்தோது விக்கலாம் என்பதுடன் அத்தகைய சத்தியத்தின்பேரில் அல்லது உறுதியுரையின் பேரில் மனதறிய ஏதேனும் பொய்க்கூற்றைச் செய்யும் ஆள் எவரும், தவறென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிமுறை நடவடிக்கை ஒன்றின் பொய்ச்சான்று கொடுத்த தவறுக்கெனத் தண்டனைச் சட்டக்கோவையினால் விதிக்கப்பட்ட தண்டங்களுக்கு ஆளாதலும் வேண்டும்.

(4) இருபதாம், 21 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைவாக இப்பிரிவின் கீழ் ஒவ்வொரு உரிமைக் கோரிக்கையின் மீதும் அல்லது ஆட்சேபனை மீதும் தேர்தல்கள் அலுவலரினால் செய்யப்படும் தீர்மானம், முற்றானதும் முடிவானதுமாக இருத்தல் வேண்டும்.

[பி21, 1977இன் 24]
[பி15, 2012இன் 22]

(5) தேர்தல்கள் அலுவலர், தேருநர் நிரல்கள் தொடர்பாகச் செய்யப்பட்ட எல்லா உரிமைக்கோரிக்கைகளையும் ஆட்சேபனைகளையும் முடிவு செய்ததன் பின்னர், அத்தகைய ஏதேனும் முடிவிற்குப் பயன்கொடுப்பதற்கு அவசியமானதென அவர் கருதக்கூடிய அத்தகைய திருத்தங்களை அந்நிரல்களில் செய்தல் வேண்டும்.

[பி10, 1953இன் 25]
[முதலாம் அட்டவணை 2023 இன் 21]

(6) ஏதேனும் உரிமைக் கோரிக்கையில் அல்லது ஆட்சேபனையில் அல்லது அதனோடு தொடர்புள்ள ஏதேனும் விசாரணையொன்றில் வேண்டுமென்றே பொய்க்கூற்றொன்றையோ வெளிப்படுத்துதலையோ செய்கின்ற ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின்பின் குற்றத்தீரப்பளிக்கப்படுமிடத்து, ஐம்பதாயிரம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்தைச் செலுத்துவதற்கு ஆளாதலும் வேண்டும்.

[பி10, 1953இன் 25]

(7) இப்பிரிவின் கீழ் ஏதேனும் உரிமைக் கோரிக்கையை அல்லது ஆட்சேபனையைவிட்டு நடத்தப்படும் விசாரணையெதிலும் தேர்தல் அலுவலர் அமைதியைப் பேணுதல் வேண்டும் என்பதுடன், ஒரு தடவையில் உட்பிரவேசிக்கக்கூடிய ஆட்களின் எண்ணிக்கையை ஒழுங்குபடுத்துதலும் வேண்டும்; அத்துடன் விடயத்திற்கேற்ப, கோரிக்கையாளரும் உரிமைக் கோரிக்கையை எதிர்க்க விரும்பும் ஆட்களும் அல்லது ஆட்சேபனை தெரிவிப்பவரும் எவ்வாள் சம்பந்தமாக ஆள் ஆட்சேபனை செய்யப்படுகின்றதோ அவ்வாளும், அங்கே கடமையாற்றும் பொலிசு அலுவலர்களும். விசாரணையின் நோக்கங்களுக்கென

உத்தியோக முறையில் வேலைக்கமர்த்தப்பட்ட ஏனைய ஆட்களும் தவிர்ந்த எல்லா ஆட்களையும் உள்நுழையாதவாறு தடுக்கலாம்.

(8) இப்பிரிவின்கீழ் நடாத்தப்படும் ஏதேனும் உரிமைக் கோரிக்கை அல்லது ஆட்சேபனை பற்றிய விசாரணையொன்றில் எவரேனும் ஆள் ஒழுக்கக்கேடாக நடந்தால், அல்லது தேர்தல் அலுவலரின் சட்ட முறையான கட்டளைகளுக்குக் கீழ்ப்படியத் தவறினால், தேர்தல்கள் அலுவலர், எவரேனும் பொலிசு அலுவலரைக் கொண்டு அல்லது தேர்தல்கள் அலுவலரினால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எந்த ஆளையும் கொண்டு, விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கும் இடத்திலிருந்து உடனடியாக அவரை வெளியேற்றலாம். [பி10, 1953இன் 25]

(9) இப்பிரிவின்கீழான விசாரணையொன்று நடாத்தப் பெற்றுக் கொண்டிருக்கும் இடத்திலிருந்து வெளியேற்றப்படும் ஆள் எவரும்- [பி10, 1953 இன் 25]

(அ) தேர்தல் அலுவலரின் அனுமதியுடனன்றி, விசாரணை நடை பெற்றுக்கொண்டிருக்கும்போது அவ்விடத்தினுள் மீண்டும் பிரவேசிக்கவிடப்படலாகாது அத்துடன்

(ஆ) அவ்விடத்தில் ஏதேனும் குற்றம் புரிந்தவரெனக் குற்றஞ் சாட்டப்பட்டால், நீதிவானொருவரின் முன் அவர்கொண்டு வரப்படும் வரை, கட்டுக்காவலில் வைக்கப்படலாம்.

19(1) ஆளெவரும் அவரது பெயரை-

தேர்தல் நிரல்களில் ஆள் ஒருவரின் பெயர் காணப்படுதல் பற்றிய சிறப்பேற்பாடு [பி5, 1965இன் 15] [பி22, 1977இன் 24] [பி 16, 2012இன் 22]

(அ) அதே தேர்தற் பிரதேசத்தின் வட்டாரங்களிலாயினுஞ்சரி அல்லது வெவ்வேறு தேர்தற் பிரதேசங்களின் வட்டாரங் களிலாயினுஞ்சரி, ஒன்றுக்கு மேற்பட்ட தேருநர் நிரல்களில்; அல்லது

(ஆ) தகைமையளிக்கும் வெவ்வேறு முகவரிகளின் கீழ் ஒரே தேருநர் நிரலில் ஒரு தடவைக்குமேல்-

பதியப்பெறுவதற்கு அல்லது வைத்திருப்பதற்கு, அவ்வாறு அவரது பெயரைப் பதியப்பெறுவதற்கு அல்லது வைத்திருப்பதற்கு அவர் தகைமையுடையவராயிருக்கலாம் என்பது எப்படியிருப்பினும், உரித்துடையவராகார்.

(2) (அ) (i) ஒன்றிற்கு மேற்பட்ட தேருநர் நிரல்களில்; அல்லது

(ii) தகைமையளிக்கும் வெவ்வேறு முகவரிகளின்கீழ் அதே தேருநர் நிரலில் ஒன்றிற்கு மேற்பட்ட தடவைகளில்.

அவரின் பெயரைப் பதிவு செய்விக்கவோ வைத்திருந்து வரவோ ஆள் ஒருவர் தகைமையுடையவரெனக் காணப்படுமிடத்து, தேர்தல்கள் அலுவலர் ஒருவர் அந்த ஆளின் மீது ஓர் அறிவித்தலைச் சேர்ப்பித்து விடயத்திற்கேற்ப, எந்நிரலில் அவரின் பெயரைப் பதிவுசெய்ய வேண்டும் என அல்லது வைத்திருக்கவேண்டுமென அவர் விரும்புகின்றாரோ அந்தத் தேர்தல் நிரலையும், அல்லது அதே தேர்தல் நிரலில் எம்முகவரியின்கீழ் அவரின் பெயர் பதிவு செய்யப்படவேண்டும் என

அல்லது வைத்திருக்கப்பட வேண்டும் என அவர் விரும்புகின்றாரோ அந்தத் தகைமையளிக்கும் முகவரியையும், அத்தகைய அறிவித்தல் அனுப்பப்பட்ட ஏழு நாட்களுக்குள் குறித்துரைக்குமாறு பணித்தல் வேண்டும்.

(ஆ) இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட அறிவித்தலெதுவும், அத்தகைய ஆளுக்கு சாதாரண அஞ்சல் மூலம் அனுப்புவதன் மூலம் அல்லது அவரிடம் அல்லது அவரது குடும்பத்தில் பராயமடைந்த உறுப்பினரொருவரிடம் ஒப்படைப்பதன் மூலம் எவ்வாளுக்கும் சேர்ப்பிக்கப்படலாம்.

[பி22, 1977இன் 24]

(3) இரண்டாமுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழான அறிவித்தலொன்றிற்கு இணங்கியொழுகும் வகையில், ஆளொருவர்-

(அ) எத்தேருநர் நிரலில் பெயரைப் பதியப்பெற அல்லது வைத்திருக்க விரும்புகின்றாரோ அத்தேருநர் நிரலைக் குறித்துரைத்திருந்து அத்தகைய ஆள் அவரது பெயரைப் பதியப்பெற அல்லது வைத்திருக்கத் தகைமையுடையவரெனத் தோதான மாவட்டத்துக்கான தேர்தல்கள் அலுவலர் திருப்தியடையுமிடத்து அவரது பெயர் வேறெந்தத் தேருநர் நிரலிலுமல்லாது அந்த நிரலிலேயே பதியப்பட அல்லது வைத்திருக்கப்படவேண்டும்; அல்லது

[பி16, 2012இன் 22]

(ஆ) அதே தேருநர் நிரலில் தகைமையளிக்கும் எம்முகவரியின் கீழ் அவர் தமது பெயரைப் பதியப்பெற அல்லது வைத்திருக்க விரும்புகின்றாரோ அம்முகவரியைக் குறித்துரைத்து, அம்முகவரியின் கீழ் அத்தகைய ஆள் அவரது பெயரைப் பதியப்பெற அல்லது வைத்திருக்கத் தகைமையுடையவரென அந்நிரல் தொடர்புறுத்தும் வட்டாரம் அமைந்துள்ள மாவட்டத்துக்கான தேர்தல்கள் அலுவலர் திருப்தியடையுமிடத்து, அவரது பெயர் அந்த நிரலில் வேறெந்த முகவரியின் கீழுமல்லாது, அந்த நிரலில் அம்முகவரியின் கீழே பதியப்பட அல்லது வைத்திருக்கப்பட வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழான அறிவித்தலுக்கிணங்கியொழுக ஆள் ஒருவர் தவறுகின்றவிடத்து-

(அ) எத்தேருநர் நிரலில் அவ் ஆள் அவரது பெயரைப் பதிவு செய்ய அல்லது வைத்திருக்க விரும்புகின்றாரோ அந்தத் தேருநர் நிரலைக் குறித்துரைக்குமாறு அறிவித்தலின் மூலம் பணிக்கப்பட்டிருப்பின், அவ் ஆளின் பெயரைப் பதிவுசெய்யவோ வைத்திருக்கவோ அவர் தகைமையுடையவராயிருக்கும் தேருநர் நிரல்களுள் எந்தத் தேருநர் நிரலில் அத்தகைய பெயர் பதிவுசெய்யப்படல் வேண்டும் அல்லது வைத்திருக்கப்படல் வேண்டுமெனத் தோதான தேர்தல்கள் அலுவலர் தீர்மானித்தல் வேண்டும். அத்துடன் அத்தகைய அலுவலரினால் தீர்மானிக்கப்பட்ட தேருநர் நிரலிலேயே அத்தகைய பெயர் பதிவு

செய்யப்படல் வேண்டுமே தவிர அல்லது வைத்திருக்கப்படல் வேண்டுமே தவிர வேறெதிலும் அன்று; அல்லது

(ஆ) எந்த முகவரியின் கீழ் அவ் ஆள் அதே தேருநர் நிரலில் அவரது பெயரைப் பதிவுசெய்ய அல்லது வைத்திருக்க விரும்பு கின்றாரோ அந்தத் தகைமையளிக்கும் முகவரியைக் குறிக்குமாறு அறிவித்தலின்மூலம் கோரப்பட்டிருப்பின், அதே தேருநர் நிரலில் அவரது பெயரைப் பதிவுசெய்வதற்கு அல்லது வைத்திருப்பதற்கு அவ் ஆள் தகைமையுடையவராயிருக்கும் தகைமையளிக்கும் முகவரிகளுள் எம் முகவரியின் கீழ் அந்நிரலில் அத்தகைய பெயர் பதிவுசெய்யப் படல் வேண்டும் அல்லது வைத்திருக்கப்படல் வேண்டும் எனத் தோதான தேர்தல்கள் அலுவலர் தீர்மானித்தல் வேண்டும். அத்துடன் அந்நிரலில் வேறெந்தத் தகைமை அளிக்கும் முகவரியின் கீழுமல்லாது அத்தகைய அலுவலரினால் தீர்மானிக்கப்பட்ட அந்நிரலிலுள்ள தகைமையளிக்கும் முகவரியின்கீழ் அத்தகைய பெயர் பதிவு செய்யப்படல் வேண்டும் அல்லது வைத்திருக்கப்படல் வேண்டும்.

(5) எவரேனும் ஆள் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ்ச் சேர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலுக்கிணங்கி ஒழுகத் தவறியமை அல்லது தேர்தல்கள் அலுவலரொருவர் † அவ் ஆள் தொடர்பில் (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கி ஒழுகத்தவறியமை, அல்லது அவ்வாறு இணங்கியொழுகியும் அத்தகைய ஆளினால் குறித் துரைக்கப்பட்ட ஏதேனும் தேருநர் நிரலில் அல்லது அதே தேருநர் நிரலிலுள்ள ஏதேனும் தகைமையளிக்கும் முகவரியின்கீழ் அவரது பெயர் பதிவு செய்யப்படவில்லை அல்லது வைத்திருக்கப்படவில்லை யென்ற நிகழ்வு, (1) ஆம் உட்பிரிவினதும் 82 ஆம் பிரிவனதும் ஏற்பாடுகளுக் கமைய, விடயத்திற்கேற்ப, எந்தத் தேருநர் நிரலில் அல்லது தகைமை யளிக்கும் எந்த முகவரியின் கீழ் அவரது பெயரைப்பதிவு செய்ய அல்லது தொடர்ந்தும் வைத்திருக்க அவர் தகைமையுடையவராய் இருக் கின்றாரோ அந்த நிரலில் அல்லது முகவரியின் கீழ் அவரது பெயரைப் பதிவு செய்ய அல்லது தொடர்ந்தும் வைத்திருக்க அவருக்குள்ள உரிமையைப் பாதிக்கவோ அல்லது அதனைப் பங்கப்படுத்தவோ மாட்டாது.

மேன்முறையீடுகள்

தேர்தல்கள் அலுவலரின் முடிவுகளுக்கு எதிராகச் செய்யப்படும் மேன்முறையீடுகள் (பி23, 1977 இன் 24) (பி17, 2012 இன் 22)

20. (1) எவரேனும் கோரிக்கையாளர், அல்லது ஆட்சேபனையாளர் அல்லது எவ்வாள் தொடர்பாக ஆட்சேபனையொன்று செய்யப் பட்டுள்ளதோ அவ்வாள், ஏதேனும் தேர்தற் பிரதேசத்தின் வட்டாரங் களுக்கான தேருநர் நிரல்கள் தொடர்பான, ஏதேனும் உரிமைக் கோரிக்கையின் மீது அல்லது ஆட்சேபனையின்மீது தேர்தல்கள் அலுவலர் செய்த முடிவினால் திருப்தியடையாவிட்டால், அவர் அத்தகைய முடிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து பத்து நாட்களுக்குப் பிந்தாத ஒரு தேதியில், அத்தகைய முடிவில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனும் சட்டப்

† மாவட்டத்தின் தேர்தல்கள் அலுவலர் மற்றும் 'தேர்தல்கள் அலுவலர்' என்பவற்றுக்கான ஒவ்வொரு குறிப்பீடும், 4 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலராக பொருள் கொள்ளப்படுதல் வேண்டும். (2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் 81 ஆம் பிரிவைப் பார்க்கவும்.)

பிரச்சினையின்மீது, வேறெந்த ஏதுக்களின்மீதுமல்ல, மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அதற்கெதிராக மேன்முறையீடு செய்யலாம்.

(2) இப்பிரிவின் கீழான ஒவ்வொரு மேன்முறையீடும் ஐந்து ரூபாய் பெறுமதியான ஒரு முத்திரை அல்லது முத்திரைகள் ஒட்டப்பட்ட மனுவொன்றின் மூலம் செய்யப்படல் வேண்டும். மேன்முறையீட்டு மனு, தேர்தல்கள் அலுவலரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவர் அம்மேன்முறையீடு தொடர்புபட்டுள்ள நடவடிக்கைகளின் பதிவேட்டுடன் சேர்த்து அதனை உடனடியாக மேன்முறையீட்டு நீதிமன்ற பதிவாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

(3) மேன்முறையீட்டாளர் தமது மனுவில் மேன்முறையீட்டிற்கான ஒரு எதிர்வாதியைப் பெயர் குறிப்பிடல் வேண்டும்; அவ்வெதிர்வாதி-

(அ) மேன்முறையீட்டாளர் கோரிக்கையாளரொருவராயின், தேர்தல்கள் அலுவலராய் இருத்தல் வேண்டும்;

(ஆ) மேன்முறையீட்டாளர் ஆட்சேபனையாளராயின், எந்த ஆள் பற்றி ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டதோ அந்த ஆளாய் இருத்தல் வேண்டும்;

(இ) மேன்முறையீட்டாளர், எவருக்கெதிராக ஆட்சேபனை செய்யப்பட்டதோ அந்த ஆளாயிருப்பின், ஆட்சேபனை யாளராய் இருத்தல் வேண்டும்.

*(4) மேன்முறையீட்டாளர் தேர்தல்கள் அலுவலரிடம் மனு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் மூன்று நாட்களுள் நேரடியாகவே எதிர் வாதியிடம் அல்லது எதிர்வாதியின் கடைசி வதிவிடமென அறியப்பட்ட இடத்தில் பிரதியொன்றை வைப்பதன் மூலம் எதிர்வாதியிடம் மனுவின் பிரதியொன்றைச் சேர்ப்பித்தல் வேண்டும்; அத்துடன் அந்தப் பிரதி சேர்க்கப்பட்ட பின்னர் ஐந்து நாட்களுள் அவ்வாறு சேர்ப்பித்தல் நேரம் இடம், சந்தர்ப்பங்கள் பற்றிக் குறிப்பிடுகின்ற சத்தியக்கடதாசியொன்றை மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

உயர் நீதிமன்றத்தின் கட்டளை. (பி24, 1977 இன் 24)

21. இக்கட்டளைச்சட்டத்தின்கீழான ஏதேனும் உரிமைக் கோரிக்கை அல்லது ஆட்சேபனை தொடர்பில் முறையாகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டு விசாரணையின்போது மேன்முறையீட்டு நீதிமன்றமானது, மேன்முறையீட்டாளருக்கும் எதிர்வாதிக்கும் அல்லது முறையே அவர்களது சட்டத்தரணிமாருக்கும் தம்திறம் கூறுவதற்குச் சந்தர்ப்பமளித்த பின்னர், அவ்வுரிமைக் கோரிக்கை அல்லது ஆட்சேபனை பற்றியும் விசாரணைக்கான செலவு தொகைகளைக் கொடுப்பனவு செய்தல் பற்றியும் நீதியானதென அது எண்ணும் அத்தகைய கட்டளையை ஆக்குதல் வேண்டும்; அத்துடன், தேருநர் நிரலில் ஏதேனும் பெயரைப் புகுத்துமாறு, அல்லது நீக்குமாறு அத்தகைய கட்டளையானது பணித்தால், அந்நிரல் எத்தேர்தல்கள் அலுவலரினால் தயாரிக்கப்பட்டதோ அத்தேர்தல்கள் அலுவலரால் உடனடியாக இணங்கி ஒழுகப்படல் வேண்டும்.

*5ஆம் உட்பிரிவு விட்டுவிடப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 146(2) (ii) ஆம் உறுப்புரை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இரு நீதிபதிகளினால் இம்மேன்முறையீட்டு நியாயாதிக்கம் பிரயோகிக்கப்படுதல் வேண்டுமெனத் தேவைப்படுத்துகிறது.

நிரல்களை அத்தாட்சிப்படுத்துதல்

தேருநர் நிரலை அத்தாட்சிப்படுத்தல் [பி25, 1977இன் 24] [பி18, 2012இன் 22]

22.(1) ஒவ்வொரு தேர்தற் பிரதேசத்தின் விடயத்திலும், 18 ஆம் பிரிவின் அல்லது 19 ஆம் பிரிவின் அல்லது 21 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தயாரிக்கப்பட்டு அவசியமானவிடத்துத் திருத்தப்பட்ட தேருநர் நிரல்கள் அப்பிரதேசம் அமைந்திருக்கும் மாவட்டத்துக்கான தேர்தல்கள் அலுவலரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

[பி18, 2012இன் 22]

(2) தேர்தல்கள் அலுவலர், அந்நிரல் தொடர்பான 20 ஆம் பிரிவின்கீழ்க் கொணரப்பட்ட ஏதேனும் மேன்முறையீடு முடிவுறாதிருக்கும்போது அப்பிரிவின் கீழான தேருநர் நிரல்கள் அத்தாட்சிப்படுத்தலா மென்பதுடன், அதன்பின்னர், அத்தகைய மேன்முறையீட்டின்மீது மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் ஆக்கப்படும் கட்டளையானது அவ்வாறு பணித்தால், அந்நிரலில் ஏதேனும் பெயரைப் புகுத்தலும் அல்லது நீக்குதலும் வேண்டும்.

[பி18, 2012இன் 22]

(3) இதனகத்து முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகத் தேருநர் நிரல்கள் அத்தாட்சிப்படுத்தப்பட்டதன்மேல், அந்நிரல்கள் அல்லது அதன் பிரதிகள் அந்நிரல்கள் எத்தேர்தற் பிரதேசம் தொடர்பானதோ அத்தேர்தற் பிரதேசத்துக்கான உள்ளூர் அதிகாரசபை அலுவலகத்தில், அலுவலக நேரங்களில், கட்டணமின்றிப் பார்வையிடப்படுவதற்குக் கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். அந்நிரல்கள் அவ்வாறு பார்வையிடுவதற்குக் கிடைக்கக்கூடியதாக இருக்கின்றது என்னும் பொருள்பட அமைந்த அறிவித்தலொன்று தேர்தல்கள் அலுவலரினால் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நிரல்கள் தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்பாக ஏதேனும் மேன்முறையீடு முடிவுறாதிருப்பின், மேலே சொல்லப்பட்ட அறிவித்தலானது அத்தகைய மேன்முறையீடு ஒவ்வொன்றினதும் விவரங்களை எடுத்துக்காட்டும் கூற்றொன்றினைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

[பி18, 2012இன் 22]

(4) இக்கட்டளைச்சட்டத்திலுள்ளது எதுவும், ஏதேனும் தேருநர் நிரல்கள் அத்தாட்சிப்படுத்துவதற்கு முன்னர், அதில் காணப்படுவதாகத் தேர்தல்கள் அலுவலருக்குத் தோன்றும் ஏதேனும் எழுத்துப் பிழையைத் திருத்துவதிலிருந்து அவரைத் தடைசெய்வதாகக் கருதப்படுதலாகாது.

தேருநர் நிரல் வலுவுக்கு வரும் தேதி (பி 26, 1977 இன் 24)

[பி19, 2012இன் 22]

23. இருபத்திரண்டாம் பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஏதேனும் தேர்தற் பிரதேசத்தின் வட்டாரங்களுக்கான தேருநர் நிரல்களானவை அவ்வாறு அத்தாட்சிப்படுத்தப்பட்ட தேதியன்றும், 22 ஆம் பிரிவிற்கிணங்க அதன்கண் பின்னர் செய்யக்கூடிய அத்தகைய மாற்றங்களுக்கு அமைவாகவும், வலுவுக்கு வருதல் வேண்டும்.

பாகம் IV

தேர்தல்கள்

தேர்தல்கள் இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் நடாத்தப்பட வேண்டும்.[பி27, 1977இன் 24]

24. உள்ளூர் அதிகாரசபையொன்றின் உறுப்பினர்களுக்கான பொதுத் தேர்தல் ஒவ்வொன்றும் இதனத்துப்பின்னர் இக்கட்டளைச் சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் நடாத்தப்படல் வேண்டும்.

தேர்தல்கள் நடாத்தும் தேதி [பி5, 1987இன் 24]

25. உள்ளூரதிகார சபையொன்றின் உறுப்பினர்களது பொதுத் தேர்தல் ஒவ்வொன்றும், எந்தத் தேதியன்று தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களான உறுப்பினர்களின் பதவிக்காலம் தொடங்க வுள்ளதோ அந்தத் தேதிக்கு முன்னர் ஆறு மாதங்களுக்குள்ளாக நடத்தப்படுதல் வேண்டும்.

நியமனங்கள் பற்றிய அறிவித்தல்

நியமன காலப்பகுதி பற்றிய அறிவித்தல். [பி29, 1977 இன் 24] [பி6, 1983 இன் 24] [பி20, 2012 இன் 22] [பி6, 2017 இன் 16]

26. உள்ளூர் அதிகாரசபையொன்றின் உறுப்பினர்களுக்கான தேர்தலொன்று ஏதேனுமாண்டில் நடாத்தப்படவிருக்கும் போதிலெல்லாம், அத்தகைய உள்ளூர் அதிகார சபையின் தேர்தற் பிரதேசம் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளதோ அந்த மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர், அத்தகைய தேர்தலை நடாத்துவதற்கு அவருக்குள்ள உளக்கருத்துப் பற்றிய அறிவித்தலொன்றை வெளியிடுதல் வேண்டும். அவ்வறிவித்தலானது, அத்தேர்தற் பிரதேசத்தின் ஒவ்வொரு வட்டாரத்திலும் எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் அத்துடன் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனரோ அக்கட்சிகளின் அத்துடன் குழுக்களின் நியமனப்பத்திரங்களைப் பெறுவதற்கு நியமிக்கப்பட்ட தெரிவத்தாட்சி அலுவலரின் பெயரையும், அத்தெரிவத்தாட்சி அலுவலரினால் அவரின் அலுவலகத்தில் எந்தக் காலப் பகுதியின்போதும் அலுவலக நேரங்களிலும் நியமனப்பத்திரங்கள் பெறப்பட வேண்டுமோ (இதனகத்துப்பின்னர் "நியமன காலப்பகுதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அந்தக் காலப்பகுதியையும் நியமனப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய இடத்தையும் குறித்துரைத்தல் வேண்டும். அத்தகைய நியமன காலப்பகுதி, அறிவித்தல் வெளியிடப்பட்ட தேதிக்குப் பின்னர் பதினான்காவது நாளன்று தொடங்குதல் வேண்டுமென்பதுடன், அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதிக்குப் பின்னர் பதினேழாம் நாளன்று நண்பகல் பன்னிரண்டு மணிக்கு முடிவுறுதலும் வேண்டும். அவ்வறிவித்தலானது, அங்கீகரிக்கப்பட்ட சின்னங்களும் ஒன்றுக்கு மேற்பட்ட சுயேச்சைக் குழுக்கள் இருக்குமிடத்து ஒரு வேறு பிரித்துக்காட்டும் இலக்கமும் குறித்தொதுக்கப்படும் தேதியையும், நேரத்தையும், இடத்தையும் குறித்துரைத்தலும் வேண்டும்.

தெரிவத்தாட்சி அலுவலர்களை நியமித்தல்

தெரிவத்தாட்சி அலுவலர்களை நியமித்தல். [பி30, 1977இன் 24] [பி7, 1987இன் 24]

27. (1) உள்ளூரதிகாரசபையொன்றின் உறுப்பினர்களின் பொதுத் தேர்தல் ஒவ்வொன்றினதும் நோக்கத்துக்காக தேர்தல் இடப் பரப்பொன்றிற்கு ஆணையாளரானவர் பகிரங்க அலுவலர் ஒருவரை தேர்தல் இடப்பரப்புக்கு தெரிவத்தாட்சி அலுவலராகவும் அவசிய மாகக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான பகிரங்க அலுவலர்களை உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாகவும்

தேர்தலொன்று தொடர்பில் தெரிவத்தாட்சி அலுவலர் ஒருவருக்கு அல்லது உதவித் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்கு குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் அத்தகைய தேர்தல் இடப்பரப்புத் தொடர்பாக பிரயோகிப்பதற்கு புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு பெயர் குறித்து நியமித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்டவரான எவரேனும் தெரிவத்தாட்சி அலுவலர் சுகவீனம் காரணமாக அல்லது வேறு காரணத்தால் இக்கட்டளைச்சட்டத்தால் அல்லது கட்டளைச்சட்டத்தின் கீழ் அவருக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது அவருக்குக் குறித் தொதுக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட தத்தவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் புரிவதற்கும் இயலாதிருக்குமிடத்து அத்தகைய தெரிவத்தாட்சி அலுவலர் அத்தகைய தத்துவங்களையும், கடமைகளையும் அத்துடன் பணிகளையும் வேறொரு பகிரங்க அலுவலருக்குக் கையளிக்கலாம்; அத்தகைய கையளிப்பு ஒவ்வொன்றும், இயலக் கூடியளவு விரைவாக, ஆணையாளருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். அவர் அத்தகைய தத்துவங்களும் கடமைகளும் பணிகளும் எப்பகிரங்க அலுவலருக்குக் கையளிக்கப்பட்டிருந்தனவோ அப்பகிரங்க அலுவலரால் ஏலவே செய்யப்பட்ட எதனதும் வலிதுடைமைக்குப் பங்கமின்றி, கையளிப்பை உறுதிப்படுத்தலாம் அல்லது அனுமதிக்காது விடலாம்.

(3) நான்காம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்டவாரான எவரேனும் தெரிவத்தாட்சி அலுவலர், அவரது மாவட்டத்திலுள்ள தேர்தல் இடப்பரப்பு எதிலும், இப்பிரிவினால் தெரிவத்தாட்சி அலுவலர் ஒருவருக்கு உரித்தாக்கப்பட்ட, அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட தத்துவங்கள், பணிகள் அத்துடன் கடமைகள் என்பவற்றை பிரயோகிக்கலாம். புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள்

அங்கீகரிக்கப் பட்ட அரசியற் கட்சிகள், [பி31, 1977இன் 24]

[பி32, 1977இன் 24]

27அ. (1) பாராளுமன்ற தேர்தல்கள் அரசப் பேரவைக் கட்டளையின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றெனக் கணிக்கப்படும் அரசியற் கட்சி ஒவ்வொன்றும், அந்த அரச பேரவைக் கட்டளையின் கீழ் தொடர்ந்தும் அவ்வாறே அவ்வரசியற் கட்சி கணிக்கப் படும்வரை உள்ளூர் அதிகார சபைத் தேர்தலின் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி ஒன்றெனக் கருதப்படுதல் வேண்டும்.

(2) அரசியற் கட்சியொன்று (1) ஆம் உட்பிரிவினது ஏற்பாடுகள் செயற்படுவதன் பயனாக உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்களின் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியற் கட்சியாகக் கருதப்படுமிடத்து, பாராளுமன்றத் தேர்தல்கள் அரசப் பேரவைக் கட்டளையின் கீழ் அத்தகைய கட்சியின் வேட்பாளர்களுக்குக் குறித்தொதுக்கப்படும் சின்னம், (2) ஆம் உட்பிரிவின் கீழ் அக்கட்சி அவ்வாறு உரித்துடையதாகாதொழிகின்ற தேதி வரையும், அக்கட்சிக்குக் குறித்தொதுக்கப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட சின்னமாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3, 4 மற்றும் 5 ஆம் உட்பிரிவுகள் நீக்கப்பட்டுள்ளன. 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் 21 ஆம் பிரிவைப் பார்க்கவும்.

உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்களின் நோக்கத்திற்கென அங்கீகரிக்கப்பட்ட கட்சியொன்றின் பிளவுபட்ட பிரிவுகள் சம்பந்தமாக ஆணையாளருக்குள்ள தத்துவம். [பி6, 1963இன் 9] [பி34, 1977இன் 24]

27உ* (1) உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்களின் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியற் கட்சியில் பிளவுபட்ட பிரிவினர் இருப்பதோடு அவர்கள் அனைவரும் தாம்தாம் அக்கட்சியினர் எனக் கோருகின்றனர் என்ற நிகழ்வு காரணமாக ஏதேனும் தேர்தற் பிரதேசத்தில் நடாத்தப்படவிருக்கும் ஏதேனும் தேர்தலில் இடர்பாடுகள் எழக்கூடுமென நம்புவதற்கு ஆணையாளருக்கு நியாயமான காரணம் இருக்கின்றவிடத்து, அவ்வாணையாளர் அத்தகைய இடர்பாடுகளை அகற்றுவதற்காக அத்தகைய தேர்தலின் விடயத்தில் அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய அரசியற் கட்சியானது, ஒன்றில் அத்தகைய பிரிவுகளில் ஏதேனும் ஒன்றென அல்லது அத்தகைய பிரிவுகளில் எதுவுமேயில்லை என அத்தேர்தல் பிரதேசத்துக்கான தெரிவத்தாட்சி அலுவலருக்குத் தமது பூரண தற்றுணிபின்பேரில் பணிப்பொன்றினை வழங்கலாம். அத்தகைய தேர்தலில் அப்பணிப்பிற்கிணங்கச் செயலாற்றுதல், அத்தகைய தெரிவத்தாட்சி அலுவலரின் அல்லது வேறெவரேனும் அலுவலரின் கடமையாதல் வேண்டும்.

(2) (அ) ஓராம் உட்பிரிவின் கீழான பணிப்பொன்றை ஆணையாளர் விடுத்துள்ளார் என்ற காரணத்தினால் ஆணையாளருக்கெதிராக; அல்லது

(ஆ) அப்பணிப்புக்கிணங்கச் செய்யப்பட்ட அல்லது செய்யாது விடப்பட்ட ஏதேனும் செயல் அல்லது அலுவல் காரணமாகத் தெரிவத் தாட்சி அலுவலரொருவருக்கெதிராக அல்லது வேறெவரேனும் அலுவலருக்கெதிராக-

வழக்கெதுவும் அல்லது வேறு நடவடிக்கையெதுவும் இருத்தலாகாது.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ்த் தெரிவத்தாட்சி அலுவலரொருவரால் விடுக்கப்பட்ட ஒரு பணிப்பு. முற்றானதும் முடிவானதுமாதல் வேண்டும் என்பதோடு எழுத்தாணை மூலமோ வேறுவகையிலோ நீதிமன்றம் எதிலும் கேள்விக்குட்படுத்தப்படாதிருத்தலும் வேண்டும்.

(4) இக்கட்டளைச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாட்டில் முரணாக எது எவ்விதமிருப்பினும். இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளும் அவற்றின் கீழ் விடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்பும் பயனுடையனவாய் இருத்தல் வேண்டும்.

மொத்த எண்ணிக்கை யினரான பெண் உறுப்பினர்கள். [பி2, 2016இன் 01] [பி7, 2017இன் 16]

27ஊ. (1) இக்கட்டளைச்சட்டத்தில் முரணான ஏதேனும் ஏற்பாடு எவ்வாறிருப்பினும், ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபையிலுமுள்ள உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையினரின் இருபத்தைந்து சத வீதத்திற்கு குறையாதோர் பெண் உறுப்பினர்களாகவிருத்தல் வேண்டும்:

ஆயின், ஓர் உள்ளூர் அதிகார சபையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் இருபத்தைந்து சதவீதமாக அமைகின்ற எண்ணிக்கை ஒரு முழு எண்ணாகவும் பின்னமாகவும் உள்ளவிடத்து, முழு

* 27ஆ, 27இ, 27ஈ ஆகிய பிரிவுகள் நீக்கஞ் செய்யப்பட்டுள்ளன. 1977 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தின் 33 ஆம் பிரிவைப் பார்க்க.

வெண்ணானது இப்பிரிவின் நோக்கத்துக்காக இருபத்தைந்து சதவீதமாக அமையவேண்டிய எண்ணாகவிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) தேர்தல்கள் ஆணையாளர் வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம், ஒவ்வோர் உள்ளூர் அதிகாரசபை தொடர்பிலும் பெயர் குறித்து நியமிக்கப்படவேண்டிய பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கையைக் குறித்துரைத்தல் வேண்டும்.

நியமனப் பத்திரங்கள்

நியமனப்பத்திரங்கள்

28 (1) இக்கட்டளைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் உள்ளூர் அதிகாரசபையொன்றின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப் படுவதற்குத் தகைமை பெற்றுள்ள ஆளெவரும் அத்தகைய உள்ளூர் அதிகார சபையின் தேர்தல் இடப்பரப்பின் ஏதேனும் வட்டாரத்திற்கு தேர்தலுக்கான வேட்பாளர் ஒருவராக பெயர் குறித்து நியமிக்கப்படலாம். ஆயினும் ஓர் உள்ளூர் அதிகார சபையின் ஏதேனும் தேர்தல் இடப்பரப்பின் ஒன்றுக்கு மேற்பட்ட வட்டாரம் தொடர்பில் தேர்தலுக்கான வேட்பாளர் ஒருவராக அத்தகைய ஆளெவரும் பெயர்குறித்து நியமிக்கப்படுதலாகாது. [பி35, 1977இன் 24] [பி22, 2012இன் 22] [பி3, 2016இன் 1] [பி8, 2017இன் 16]

(2) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி அல்லது சுயேச்சைக்குழு, ஏதேனும் உள்ளூர் அதிகாரசபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் நோக்கத்துக்காக, அத்தகைய உள்ளூர் அதிகார சபையின் எல்லா வட்டாரங்களும் தொடர்பில் இரண்டு நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். ஏதேனும் உள்ளூர் அதிகார சபையின் எல்லா வட்டாரங்களும் தொடர்பில் ஒவ்வோர் அங்கீகரிக்கப் பட்ட அரசிற்கட்சியினாலும் அல்லது சுயேச்சைக் குழுவினாலும் சமர்ப்பிக்கப்பட்ட நியமனப்பத்திரங்கள், அத்தகைய உள்ளூர் அதிகாரசபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் நோக்கத்துக்காக, முதலாவது நியமனப் பத்திரம் மற்றும் மேலதிக நியமனப் பத்திரம் ஆகிய இரண்டிலும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கையினருள் இருபத்தைந்து சதவீதத்துக்குக் குறையாதவர்களும் இளம் வேட்பாளர்களாகவிருக்கவேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கையைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் முதலாவது நியமனப்பத்திரத்தில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியதும் தெரிந்தனுப்பப் படவேண்டியதுமான உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் பத்து சதவீதத்துக்குக் குறையாதவர்களும் மேலதிக பெயர் நியமனப் பத்திரத்தில் மொத்த எண்ணிக்கையினரான வேட்பாளர்களுள் ஐம்பது சதவீதத்துக்குக் குறையாதவர்களும், பெண் வேட்பாளர்களாக இருக்க வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கையைக் கொண்டிருத்தல் வேண்டும். ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் எல்லா வட்டாரங்கள் தொடர்பிலும் ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி அல்லது சுயாதீனக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட நியமனப்பத்திரங்கள், பெயர்களை எடுத்துக்கூறி பொருளளவில் முதலாம் அட்டவணையிற்றரப்பட்டுள்ள படிவங்களில் இருத்தல் வேண்டும். [பி36, 1977இன் 24] [பி8, 1987இன் 24] [பி22, 2012இன் 22] [பி3, 2016இன் 01] [பி8, 2017இன் 16] [பி2, 2023 இன் 30]

(அ) அந்த உள்ளூர் அதிகாரசபையின் வட்டாரம் ஒவ்வொன்று தொடர்பில் பெயர் குறித்து நியமிக்கப்படும் வேட்பாளர்கள்; அவ்வெண்ணிக்கையானது அவ்வுள்ளூர் அதிகாரசபையின் மொத்த எண்ணிக்கையினரான உறுப்பினர்களின் அறுபது சதவீதத்துக்குச் சமமாகவிருத்தல் வேண்டும்; [பி8, 2017இன் 16]

ஆயின், இப்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அறுபது சதவீதமாக அமைகின்ற எண்ணிக்கை ஒரு முழுவெண்ணாகவும் பின்னமாகவும் இருக்குமிடத்து, முழுவெண்ணானது, இப்பந்தியின் நோக்கத்துக்காக, அறுபது சதவீதமாக அமைகின்ற எண்ணாகக் கருதப்படுதல் வேண்டும்.".

[பி8, 2017இன் 16] (ஆ) உள்ளூர் அதிகாரசபையின் மொத்த எண்ணிக்கையினரான உறுப்பினர்களின் நாற்பது சதவீதத்துக்குச் சமமானவாறு தெரிந்தனுப்பப்படவேண்டிய வேட்பாளர்களாகப் பெயர் குறித்து நியமிக்கப்படவேண்டிய அத்தகைய எண்ணிக்கையினரான மேலதிக ஆட்கள் மற்றும் மூன்று மேலதிக ஆட்கள்:

ஆயின் இப்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட நாற்பது சதவீதத்தை உருவாக்கும் எண்ணிக்கை முழு எண்ணாகவும் பின்னமாகவும் இருக்குமிடத்து, முழு எண் இப்பந்தியின் நோக்கத்துக்காக நாற்பது சதவீதமாக அமைய வேண்டிய எண்ணாக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

[பி22, 2012இன் 22] (2அ) ஆணையாளர் வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம், முதலாவது நியமனப்பத்திரம் மற்றும் மேலதிக

[பி8, 2017இன் 16] நியமனப்பத்திரம் ஆகிய இரண்டிலும் மொத்தத்தில் பெயர்குறித்து நியமிக்கப்பட வேண்டிய இளம் வேட்பாளர்களின் ஆகக்குறைந்த எண்ணிக்கையையும் ஒவ்வோர் உள்ளூர் அதிகாரசபையினதும் எல்லா வட்டாரங்கள் தொடர்பிலும் (2)

[பி2, 2023 இன் 30] ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்டவாறான முதலாவது நியமனப்பத்திரத்திலும் மேலதிக நியமனப்பத்திரத்திலும் பெயர்குறித்து நியமிக்கப்படுதவற்குப் பெண் வேட்பாளர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கையையும் குறித்துரைத்தல் வேண்டும்:-

(அ) பெயர்குறித்துநியமிக்கப்படவேண்டிய இளம் வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கை, முதலாவது நியமனப் பத்திரம் மற்றும் மேலதிக நியமனப்பத்திரம் ஆகிய இரண்டிலும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளர்கள் மொத்த எண்ணிக்கையில் இருபத்தைந்து சதவீதத்தை விஞ்சாத அத்தகையதாக; அத்துடன்

(ஆ) பெயர்குறித்து நியமிக்கப்படவேண்டிய பெண் வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கை, முதலாவது நியமனப் பத்திரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு, தெரிந்தனுப்பப்பட வேண்டிய உறுப்பினர்களின் பத்து சதவீதத்துக்குக் குறையாத மற்றும் மேலதிக நியமனப்பத்திரத்தில் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கையில் ஐம்பது சதவீதத்துக்குக் குறையாக அத்தகையதாக,

ஒரு முழுவெண்ணாகவும் பின்னமாகவும் இருக்குமிடத்து, முழுவெண்ணானது இப்பிரிவின் நோக்கத்துக்காகத் தேவைப்பட்ட எண்ணிக்கையாகக் கருதப் படுதல் வேண்டும் ;

(2அஅ) ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, (2அ) என்னும் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் இளம் வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கை, ஆண் வேட்பாளர்கள் மற்றும் பெண் வேட்பாளர்களை உள்ளடக்கலாம் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது ; அத்துடன்

(2ஆ) தெரிவத்தாட்சி அலுவலர் செயல்முறைச் சாத்தியப்படக்கூடிய விரைவில் அவரால் பெறப்பட்ட நியமனப்பத்திரம் ஒவ்வொன்றினதும் பிரதியொன்றைத் தயாரித்து நியமனப்பத்திரத்தின் அத்தகைய பிரதிகளை அவரது அறிவித்தல் பலகையில் வெளிக்காட்டி வைத்தல் வேண்டும். [பி3, 2016இன் 1] [பி8, 2017இன் 16] [பி2, 2023 இன் 30]

(2இ) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பெயர் நியமனப்பத்திரம்-

(அ) அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் விடயத்தில் அத்தகைய கட்சியின் செயலாளரால் அல்லது அதிகார மளிக்கப்பட்ட முகவர் அல்லது சமர்ப்பிக்கப்படும் பெயர் நியமனப் பத்திரத்தில் பெயர் காணப்படுகின்ற, அத்தகைய நோக்கத்துக்காகச் செயலாளரால் பெயர் குறித்து நியமிக்கப் பட்டுள்ள வேட்பாளர் ஒருவரால் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன் [பி22, 2012இன் 22] [பி3, 2016இன் 1]

(ஆ) சுயேச்சைக் குழுவொன்றின் விடயத்தில் அத்தகைய சுயேச்சைக் குழுவின் குழுத் தலைவரால் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட முகவரால் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். ஆகவே எவ்வாறாயினும், குழுத்தலைவர் இக்கட்டளைச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் சட்ட நாணயம் தெரிவத்தாட்சி அலுவலரிடம் வைப்பீடு செய்யப்படும் நேரத்தில் வேட்பாளர்களிலிருந்து ஆளொருவரை அதிகார மளிக்கப்பட்ட முகவராக பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்.

* (4) அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றினால் அல்லது சுயேச்சைக் குழுவொன்றினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஒவ்வொரு வேட்பாளரினதும் ஒவ்வொரு ஆளினதும் எழுத்துமூல சம்மதம் நியமனப் பத்திரத்தில் புறக் குறிப்பிடப்படல் வேண்டு மென்பதுடன் அத்தகைய ஒவ்வொரு வேட்பாளரினால், விடயத்திற் கேற்றாற்போன்று, செய்து கீழொப்பமிடப்பட்ட அல்லது மொழிந்து கீழொப்பமிடப்பட்ட அரசியல் அமைப்புக்கான ஏழாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்திலான விடயத்திற்கேற்றாற்போன்று, சத்திய மொன்று அல்லது உறுதியுரையொன்று அந்நியமனப் பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருத்தலும் வேண்டும். [பி22, 2012இன் 22]

(4அ) நியமனப்பத்திரத்தில் பெயர் காணப்படும் ஒவ்வோர் இளைஞரதும் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் அத்தாட்சி பண்ணப்பட்ட பிரதி ஒன்று அல்லது அத்தகைய இளைஞர், அவரது பிறந்த தேதியை அத்தாட்சிப்படுத்தி கையொப்பமிடப்பட்ட சத்தியக் கடதாசியொன்று அத்தகைய நியமனப்பத்திரத்துடன் இணைக்கப்படல் வேண்டும். [பி3, 1990இன் 25] [பி22, 2012இன் 22]

(4ஆ) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தைந்தாம் ஆண்டின் 1 ஆம் இலக்க தேசிய அரசுப் பேரவையின் சொத்துக்களையும் பொறுப்புக் களையும் வெளிப்படுத்துதற் சட்டத்தின்கீழ் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் வெளிப்படுத்துதலொன்று எந்த வேட்பாளரினதும் [பி22, 2012இன் 22]

---

*3 ஆம் உட்பிரிவு நீக்கஞ்செய்யப்பட்டது. 1987 இன் 24 ஆம் இலக்கச் சட்டத்தின் 8 ஆம் பிரிவைப் பார்க்கவும்.

*2 ஆம் உட்பிரிவின் (2ஈ) மற்றும் (2உ) நீக்கஞ்செய்யப்பட்டது. 2023 இன் 30 ஆம் இலக்க 2(4) ஐப் பார்க்கவும்.

ஆளினதும் பெயர்கள் நியமனப்பத்திரமொன்றில் காணப்படு கின்றனவோ அந்த ஒவ்வொரு வேட்பாளர் மற்றும் ஆள் தொடர்பில் அச்சட்டத்தின் கீழ் விதித்துரைக்கப்பட்டவாறான படிவத்தில அத்தகைய நியமனப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு மூன்று மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(பி8, 1987 இன் 24)

(5) நியமனப் பத்திரம் ஒவ்வொன்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் செயலாளரினால் ஒப்பமிடப்படுதல் வேண்டும்; அத்துடன் சுயேச்சைக் குழுவொன்றின் விடயத்தில் எந்த வேட்பாளருடைய பெயர் அந்தக் குழுவின் நியமனப் பத்திரத்தில் காணப்படுவதோடு, அக்குழுவின் குழுத்தலைவர் என அதனகத்து பதவி குறிக்கப்பட்டும் இருக்கின்றதோ அந்த வேட்பாளரினால் (அத்தகைய வேட்படாளர் இதனகத்துப் பின்னர் ''குழுத் தலைவர்'', எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) கையொப்பமிடப்படுதல் வேண்டும்; அத்துடன் சமாதான நீதிவான் ஒருவரால் அல்லது பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

அத்தகைய நியமனப் பத்திரம், நியமனக் காலத்தினுள் அங்கீகரிக்கப் பட்ட அரசியல் கட்சியின் விடயத்தில் அதன் செயலாளரால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முகவரால் அல்லது சுயேச்சைக் குழுவொன்றின் விடயத்தில் அதன் தலைவரால் தெரிவத்தாட்சி அலுவலரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும்.

(6) ஒரு தேர்தற் பிரதேசத்துக்கான தெரிவத்தாட்சி அலுவலர், 26 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் வெளியிடப்பட்ட பின்னரும் அத்தேர்தற் பிரதேசத்துக்கான நியமன காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னரும் ஆன எத்தேதியிலேனும், விண்ணப்பஞ் செய்யப்பட்டதன் பேரில், அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியெதற்கும் அல்லது சுயேச்சைக் குழுவெதற்கும், விதிக்கப்பட்ட படிவத்திலான நியமனப் பத்திர மொன்றைக் கட்டணமின்றி வழங்குதல் வேண்டும்; ஆனால் இக்கட்டளைச் சட்டத்திலுள்ளதெதுவும், தெரிவத்தாட்சி அலுவலரால் வழங்கப்படாத ஏதேனும் நியமனப் பத்திரம் பயன்படுத்தப்படுவதை, அந்நியமனப் பத்திரம் முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்திலிருந்து பொருளளவில் வேறுபடாதிருக்கின்ற வரைக்கும் விலக்குவதாகக் கருதப்படுதலாகாது.

*(8) (அ) அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியற் கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு நியமனப்பத்திரத்தில் ஏதேனும் தவிர்வு அல்லது எழுத்துப் பிழை உள்ளதென்று அத்தகைய கட்சியின் செயலாளருக்கு அல்லது குழுத்தலைவருக்குத் தோன்று கின்றவிடத்து, அவர், நியமன காலப்பகுதிமுடிவடைய முன்னர், அத்தகைய நியமனப்பத்திரத்தில் உள்ள தவிர்வை அல்லது பிழையைத் திருத்தும்படி தெரிவத்தாட்சி அலுவலருக்கு விண்ணப்பிக்கலாம்.

*7 ஆம் பிரிவு நீக்கப்பட்டுள்ளது. 1987 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் 8 ஆம் பிரிவைப் பார்க்கவும்.

(ஆ) அத்தகைய தவிர்வு அல்லது பிழை தற்செயலாக ஏற்பட்டது என்று தெரிவத்தாட்சி அலுவலர் திருப்திப்படுகின்றவிடத்து, அத்தகைய செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அல்லது குழுத்தலைவர் அத்தகைய தவிர்வை அல்லது பிழையைத் தமது முன்னிலையில் திருத்துவதற்குத் தெரிவத்தாட்சி அலுவலர் அனுமதிக்கலாம்.

வேட்பாளர்களின் சார்பில் செலுத்தப்பட்ட வைப்புப் பணங்கள். [பி37, 1977இன் 24] [பி6, 1987இன் 20] [பி9, 1987இன் 24] [பி23, 2012இன் 22] [பி9, 2017இன் 16]

29. (1) (அ) ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியும் சுயேச்சைக் குழுவும், 26 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் வெளியிடப்பட்ட தேதிக்கும் அவரது நியமனப்பத்திரம் சமர்ப்பிக்கப்படுவதற்கும் இடையே, அத்துடன் எவ்விடயத்திலும் பெயர் நியமன காலப்பகுதி முடிவடைவதற்கு நேர்முற்போந்த நாளன்று நண்பகல் பன்னிரண்டு மணிக்குப் பிந்தாமல், நியமனப்பத்திரம் எந்த தெரிவத்தாட்சி அலுவலரிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதோ அந்த தெரிவத்தாட்சி அலுவலரிடம், சட்டமுறை நாணயத்திலான,

(i) அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஒவ்வொரு வேட்பாளர் மற்றும் ஒவ்வொரு மேலதிக வேட்பாளர் தொடர்பிலும் ஆயிரத்து ஐந்நூறு ரூபா ; அத்துடன்

(ii) சுயேச்சைக் குழுவொன்றினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஒவ்வொரு வேட்பாளர் மற்றும் ஒவ்வொரு மேலதிக வேட்பாளர் தொடர்பிலும் ஐயாயிரம் ரூபா, பணத்தொகை ஒன்றை வைப்பிலிடுதல் வேண்டும்.

(ஆ) சட்டபூர்வமான நாணயத்திலான வைப்பீடு-

(i) அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் விடயத்தில் அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரால் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட முகவரால்; அத்துடன்

(ii) சுயேச்சைக் குழுவொன்றின் விடயத்தில் சுயேச்சைக் குழுவின் தலைவரால் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட முகவரால், சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) இவ்வுட்பிரிவின் கீழ் வேட்பாளரொருவரின் சார்பில் செலுத்தப்பட்ட வைப்புப் பணமெதுவும், இவ்வுட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் செலுத்தப்பட்டாலொழிய, தெரிவத்தாட்சி அலுவலரினால் ஏற்றுக்கொள்ளப்படுதலாகாது;

(3) இப்பிரிவின் கீழ் தெரிவத்தாட்சி அலுவலரால் வைப்புப் பணம் ஏற்றுக்கொள்ளப்படுமிடத்து, அத்தகைய அலுவலர் அவ்வைப்புப் பணம் செலுத்தப்பட்டதோ அவ்வாளுக்கு அத்தகைய வைப்புப் பணத்தை ஏற்றுக்கொண்டமையை ஒப்புக்கொள்ளும் அத்தகைய அலுவலரால் கையொப்பமிடப்பட்ட பற்றுச்சீட்டொன்றை, உடனடியாக வழங்குதல் வேண்டும்; அத்துடன் அப்பற்றுச்சீட்டானது-

(அ) எக்குழுத்தலைவரால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எவ்வாளினால் அல்லது எக்குழுத் தலைவர் சார்பாக அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எவ்வாள் சார்பாக அவ்வைப்புப் பணம் செலுத்தப்பட்டதோ அக்குழுத்தலைவரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அவ் ஆளின் பெயர்;

(ஆ) வேட்பாளர்களின் எண்ணிக்கை;

(இ) வைப்புப் பணத்தொகை; அத்துடன்

(ஈ) வைப்பிலிடப்பட்ட நேரமும் தேதியும், என்பவற்றைக் கூறுதல் வேண்டும்.

வைப்புப் பணத் தொகைகளைக் கையாளுதல்.

30. (1) இருபத்தொன்பதாம் பிரிவின் கீழ்த் தெரிவத்தாட்சி அலுவலரொருவரிடம் செலுத்தப்பட்ட வைப்புப் பணத்தொகை ஒவ்வொன்றும், உடனடியாக அவ்வலுவலரினால் வைப்புப் பணக் கணக்கொன்றிற்கு வரவு வைக்கப்பட்டப் பின்வரும் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கையாளப்படுதல் வேண்டும்.

(பி38, 1977 இன் 24)

(2) சுயேச்சைக் குழுவொன்றின் நியமனப் பத்திரம் 31 ஆம் பிரிவினது ஏற்பாட்டின்கீழ் நிராகரிக்கப்படுமிடத்து, வைப்புப் பணமானது அவ்வைப்புப் பணத்தைச் செலுத்திய ஆளுக்கு மீளக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

[பி24, 2012இன் 22]
[பி10, 2017இன் 16]

* (4) எந்த வேட்பாளர் சார்பாக ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவினால் வைப்புப் பணமொன்று செலுத்தப்பட்டதோ அந்த வேட்பாளரொருவர் தேர்ந்தெடுக்கப்படாத விடத்தும், அத்தகைய வேட்பாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை, அவர் எந்த வட்டாரத்தில் போட்டியிட்டாரோ அந்த வட்டாரத்தில் இடப்பட்ட செல்லுபடியான வாக்குகளின் மொத்த எண்ணிக்கையின் இருபதிலொரு பங்கை விஞ்சாதவிடத்தும், அத்தகைய வேட்பாளர் சார்பாக செலுத்தப்பட்ட வைப்புப்பணம் இழப்பிக்கப்பட்டதாக வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். அது எந்த தெரிவத்தாட்சி அலுவலரிடம் வைப்பிலிடப்பட்டதோ அந்த தெரிவத்தாட்சி அலுவலர் அத்தகைய தொகையை வைப்புக் கணக்கிலிருந்து திரட்டு நிதியத்துக்குக் கைமாற்றுதல் வேண்டும் ; அத்துடன் ஏனைய ஒவ்வொரு விடயத்திலும் வைப்புப் பணமானது, தேர்தலின் முடிவு வெளிப்படுத்தப்பட்ட பின்னர் கூடியளவு விரைவாக, வைப்புப் பணத்தைச் செலுத்தியவராகவுள்ள வேட்பாளருக்குத் திருப்பிக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

[பி10, 2017இன் 16]

ஆயினும் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு அத்தகைய உள்ளூர் அதிகார சபை இடப்பரப்பில் போட்டியிட்ட எல்லா அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளாலும் சுயேச்சைக் குழுக்களாலும் பெறப்பட்ட மொத்த செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கையின் இருபதிலொன்றிற்கும் அதிகமாகப் பெறத் தவறுமிடத்து, விடயத்திற்கேற்ப அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட பெயர் நியமனப் பத்திரத்தில் எந்த மேலதிக ஆட்களின் பெயர்கள் காணப்படுகின்றனவோ அந்த எல்லா மேலதிக ஆட்கள் தொடர்பிலும் விடயத்திற்கேற்ப அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு ஒவ்வொன்றி னாலும் செய்யப்பட்ட வைப்பீடு இழப்பிக்கப்பட்ட தாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வைப்பீட்டின் கைமாற்றம் தொடர்பில் இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையன வாதலும் வேண்டும்.".

*3 ஆம் பிரிவு நீக்கப்பட்டுள்ளது. 1977 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க 38 ஆம் பிரிவைப் பார்க்கவும்.

* (6) இப்பிரிவின் நோக்கங்களுக்கெனத் தேர்தலொன்றில் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை, உண்மையாகக் கணக்கிடப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் செல்லுபடியற்றவையென நிராகரிக்கப்பட்ட வாக்குகள் எதனையும் உட்படுத்தாதிருத்தலும் வேண்டும்.

நியமன காலப்பகுதிக்குப் பின்னரான நடவடிக்கைகள்

நியமனப் பத்திரங்களை நிராகரித்தல் (பி39, 1977 இன் 24)

31(1) தெரிவத்தாட்சி அலுவலர், நியமன காலப்பகுதி முடிவடைந்ததன் பின்னர் உடனடியாக, அவரால் பெற்றுக்கொள்ளப்பட்ட நியமனப் பத்திரங்களைப் பரிசீலனை செய்து-

(அ) 28 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க ஒப்படைக்கப்படாத; அல்லது [பி5, 1990 இன் 25]

(ஆ) 28 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட மொத்த எண்ணிக்கையினரான வேட்பாளர்களைக் கொண்டிராத அல்லது

*(இ) அது தொடர்பாக 29 ஆம் பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பணம் செலுத்தப்படாத; அல்லது (பி4, 1983 இன் 48)

*(உ) அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியற் கட்சியின் விடயத்தில், செயலாளரின் கையொப்பம் அல்லது சுயேச்சைக் குழு வொன்றின் விடயத்தில் குழுத் தலைவரின் கையொப்பம் நியமனப் பத்திரத்தில் காணப்படாதவிடத்து, அல்லது அத்தகைய கையொப்பம் 28 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் தேவைப்படுத்தப்பட்டவாறு உறுதிப்படுத்தப்படாதவிடத்து, நியமனப் பத்திரமெதனையும் நிராகரித்தல் வேண்டும். [பி11, 2017 இன் 16]

(ஊ) இக்கட்டளைச்சட்டத்தின் 28 ஆம் பிரிவின் (2அ) என்னும் உட்பிரிவின் கீழ் பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றவாறான பெண் மற்றும் இளம் வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கையைக் கொண்டிராதவை.". [பி25, 2012 இன் 22] [பி11, 2017 இன் 16] [பி3, 2023 இன் 30]

(1அ) பெயர் நியமனக் காலப்பகுதியின் கடைசி நாளன்று நண்பகல் பன்னிரண்டு மணிக்கும் பிற்பகல் ஒன்று முப்பது மணிக்கும் இடையில் ஒரு பெயர் நியமனப் பத்திரத்திற்கான ஆட்சேபனைகள் தெரிவத்தாட்சி அலுவலரிடம் செய்யப்படலாம் என்பதுடன், அந்த நாளின் பிற்பகல் ஒன்று முப்பது மணிக்குப் பின் அத்தகைய ஆட்சேபனைகள் எவையும் தெரிவத்தாட்சி அலுவலரால் ஏற்றுக்கொள்ளப்படலாகாது. [பி5, 1990 இன் 25]

---

* (5) ஆம் உட்பிரிவு நீக்கஞ் செய்யப்பட்டுள்ளது- 1977 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச்சட்டத்தின் 38 ஆம் பிரிவைப் பார்க்க.

* 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் பி. 25 இனால் (ஆஆ), (ஆஆஆ) பிரிவுகள் நீக்கப்பட்டன.

* 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் 25 ஆம் பிரிவில் ஈ பிரிவு நீக்கப்பட்டுள்ளது.

(2) ஓராமுட்பிரிவின் கீழ் நியமனப் பத்திரமெதுவும் தெரிவத்தாட்சி அலுவலரால் நிராகரிக்கப்பட்டுள்ள விடத்து, அத்தெரிவத்தாட்சி அலுவலர், விடயத்திற்கேற்றாற்போல், அத்தகைய நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பித்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிச் செயலாளருக்கு அல்லது குழுத் தலைவருக்கு அத்தகைய நிராகரிப்பு பற்றி அறிவித்தல் வேண்டும். அத்தகைய நியமனப்பத்திரத்தை நிராகரித்தல் தொடர்பாகத் தெரிவத்தாட்சி அலுவலரின் முடிவு முற்றானதும் இறுதியானதுமாதல் வேண்டும்.

[மி25, 2012 இன் 22]

(3) விடயத்திற்கேற்ப ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியால் அல்லது சுயேச்சைக் குழுவொன்றினால் சமர்ப்பிக்கப்பட்ட பெயர் நியமனப்பத்திரமொன்றில் எந்த வேட்பாளரின் அல்லது ஆளின் பெயர் காணப்படுகின்றதோ அந்த வேட்பாளர் ஒருவர் அல்லது எவ ரேனும் ஆள் அத்தகைய வேட்பாளரின் அல்லது ஆளின் தவறுகை காரணமாக தகைமையிழந்தவராகக் காணப்படின்-

(அ) வேட்பாளர் அல்லது சம்பந்தப்பட்ட ஆள் ஓர் இளைஞராக இருந்து அவரது நியமனப் பத்திரத்துடன் அவரது பிறப்புச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை அல்லது பிறப்புச் சான்றிதழ் கிடைக்காத சந்தர்ப்பத்தில் அவரது பிறந்த திகதியை அத்தாட்சிப்படுத்தி அத்தகைய இளைஞரால் கையொப்பமிடப்பட்ட சத்தியக் கடதாசியொன்றை இணைத் திருக்குமிடத்து;

(ஆ) அத்தகைய பெயர்குறித்த நியமனப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட வேண்டுமெனத் தேவைப் படுத்தப்பட்ட அவரது சம்மதத்தை நியமனப் பத்திரத்தில் புறக்குறிப்பு செய்வித்திருக்குமிடத்து அரசியலமைப்பிற்கான ஏழாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் அவரது சத்தியப் பிரமாணத்தை அல்லது உறுதியுரையை நியமனப்பத்திரத்துடன் இணைக்கச் செய்வித் திருக்குமிடத்து,

அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட நியமனப்பத்திரம் நிராகரிக்கப் படுதலாகாது, ஆனால் இவ்வுட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் காரணங்களின் நிமித்தம் தகைமையிழந்தவராகக் காணப்பட்ட வேட்பாளரின் அல்லது சம்பந்தப்பட்ட ஆளின் பெயர் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட பெயர் நியமனப்பத்திரத் திலிருந்து அப்புறப்படுத்தப்படுதல் வேண்டும். எவரேனும் வேட்பாளரின் அல்லது எவரேனும் ஆளின் பெயர், நியமனப் பத்திரத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டவிடத்து, விடயத்திற் கேற்ப, அத்தகைய நியமனப்பத்திரத்தைச் சமர்ப்பித்த அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு அதன் பின்னர் அவ்வாறு அப்புறப்படுத்தப்பட்ட பெயரை வேறு ஏதேனும் புதிய பெயர் கொண்டு பதிலீடு செய்வதற்கு உரித்துடையவராதலாகாது என்பதுடன் எந்த வேட்பாளரின் அல்லது வேறு ஆளின் பெயர்கள் அப்புறப்படுத்தப்பட்டனவோ அந்த வேட்பாளர் அல்லது ஆள் தொடர்பில் செய்யப்பட்ட வைப்பீடு இழப்பிக்கப் படுதலும் வேண்டும்.

35* (1) (அ) ஏதேனும் தேர்தல் பிரதேசத்தின் விடயத்தில், பெயர் நியமனக் காலப்பகுதியின் முடிவில் தெரிவத்தாட்சி அலுவலர்-

நியமனப்பத்திரங்க ளெவையும் பெற்றுக்கொள்ளப் படாதவிடத்திலான நடவடிக்கைமுறை. [பி39, 1977 இன் 24] (பி40, 1977 இன் 24) [பி26, 2012 இன் 22]

(i) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் சார்பில் நியமனப்பத்திரம் எதுவும் முறையாக பெறப்படவில்லை என; அல்லது

(ii) அவரால் பெறப்பட்ட எல்லா நியமனப் பத்திரங்களும் விடயத்திற்கேற்ப, நிராகரிக்கப்பட்டுள்ளது அல்லது அத்தகைய நியமனப் பத்திரத்தில் காணப்படும் எல்லா வேட்பாளர்களினதும் பெயர்கள் 31ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அத்தகைய நியமனப்பத்திரத் திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளன,

எனக் காணுமிடத்து, உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் உடனடியாக விடயத்திற்கேற்ப, நியமனப்பத்திரங்கள் எவையும் கிடைக்கப்பெற வில்லை அல்லது அவரால் பெறப்பட்ட எல்லா நியமனப்பத்திரங் களும் நிராகரிக்கப்பட்டுள்ளன அல்லது அத்தகைய நியமனத்தைப் பத்திரத்தில் காணப்பட்ட வேட்பாளர்களின் எல்லாப் பெயர்களும் 31ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய நியமனப்பத்திரத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ள என்ற நிகழ்வை பிரதேசம் அமைந்துள்ள மாவட்டத்தின் தேர்தல்கள் அலுவலருக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(ஆ) தேர்தல்கள் அலுவலர் அவ்அறிக்கை கிடைக்கப்பெற்ற ஏழு நாட்களுக்குப் பிந்தாமல் மேலுமொரு பெயர் நியமனக் காலப்பகுதியை விதித்துரைத்து அறிவித்தலொன்றை வெளியிடுதல் வேண்டும். அறிவித்தல் நியமனப்பத்திரங்கள் உதவித் தெரிவத்தாட்சி அலுவலரால் அவரது அலுவலகத்தில் பெறப்படவுள்ள காலப்பகுதியை (இதனகத்துப் பின்னர் "இரண்டாம் பெயர் நியமனக் காலப்பகுதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) குறித்துரைத்தல் வேண்டும் என்பதுடன் அதன்மீது இக்கட்டளைச் சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளும் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) தேர்தற் பிரதேசமொன்றிற்கு நியமிக்கப்பட்ட இரண்டாவது நியமன காலப்பகுதியின்போது நியமனப்பத்திரமெதுவும் பெற்றுக் கொள்ளப் படாவிடின் அல்லது பெற்றுக்கொள்ளப்பட்ட எல்லா நியமனப் பத்திரங்களும் நிராகரிக்கப்படின், தெரிவத்தாட்சி அலுவலர், அந்நிகழ் வினைத் தேர்தல்கள் அலுவலர் மூலம் ஆணையாளருக்கு உடனடி யாக அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிக்கை கிடைக்கப்பெற்றதன் மேல் ஆணையாளர், இரண்டாவது நியமன காலப் பகுதியின்போது அத்தகைய தேர்தற் பிரதேசத்திற்கு எவ்வேட்பாளரும் முறைப்படி நியமிக்கப்படாதுள்ளார் என்ற பயன்பட வர்த்தமானியில் அறிவித்தலொன்றை வெளியிடச் செய்தல் வேண்டுமென்பதுடன், அதற்குத் திறம்பட விளம்பரம் தருவதற்கு வேறு சிறந்த முறை எது என்று கருதுகின்றாரோ அத்தகைய வேறு முறையிலும் அதற்கு விளம்பரம் கொடுத்தலும் வேண்டும்.

* 32 ஆம், 33 ஆம், 34 ஆம் பிரிவுகள் நீக்கஞ் செய்யப்பட்டுள்ளன. 1977 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச்சட்டத்தின் 33 ஆம் பிரிவைப் பார்க்கவும்.

(3) ஒரு தேர்தற் பிரதேசம் தொடர்பாக (2) ஆம் உட்பிரிவின் கீழான அறிவித்தலொன்று வெளியிடப்பட்ட தேதியிலிருந்து அவ்வுள்ளூர் அதிகாரசபையின் அடுத்த தேர்தல் வரையும் அவ்வுள்ளூர் அதிகார சபைக்கு மாநகர முதல்வரையும் பிரதிமாநகர முதல்வரையும் தெரிவுசெய்வதற்காக வேட்பாளர்களை நியமிப்பதற்கான எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுதலாகாது;

[பி6, 1990 இன் 25]

ஆயின், எவ்வாறாயினும், இக்கட்டளைச்சட்டத்தின் கீழ் அவ் உள்ளூர் அதிகாரசபையின் மாநகர முதல்வராகவும் பிரதி மாநகர முதல்வராகவும் உறுப்பினர்களாகவும் தெரிவுசெய்யப்படுவதற்கு தகுதி வாய்ந்த அத்தகைய எண்ணிக்கையிலான ஆட்களை 28 ஆம் பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவில் அடங்கியுள்ள ஏற்பாடுகளைக் கவனத்தில் கொண்டு பெயர் குறித்து நியமிப்பது அமைச்சருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டுமென்பதும் அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆட்கள், எல்லா நோக்கங்களுக்காக இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட வர்களாகக் கருதப்படுதலும் வேண்டும்.

போட்டியில்லாத தேர்தல்கள்

போட்டியில்லாத தேர்தல்கள் (பி43, 1977 இன் 24) (பி9, 1987 இன் 24) [பி7, 1990 இன் 25] [பி27, 2012 இன் 22]

36(1) ஏதேனும் தேர்தல் பிரதேசத்தில் விடயத்தில்-

(அ) ஒன்றுக்கு மேற்படாத நியமனப்பத்திரம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளவிடத்து ; அல்லது

(ஆ) நியமனப்பத்திரமொன்று அல்லது நியமனப்பத்திரங்கள் நிராகரிக்கப்பட்ட பின்னர் அல்லதுஏதேனும் நியமனப்பத்திரத்தில் அல்லது நியமனப்பத்திரங்களில் காணப்படும் பெயர்கள் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் காரணத்தினால் 31ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் அப்புறப்படுத்தப்படுமிடத்து ஒரு அங்கீகரிக் கப்பட்ட அரசியற் கட்சியின் அல்லது ஓர் சுயேச்சைக் குழுவின் வேட்பாளர்கள் மட்டுமே தேர்தலுக்குப் பெயர் குறித்து நியமிக்கப் பட்டிருக்குமிடத்து தெரிவத்தாட்சி அலுவலர் அந்நிகழ்வுபற்றி ஆணை யாளருக்கு அறிவித்தல் வேண்டும். ஆணையாளர் அதன்மீது 28ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் நியமனப் பத்திரத்தில் எந்த வேட்பாளர்களின் பெயர்கள் காணப்படுகின்றனவோ அந்த வேட்பாளர்களிடையே எந்த வேட்பாளர்கள் அந்த உள்ளூர் அதிகாரசபைக்கு மாநகர முதல்வராகவும் பிரதிமாநகர முதல்வரா கவும் தெரிவுசெய்யப்பட்டதாக வெளிப் படுத்தப்படுதல் வேண்டும் எனக் குறித்துரைக்குமாறு விடயத்திற்கேற்ப அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளருக்கு அல்லது அத்தகைய சுயேச்சைக் குழுவின் தலைவருக்கு அழைப்புவிடுத்தல் வேண்டும். விடயத்திற்கேற்ப அத்தகைய செயலாளர் அல்லது குழுத்தலைவர் அவரது முடிவை ஆணையாளருக்குத் தெரிவித்ததன்மீது அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட உறுப்பினரை அந்த உள்ளூர் அதிகார சபையின் முறையே மாநகர முதல்வராகவும் பிரதி மாநகர முதல்வராகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட தாக வெளிப்படுத்துதல் வேண்டும்.

(2) தெரிவத்தாட்சி அலுவலரானவர், தேர்தல் முடிவுகளைத் தேர்தற் பிரதேசமானது எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளதோ அந்த மாவட்டத்துக்கான தேர்தல்கள் அலுவலர் மூலமாக ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும். ஆணையாளரானவர் அந்த அறிக்கையைப் பெற்றுக்கொண்டதன் மேல், வர்த்தமானியிலும், அதற்குத் திறம்பட விளம்பரம் தருவதற்கு வேறு சிறந்தமுறை எது என்று கருதுகிறாரோ அந்த வேறு முறையிலும், அறிவித்தலை விளம்பரம் செய்தல் வேண்டும்.

போட்டியுள்ள தேர்தல்கள்

போட்டியுள்ள தேர்தல்கள். (பி44, 1977 இன் 24) [பி7, 1990 இன் 25] [பி28, 2012 இன் 22]

37 (1) தேர்தல் பிரதேசமொன்றின் வட்டாரம் ஒவ்வொன்றுக்குமென நியமிக்கப்பட்ட பெயர் நியமனக் காலப்பகுதியின் முடிவில் அத்துடன் எவையேனும் நியமனப்பத்திரங்கள் நிராகரிக்கப்பட்டதன் பின்னர் அல்லது 31 ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் கீழ் ஏதேனும் நியமனப் பத்திரத்தில் அல்லது நியமனப்பத்திரங்களில் காணப்பட்ட பெயர் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் காரணத்திற்காக அப்புறப்படுத்தப்பட்டவிடத்து அப்பெயர்கள் அப்புறப்படுத்தப்பட்ட பின்னர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவொன்றின் ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் தேர்தலுக்கு முறையாக பெயர் குறித்து நியமிக்கப்பட்டிருக்குமிடத்து தெரிவத்தாட்சி அலுவலர் உடனடியாக அத்தேர்தலின் நோக்கத்திற்கு :

(அ) அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றிலிருந்து வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் அக்கட்சியின் அங்கீகரிக்கப்பட்ட சின்னத்தையும் ; அத்துடன்

(ஆ) சுயேச்சைக் குழுவொன்றிலிருந்து வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட சின்னத்தையும் அத்துடன் அத்தகைய தேர்தலில் ஒன்றுக்கு மேற்பட்ட சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடுமிடத்து,

(i) முதற்கண், போட்டியிடும் சுயேச்சைக் குழுக்களிடையே உடன்படிக்கையால்; அல்லது

(ii) அத்தகைய உடன்பாடு இல்லாதபோது தெரிவத்தாட்சி அலுவலர் அவரது முழுத்தற்றுணிபின்படி தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய முறையில் குலுக்கப்பட்ட அல்லது இழுக்கப்பட்ட திருவுளச் சீட்டிழுப்பின் மூலம்,

தீர்மானிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட சின்னமொன்றை,

பிரித்தொதுக்குதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சின்னம் அவ்வவற்றுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் அல்லது

---

* எல்பிட்டிய பிரதேச சபை தவிர்ந்த, இலங்கையின் ஏனைய அனைத்து உள்ளூராதிகார சபைகளுக்குமாக 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆந் திகதி தொடக்கம் 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணி வரையான காலப்பகுதியில் பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் கையேற்கப்பட்டதுடன், அதற்கான வாக்கெடுப்பு 2023 ஆம் ஆண்டு மார்சு மாதம் 09 ஆந் திகதி நடாத்துவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், எதிர்பாராத ஒரு நிலைமை காரணமாக, குறித்த வாக்கெடுப்பு 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டதுடன், பின்னர் காலவரையறையின்றி மேலும் ஒத்தி வைக்கப்பட்டது. குறித்த வாக்கெடுப்பிற்காக கையேற்கப்பட்டிருந்த அனைத்து பெயர் குறித்த நியமனப் பத்திரங்களும் 2025 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2025 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க உள்ளூராதிகார சபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் வலுவும் பயனும் அற்றனவாக கருதப்பட்டுள்ளன.

* 2025 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க சட்டம்.

சுயேச்சைக் குழுவினான பெயருக்கெதிராக வாக்குச்சீட்டில் அச்சிடப் படுதலும் வேண்டும்.

(2) உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்களின், நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி எதனதும் அங்கீகரிக்கப்பட்ட சின்னமானது, அத்தகைய கட்சியானது தேர்தல் எதிலும் போட்டி யிட்டாலுஞ்சரி இல்லாவிடினுஞ்சரி, இருப்பின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் வேறு சுயேச்சைக் குழுவிற்குக் குறித் தொதுக்கப்படுதலாகாது.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ், சின்னங்களைக் குறித்தொதுக்கியதன் பின்னர், தெரிவத்தாட்சி அலுவலரானவர் உடனடியாக-

(அ) இதனகத்துப்பின்னர் எடுத்துக்காட்டப்பட்டவாறான ஏற்பாடு களுக்கு இணங்க, வாக்கெடுப்பு ஒன்று நடைபெறுவதனை இயலச்செய்யும் வகையில் அத்தகைய தேர்தலை ஒத்தி வைத்தல் வேண்டும்.

(ஆ) தேர்தற் பிரதேசமானது எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளதோ அந்த மாவட்டத்துக்கான தேர்தல்கள் அலுவலகங்களுக்கு அத்தேர்தல் போட்டியிடப்படுகின்றது என அறிவித்தல் வேண்டும்; அத்துடன்

(இ) அத்தகைய தேர்தல்கள் அலுவலருக்கு, அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் நியமனப்பத்திரப் பிரதிகளையும், ஒவ்வொரு கட்சிக்கும் அல்லது குழுவிற்கும், குறித்தொதுக்கப்பட்ட சின்னங்கள் பற்றிய கூற்றையும் அத்துடன், ஒன்றுக்கு அதிகமான சுயேச்சைக் குழுக்கள் இருக்குமிடத்து, ஒவ்வொரு குழுவுக்கும் குறித் தொதுக்கப்பட்ட அவற்றை வேறுபடுத்திக்காட்டும் இலக்கங் களையும் அனுப்பிவைத்தல் வேண்டும்.

வாக்கெடுப்புப் பற்றிய அறிவித்தல். (பி45, 1977 இன் 24)

38(1) தேர்தற் பிரதேசமொன்று தொடர்பாக 37 ஆம் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றதன்மேல், அப்பிரதேசமானது எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளதோ அந்த மாவட்டத்துக்கான தேர்தல்கள் அலுவலர், உடனடியாக, பின்வருவன பற்றிக் குறித்துரைக்கும் அறிவித்தலொன்றை வர்த்தமானியில் வெளியிடுதல் வேண்டும்:-

(பி 11, 1987 இன் 24)
[பி 8, 1990 இன் 25]
[பி 12, 2017 இன் 16]

(அ) தேர்தல் போட்டி அந்தப் பிரதேசத்தில் நடைபெறுகிறதோ அந்த தேர்தற் பிரதேசம்;

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒவ்வொன்றினதும்; அல்லது சுயேச்சைக் குழு ஒவ்வொன்றினதும் சிங்கள அகரவரிசைப்படி (வேட்பாளர்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள வாறாக) தரப்பட்டுள்ளவாறான வேட்பாளர்களின் பெயர்களைக் கொண்ட நியமனப்பத்திரங்களும் அத்தகைய வேட்பாளர் ஒவ்வொரு வருக்கும் குறித்தொதுக்கப்பட்ட தொடர் எண்ணும் அத்தகைய கட்சிக்கு அல்லது குழுவுக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏற்றங்கீகரிக்கப்பட்ட சின்னமும் அத்துடன் சுயேச்சைக் குழு வொன்றின் விடயத்தில் "சுயேச்சைக்குழு" என்ற சொற் களும். வேறுபடுத்திக் காட்டும் இலக்கம் ஏதேனும் இருப்பின், அதுவும்;

[பி 11, 1987 இன் 24]
[பி 29, 2012 இன் 22]

(இ) வாக்கெடுப்புத் தேதி ; அத்தகைய தேதி, முழு நோன்மதி நாளாக அல்லது 1971 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, விடுமுறை நாட்கள் சட்டத்திற்கான முதலாம் அட்டவணையிற்

குறித்துரைக்கப்பட்டவாறான ஏதேனும் பொது விடுமுறை நாளாகவிராத ஒரு தேதியாக இருத்தல் வேண்டும் ; ஆனால் இயன்றவிடத்தெல்லாம், அது, ஒரு சனிக்கிழமையாக அல்லது ஆணையாளரின் ஒருப்பாட்டுடன் தெரிவத்தாட்சி அலுவலரினால் தீர்மானிக்கப்பட்ட ஒரு தேதியாக அல்லது தேதிகளாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அறிவித்தல் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து ஐந்து வாரங்களுக்கு குறையாததும் ஏழு வாரங்களுக்கு மேற்படாததுமான தேதியொன்றாக இருத்தலும் வேண்டும் ; அத்துடன்"

(ஈ) அத்தேர்தற் பிரதேசத்திலுள்ள வாக்கெடுப்பு மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்குமான வாக்கெடுப்பு நிலையம் அல்லது வாக்கெடுப்பு நிலையங்கள் அமைந்துள்ள இடமும், பெண் வாக்காளர்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் ஒதுக்கப்பட்டிருந்தால், குறிப்பிட்ட அந்த வாக்கெடுப்பு நிலையங்களும். [பி 11, 1987 இன் 24]

(2) ஏதேனும் எதிர்பாராத இக்கட்டுநிலை காரணமாக, (1) ஆம் உட்பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலொன்றில் குறித்துரைக்கப்பட்ட இடமல்லாத வேறு இடத்தில் வாக்கெடுப்பு நிலையம் எதுவும் அமைந்திருத்தல் அவசியமானதாக இருக்குமிடத்து, தேர்தல்கள் அலுவலர், அந்நிலையம் அமைந்திருக்க வேண்டிய இடத்தினை, தமது பூரண தற்றுணிபில் தீர்மானிக்கக்கூடிய அத்தகைய முறையில், மாற்றுவிக்கலாம்.

(3) தேர்தல்கள் அலுவலர் ஆணையாளருடனான கலந்தாலோசனையுடன் ஏதேனும் அவசரகால நிலைமை அல்லது எதிர்பாரா சூழ்நிலைகள் காரணமாக தேர்தல்கள் தொடர்பாக (1) ஆம் உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று தேர்தல் பிரதேசம் எதிலும் வாக்கெடுப்பு நடத்த முடியாதென அபிப்பிராயப்படுமிடத்து, அத்தகைய வாக்கெடுப்பு நடைபெறுவதற்கான பிறிதொரு தேதியை நியமிக்கலாம் என்பதுடன், அத்தகைய வேறு தேதியானது, (1) ஆம் உட்பிரிவின் கீழான அறிவித்தல் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து இருபத்தொரு நாட்களுக்கு முன்னதாக இருத்தலுமாகாது. [பி 2, 2012 இன் 1]

"பெயர் நியமனத்துக்குப் பின்னர் வேட்பாளர் ஒருவர் இறத்தல்.

39. (1) வாக்கெடுப்பின் நோக்கங்களுக்கு தேர்தலின் ஒத்திவைப்பிற்கும் வாக்கெடுப்பின் தொடக்கத்திற்கும் இடையில் ஏதேனும் உள்ளூர் அதிகார சபைக்கான தேர்தலுக்குரிய வேட்பாளர் ஒருவரின் இறப்பு எவ்வாறிருப்பினும் 38 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் தேர்தலுக்கென குறித்துரைக்கப்பட்ட தேதியன்று வாக்கெடுப்பு நடைபெறுதல் வேண்டும்.

(2) வேட்பாளர் ஒருவரின் இறப்பின் காரணமாக வெற்றிடமொன்று ஏற்படுமிடத்து இறந்த அத்தகைய வேட்பாளர் எந்த அங்கீகரிக்கப் பட்ட அரசியற் கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவைச் சேர்ந்திருக்கிறாரோ அந்த அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் தலைவர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு இக்கட்டளைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகைமைபெற்ற ஆளொருவரைப் பெயர் குறித்து நியமித்தல் வேண்டும்.". [பி 46, 1977 இன் 24] [பி 12, 1987 இன் 24] [பி 30, 2012 இன் 22] [பி 13, 2017 இன் 16]

வாக்காளரது இலக்கம், வாக்களிக்கும் நிலையம்.

39அ. (1) போட்டியுள்ள தேர்தல் நிகழுவுள்ள தேர்தற் பிரதேசமொன்றுக்கான தெரிவத்தாட்சி அலுவலர் இவ்வுட்பிரிவு ஏற்புடையதாகின்ற ஒரு பிரதேசமாக அத்தேர்தற் பிரதேசமானது இருப்பின், அப்பிரதேசத்தின் ஏதேனும் வட்டாரத்திற்கான தேருநர் நிரலில் தமது பெயரைக் கொண்டுள்ளவாரான வாக்காளர் ஒவ்வொருவருக்கும் பின்வருவன

வாக்களிக்கும் நேரம் முதலியன பற்றி வாக்காளருக்கு அறிவித்தல் (பி9, 1963 இன் 9) (பி 47, 1977 இன் 24) [பி31, 2012இன் 22] [பி14, 2017இன் 16]

பற்றிக் குறித்துரைக்கும் உத்தியோகபூர்வமான வாக்காளர் அட்டை ஒன்றினை அஞ்சல் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

(அ) உள்ளூர் அதிகார சபையின் பெயர்:

(ஆ) தேருநர் நிரலில் கூறப்பட்டவாறு வாக்களரின் பெயரும் முகவரியும் பதிவிலக்கமும்

(இ) வட்டாரத்தின் பெயரும் இலக்கமும்

இஇ. வாக்கெடுப்பு மாவட்டத்தின் இலக்கம்

(ஈ) வாக்காளருக்குக் குறித்தொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையம்; அத்துடன்

(பி14, 2017இன் 16) (உ) வாக்கெடுப்புத் திகதியும் நேரமும்

(பி9, 1963 இன் 9) (2) ஓராம் உட்பிரிவின் கீழான உத்தியோக பூர்வமான வாக்காளர் அட்டையொன்று வாக்கெடுப்புத் திகதிக்குக் குறைந்தது ஐந்து நாட்களுக்கு முன்னரேனும் அவருக்குக் கிடைக்கக் கூடியதாக வாக்காளருக்கு அனுப்புதல் வேண்டும். அத்தகைய உத்தியோகபூர்வமான வாக்காளர் அட்டையொன்றை முகவரியிடப்பட்ட ஆளிடம் ஒப்படைக்க அஞ்சல் அலுவலகமெதுவும் தவறினால், வாக்கெடுப்புத் திகதி வரை அத்தகைய அஞ்சல் அலுவலகத்தில் அது வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் முகவரியாளர் அதைப் பெறுவதற்கென வந்தால் அவரிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

(பி9 1963 இன் 9) (3) (அ) அதிகாரமின்றி உத்தியோகபூர்வமான வாக்களர் அட்டையெதனையும் வேறெந்த ஆளுக்கும் வழங்குகின்ற ஆள் ஒவ்வொருவரும் : அல்லது

(பி9 1963 இன் 9) (ஆ) உத்தியோகபூர்வமான வாக்காளர் அட்டையெதனையும் வேறெந்த ஆளுக்கும் விற்பனை செய்கின்ற அல்லது விற்பனை செய்ய முன்வருகின்ற அல்லது வேறெந்த ஆளிடமிருந்தும் உத்தியோகபூர்வமான வாக்காளர் அட்டையெதனையும் கொள்வனவு செய்கின்ற அல்லது கொள்வனவு செய்யமுன்வருகின்ற ஆள் ஒவ்வொருவரும்,

(முதலாம் அட்டவணை 2023 இன் 21) தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவரின் முன்னிலையில் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், இரண்டு இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாத காலத்திற்கு மேற்படாத இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம், மறியற்றண்டனை, ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(பி10, 1965 இன் 15) (3அ) (அ) பகிரங்க சேவையாளர் என்ற தன்மையில் கடமையாற்றுகின்ற பகிரங்க சேவையாளர் தவிர்ந்த வேறெவரேனும் ஆளின் உத்தியோகபூர்வமான வாக்காளர் அட்டையைத் தன்வசம் வைத்திருக்கும் ஆள் ஒவ்வொருவரும் : அல்லது

(ஆ) இக்கட்டளைச் சட்டத்தின் கீழான ஏதேனுமொரு தேர்தலில் தகுந்த அதிகாரமின்றி உத்தியோகபூர்வமான வாக்காளர் அட்டையெதனையும் அல்லது உத்தியோகபூர்வமான வாக்காளர் அட்டையாகக் கொள்ளப்படுகின்ற அல்லது

அதுவாக உபயோகிக்க தகுதியுடைய எதனையும் அச்சிடுகின்ற ஆள் ஒவ்வொருவரும்.-

தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவரின் முன்னிலையில் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுமிடத்து, இரண்டு இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாத காலத்திற்கு மேற்படாத இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்தண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும். (முதலாம் அட்டவணை 2023 இன் 21)

(4) அமைச்சரானவர், காலத்திற்குக் காலம் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அக்கட்டளையிற் குறித்துரைக்கப்பட வேண்டிய அத்தகைய திகதியிலிருந்து (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவ்வாறு குறித்துரைக்கப்பட வேண்டியவையான ஒவ்வொரு தேர்தல் பிரதேசத்திற்கும் அல்லது பிரதேசங்களுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும் என வெளிப்படுத்தலாம். [பி47, 1977 இன் 24]

39ஆ (1) உள்ளூரதிகார சபை எதற்குமான தேர்தலொன்றின் நோக்கத்துக்கென , இப்பிரிவின் கீழ் அஞ்சல் வாக்காளரொருவராகக் கணிக்கப்படுவதற்குரித்துடைய ஆளொருவர் அத்தகைய தேர்தலில் அஞ்சல் மூலம் வாக்களிக்கலாமென்பதுடன், அவர் நேர்முகமாக வாக்களித்தலுமாகாது. (அஞ்சல் மூலம் வாக்களித்தல்) (பி13 1987 இன் 24)

இவ்வுட்பிரிவின் முந்போந்த ஏற்பாடுகளுக்கு முரணாக தேர்தலொன்றில் நேர்முகமாக வாக்களிக்கும் ஆளெவரும், தவறொன்றுக்குச் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்க முறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அல்லது ஓராண்டை விஞ்சாத காலத்திற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்தண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும். (முதலாம் அட்டவணை 2023 இன் 21)

(2) உள்ளூரதிகார சபையென்றுக்கான தேர்தலொன்றில் அஞ்சல் வாக்காளளொருவராகக் கணிக்கப்படுவதற்கான விண்ணப்பமொன்று-

(அ) இலங்கைத் தரைப்படையின், இலங்கைக் கடற்படையின், இலங்கை வான் படையின் உறுப்பினரொருவர் அல்லது பொலிசுத் திணைக்களத்திலுள்ள, இலங்கை அரசாங்க புகையிரதச் சேவையிலுள்ள, அஞ்சல் திணைக்களத்திலுள்ள தொலைத்தொடர்புகள் திணைக்களத்திலுள்ள, இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையிலுள்ள அல்லது ஏதேனும் பிராந்திய போக்குவரத்துச் சபையிலுள்ள அலுவலர் ஒருவர் அல்லது சேவையாளரொருவர், அத்தகைய உறுப்பினராக, அலுவலராக அல்லது சேவையாளராக தொழில் செய்கின்ற குறிப்பான சூழ்நிலை காரணமாக அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்துக்கு நேர்முகமாக வந்து வாக்களிக்க முடியாதவராகவுள்ளார் அல்லது நேரடியாக

வாக்களிக்க முடியாமற் போகும் சாத்தியமுண்டு என்ற ஏதுவின் பேரில் அந்த உறுப்பினரால் அலுவலரால் அல்லது சேவை யாளரால் செய்யப்படலாம்; அத்துடன்

(ஆ) பகிரங்க சேவையிலுள்ள இலங்கை மத்திய வங்கியிலுள்ள அல்லது உள்ளூராட்சிச் சேவையிலுள்ள வேறு எவரேனும் அலுவலர் அல்லது தேர்தலுடன் தொடர்புபட்ட நோக்க மொன்றிற்காக வாக்கெடுப்புத் திகதியன்று , அவர் தொழில் செய்கின்ற குறிப்பான சூழ்நிலைகள் என்ற ஏதுவின் மீது அல்லது அந்நோக்கத்திற்கென அவர் தொழிலுக்கு அமர்த்தப் படக்கூடிய சாத்தியமுண்டு என்ற ஏதுவின் மீது அந்த அலுவலரால் அல்லது சேவையாளரால் செய்யப்படலாம்; அத்துடன்

(இ) தேர்தலொன்றிற்கான வேட்பாளரொருவர் தாம் வேறோர் தேர்தல் இடப்பரப்பில் வேட்பாளராக நிற்கும் காரணத்தினால் அவருக்குச் குறித்தொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்தில் தாம் நேரடியாக வாக்களிக்க முடியாதவராயுள்ளார் அல்லது முடியாமல் போகும் சாத்தியம் உண்டு என்ற ஏது வின் மீது, அந்த வேட்பாளரினால் செய்யப்படலாம்.

(3) அஞ்சல் வாக்காளரொருவராகக் கணிக்கப்படுவதற்கான, விண்ணப்பமொன்று, தெரிவத்தாட்சி அலுவலருக்கு 26 ஆம் பிரிவின் கீழான பெயர் நியமனம் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து பத்து நாட்களுக்குள் கிடைக்கக் கூடியதாகச் செய்யப்படுதல் வேண்டும் அத்தகைய விண்ணப்பம் பொருளளவில் ஒன்பதாம் அட்டவணையில் அடங்கியுள்ள, ஒழுங்கு விதிகளால் அந்நோக்கத்திற்கென விதித் துரைக்கப்பட்டுள்ள படிவத்தில் இருத்தல் வேண்டும்.

(4) அஞ்சல் வாக்காளரொருவராகக் கணிக்கப்படுவதற்கான விண்ணப்பமெதுவும், அவ் விண்ணப்பமானது, இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கு இணங்கவுள்ளது என தெரிவத்தாட்சி அலுவலர் திருப்திப்பட்டாலன்றி அவரால் அனுமதிக்கப்படுதலாகாது.

(5) தெரிவத்தாட்சி அலுவலர் அஞ்சல் வாக்களரொருவராகக் கணிக்கப்படுவதற்கான விண்ணப்பங்களைத் தீர்மானித்து முடிவு செய்யும் நோக்கத்திற்கென, அந்நோக்கத்திற்கு அவசியமாகக் கூடிய வாறான அத்தகைய தகவலெதனையும் அத்தகைய அலுவலருக்குக் கொடுக்கும் படி ஆளெவரையும் அறிவித்தல் மூலம் தேவைப் படுத்தலாம்.

(6) அஞ்சல் வாக்காளரொருவராகக் கணிக்கப்படுவதற்கான விண்ணப்பமொன்றின் மீதான தெரிவத்தாட்சி அலுவலரின் முடிவானது எழுத்து மூலம் விண்ணப்பகாரருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(7) அஞ்சல் வாக்காளரொருவராகக் கணிக்கப்படுவதற்கான விண்ணப்பமொன்றினை அனுமதிக்கும் அல்லது அனுமதிக்க மறுக்கும் தெரிவத்தாட்சி அலுவலரின் தீர்மானமானது இறுதியானதாதல் வேண்டும்.

(8) தேர்தலொன்றின் நோக்கத்திற்கென அஞ்சல் வாக்காள ரொருவராகக் கணிப்பதற்கான விண்ணப்பமொன்று தெரிவத்தாட்சி அலுவலரொருவரால் அனுமதிக்கப்படுமிடத்து விண்ணப்பகாரர் அத்தகைய நோக்கத்திற்கென அஞ்சல் வாக்காளரொருவராக கணிக்கப் படுவதற்கு உரித்துடைய ஆளொருவராதல் வேண்டும்.

(9) தெரிவத்தாட்சி அலுவலரானவர் அஞ்சல் வாக்காளரொருவராகக் கணிக்கப்படுவதற்கு உரித்துடைய ஆள் ஒவ்வொருவருக்கும் அத்தகைய ஆளினால் கொடுத்துதவப்பட்ட முகவரிக்கு-

(அ) வாக்குச் சீட்டொன்றையும்;

(ஆ) ஆளடையாளத்தை வெளிப்படுத்தும் படிவமொன்றையும்;

(இ) அஞ்சல் வாக்குச்சீட்டு உரிய முறையில் குறியிடப்பட்டுத் திருப்பி அனுப்பப்படும் பொழுது அதனை உறைக்குள் இடுவதற்கான (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட உறையினுள் பார்க்கச் சிறியதும், "வாக்குச்சீட்டு உறை" என அடையாளமிடப்பட்டதும் அத்தகைய ஆளுக்கு வழங்கப்படும் அஞ்சல் வாக்குச்சீட்டில் அச்சிடப்பட்ட எண்ணைக் கொண்டதுமான உறையொன்றையும் ; அத்துடன்

(ஈ) மேலே சொல்லப்பட்ட ஆவணங்களைத் திருப்பி அனுப்பு வதற்கான உறையொன்றையும்;

சாத்தியமானளவு விரைவாக அஞ்சல் மூலம் அனுப்புதல் வேண்டும்.

(10) அஞ்சல் வாக்காளரொருவராகக் கணிக்கப்படுவதற்கு உரித்துடைய ஆட்களால் பயன்படுத்தப்படவேண்டிய வாக்குச் சீட்டின் படிவமும் ஆளடையாள வெளிப்படுத்துகைக்கான படிவமும் அவை வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகளின்போது பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறைகளும் ஒன்பதாம் அட்டவணையில் அடங்கியுள்ள ஒழுங்கு விதிகளுக்கிணங்கியனவாக இருத்தல் வேண்டும்.

(11) அஞ்சல் வாக்காளரொருவராக கணிக்கப்படுதற்குரிய ஆளொரு வருக்கு வழங்கப்படும் வாக்குச் சீட்டொன்று இக்கட்டளைச் சட்டத்தில் "அஞ்சல் வாக்குச்சீட்டு" எனக் குறிப்பீடு செய்யப்படும்.

(12) எந்தத் தேர்தல் இடப்பரப்பில் தேர்தல்லொன்றிருக்கின்றதோ அந்த ஏதேனும் தேர்தல் இடப்பரப்பில் தெரிவத்தாட்சி அலுவலர் அஞ்சல் வாக்காளரொருவராகக் கணிக்கப்படுவதற்கு உரித்துடைய ஆள் ஒவ்வொருவரினதும், தேருநர் இடாப்பிலுள்ள பெயரையும், முகவரியை யும் எண்ணையும் குறித்துரைக்கும் (இக் கட்டளைச் சட்டத்தின் "அஞ்சல் வாக்காளர் நிரல்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிரலொன்றினை சாத்தியமான அளவு விரைவாகத் தயாரித்தல் வேண்டும். அத்தகைய நிரல் அச்சட்டத்திற்கான ஒன்பதாம் அட்டவணையில் அடங்கியுள்ள ஒழுங்குவிதிகளினால் அதற்கென விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

தலைமை தாங்கும் அலுவலர்களை நியமித்தல். [பி48, 1977இன் 24] [பி32, 2012 இன் 22] [பி15, 2017இன் 16]

40. (1) ஏதேனும் தேர்தல் பிரதேசத்திற்கான ஒவ்வொரு தேர்தலினதும் நோக்கத்திற்காக, அத்தேர்தல் பிரதேசத்திற்கான தெரிவத்தாட்சி அலுவலர் பின்வருவோரை நியமித்தல் வேண்டும்.

(அ) ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டத்திலுமுள்ள ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்திலும் தலைமைதாங்கவென (இதனகத்துப் பின்னர் "தலைமைதாங்கும் அலுவலர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள்; அத்துடன்

(ஆ) ஒரு வாக்கெடுப்பு நிலையம் தொடர்பில் ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்கள் தலைமை தாங்கும் அலுவலராக நியமிக்கப்படுமிடத்து, அவ்வாக்கெடுப்பு நிலையத்தின் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலராக விருப்பதற்கு அத்தகைய தலைமைதாங்கும் அலுவலர்களுள் ஒருவர்; அத்துடன் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் வேறு தலைமைதாங்கும் அலுவலர் ஒவ்வொருவர் மீதும் மற்றும் தேர்தலில் வாக்கெடுப்பை நடத்துவதற்கான எல்லா ஒழுங்கேற்பாடுகள் மீதும் பொது மேற் பார்வையை பிரயோகித்தலும் வேண்டும்.

(2) எவரேனும் தலைமைதாங்கும் அலுவலர் ஏதேனுமொரு தேர்தலில் இக்கட்டளைச் சட்டத்தின் கீழான தனது கடமைகளெதனையும் புரியமுடியாதவாறு நோய் அல்லது வேறு காரணத்தினால் தடுக்கப் படுகின்றவிடத்தும் இன்னோர் ஆளை நியமிப்பதற்குத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு நேரம் இல்லாதவிடத்தும் அவருக்காகப் பதிற்கடமை யாற்றுவதற்கென பிரதியாளரொருவரைத் தலைமை தாங்கும் அலுவலர் நியமிக்கலாம். அத்தகைய ஒவ்வொரு நியமனமும் இயன்றளவு விரைவாகத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டு மென்பதுடன் அது அத்தகைய பிரதியாளரினால் அதுவரை செய்யப்பட்ட அந்தச் செயலினதும் செல்லுபடிக்கிடையூறின்றித் தெரிவத்தாட்சி அலுவலரினால் உறுதிப்படுத்தப்படலாம் அல்லது நிராகரிக்கப்படலாம்.

[பி48, 1977 இன் 24]

(3) தெரிவத்தாட்சி அலுவலர் பொருத்தமானதெனக் கருதினால் தமது தேர்தற் பிரதேசத்திலுள்ள வாக்கெடுப்பு நிலையம் எதிலும் தலைமை தாங்கலாம்; அத்துடன் தலைமைதாங்கும் அலுவலர்கள் பற்றிய இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் தலைமைத் தாங்கும் அலுவலர்கள் தொடர்பாகத் தெரிவத்தாட்சி அலுவலராற் செய்யப்படவேண்டிய அல்லது தெரிவத்தாட்சி அலுவலர் தொடர்பாக தலைமை தாங்கும் அலுவலரால் செய்யப்படவேண்டிய விடயங்கள் தொடர்பில் தேவைப்படும் திரிபுகளுடன், அத்தகைய தெரிவத்தாட்சி அலுவலருக்கும் ஏற்புடையன வாதல் வேண்டும்.

வாக்கெடுப்பு நேரங்கள் [பி14, 1987 இன் 24]

41. தேர்தல் இடப்பரப்பொன்றிற்கான தேர்தல் ஒவ்வொன்றினதும் வாக்கெடுப்பு 38 ஆம் பிரிவின் கீழ் அறிவிப்பு மூலம் அந்நோக்கத்திற் கென நியமிக்கப்பட்ட நாளன்று முற்பகல் 7 மணிக்குத் தொடங்கி அந்நாளன்று பிற்பகல் 4 மணிக்கு முடிவடைதல் வேண்டும்.

வாக்குச்சீட்டின் மூலம் வாக்குகள் அளிக்கப்படுதல். [பி50, 1977 இன் 24]

42. ஏதேனும் தேர்தல் பிரதேசத்திற்கான தேர்தல் ஒவ்வொன்றிலும் அளிக்கப்படும் வாக்குகள், வாக்குச் சீட்டின் மூலம் அளிக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு வாக்காளரினதும் வாக்குச்சீட்டானது, இதன கத்துப்பின்னர் விதிக்கப்படும் படிவத்திலும் இதனகத்துப்பின்னர் விதிக்கப்படும் விவரங்களைக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.

வாக்களிக்கும் உரிமைக்குத் தேருநர் நிரல் முடிவான சான்றாதல்

43. ஏதேனும் தேர்தல் பிரதேசத்துக்கான ஏதேனும் வட்டாரத்திற்கான தேர்தல் எதிலும் வாக்களிப்பதற்கு ஆள் ஒருவர் உரித்துடையவரா அல்லரா என்பதனைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்கு, அத்தேர்தல் பிரதேசத்துக்கான ஏதேனும் வட்டாரத்திற்கென அப்போது நடைமுறையிலிருக்கும் தேருநர் நிரல் முடிவான சான்றாகும் என்பதுடன், எவரேனும் ஆளின் பெயர் அத்தகைய நிரலில் உள்ளடக்கப்பட்டிருத்தல் தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அல்லது உயர் நீதிமன்றத்தில் ஏதேனும் மேன்முறையீடு முடிவுறாதிருத்தல் காரணமாக அத்தகைய நிரலில் தமது பெயரைக் கொண்டுள்ள ஆளெவருக்குமுள்ள வாக்களிக்கும் உரிமை பங்கப்படாதிருத்தலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய ஏதேனும் மேன்முறையீடு முடிவுறாதிருக்கையில் அத்தகைய எந்த ஆளினாலும் அளிக்கப்பட்ட எந்த வாக்கும் அத்தகைய மேன்முறையீடெதுவும் முடிவுறாதிருக்கவில்லை என்றாற்போன்று செல்லுபடியுடையதாக விருத்தல் வேண்டுமென்பதுடன், மேன்முறையீடு பற்றிய பின்னைய முடிவினால் பாதிக்கப்படாததாகவிருத்தலும் வேண்டும்.

(பி51 1977 இன் 24)
(பி33, 2012 இன் 22)
(பி16, 2017 இன் 16)

ஆயின் அவரது ஊழற்பழக்கமொன்றிற்கு அல்லது சட்ட விரோதப் பழக்கமொன்றிற்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் காரணமாக அல்லது தேர்தல் நீதிபதி ஒருவரின் அறிக்கை காரணமாக அல்லது 1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசுப்பேரவைக் கட்டளையின் 52 ஆம் பிரிவின் கீழ் அல்லது 53 ஆம் பிரிவின் கீழ் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் காரணமாக அல்லது அக்கட்டளையின் 4 அ என்னும் பிரிவானது நடைமுறையிலிருப்பதன் காரணமாக அல்லது அக்கட்டளையின் 4 அ என்னும் பிரிவானது நடைமுறையிலிருப்பதன் காரணமாக அக்கட்டளையின் கீழ் தேர்தல் எதிலும் எவரேனுமொருவர் வாக்களிக்க முடியாதிருக்கையில் இக்கட்டளைச் சட்டத்தின் கீழான எத்தேர்தலிலும் வாக்களித்தால், அவர், தவறொன்றுக்குக் குற்ற வாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், இரண்டு இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது ஆறுமாத காலத்திற்கு மேற்படாத இரு வகையிலொருவகை மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

முதலாம் அட்டவணை 2023 இன் 21

ஆயின் மேலும், பன்முறை வாக்களித்தல் பற்றிய 82 ஆம் பிரிவின் ஏற்பாடுகளெதனையும் மீறியதற்காக ஆள் எவரும், தண்டம் எதற்கேனும் ஆளாவதற்குள்ள பொறுப்பை இப்பிரிவிலுள்ளது எதுவும் பாதிப்ப தாகாது.

(வாக்குப் பெட்டிகள் முதலியனவற்றை வழங்குதல் (பி52 1977 இன் 24)

44. தேர்தல் பிரதேசம் எதற்குமான தேர்தல் ஒவ்வொன்றினதும் நோக்கங்களுக்காக , அப்பிரதேசத்துக்கான தெரிவத்தாட்சி அலுவலர்-

(அ) வாக்கெடுப்பை நடாத்துவதற்கு வாக்குச் சீட்டுகளை எண்ணுவதற்கும் அவசியமான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல் வேண்டும்.

(ஆ) அத்தேர்தற் பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்திலும் ஏதேனும் ஒரு தடவையில் நியாயமான எண்ணிக்கை கொண்ட வாக்காளர்களைக் கொள்ளுவதற்கும் வாக்காளர்கள் தமது வாக்குச்சீட்டுக்களில் அடையாளமிடும்போது மற்றவர்கள் அதனைப் பார்க்காதிருக்கும் வகையில் அவர்கள் மறைக்கப்படுவதை உறுதிப் படுத்துவதற்கும் அவசியமான அத்தகைய எண்ணிக்கையினவான வாக்களிப்பு அறைகளை ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(இ) தெரிவத்தாட்சி அலுவலரது அபிப்பிராயப்படி, அவ்வாக்கெடுப்பு நிலையத்திற்குக் குறித்தொதுக்கப்பட்ட வாக்களர்களின் எண்ணிக் கைக்குத் தேவைப்படக்கூடிய அத்தகைய எண்ணிக்கை கொண்ட வாக்குச்சீட்டுக் களையும் வாக்குச்சீட்டுப் பெட்டிகளையும் தலைமை தாங்கும் அலுவலருக்கு வழங்குதல் வேண்டும்.

(ஈ) வாக்காளர் வாக்குச்சீட்டுக்களில் அடையாளமிடுவதனை இயலச் செய்யும் பொருள்களையும் அவற்றின் மீது அலுவலக முறையான குறியீட்டைப் பொறிப்பதற்கான அல்லது துளையிடுவதற்கான சாதனங் களையும் அவ்வட்டாரத்திற்கென அப்போதைக்கு வலுவிலிருக்கும் தேருநர் நிரல்களின் பிரதிகளையும் அல்லது அவ்வாக்கெடுப்பு நிலையத்திற்கெனக் குறித்தொதுக்கப்பட்ட வாக்காளர்களின் பெயர்களைக் கொண்டிருக்கும் நிரலின் அப்பாகத்தினையும் ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்திற்கும் வழங்குதல் வேண்டும்.

(பி34 2012 இன் 22)
(17, 2017 இன் 16)

(உ) இக்கட்டளைச் சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் தேர்தலை திறமையாகக் கொண்டு நடாத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய வேறு செயல்களையும் விடயங்களையும் செய்தல் வேண்டும்.

வாக்கெடுப்பு நிலையங்களின் வெளிக்காட்டி வைக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள்

45.(1) வாக்கெடுப்பு நடைபெறும் போது, வாக்கெடுப்பு நிலையம் ஒவ்வொன்றினதும் தலைமைதாங்கும் அலுவலர்-

[பி53, 1977 இன் 24]
[பி15, 1987 இன் 24]

(அ) வாக்கெடுப்பு நிலையத்திற்கு வெளியேயும் வாக்களிப்பு அறை ஒவ்வொன்றிலும் பொருளளவில் இரண்டாம் அட்டவணையில் தரப்பட்ட படிவத்திலானதும் வாக்காளர்களுக்கு வாக்களிக்க வழிகாட்டுவதற்கான பணிப்புகளைக் கூறுவதுமான அறிவித்தலொன்றையும் : அத்துடன்

[பி35, 2012 இன் 22]
[பி18, 2017 இன் 16]

(ஆ) வாக்கெடுப்பு நிலையத்திற்கு வெளியே, அறிவித்தலொன்றையும் அத்தகைய ஒவ்வொரு கட்சிக்கும் அல்லது குழுவிற்கும் குறித்தொதுக்கப் பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட சின்னத்தையும் ஒன்றுக்கு மேற்பட்ட சுயேச்சைக் குழுக்கள் உள்ளவிடத்து, பெயர் நியமனப் பத்திரத்தில் சுட்டிக்காட்டப்பட்டவாறாக அத்தகைய ஒவ்வொரு குழுவுக்கும் குறித்தொதுக்கப்பட்ட வேறு பிரித்துக்காட்டும் இலக்கத்தையும்

(2) இப்பிரிவின் கீழான அறிவித்தல் ஒவ்வொன்றும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இருத்தல் வேண்டும்.

வாக்குச்சீட்டுப் பெட்டிகள்.

46. ஒவ்வொரு வாக்குச்சீட்டுப் பெட்டியும் வாக்குச்சீட்டுக்களை உள்ளேயிடத்தக்கதாகவும், பெட்டியின் பூட்டைத் திறக்காமல் அவற்றை வெளியே எடுக்க முடியாததாயும் அமைக்கப்படல் வேண்டும்.

வாக்குச்சீட்டுக்கள். [பி54, 1977இன் 24] [பி16, 1987 இன் 24] [பி9, 1990 இன் 25] [பி36, 2012 இன் 22] [பி19, 2017இன் 16]

47. ஒவ்வொரு வாக்குச் சீட்டும் பொருளளவில் மூன்றாவது அட்டவணையிலுள்ள படிவத்தில் இருத்தல் வேண்டும். அத்துடன்-

(அ) தேர்தலில் போட்டியிடும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் பெயர்களைச் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சிங்கள அகரவரிசைப்படி ஒழுங்குபடுத்தப்பட்டதாகக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு கட்சியினதும் பெயருக்கு எதிராக அத்தகைய ஒவ்வொரு கட்சிக்குமெனக் குறித்தொதுக்கப்பட்ட சின்னத்தையும் கொண்டிருத்தலும் வேண்டும். அதனை உடனடுத்து, சுயேச்சைக் குழுக்கள் எவையேனும் அத்தகைய தேர்தலில் போட்டியிடுமாயின், அத்தகைய ஒவ்வொரு குழுவுக்குள் தனித்தனியே "சுயேச்சைக் குழு" என்ற சொற்களுக்கும், வரிசைக் கிரமத்தில் வேறுபடுத்திக் காட்டும் இலக்கமும் எழுதப்பட்டு அத்தகைய குழுவின் வேறு பிரித்துக் காட்டும் இலக்கத்துக்கெதிராக அத்தகைய குழு ஒவ்வொன்றுக்கும் குறித்தொதுக்கப்பட்ட சின்னத்தையும் தருதல் வேண்டும் என்பதுடன் ஒரு வாக்காளர் தமது வாக்கை அளிப்பதற்கென ஒவ்வொரு சின்னத்துக்கும் எதிராக ஒரு வெற்றுக்கூடு இருத்தலும் வேண்டும். ஒரு வாக்காளர் அவரது வாக்கை அதற்கென ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டினுள் இடுதல் வேண்டும்.

(ஆ) மடிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்:

(இ) பின்புறத்தில் ஓர் இலக்கம் அச்சிடப்பட்டதாக இருத்தல் வேண்டும்: அத்துடன்

(ஈ) அதே இலக்கத்தை அதன் மேற்புறத்தில் கொண்டிருக்கும் அடியிதழ் ஒன்றுடன் சேர்ந்ததாயிருத்தல் வேண்டும்.

அலுவலகக் குறியீடு.

48. (1) அலுவலக முறையான குறியீடு இரகசியமாக வைத்திருக்கப்படல் வேண்டும்.

(2) இக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஏதேனும் தேர்தலில் பயன்படுத்தப்பட்ட அலுவலக முறையான குறியீட்டை ஏழு ஆண்டுகள் கொண்டவோர் இடைக்காலம் செல்லும் வரை அதே தேர்தற் பிரதேசத்திற்கான வேறெந்தத் தேர்தலிலும் பயன்படுத்தலாகாது.

வாக்கெடுப்பு முகவர்களை நியமித்தல். [பி55, 1977 இன் 24]

49(1) அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி ஒவ்வொன்றினதும் செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அதன் முகவரும் சுயேச்சைக் குழு ஒவ்வொன்றினதும் குழுத் தலைவரும் வாக்கெடுப்பு நடைபெறும் போது வாக்கெடுப்பு நிலையம் ஒவ்வொன்றிலும் முறையே அத்தகைய கட்சியை அல்லது குழுவைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கென இருவருக்கும் மேற்படாத முகவர்களை (இவர்கள் இதனகத்துப் பின்னர் "வாக்கெடுப்பு முகவர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுவர்) நியமிக்கலாம். நியமிக்கப்பட்ட ஆட்களின் பெயர்களையும் முகவரிகளையும் கூறுகின்ற அத்தகைய நியமனம் ஒவ்வொன்றும் தொடர்பிலான எழுத்திலான அறிவித்தல், வாக்கெடுப்பு ஆரம்பிக்கப்படுமுன்னர் அல்லது நடைபெறும் பொழுது, அந்நிலையத்திலுள்ள தலைமைதாங்கும் அலுவலருக்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி ஒவ்வொன்றினதும் செயலாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அதன் முகவராலும் சுயேச்சைக் குழு ஒவ்வொன்றினதும் குழுத் தலைவராலும் கொடுக்கப்படுதல் வேண்டும்.

[பி55, 1977 இன் 24] (2) ஓராம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்டவாறான வாக்கெடுப்பு முகவர் இறந்து போனால் அல்லது செயலாற்ற இயலாதவராக வந்தால், விடயத்துகேற்றாற்போல அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அதன் முகவர் அல்லது சுயேச்சைக் குழுவின் தலைவர் அவரின் இடத்தில் செயலாற்றவென வேறொரு வாக்கெடுப்பு முகவரை நியமிக்கலாம் என்பதுடன் அவ்வாறு நியமிக்கப்பட்ட வாக்கெடுப்பு முகவரின் பெயரையும் முகவரியையும் எழுத்து மூலமான அறிவித்தல் மூலம் தலைமை தாங்கும் அலுவலருக்கு உடனடியாகக் கொடுத்தலும் வேண்டும்.

[பி55, 1977 இன் 24] (3) (i) உள்ளூர் அதிகார சபை எதனதும் உறுப்பினரொருவராக அப்போதைக்குப் பதவிவகிப்பவரான: அல்லது

(ii) அத்தகைய அதிகார சபையின் அலுவலர் அல்லது சேவையாளர் ஒருவராக இருப்பவரான,

ஆள் எவரும், அத்தகைய அதிகார சபையின் தேர்தற் பிரதேத்திலுள்ள வாக்கெடுப்பு நிலையம் எதிலும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி எதனதும் அல்லது சுயேச்சைக்குழு எதனதும் வாக்கெடுப்பு முகவராக நியமிக்கப்படவோ செயலாற்றவோ தகுதியுடையவராதலாகாது,

ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய அதிகார சபையின் உறுப்பினரொருவர் அப்போதைக்குப் பதவி வகிப்பவரான ஆள் எவரும், அவர் வேட்பாளராக நிற்கும் எந்தவொரு தேர்தலிலும் அவரது அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் வாக்கெடுப்பு முகவராகச் செயலாற்றலாம்.

(4) முறையாக நியமிக்கப்பட்டவரும் அவர் பொருட்டு இப்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்ட அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ள வருமான எவரேனுமொரு வாக்கெடுப்பு முகவர், வாக்களிக்கும் நேரங்களில் அவர் நியமிக்கப்பட்டுள்ள வாக்களிக்கும் நிலையத்திற்கு வருகை தரலாம்.

வாக்கெடுப்பு நிலையத்துட் செல்ல விடுதல். [பி56, 1977 இன் 24] 50 (1) ஆள் ஒருவர் எந்த வாக்காளர் கூட்டத்தைச் சேர்ந்தவராக இருக்கின்றாரோ அந்த வாக்காளர் கூட்டுத்துக்கென ஒதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையம் தவிர்ந்த வேறு எந்த வாக்கெடுப்பு நிலையத்திலும் வாக்களிக்க அனுமதிக்கப்படலாகாது.

[பி56, 1977 இன் 24] * (3) தலைமை தாங்கும் அலுவலர் அவரது நிலையத்தில் ஒழுங்கைப் பேணுதல் வேண்டும் என்பதுடன், ஒரு தடவையில் உட்செல்ல வேண்டிய வாக்காளர்களின் எண்ணிக்கையை ஒழுங்குபடுத்தியும், வேட்பாளர்கள், வாக்கெடுப்பு முகவர் அல்லது முகவர்கள், கடமையாற்றும் பொலிசு அலுவலர்கள், வாக்கெடுப்பு நிலையத்தில் அலுவலக முறையில் வேலைக்கமர்த்தப்பட்ட மற்றைய ஆட்கள் தவிர்ந்த வேறு எல்லா ஆட்களையும் உட்செல்லாதவாறு தடுத்தலும் வேண்டும்.

* (2) ஆம் உட்பிரிவு நீக்கஞ் செய்யப்பட்டுள்ளது- 1977 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தின் 56 ஆம் பிரிவைப் பார்க்க

(4) வாக்கெடுப்பு நிலையத்தில் ஆள் ஒருவர் ஒழுக்கக் கேடாக நடந்தால் அல்லது தலைமை தாங்கும் அலுவலரின் சட்டப்படியான கட்டளைகளுக்குக் கீழ்ப்படியத் தவறினால் அவரை எவரேனும் பொலிசு அலுவலரைக் கொண்டு அல்லது தலைமை தாங்கும் அலுவலரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளைக்கொண்டு வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து உடனடியாகத் தலைமைதாங்கும் அலுவலர் வெளியேற்றுவிக்கலாம்.

(5) நான்காம் உட்பிரிவின் கீழ் வாக்கெடுப்பு நிலையமொன்றிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆள் எவரும் -

(அ) தலைமைதாங்கும் அலுவலரின் அனுமதியுடனன்றி, வாக்கெடுப்பு நேரங்களில் மீண்டும் வாக்கெடுப்பு நிலையத்துள் செல்லவிடப்படலாகாது; அத்துடன்

(ஆ) அந்நிலையத்தில் ஏதேனுமொரு குற்றத்தைச் செய்தவரெனக் குற்றஞ்சாட்டப்பட்டால், நீதிவானொருவரின் முன்கொண்டு வரப்படும் வரை கட்டுக்காவலில் வைத்திருக்கப்படலாம்;

ஆயின், மற்றப்படிக்கு ஏதேனுமொரு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிக்க உரித்துடைய வாக்காளரொருவரை, அத்தகைய நிலையத்தில் வாக்களிக்கும் சந்தர்ப்பத்தைத் தடுக்குமுகமாக இவ்வுட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட தத்துவங்கள் பிரயோகிக்கப்படலாகாது.

வாக்குச்சீட்டுப் பெட்டிகளில் இலச்சினையிடுதல்.

51. வாக்கெடுப்புத் தொடங்குதற்கு முன்னர் உடனடியாக வாக்குச் சீட்டுப் பெட்டி வெறுமையாயுள்ளதென அங்கு சமுகமாயிருப்போருக்குக் காண்பிப்பதற்காக வெறுமையான வாக்குச் சீட்டுப் பெட்டியைத் தலைமைதாங்கும் அலுவலர் வாக்கெடுப்பு நிலையத்தில் சமுகமளிக்கக்கூடிய அத்தகைய ஆட்களுக்குக் காண்பித்தல் வேண்டும் என்பதோடு பின்னர் அதனைப் பூட்டி, இலச்சினையை உடைத்தாலன்றி அதைத் திறக்கமுடியாதவாறு அவரது இலச்சினையை அதன் மீதிடுதலும் வேண்டும்; அத்துடன் வாக்குச்சீட்டுகள் இடப்படுவதற்கென அதனை, அவர் பார்க்ககூடிய விதத்தில் வைத்தலும் பூட்டி இலச்சினையிட்ட நிலையில் அதனை வைத்திருத்தலும் வேண்டும்.

வெளிப்படுத்துகையைச் செய்யுமாறும் செல்லுபடியான ஆளடையாள ஆவணமொன்றைக் காண்பிக்குமாறும், வாக்காளரைத் தேவைப்ப[டுத்து]வதற்குள்ள தத்துவம்
[பி. 57.1977 இன் 24]
[பி.15. 2004 இன் 14]

52. (1) வாக்கெடுப்பு நிலையம் எதனதும் தலைமை தாங்கும் அலுவலர், வாக்காளர் எவரையும், வாக்குச்சீட்டுக்கு அவர் விண்ணப்பிக்கும்போது, அதன் பின்னரல்ல, பின்வரும் வெளிப்படுத்துகைகள் எல்லாவற்றையும் (இவை முத்திரைத் தீர்வையினின்றும் விலக்களிக்கப்பட்டிருக்கும்) அல்லது வெளிப்படுத்துகைகளுள் எதனையும் செய்து கீழே ஒப்பமிடுமாறு தேவைப்படுத்தலாம்; அத்துடன் வாக்கெடுப்பு முகவர் ஒருவரினால் அவ்வாறு செய்யும்படி வேண்டப்பட்டால், கட்டாயம் தேவைப்படுத்துதல் வேண்டும்; அதாவது

[பி. 37.2012இன் 22]

முதலாவது - ''இப்பொழுது நடைமுறையிலிருக்கும் இவ்வட்டாரத்திற்குரிய தேருநர் நிரலில் அ. ஆ. என்று பெயர் பதியப்பெற்றிருப்பவர் நான் தானென்று .....
.....(முகவரி) இல் இருக்கும் .....
..... (முழுப் பெயர்) ஆகிய நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.''

.....
(வாக்காளரின் கையொப்பம் அல்லது அடையாளம்.)

20..... ஆம் ஆண்டு ..... மாதம் ..... ஆம் நாளாகிய இன்று என் முன்னிலையில் வெளிப்படுத்தப்பட்டது.

.....
(தலைமைதாங்கும் அலுவலரின் கையொப்பம்.)

[பி. 37.2012 இன் 22]

இரண்டாவது - ''இவ்வட்டாரத்திற்கான உறுப்பினரொருவரை தெரிவுசெய்யும் பொருட்டு இங்கேயாகிலும் வேறெங்கேயாகிலும் நான் வாக்களிக்க வில்லையென்று .....
(முகவரி) இல் இருக்கும் .....
(முழுப் பெயர்) ஆகிய நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.''

.....
(வாக்காளரின் கையொப்பம் அல்லது அடையாளம்.)

20..... ஆம் ஆண்டு ..... மாதம் ..... ஆம் நாளாகிய இன்று என் முன்னிலையில் வெளிப்படுத்தப்பட்டது.

.....
(தலைமைதாங்கும் அலுவலரின் கையொப்பம்.)

[பி. 15.2004 இன் 14]

(1அ) வாக்கெடுப்பு நிலையமொன்றின் தலைமை தாங்கும் அலுவலர் அல்லது அவரது அதிகாரத்தின் கீழ் செயற்படும் ஆளொருவர், எவரேனும் வாக்காளருக்கு வாக்குச்சீட்டு கொடுக்கப்படுவதற்கு முன்னர் அவரது பெயரையும் ஆளடையாளத்தையும் நிச்சயப்படுத்துவதற்கென செல்லுபடியான ஆளடையாள ஆவணமொன்றைக் காண்பிக்குமாறு வாக்காளரைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

[பி. 15. 2014 இன் 14]

(2) (அ) அத்தகையவொரு வெளிப்படுத்துகையைச் செய்ய அல்லது செல்லுபடியான ஆளடையாள ஆவணமொன்றை காண்பிக்க. எவரேனுமோர் அல்லது செல்லுபடியான ஆளடையாள ஆவணமொன்றை காண்பிக்க ஆள் மறுத்தால், தலைமை தாங்கும் அலுவலர் அவருக்கு வாக்குச் சீட்டொன்றைக் கொடுக்க மறுக்கலாம்.

(2) (ஆ) அத்தகையவொரு வெளிப்படுத்துகையில் ஆள் ஒருவர் வேண்டுமென்றே பிழையான கூற்றொன்றைச் செய்தால், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவரினால் சுருக்க முறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுமிடத்து இரண்டு இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத, இரு வகையிலொருவகை மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும். [முதலாம் அட்டவணை 2023 இன் 21]

(3) எவரேனும் வாக்காளருக்கு வாக்குச்சீட்டொன்று வழங்கப்படவிருக்கின்றவிடத்து -

(அ) வாக்குச் சீட்டானது அலுவலக முறையான குறியீட்டினால் முத்திரையிடப்பட்டோ, பதிக்கப்பட்டோ, துளைக்கப்பட்டோ இருத்தல் வேண்டும்; [பி. 17, 1953 இன் 25]

(ஆ) தேருநர் நிரலின் பிரதியில் கூறப்பட்டவாறான வாக்காளரின் இலக்கமும் பெயரும் விவரணமும் கூப்பிடப்படுதல் வேண்டும்;

(இ) வாக்காளரின் இலக்கமானது, அடியிதழ் தாளிற் குறிக்கப்பட்டு அதிலிருந்து வாக்குச்சீட்டு கிழிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) வாக்காளர் வாக்குச்சீட்டொன்றைப் பெற்றுள்ளாரென்பதைக் குறிப்பதற்காக, அவருக்குக் கிடைத்த குறிப்பான வாக்குச்சீட்டைக் காண்பியாது, வாக்காளரின் இலக்கத்திற்கெதிராக நிரலில் குறியீடொன்று இடப்படுதல் வேண்டும்.

வாக்களிக்கும் முறை

53. வாக்காளர் வாக்குச்சீட்டைப் பெற்றபின்னர், தலைமைதாங்கும் அலுவலரினாலோ, அவ்வலுவலரின் அதிகாரத்தின் கீழ்ச் செயலாற்றுகின்ற எவரேனும் ஆளினாலோ போகும்படி பணிக்கப்பட்ட வாக்களிப்பு அறைக்குள் உடனடியாகச் சென்று இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் வாக்காளர்களுக்கு உதவும் முகமாக கொடுக்கப்பட்ட பணிப்புகளுக்கு இயன்றளவு இணங்க அங்கே, இரகசியமாக வாக்குச் சீட்டில் குறியீட்டை இட்டு. யாருக்கு வாக்களித்தார் என்பதை மற்றவர் காணமுடியாதபடி அவரது வாக்குச்சீட்டை மடித்து, அலுவலக முறையான குறியீடு தென்படுமாறு சீட்டின் பிற்புறத்தைத் தலைமை தாங்கும் அலுவலருக்குக் காட்டி அவ்வாறு மடிக்கப்பட்ட வாக்குச்சீட்டை, தலைமை தாங்கும் அலுவலரின் முன்னிலையில் வாக்குச்சீட்டுப் பெட்டியுள் போடுதல் வேண்டும்.

வாக்காளரைப் பரிசோதித்தலும் தோதானகுறியீட்டை இடுதலும்.

53அ. (1) ஏதேனும் உள்ளூர் அதிகாரசபைத் தேர்தலில் வாக்காளரொருவர் -

(அ) தலைமை தாங்கும் அலுவலர் அல்லது அவரின் அதிகாரத்தின்கீழ் செயலாற்றுகின்ற ஓர் ஆளை, தோதான குறியீட்டை அல்லது செல்லுபடியான ஆளடையான ஆவணத்தைப் பரிசோதனை செய்வதற்கு விடமறுத்தால்; அல்லது (பி11,1965 இன் 15)

[பி. 16.2004 இன் 14]

(ஆ) அத்தகைய பரிசோதனையைச் செய்யவிட்டபின்னர் ஒன்றின் அத்தகைய வாக்காளர் தோதான குறியீடு ஏற்கனவே இடப்பட்டுள்ள தென்பதை அல்லது வாக்காளரின் ஆளடையாளம் பற்றிய சந்தேகம் எழச் செய்கின்ற நிகழ்வுகள் தெரியவந்தால்; அல்லது

(இ) அத்தகைய பரிசோதனையைச் செய்யவிட்ட பின்னர் தோதான குறியீடு ஏலவே இடப்பட்டுள்ளாரெனத் தெரியவந்து, ஆனால் அத்தகைய அலுவலரை அல்லது ஆளை, அவ்வாக்காளர் தோதான குறியீட்டை இடுவதற்கு விடமறுத்தால்,

அவருக்கு வாக்குச் சீட்டெதுவும் ஒப்படைக்கப்படலாகாது; அதற்கிணங்க இக்கட்டளைச் சட்டத்தின் வேறு எந்த ஏற்பாட்டிலும் இதற்கு முரணாக எது எவ்விதமிருப்பினும் அத்தகைய வாக்காளர் அத்தகைய தேர்தலில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

(பி. 58.1977 இன் 24)

(2) வாக்கெடுப்பு நிலையமொன்றிற்கான தலைமை தாங்கும் அலுவலர், (1) ஆம் உட்பிரிவின் கீழ் அத்தகைய நிலையத்தில் வாக்குச்சீட்டொன்று ஒப்படைக்கப்படாத ஒவ்வொரு வாக்களர் பற்றிய பின்வரும் விவரங்களை, பொருளளவில் ஏழாம் அட்டவணையிலுள்ள படிவத்திலான நிரலொன்றில் பதிதல் வேண்டும் :-

(அ) தேர்தல்நடைபெறும் வட்டாரத்தின் தேருநர் நிரலில் அத்தகைய வாக்காளருக்குரிய இலக்கம்;

(ஆ) அத்தகைய நிரலில் காணப்படுகின்றவாறாக, அத்தகைய வாக்காளரின் பெயரும் முகவரியும்; அத்துடன்

[பி. 38.2012 இன் 22]

(இ) எந்த ஏதுவின் மீது அத்தகைய வாக்காளருக்கு வாக்குச்சீட்டு ஒப்படைக்கப்படவில்லையோ அந்த ஏது.

அத்தகைய நிரலானது, இக்கட்டளைச் சட்டத்தின்" 53 அ என்னும் பிரிவின்கீழ் வாக்குச்சீட்டுகள் ஒப்படைக்கப்படாத வாக்காளர் நிரல்" என அழைக்கப்படும்.

(3) இப்பிரிவில் -

(பி. 11.1965 இன் 15)

(அ) "தோதான குறியீடு" என்ற சொல்லமைப்பு, துடைத்தழிக்க முடியாதமையினால் இடப்பட்ட குறியீடு எனப்பொருள்படும்;

(ஆ) வாக்காளரொருவரைப் பரிசோதித்தல் அல்லது குறியிடுதல் சம்பந்தமாக அல்லது அது தொடர்பிலான சந்தர்ப்பம் பற்றி வரும்போது "தோதான" என்ற பதம் -

(i) அவரது இடதுகையின் சிறுவிரலில் அல்லது அத்தகைய விரல் இல்லாவிடில், அவரது இடது கையின் வேறு ஒரு விரல் ; அல்லது

(ii) அவரது இடது கையில் எல்லா விரல்களுமில்லாவிடில் அவரது வலது கையின் சிறுவிரல் அல்லது அத்தகைய விரல் இல்லாவிடில், அவரது வலது கையின் வேறு ஒரு விரல்; அல்லது

(iii) அவரது இடது கையிலும் வலது கையிலும் எல்லா விரல்களும் இல்லாவிடில், அத்தகைய வாக்காளருக்குரிய அவரது இடது அல்லது வலது கையின் அத்தகைய நுனி,

எனப் பொருள்படும்.

(4) (அ) இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏதேனும் தேர்தலில் வாக்காள ரொருவரின் விரலில் முறையான அதிகாரமின்றி தோதான குறியீட்டை அல்லது அக்குறியீடாகக் கொள்ளப்படுகின்ற அல்லது அக்குறியீடெனப் பிழையாகக் கருதப்படக்கூடிய குறியீட்டை இடுகின்ற ஆள் ஒவ்வொருவரும்; அல்லது (பி. 11.1965 இன் 15)

(ஆ) முறையான அதிகாரமின்றி, அத்தகைய தேர்தலில் வாக் காளர் விரலிலிடப்பட்ட எந்தத் தோதான குறியீட்டையும் மோசடியாக உருவழிக்கின்ற ஆள் ஒவ்வொருவரும்,

தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதி வானொருவர் முன்னர் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், இரண்டு இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாத காலத்திற்கு மேற்படாத ஒரு காலத்திற்கு இரு வகையில் ஒருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும். [முதலாம் அட்டவணை 2023 இன் 21]

54. (1) தலைமை தாங்கும் அலுவலர் அல்லது தலைமை தாங்கும் அலுவலரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், எவரேனும் வாக்காளரின் விண்ணப்பத்தின் மீது தகுந்ததென எண்ணினால், வாக்கெடுப்பு முகவர்கள் சமுகமளித்திருப்பின், வாக்கெடுப்பு முகவர்கள் பார்க்கக் கூடியதாகவும் கேட்கக்கூடியதாகவும், 45 ஆம் பிரிவின் கீழான பணிப்புகளில் குறித்துரைக்கப்பட்ட வாக்களிக்கும் முறையை விளக்கலாம், ஆனால் அவ்வாறு செய்யும்பொழுது ஏதேனும் குறிப்பிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு வாக்களிப்பதற்கான ஆலோசனையாக அல்லது பணிப்பொன்றாக வாக்காளரினால் உய்த்துணரக்கூடிய கருமம் எதையும் செய்வதைக் கவனமாகத் தவிர்த்தல் வேண்டும். வாக்காளர்கள் வாக்களிப்பதை இயலச் செய்வதற்கு உதவிபுரிதல் (பி.59,1977 இன் 24)

(2) (அ) முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணையில் வாக்காளர்களின் வழிகாட்டலுக்கெனத் தரப்பட்டுள்ள பணிப்புகளுக்கிணங்க வாக்களிப்பதற்கு அத்தகைய வலிமையிழப்பு தடைசெய்வதாயிருக்கின்றதான வலிமையிழப்பொன்றுக்கு உட்பட்டவரான வாக்காளரெவரும் தலைமைதாங்கும் அலுவலரின் அத்துடன் அவரது வாக் கெடுப்புப் பணியாட்டொகுதியின் இன்னோர் உறுப்பினரின் முன்னிலையில் வாக்காளரினால் பணிக்கப்பட்ட முறையில் அத்தகைய வாக்காளரின் வாக்குச் சீட்டில் குறியீட்டையிடு (பி. 12. 1965 இன் 15) (பி. 2. 2011 இன் 28)

வதற்கென ஆளொருவர் உடன் செல்லலாமென்பதுடன், அத்தகைய வாக்குச் சீட்டை வாக்குச் சீட்டுப்பெட்டியுள் போடவும் செய்விக்கலாம்.

(ஆ) வாக்களிப்பதற்கு ஆளொருவருடன் உடன்செல்வதற்கு விரும்புகின்ற வலிமையிழப்பொன்றுக்கு உட்பட்டவரான ஆளொருவர், பொருளளவில் இச்சட்டத்துக்கான பத்தாம் அட்டவணையில் தரப்பட்ட தகுதிச் சான்றிதழொன்றை தலைமைதாங்கும் அலுவலருக்கு அல்லது அவரது பணியாட்டொகுதியின் இன்னுமோர் உறுப்பினருக்குச் சமர்ப்பிப்பாராயின், அவ்வாறு செய்யலாம்,

(இ) இப்பிரிவின் நோக்கங்களுக்காக -

"உடன்செல்லும் ஆள்" என்பது பதினெட்டு வயதுக்குக் குறையாத ஆளொருவராகவிருத்தல் வேண்டுமென்பதுடன் -

(i) இயைபான தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளரொருவராக இருத்தலுமாகாது;

(ii) இயைபான தேர்தலில் தலைமைதாங்கும் அலுவலரொருவராகவோ, அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவராகவோ அல்லது வாக்கெடுப்பு முகவராகவோ இருத்தலுமாகாது;

(iii) வலிமையிழப்பொன்றிற்கு உட்பட்ட ஆளொருவராகவிருத்தலுமாகாது;

ஒரு வலிமையிழப்பிற்கு உட்பட்ட, இப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் நியதிகளின்படி வாக்களிப்பதற்கு தகைமையுடைய வருமான பதிவு செய்யப்பட்ட வாக்காளர் ஒருவர் தொடர்பில் "வலிமையிழப்பு" என்பது;

(i) முற்றாக அல்லது பகுதியளவிலான கட்புலப்பாதிப்பு; அல்லது

(ii) அவரது வாக்குச்சீட்டை செல்லுபடியாகும் விதத்தில் குறியிடுவதிலிருந்து வாக்காளரை தடைசெய்யும் உடல் வலிமை இழப்பு என்று பொருள்படும்.

பதிலிமூலம் வாக்களித்தல் தடைசெய்யப் பட்டுள்ளது. (பி 60. 1977 இன் 24)

55. தேர்தல் பிரதேசம் எதற்குமான தேர்தல் எதிலும் வாக்காளர் எவரும் பதிலிமூலம் வாக்களிப்பதற்கு உரித்துடையவராகார்.

அத்தியாயம் 262

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள்

கேட்டுப் பெறும் வாக்குச்சீட்டுகள் (பி 61, 1977 இன் 24)

56. ஆள் ஒருவர், தேருநர் நிரலில் பெயர் குறிக்கப்பட்ட குறித்த வாக்காளர் தாமே எனக்கூறிக்கொண்டு, அத்தகைய வாக்காளராக வேறொருவர் வாக்களித்ததன் பின்னர் வாக்குச்சீட்டொன்றிற்கு விண்ணப்பித்தால் அவ்விண்ணப்பகாரர், 52(1) ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள முதலாவது வெளிப்படுத்துகையைச் செய்து கீழே ஒப்பமிட்டதும், (இதனகத்துப்பின்னர் " கேட்டுப்பெறும் வாக்குச்சீட்டு எனக் குறிப்பீடு செய்யப்படும்) வாக்குச் சீட்டொன்றை வேறெவரேனும் வாக்காளரைப் போன்று அதே முறையில் பெற்று, அதில் குறியீடு இடுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும். இவ்வாக்குச் சீட்டானது ஏனைய வாக்குச்சீட்டுக்களிலிருந்து வேறுபட்ட நிறத்தினையுடையதாக இருத்தல் வேண்டுமென்பதுடன், வாக்குச்சீட்டுப் பெட்டியுள் போடப்படுவதற்குப் பதிலாகத் தலைமைதாங்கும் அலுவலரிடம் கொடுக்கப்படுதலும் வேண்டும்: அத்துடன் வாக்காளரின் பெயரும் தேருநர் நிரலிலுள்ள அவரது இலக்கமும் அவரினால் அதில் புறக்குறிப்பிடப்படுதலும் வேண்டும். " கேட்டுப்பெறும் வாக்குகள் நிரல்" என அறியப்படும் நிரலொன்றில், வாக்காளரின் பெயரும் தேருநர் நிரலிலுள்ள அவரது இலக்கமும் பதியப்படுதல் வேண்டும். கேட்டுப் பெறும் வாக்குச்சீட்டுகள் வேறோர் உறையுள் தனியாக வைக்கப்படுதல் வேண்டுமென்பதோடு வாக்கெண்ணும் அலுவலரால் எண்ணப்படுதலுமாகாது.

பழுதுபட்ட வாக்குச்சீட்டுகள்

57. வாக்குச்சீட்டை ஏற்றமுறையில் உபயோகிக்க முடியாத வகையில் தன்னுடைய வாக்குச்சீட்டைக் கவனயீனமாகப் பழுதுபடுத்திய வாக்காளரொருவர், அதைத் தலைமை தாங்கும் அலுவலரிடம் ஒப்படைத்து தலைமை தாங்கும் அலுவலர் திருப்திப்படும் வண்ணம் கவனயீனம் பற்றிய உண்மையை எண்பித்தால், இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட வாக்குச்சீட்டிற்குப் பதிலாக (இது இதனகத்துப் பின்னர் "பழுதுபட்ட வாக்குச்சீட்டு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இன்னொரு வாக்குச்சீட்டைப் பெறலாம் : அத்துடன் பழுதுபட்ட சீட்டு உடனடியாக இல்லாதாக்கப்படுதல் வேண்டும்.

வாக்கெடுப்பை முடித்தல்

வாக்கெடுப்பை முடித்தல்.

58. வாக்கெடுப்பை முடித்தற்கென நிர்ணயிக்கப்பட்ட நேரம் முடிவடைந்த பின்னர், வாக்காளரொருவருக்கு வாக்குச்சீட்டெதுவும் ஒப்படைக்கப்படுதலாகாது. ஆனால் முற்கூறப்பட்ட நேரத்தில் ஏதேனும் வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்குச்சீட்டொன்று ஒப்படைக்கப்பட்டுள்ள வாக்காளர் எவரேனுமிருப்பின், அத்தகைய வாக்காளர் அவரது வாக்கை அளிப்பதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

வாக்கெடுப்பை முடித்த பின்னான நடவடிக்கை முறை (பி62, 1977 இன் 24)

59. (1) வாக்கெடுப்பு முடிவடைந்ததன் பின்னர் இயன்றளவு விரைவாக, ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்தினதும் தலைமை தாங்கும் அலுவலர் வாக்கெடுப்பு முகவர்களினது முன்னிலையில் பின்வருவனவற்றைத் தனித்தனியான பொதிகளாகக் கட்டி அவற்றின் மீது தமது சொந்த இலச்சினையையும் அவரது இலச்சினைகளைப் பொறிக்க விரும்பும் அத்தகைய வாக்கெடுப்பு முகவர்களினது இலச்சினைகளையும் பொறித்தல் வேண்டும் : அதாவது -

(அ) அந்நிலையத்தில் பயன்படுத்தப்பட்ட வாக்குப் பெட்டி ஒவ்வொன்றும் அப்பெட்டிக்கான திறப்பும் : இப்பெட்டி வாக்கெடுப்பு ஆரம்பித்த நேரத்தில் எவ்வாறு பூட்டப்பட்டு இருந்ததோ அவ்வாறு பூட்டப்பட்டு இருத்தல் வேண்டும் என்பதோடு, வாகெடுப்பு முடிவடைந்ததன் பின்னர் எவையேனும் வாக்குச்சீட்டுகள் அதற்குள் புகுத்தப்படாத வகையில் வாக்கெடுப்பு முடிவடைந்த பின்னர் இலச்சினையிடப்பட்டிருத்தலும் வேண்டும் :

(ஆ) பயன்படுத்தப்படாத வாக்குச்சீட்டுகளும் பழுதுபட்ட வாக்குச்சீட்டுகளும், இவை ஒன்றாக வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்:

(இ) கேட்டுப் பெறும் வாக்குச்சீட்டுக்கள் :

(ஈ) குறியிடப்பட்ட தேருநர் நிரற் பிரதிகளும் வாக்குச்சீட்டுகளின் அடியிதழ்களும் :

(உ) கேட்டுப்பெறும் வாக்குகளின் நிரல் ; அத்துடன்

(ஊ) 53அ என்னும் பிரிவின்கீழ் வாக்குச் சீட்டுகள் ஒப்படைக்கப்படாத வாக்காளர்களின் நிரல் ;

(பி17, 1987 இன் 24) அத்துடன் அப்பொதிகளை வாக்கெண்ணும் அலுவலரிடம் ஒப்படைத்தலும் வேண்டும்.

(2) தலைமை தாங்கும் அலுவலரிடம் பொறுப்பிக்கப்பட்ட வாக்குச் சீட்டுகளின் எண்ணிக்கையைக் காட்டுவதும் -

(அ) வாக்குப் பெட்டியிலுள்ள வாக்குச்சீட்டுகள் :

(ஆ) பயன்படுத்தப்படாதவையும், பழுதுபட்டவையுமான வாக்குச் சீட்டுக்கள் ; அத்துடன்

(இ) கேட்டுப்பெறும் வாக்குச்சீட்டுகள்,

என்ற தலைப்புகளின் கீழ் அச்சீட்டுக்களுக்குக் கணக்குக் காட்டுவதும் ஆன, தலைமை தாங்கும் அலுவலரினால் செய்யப்பட்டதும், இதனகத்துப்பின்னர் "வாக்குச் சீட்டுக் கணக்கு" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான கூற்றொன்று இப்பொதிகளுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

வாக்கெண்ணல்

59அ. (1) ஒவ்வொரு பிரிவிலும், வாக்குகளை எண்ணுவற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வாக்கெடுப்பு நிலையங்கள் உள்ளவிடத்து, அத்தகைய ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்திலும் வாக்குகளை எண்ணுதலானது, இயைபான தெரிவத்தர்சி அலுவலரினால் தீர்மானிக்கப்பட்டவாறு இடம் பெறுதல் வேண்டும்.

(பி18, 1987 இன் 24)
(பி39, 2012 இன் 22)
(பி20, 2017 இன் 16)

(2) ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்தினதும் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர் அல்லது ஒரு தலைமைதாங்கும் அலுவலர் மட்டுமே இருக்குமிடத்து அத்தகைய தலைமைதாங்கும் அலுவலர், அந்நிலையத்தின் வாக்கெண்ணும் அலுவலராகப் பணியாற்றுதல் வேண்டும். எவ்வாறாயினும் அந்நிலையத்தின் வாக்கெண்ணும் பணியாட்டொகுதியினர் அல்லது அத்தகைய பணியாட்டொகுதியினரின் ஓர் அலுவலர் அத்தகைய பணியாட்டொகுதிக்கு அல்லது அத்தகைய அலுவலருக்கும் பொறுப்பிக்கப்பட்ட கடமைகளைப் புரிய இயலாதவராக உள்ளார் அல்லது ஒரு வாக்கெண்ணும் பணியாட்தொகுதியினரால் அல்லது அத்தகைய பணியாட்டொகுதி யினரின் ஓர் அலுவலராக அவரின் கடமைகளைப் புரிவதற்கு பொருததமற்றவர் என தெரிவத்தாட்சி அலுவலர் அபிப்பிராயப்படு மிடத்து, அவர் விடயத்துக்கேற்ப, அத்தகைய வாக்கெண்ணும் பணியாட்தொகுதியினரின் அல்லது அப்பணியாட் டொகுதியினரின் அத்தகைய அலுவலரின் இடத்துக்கு வேறோர் அலுவலரை நியமிக்கலாம்; அத்துடன்

(3) ஆணையாளரின் பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளுக்கமைய, தேர்தற் பிரதேசமொன்றின் தெரிவத்தாட்சி அலுவலர் ஒவ்வொருவரும், 40ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்களுள் ஒருவரை அல்லது ஒரு தலைமைதாங்கும் அலுவலர் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளவிடத்து அத்தகைய தலைமைதாங்கும் அலுவலரை, அத்தேர்தற் பிரதேசத்தின் ஒவ்வொரு வட்டாரத்துக்குமான பிரதான வாக்கெண்ணும் அலுவலராக விருப்பதற்கு நியமித்தல் வேண்டும். தெரிவத்தாட்சி அலுவலர், அதேநேரத்தில், விடயத்துக்கேற்ப, வாக்கெண்ணும் அலுவலரும் பிரதான வாக்கெண்ணும் அலுவலரும் தமது கடமைகளைப் புரிவதில் அவர்களுக்கு உதவுவதற்கு அவசியமானவர்க ளென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான உதவியாளர்களையும் எழுதுவினைஞர்களையும் ஏனைய அலுவலர்க ளையும் நியமிக்கலாம்.

(பி20, 2017 இன் 16)

(4) ஏதேனும் வாக்கெடுப்பு நிலையத்தின் வாக்கெண்ணும் அலுவலரொருவராக எவரேனும் ஆளின் செயற்பாடுகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து ஏதேனும் ஆட்சேபனைகள் உள்ளவிடத்து, அல்லது ஏதேனும் வாக்கெடுப்புநிலையத்துக்கு நியமிக்கப்பட்ட வாக்கெண்ணும் அலுவலர் அவருக்குப் பொறுப்பிக்கப்பட்ட கடமைகளைப் புரிய இயலாதவராக உள்ளாரென அல்லது அவர் ஒரு வாக்கெண்ணும் அலுவலராக அவரது கடமைகளைப் புரிவதற்கும் பொருத்தமற்றவரெனத் தெரிவத்தாட்சி அலுவலர் அபிப்பிராயப்படுவாராயின், அவர் முதற் சொல்லப்பட்ட ஆளின் இடத்தில் வேறுஎவரேனும் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரை அல்லது ஓர் உதவித் தெரிவத்தாட்சி அலுவலரை நியமிக்கலாம். தேர்தல்கள் ஆணையாளர் சூழ்நிலைகளில் திருப்தியடைந்த தன்மீது எவரேனும் வேறு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரை முதற் குறிப்பிட்ட ஆளினிடத்தில் வாக்கெண்ணும் அலுவலரொருவராக செயலாற்ற நியமிக்கலாம்.

வாக்குகளை எண்ணுவதற்கான இடத்தை மாற்றுதல்

59ஆ. (1) பிரிவு 59அ என்பதன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஒரு வாக்கெடுப்பின்போது அல்லது அதன்பின்னர் ஒரு வாக்கெடுப்பு நிலையத்தில் இடம்பெற்ற எவையேனும் சம்பவங்களின் அல்லது குழப்பங்களின் விளைவாக அல்லது வேறெவையேனும் பாதுகாப்புக் காரணங்களுக்காக, அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்தின் தலைமைதாங்கும் அலுவலர், வாக்கெண்ணுதல் அவ்வாக்கெடுப்பு நிலையத்தில் இடம்பெறுதலாகாதென அபிப்பிராயப்படுமிடத்து, அத்தகைய வாக்கெடுப்பு நிலையம் எந்த வட்டாரத்தில் அமைந்துள்ளதோ அந்த வட்டாரத்தில் வாக்கெடுப்பை மேற்பார்வை செய்யும் தெரிவத்தாட்சி உதவி அலுவலர் நியமிக்கப்பட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அத்தகைய நிகழ்வை அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தெரிவத்தாட்சி அலுவலர், அதன்பின்னர், வாக்கெண்ணுதல் எந்தப் புதிய இடத்தில் இடம்பெற வேண்டுமோ அந்தப் புதிய இடத்தைத் தீர்மானித்தலும் வேண்டும்.

(பி40, 2012 இன் 22)
(பி21, 2017 இன் 16)

(பி21, 2017 இன் 16)

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வாக்கெண்ணும் நிலையமொன்றிற்கான இடம் மாற்றப்படும் பட்சத்தில், வாக்கெண்ணுதல் இடம்பெறவுள்ள புதிய இடம்பற்றியும் வாக்கெண்ணுதல் தொடங்குவதற்குள்ள நேரம்பற்றியும் போதிய அறிவித்தல் உதவித் தெரிவத்தாட்சி அலுவலரினால், தெரித்தாட்சி அலுவலருக்கும் அதன் பின்னர் குறிப்பிட்ட நேரத்தில் அத்தகைய வாக்கெண்ணும் நிலையத்தில் சமுகமளித்துள்ளவர்களும் 60ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்டவர்களுமான வாக்கெண்ணும் முகவர்களுக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(பி21, 2017 இன் 16)

(3) புதிய இடம் பற்றி தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் மேற்பார்வை செய்கின்ற உதவித் தெரிவத்தாட்சி அலுவலரினால் தீர்மானிக்கப்பட்டவாறாகப் புதிய இடத்தில் வாக்கெண்ணுதலானது, வாக்கெடுப்பு நிலையத்தின் தலைமைதாங்கும் அலுவலரினால், அவ்வாக்கெடுப்பு நிலையத்திலுள்ள பணியாட்டொகுதியினரின் உதவியுடன் நடாத்தப்படுதல் வேண்டும்.

(4) புதிய இடத்தில் வாக்கெண்ணுதல் முடிவடைந்ததும், வாக்கெண்ணும் அலுவலர், தேர்தற் பிரதேசத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு, வாக்கெண்ணும் நிலையத்திற்கான மாற்றத்துக்கு ஏதுவாகவிருந்த, விடயத்துக்கேற்ப, சம்பவம், குழப்பம் அல்லது பாதுகாப்புக் காரணம் என்பன பற்றிய அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், அதன் பிரதியொன்று இடப்பரப்பின் தெரிவத்தாட்சி அலுவலரிடம் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டுமென்பதுடன் தெரிவத்தாட்சி அலுவலர் அத்தகைய அறிக்கையில் அடங்கியுள்ள தகவலை ஆணையாளருக்குத் தெரிவித்தல் வேண்டும். (பி21, 2017 இன் 16)

வாக்கெண்ணும் முகவர்களை நியமித்தல் (பி63, 1977 இன் 24)

60. ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அல்லது சுயேச்சைக் குழுவொன்றின் குழுத்தலைவர், ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்திலும் வாக்குகளை எண்ணும் போது வருகை தருவதற்கென (இதனகத்துப்பின்னர் "வாக்கெண்ணும் முகவர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இரு முகவர்களை நியமிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும். அவ்வாறு நியமிக்கப்பட்ட முகவர்களின் பெயர்களும், முகவரிகளும், தேசிய ஆளடையாள அட்டை இலக்கங்களும், வாக்கெண்ணுதல் தொடங்கு முன்னர் வாக்கெண்ணும் அலுவலருக்கு எழுத்தில் கொடுக்கப்படுதல் வேண்டும். வாக்குகள் எண்ணப்படும் நேரத்தில், வேட்பாளரொருவர், ஒரு வாக்கெண்ணும் முகவராக மட்டுமே வாக்கெடுப்பு நிலையத்தில் இருக்கலாம். (பி41, 2012 இன் 22)

வாக்கெண்ணும் நேரமும் பெறுப்பேற்றை வெளியிடுதலும்

61. (1) ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்துக்குமான வாக்கெண்ணும் அலுவலர், வாக்கெடுப்பு முடிவடைந்த பின்னர் இயன்றளவு விரைவாக, வாக்கெண்ணும் முகவர்களின் முன்னிலையில் வாக்குகளை எண்ணுவதற்கான ஒழுங்கேற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

(2) வாக்கெண்ணும் அலுவலர் வாக்கெண்ணுதலின் முடிவில் அத்தகைய வாக்கெண்ணுதலின் பெறுபேற்றை 59அ என்னும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் வட்டாரத்திற்கென நியமிக்கப்பட்ட பிரதம வாக்கெண்ணும் அலுவலருக்கு அனுப்புதல் வேண்டும். (பி64, 1977 இன் 24) (பி19, 1987 இன் 24) (பி41, 2012 இன் 41)

(3) வாக்கெண்ணுதல் தொடங்கும் நேரமும் அத்தகைய வாக்கெண்ணுதலின் முடிவை வெளிப்படுத்துவதற்கான நேரமும் இடமும், குறிப்பிட்ட வட்டாரத்தில் போட்டியிடுகின்ற எல்லா வேட்பாளர்களுக்கும் தேர்தற் பிரதேசத்தின் தெரிவத்தாட்சி அலுவலரினால் எழுத்தில் அறிவிக்கப்படுதல் வேண்டும். (பி22, 2017 இன் 16)

அஞ்சல் வாக்குச் சீட்டுகளை எண்ணுதல் (பி20, 1987 இன் 24)

61. அ. ஏதேனும் தேர்தல் இடப்பரப்பு தொடர்பான அஞ்சல் வாக்குச்சீட்டுகள் புறம்பான ஒரு வாக்கெண்ணும் நிலையத்தில் அல்லது தெரிவத்தாட்சி அலுவலரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினவான வாக்கெண்ணும் நிலையங்களில் ஒன்பதாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கிணங்க எண்ணப்படுதல் வேண்டும்.

வாக்கெண்ணுதல் (பி65, 1977 இல் 24)

62. (1) வாக்கெண்ணும் அலுவலர், அவருக்கு உதவுவதற்கென நியமிக்கப்பட்ட ஆட்கள், வாக்கெண்ணும் முகவர்கள் ஆகியோர் தவிர்ந்த ஆள் எவரும், வாக்கெண்ணும் அலுவலரின் சம்மதத்துடனன்றி, வாக்குகள் எண்ணப்படுகையில் சமுகமாயிருத்தலாகாது.

(2) வாக்கெண்ணும் அலுவலர் வாக்குகளை எண்ணத் தொடங்கு முன்னர், வாக்கெண்ணும் முகவர்களினது முன்னிலையில் ஒவ்வொரு வாக்குப் பெட்டியையும் திறந்து, அதன்கண்ணுள்ள வாக்குச் சீட்டுகளை வெளியே எடுத்து, அவற்றை எண்ணி, அவற்றின் எண்ணிக்கையைக் குறித்துக்கொண்டு பின்னர் வாக்குப் பெட்டிகளிலுள்ள வாக்குச்சீட்டுக்கள் முழுவதையும் ஒன்று கலந்து சேர்த்தல் வேண்டும்.

(3) வாக்கெண்ணும் அலுவலர், வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கையை எண்ணிக் குறித்துக் கொள்ளும்பொழுதும், வாக்குகளை எண்ணும் பொழுதும், வாக்குச்சீட்டுகளின் மேற்புறம் மேலே இருக்கக்கூடியதாக அவற்றை வைத்தல் வேண்டும் ; அத்துடன் சீட்டுகளின் பின்புறத்தில் அச்சிடப்பட்டுள்ள இலக்கங்களை ஆள் எவரும் காண்பதைத் தடுப்பதற்கான தகுந்த முற்காப்புக்களை அனைத்தையும் எடுத்தல் வேண்டும்.

நிராகரிக்கப்படும் வாக்குச்சீட்டுக்கள் (பி66, 1977 இன் 24) (பி11, 1990 இன் 25) (பி42, 2012 இன் 22)

63. (1) பின்வரும் வாக்குச் சீட்டுக்கள் வாக்கெண்ணும் அலுவலரால் நிராகரிக்கப்படும் : அதாவது :-

(அ) அலுவலகமுறையான குறியீடு இடப்படாதிருக்கின்ற ஏதேனும் வாக்குச்சீட்டு : அல்லது

(ஆ) அதன்மீது ஒன்றுக்கு மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சிக்கு அல்லது சுயேச்சைக்குழுவுக்கு வாக்குகள் குறியிடப்படுகின்ற ;

(இ) பின்புறத்தில் அச்சிடப்பட்ட இலக்கத்தைத் தவிர வாக்காளரை அதன்மூலம் அடையாளங் கண்டுணரக்கூடிய ஏதாவது எழுதப்பட்டிருக்கின்ற ஏதேனும் வாக்குச்சீட்டு :

(ஈ) குறியீடு செய்யப்படாததாகவுள்ள அல்லது எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு வாக்கு குறியிடப்படுகின்றது என்பது பற்றிய நிச்சயமின்மைக்காக வறிதாகவுள்ள ;

வாக்கெண்ணும் அலுவலரால் நிராகரிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய எந்த வாக்குச்சீட்டிலும் ''நிராகரிக்கப்பட்டது'' என்ற சொல்லை வாக்கெண்ணும் அலுவலர் எழுதுதல் வேண்டும்.

(2) வாக்குச்சீட்டொன்றில் இடப்பட்ட குறியீடு எதுவும் வாக்களிப்பதற்கு வாக்காளருக்கு உளக்கருத்தையும், அங்கீகரிக்கப்பட்ட எந்த

அரசியற்கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவிற்கு அவர் வாக்களிக்கின்றாரோ அந்தக் கட்சியையும் அல்லது குழுவையும் தெளிவாகக் காட்டுகின்றதென வாக்கெண்ணும் அலுவலர் திருப்திப் படுமிடத்து, இக்கட்டளைச்சட்டத்தினது ஏற்பாடுகளின் கீழ் வாக்காளர் களுக்கான வழிகாட்டியாக அமையும் வகையில் கொடுக்கப்பட்ட பணிப்புகளுக்கு இணங்க எல்லா அம்சங்களிலும் குறியிடப்படவில்லை என்ற ஒரே ஏதுவின் மீது மட்டும் வாக்கெண்ணும் அலுவலர் (1) ஆம் உட்பிரிவின் கீழ் வாக்குச்சீட்டை நிராகரித்தலாகாது.

(3) வாக்கெண்ணும் அலுவலர், வாக்குச்சீட்டொன்று பொய்யாகப் புனையப்பட்ட ஒன்று அல்ல எனத் திருப்திப்படுமிடத்து, அது அலுவலக முறையான குறியிடப்படவில்லை அல்லது துளையிடப்படவில்லை என்ற ஏதுவின்மீது மட்டும் அதனை நிராகரித்தலாகாது. இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் வாக்குச் சீட்டொன்றினை நிராகரிக்காது விடத்தீர்மானிக்கு முன்னர், வாக்கெண்ணும் அலுவலர், அதனை வாக்கெண்ணும் முகவர்கள் சமுகமளித்திருந்தால் அவர்கள் ஒவ்வொருவரிடமும் காண்பித்து அவர்கள் கருத்தையும் கேட்டல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் கீழ் அவரால் நிராகரிக்கப்பட்டதான எந்த வாக்குச்சீட்டையும் வாக்கெண்ணும் அலுவலர் கணக்கிடலாகாது.

(5) வாக்கெண்ணும் அலுவலர், (1) ஆம் உட்பிரிவில் குறித் துரைக்கப்பட்ட ஏதுக்கள் ஒவ்வொன்றின் கீழும் நிராகரிக்கப்பட்ட வாக்குச்சீட்டுக்களின் எண்ணிக்கையைத் தனியாகக் காட்டும் கூற்றொன்றைத் தயாரித்தல் வேண்டும் : அத்துடன் வேண்டுகோள் செய்யப்படின், எவரேனும், வாக்கெண்ணும் முகவர் இக்கூற்றைப் பார்த்தெழுத அனுமதித்தலும் வேண்டும். (பி21, 1987 இன் 24)

(6) வாக்கெண்ணும் அலுவலர், ஒவ்வொரு அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கும் அல்லது சுயேச்சைக் குழுவுக்கும் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை பற்றிய எழுத்திலான கூற்றொன்றைச் சொற்களிலும் எண்களிலும் தயாரித்தல் வேண்டும். அவ்வாறு தயாரிக்கப்பட்ட கூற்று, வாக்கெண்ணும் அலுவலரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதலும், அவரது எழுதுவினைஞர்களுள் ஒருவரினாலும், சமுகமாயிருப்போரும் கையொப்பமிட விரும்புவோருமான வாக்கெண்ணும் முகவர்களினாலும் சாட்சிப்படுத்தப்படுதலும் வேண்டும். (பி42, 2012 இன் 22)

(7) 6(அ), 6(ஆ), 6(இ) ஆகிய உட்பிரிவுகள் நீக்கப்பட்டுள்ளன. (2012 இன் 22 பிரிவு 42). வாக்கெண்ணும் அலுவலரானவர் (6) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டதான எழுத்திலான கூற்றினை ஆக்கமுன்னர், வாக்கெண்ணும் அலுவலர் அவசியமானதெனக் கருதும் அத்தனை தடவை திரும்பவும் எண்ணலாம் : அத்துடன் வாக்கெண்ணும் முகவர் ஒருவர் விண்ணப்பித்தால், மீள் எண்ணல் அல்லது மீள் எண்ணல்கள் செய்யப்படுதல் வேண்டும் ; ஆயின், வாக்கெண்ணும் முகவர் எவரினதும் அல்லது எல்லா வாக்கெண்ணும் முகவர்களினதும் விண்ணப்பத்தின்

பேரில் அவ்வாறு செய்யக்கூடியதான மீள் எண்ணல்கள் இரண்டு தடவைகளுக்கு அதிகமானவையாக இருத்தலாகாது.

(8) ஏதேனுமொரு வாக்குச் சீட்டுத் தொடர்பில் ஏற்படுகின்ற எப்பிரச்சினை பற்றியும் வாக்கெண்ணும் அலுவலரின் முடிவு, முற்றானதும் இறுதியானதுமாக இருத்தல் வேண்டும்.

62 ஆம் அல்லது 63 ஆம் பிரிவின் கீழான தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகள் தொடர்பான சிறப்பு ஏற்பாடுகள். (பி67, 1997 இன் 24)

63அ. அறுபத்திரண்டாம் பிரிவின் கீழ் அல்லது 63 ஆம் பிரிவின் கீழ் வாக்கெண்ணும் அலுவலரொருவருக்குள்ள ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி, அத்தகைய அலுவலரினது மேற்பார்வையின் கீழும் பணிப்பின் கீழும் கடமையாற்றுகின்ற அவரது உதவியாளர்கள் அல்லது எழுதுவினைஞர்கள் அவர்களினாலும் அவருக்காகவும் அவர் சார்பிலும், பிரயோகிக்கப்படலாம், புரியப்படலாம் அல்லது நிறைவேற்றப்படலாம்.

வாக்கெண்ணுதலை முடிவுறுத்தல் (பி68, 1977 இன் 24) (பி22, 1987 இன் 24)

64. (1) வாக்கெண்ணுதலை முடித்ததன்மேல், வாக்கெண்ணும் அலுவலரானவர், எண்ணப்பட்டனவும் நிராகரிக்கப்பட்டனவுமான வாக்குச்சீட்டுகளை, தனித்தனிப் பொதிகளாகப் பிரித்து இலச்சினையிடல் வேண்டும்.

(பி22, 1987 இன் 24) (பி43, 2012 இன் 22)

(பி23, 2017 இன் 16)

(2) வாக்கெண்ணும் அலுவலர் ஒவ்வொருவரும், 59அ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்டவரும், வட்டாரத்துக்குப் பொறுப்பாகவுள்ளவருமான பிரதான வாக்கெண்ணும் அலுவலரிடம், (1)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட இலச்சினையிடப்பட்ட பொதிகளுடன் சேர்த்து, பயன்படுத்தப்படாத வாக்குச் சீட்டுகள், பழுதடைந்த வாக்குச் சீட்டுகள், அளிக்கப்பட்ட வாக்குச் சீட்டுகள், தேருநர் நிரலின் அடையாளமிடப்பட்ட பிரதிகள், வழங்கப்பட்ட வாக்குச்சீட்டுகளின் அடியிதழ்கள், அளிக்கப்பட்ட வாக்குகள் நிரல், 53அ என்னும் பிரிவின் கீழ் எந்த வாக்காளர்களுக்கு வாக்குச்சீட்டுகள் வழங்கப்படவில்லையோ அந்த வாக்காளர்கள் பற்றிய நிரல், வாக்குச் சீட்டுக் கணக்கு, ஒவ்வொரு அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் வேட்பாளர்களுக்கும் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை பற்றிய எழுத்திலான கூற்று மற்றும் 62 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் வாக்குகளை எண்ணுதல் பற்றிய பதிவேடு என்பவற்றைக் கொண்டுள்ள பொதிகளையும் ஒப்படைத்தல் வேண்டும்.

"ஆகக் கூடுதலான வாக்குகளைப் பெறுகின்ற வேட்பாளரை உறுப்பின ரொருவராக வெளிப் படுத்துதல்.

65. (1) அறுபத்தி நான்காம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஆவணங்களையும் இதற்கான ஒன்பதாம் அட்டவணையின் 28(இ) என்னும் ஒழுங்குவிதியின் கீழான வெளிப்படுத்துகைகளையும் பெற்றதன் மேல், 59அ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட வட்டாரத்துக்குப் பொறுப்பாகவுள்ள பிரதான வாக்கெண்ணும் அலுவலர், அவ் வட்டாரத்தில் ஆகக்கூடிய எண்ணிக்கையான வாக்குகளைப் பெற்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவைச் சேர்ந்தவரும் அந்த வட்டாரத்திற்கு அதன் வேட்பாளராக அதன்

நியமனப்பத்திரத்தில் அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியால் அல்லது சுயேச்சைக் குழுவால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவருமான வேட்பாளரின் பெயரை, அவ்வட்டாரத்துக்கான உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவராக வெளிப்படுத்துதல் வேண்டும். அவ்வட்டாரத்தில்தேர்தலில் போட்டியிட்ட மற்றெல்லா அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளாலும் சுயேச்சைக் குழுக்களாலும் பெறப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையையும் அவர் வெளிப்படுத்துதல் வேண்டும்.

(பி69, 1977 இன் 24)
(பி23, 1987 இன் 24)
(பி44, 2012 இன் 22)
(பி24, 2017 இன் 16)

(2) அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியொன்றில் எவரேனும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பாளர்களிடையே அல்லது இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட அத்தகைய கட்சிகளுக்கு அல்லது குழுக்களிடையே அல்லது சுயேச்சைக் குழுவொன்றின் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பாளர்களிடையே வாக்குகள் சமமாகவுள்ளனவெனக்காணப்படுமிடத்தும், ஒரு வாக்கைச் சேர்த்தலானது அத்தகைய ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் பெயர் குறித்த வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அவரை உரித்துடையதாக்குமிடத்து, அத்தகைய ஒரு மேலதிக வாக்கு எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு அளிக்கப்பட்டுள்ளதென கருதப்படுதல் வேண்டும் என்பதனைத் தீர்மானித்தலானது, பிரதான வாக்கெண்ணும் அலுவலரின் முன்னிலையில், அவர் தீர்மானிக்க வேண்டியவாறான அத்தகைய முறையில், திருவுளச் சீட்டிழுப்பின் மூலம் செய்யப்படுதல் வேண்டும்.

(3) வட்டாரத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளரைப் பற்றிய வெளிப்படுத்துகையை செய்த பின்னர் பிரதம வாக்கெண்ணும் அலுவலர் 64 ஆம் பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆவணங்கள் கிடைக்கப் பெற்றதன் மீது உடனடியாக அவ்வாறு பெறப்பட்ட அத்தகைய ஆவணங்கள் எல்லாவற்றையும் தெரிவத்தாட்சி அலுவலருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

பல்லுறுப்பினர் வட்டாரமொன்றுக்குத் தேர்ந்தெடுக்கப்படவுள்ள உறுப்பினர்களை வெளிப்படுத்துதல்.

65அ. (1) பல்லுறுப்பினர் வட்டாரமொன்றின் விடயத்தில் அந்த வட்டாரத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாக வெளிப்படுத்தப்படவுள்ள வேட்பாளர்கள் அத்தகைய வட்டாரத்தில் தேர்தலில் போட்டியிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி ஒவ்வொன்றினாலும் அத்துடன் சுயேச்சைக்குழு ஒவ்வொன்றினாலும் பெறப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலிருத்தல் வேண்டும். ஆகக் கூடுதலான எண்ணிக்கையிலான வாக்குகளை பெற்ற, விடயத்திற்கேற்ப, அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் வேட்பாளர்களை அவ் வட்டாரத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாக வாக்கெண்ணும் அலுவலர் வெளிப்படுத்தல் வேண்டும்.

(பி70, 1977 இன் 24)
(பி24, 1987 இன் 24)
(பி45, 2012 இன் 22)
(பி02, 2017 இன் 16)

65 அ (2) உட்பிரிவு நீக்கப்பட்டுள்ளது. 2017 இன் 31 இன் பிரிவு 2(2) இனைப் பார்க்கவும்.

(பி02, 2017 இன் 31)

பெண் உறுப்பினர் களைப் பகிர்வு செய்தல்.
[பி4, 2016இன் 1]
[பி25, 2017இன் 16]
[பி32, 2017இன் 31]

65அஅ. (1) ஓர் உள்ளூர் அதிகாரசபைக்காக ஏதேனும் அங்கீகரிக்கப் பட்ட அரசியற் கட்சியிலிருந்து அல்லது சுயேச்சைக் குழுவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒரு மேன்மிகையை விளைவித்து 65ஆ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு தெரிந்தனுப்பப்படுவதற்கு நிச்சயிக்கப்பட்ட எண்ணிக்கையை விஞ்சுமிடத்தும், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் அத்தகைய எண்ணிக்கை எவரேனும் பெண் உறுப்பினரை உள்ளடக்காதவிடத்தும், அப்போது, இப்பிரிவின் 3 (ஆம்), 4 (ஆம்) உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு ஏற்புடையனவாதலாகாது.

[பி3, 2017இன் 31]

(2) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு ஓர் உள்ளூர் அதிகார சபைப் பிரதேசத்தில் பெறப்பட்ட மொத்த எண்ணிக்கையினவான வாக்குகளின் இருபது சதவீதத்துக்குக் குறைவானதைப் பெற்று, மூன்றுக்குக் குறைவான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக அல்லது தெரிந்தனுப்பப்பட்டவர்களாகக் கொண்டிருக்குமிடத்து, அப்போது இப்பிரிவின் (3) ஆம், (4) ஆம் உட்பிரிவு களின் ஏற்பாடுகள், அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு ஏற்புடையனவாதலாகாது.

(3) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் தவிர்ந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளிலிருந்தும் சுயேச்சைக் குழுக்களிலிருந்தும் ஒவ்வோர் உள்ளூரதிகார சபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டு தெரிந்தனுப்பப்பட வேண்டிய பெண் உறுப்பினர்களின் பகிர்வு, அத்தகைய உள்ளூரதிகார சபையின் எல்லா வட்டாரங்களிலும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளினாலும் சுயேச்சைக் குழுக்களினாலும் பெறப்பட்ட செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கையைக் கவனத்திற் கொண்டு தேர்தல்கள் ஆணையாளரினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டு மென்பதுடன், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினது 99அ என்னும் உறுப்புரையில் தரப்பட்டுள்ள பகிர்வுமுறையானது ஏற்ற மாற்றங்களுடன் அதற்கேற்புடையதாதலும் வேண்டும்.

[பி3, 2017இன் 31]

(4) இப்பிரிவின் (1) ஆம் அல்லது (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு தவிர்ந்த ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியிலிருந்து அல்லது சுயேச்சைக் குழுவிலிருந்து ஏதேனும் உள்ளூர் அதிகாரசபைப் பிரதேசத்தின் எல்லா வட்டாரங்களுக்காகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை, இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி பகிர்வு செய்யப்பட்ட எண்ணிக்கையைவிட குறை வாகவிருக்குமிடத்து, அப்போது, உறுப்பினர்களின் எண்ணிக்கையிலான பற்றாக்குறை தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது உறுப்பினராகவிருப்பதற்கு 9 ஆம் பிரிவின்கீழ் தகைமையற்றவராகவுள்ள பெண் வேட்பாளர்கள் தவிர, முதலாவது நியமனப் பத்திரத்தில் அல்லது மேலதிக நியமனப் பத்திரத்தில் உள்ள பெண் வேட்பாளர்களிலிருந்து தெரிந்தனுப்பப் படுதல் வேண்டும்.

"தேர்ந்தெடுக்கப் படுவதற்கு அல்லது தெரிந்தனுப்பப் படுவதற்கு உரித்துள்ள வேட்பாளர்கள்" [பி46, 2012இன் 22]

65ஆ. (1) தேர்தற் பிரதேசத்தின் எல்லா வட்டாரங்களுக்கும், அவர்களின் சார்பாக அளிக்கப்பட்ட வாக்குச் சீட்டுகளுக்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை பற்றி 65 ஆம் பிரிவின் கீழான வெளிப்படுத்துகையின்மேல், விடயத்துக்கேற்ப, (252 ஆம் அத்தியாயமான) மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் (255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் அல்லது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் தெரிவுசெய்யப்படுவதற்குரிய அவ்வுள்ளூர் அதிகாரசபைக்கான உறுப்பினர்களின் எண்ணிக்கை, இப்பிரிவில் இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் பங்கிடப்படுதல் வேண்டும்.

[பி26, 2017இன் 16]

(2) ஓர் உள்ளூர் அதிகாரசபை பிரதேசத்தில் ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினதும் சுயேச்சைக் குழுவினதும் எல்லா வேட்பாளர்களினாலும் பெறப்பட்ட செல்லுபடியான வாக்குகளின் மொத்த எண்ணிக்கை, அந்த உள்ளூர் அதிகாரசபை பிரதேசத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு தெரிந்தனுப்பப்பட வேண்டிய உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையினால் பிரிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய பிரிவிடுகையிலிருந்து விளைகின்ற எண், (ஏதேனும் பின்னத்தைக் கவனத்துட் கொள்ளாமல்) இதனகத்துப்பின்னர் இப்பிரிவில், "தகைமையளிக்கும் எண்" எனக் குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

[பி26, 2017 இன் 16]

(3) அந்தந்த உள்ளூர் அதிகாரசபைப் பிரதேசத்திலும் ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியினதும் சுயேச்சைக்குழுவினதும் வேட்பாளர்களால் பெறப்பட்ட வாக்குகளின் கூட்டுமொத்தம், அவ்வுள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு தெரிந்தனுப்பப்படவேண்டிய ஆட்களின் எண்ணிக்கையை நிச்சயிப்பதற்கென அப்போது தகைமையளிக்கும் எண்ணால் பிரிக்கப்படுதல் வேண்டும். இந்த முறையால் ஆய்ந்தறியப்பட்ட எண் முழு எண் ஒன்றாகவும் பின்னமொன்றாகவும் இருக்குமிடத்து முழு எண் இவ்வுட்பிரிவின் நோக்கத்திற்கான எண்ணாகக் கருதப்படுதல் வேண்டும்.

[பி26, 2017 இன் 16]

(4) மூன்றாம் உட்பிரிவின் நியதிகளின்படி, விடயத்துக்கேற்ப, ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினாலும் அல்லது சுயேச்சைக் குழுவினாலும் அந்த உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு தெரிந்தனுப்பப்படுவதற்கு உரித்துள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கையை நிச்சயிப்பதன்மேல், அந்த உள்ளூர் அதிகாரசபைக்காக அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியிலிருந்து அல்லது சுயேச்சைக் குழுவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை-

(அ) (3) ஆம் உட்பிரிவின்கீழ் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு தெரிந்தனுப்பப்படுவதற்கு நிச்சயிக்கப்பட்ட எண்ணிக்கையை விஞ்சுகின்றதாகக் காணப்படின், அப்போது, அத்தகைய மேன்மிகை, தேர்தல்கள் ஆணையாளரினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்; அல்லது

(ஆ) (3) ஆம் உட்பிரிவின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு தெரிந்தனுப்பப்படுவதற்கு நிச்சயிக்கப்பட்ட எண்ணிக்கைக்குக் குறைவாகவுள்ளதாகக் காணப்படின், அப்போது, அத்தகைய மேலதிக எண்ணிக்கையினரான உறுப்பினர்கள், தேர்ந்தெடுக்கப்பட்டு அல்லது 9 ஆம் பிரிவின்கீழ் உறுப்பினராக விருப்பதற்குத் தகைமையற்றவர்களாகவிராத வேட்பாளர்கள் நீங்கலாக முதலாவது நியமனப்பத்திரத்திலுள்ள வேட்பாளர்களிலிருந்து அந்தந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரினால் அல்லது சுயேச்சைக் குழுவின் தலைவரினால் தெரிந்தனுப்பப்படுதல் வேண்டும்.

[பி26, 2017 இன் 16]

(5) மூன்றாம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட முறையில் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியால் அல்லது சுயேச்சைக் குழுவால் தெரிவுசெய்யப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஆய்ந்தறிதலின் முடிவில் (4) ஆம் உட்பிரிவின்கீழ் தீர்மானிக்கப்பட்டவாறு தெரிவுசெய்யப்பட வேண்டிய உறுப்பினர்களின் மேலும்

ஏதேனும் எண் எஞ்சியிருப்பின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஆய்ந்தறியப்பட்டவாறு ஒவ்வொரு அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியாலும் அல்லது சுயேச்சைக் குழுவாலும் பெறப்பட்ட ஆகக்கூடுதலான பின்னத்தின் அடிப்படையில் பிரித்தொதுக்கப்படுதல் வேண்டும்.

[பி26, 2017 இன் 16]

(6) தெரிவத்தாட்சி அலுவலர், விடயத்திற்கேற்ப, அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு, இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழும் 65அ அ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழும் ஆய்ந்தறியப்பட்டவாறு பெண் உறுப்பினர்களுட்பட எந்த எண்ணிக்கையினரான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு அல்லது தெரிந்தனுப்புவதற்கு உரித்துடையதாகின்றதோ அந்த எண்ணிக்கையினரான உறுப்பினர்களை, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அல்லது 9 ஆம் பிரிவின்கீழ் உறுப்பினராகவிருப்பதற்குத் தகைமையற்றவர்களாகவிராத முதலாவது நியமனப்பத்திரத்திலுள்ள அல்லது மேலதிக நியமனப்பத்திரத்திலுள்ள வேட்பாளர்களிடையேயிருந்து தெரிந்தனுப்பும்படி, விடயத்துக்கேற்ப, அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளருக்கு அல்லது சுயேச்சைக் குழுவின் தலைவருக்கு அறிவித்தல் வேண்டும்.

(7) வேட்பாளர்களின் பெயர்கள் அதன் பின்னர் அந்தந்த தேர்தல் பிரதேசத்தின் தெரிவத்தாட்சி அலுவலரால் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

"முடிவை வெளியிடுதல்.
[பி71, 1977இன் 24]
[பி47, 2012இன் 22]

66. (1) ஓர் உள்ளூர் அதிகாரசபை தொடர்பில் 65 ஆம் பிரிவின்கீழ் ஒவ்வொரு வட்டாரத்துக்குமான உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்களையும் இக்கட்டளைச்சட்டத்தின் 65 அ என்னும் பிரிவின்கீழ் மற்றும் 65அ அ என்னும் பிரிவின் கீழ் தெரிவு செய்யப்பட்ட அவ்வேட்பாளர்களையும் வெளிப்படுத்துவதன்மேல், அத்தகைய

உள்ளூர் அதிகாரசபையின் தேர்தற் பிரதேசத்தின் தெரிவத்தாட்சி அலுவலர்:-

(அ) அவ்வுள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது தெரிவுசெய்யப்பட்ட எல்லா வேட்பாளர்களினதும் பெயர்களைக் குறித்துரைக்கின்ற அறிவித்தலொன்றை வெளியிடுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அத்தேர்தற் பிரதேசம் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளதோ அந்த மாவட்டத்தின் தேர்தல்கள் அலுவலர் மூலம் ஆணையாளருக்கு முடிவை அறிக்கையிடுதல் வேண்டும்.

(2) முடிவுபற்றிய அறிக்கை கிடைக்கப்பெற்றதன் மேல், ஆணையாளர், அவ்வுள்ளூர் அதிகார சபையின் உறுப்பினர்களாகவிருப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளரின் பெயர்களை வர்த்தமானியில் வெளியிடுவித்தல் வேண்டும்.

"உள்ளூர் அதிகாரசபைகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்புதல்.

66அ. (1) ஓர் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினரொருவரது பதவி, விடயத்துக்கேற்ப, (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின், (255 ஆம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் அல்லது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வெற்றிடமானதாகுமிடத்து, அத்தகைய உள்ளூர் அதிகாரசபை எந்தத் தேர்தற் பிரதேசத்தில் அமைந்துள்ளதோ அந்தத் தேர்தற் பிரதேசத்துக்காக நியமிக்கப்பட்ட தெரிவத்தாட்சி அலுவலர், அத்தகைய வெற்றிடமானது-

(அ) அந்தத் தேர்தல் இடப்பரப்பிலுள்ள ஏதேனும் வட்டாரத்திற்கு வாக்குச்சீட்டின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் தொடர்பிலானதாகவிருக்குமிடத்து, எந்த வட்டாரத்தில் வெற்றிடம் ஏற்பட்டதோ அந்த வட்டாரத்தில் வெற்றிடத்தை நிரப்புவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அல்லது 9 ஆம் பிரிவின்கீழ் உறுப்பினராகவிருப்பதற்குத் தகைமையற்றவர்களாகவிராத வேட்பாளர்கள் நீங்கலாக முதலாவது நியமனப் பத்திரத்திலுள்ள அல்லது மேலதிக நியமனப் பத்திரத்திலுள்ள வேறெவரேனும் வேட்பாளரை வெற்றிடம் ஏற்பட்டதிலிருந்து முப்பது நாட்களுக்குள் பெயர்குறித்து நியமிக்குமாறு விடயத்திற்கேற்ப எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவை அத்தகைய உறுப்பினர் சேர்ந்திருக்கின்றாரோ அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளருக்கு அல்லது சுயேச்சைக் குழுத் தலைவருக்கு வேண்டுகோள் விடுத்தல் வேண்டும்; அல்லது [பி48, 2012இன் 22] [பி27, 2017இன் 16]

(ஆ) இக்கட்டளைச் சட்டத்தின் 65அ மற்றும் 65அஅ என்னும் பிரிவுகளின்கீழ் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினரொருவர் தொடர்பிலானதாகவிருக்குமிடத்து, அப்போது எந்த வேட்பாளரின் பதவி வறிதாக வந்தள்ளதோ அந்த வேட்பாளர் ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியைச் சேர்ந்தவராக அல்லது சுயேச்சைக் குழுவின் வேட்பாளராக இருக்கின்றாரோவென்பதைப் பொறுத்து விடயத்துக்கேற்ப (252 ஆம் [பி27, 2017இன் 16]

அத்தியாயமான) மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ், அல்லது (255 ஆம் அத்தியாயமான) நகரசபைக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் அல்லது 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, பிரதேசச் சபைச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியால் அல்லது சுயேச்சைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அல்லது 9 ஆம் பிரிவின் கீழ் உறுப்பினராகவிருப்பதற்குத் தகைமையற்றவர்களாக விராத வேட்பாளர்கள் நீங்கலாக முதலாவது நியமனப்பத்திரத்திலுள்ள அல்லது மேலதிக நியமனப்பத்திலுள்ள வேறெவரேனும் வேட்பாளரை வெற்றிடம் ஏற்பட்டதிலிருந்து முப்பது நாட்களுக்குள் பெயர்குறித்து நியமிக்குமாறு விடயத்திற்கேற்ப அங்கீகரிக்கப் பட்ட அரசியற் கட்சியின் செயலாளருக்கு அல்லது சுயேச்சைக் குழுத் தலைவருக்கு வேண்டுகோள் விடுத்தல் வேண்டும்.

[பி27, 2017இன் 16]

ஆயின், ஓர் உள்ளூர் அதிகாரசபையின் பெண் உறுப்பினர் ஒருவரின் விடயத்தில் வெற்றிடம் ஒன்று ஏற்படுமிடத்து, அப்போது, அத்தகைய வெற்றிடம், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அல்லது 9 ஆம் பிரிவின்கீழ் உறுப்பினராகவிருப்பதற்குத் தகைமையற்றவர்களாகவிராத பெண் வேட்பாளர்கள் நீங்கலாக முதலாவது நியமனப்பத்திரத்திலிருந்து அல்லது மேலதிக நியமனப் பத்திரத்திலிருந்து பெண்ணொருவரின் நியமனத்தின்மூலம் மட்டுமே நிரப்பப்படுதல் வேண்டும். 2017 இன் 16 இன் 27 ஆம் பிரிவினால் 66அ(1)(இ) உட்பிரிவு நீக்கப்பட்டுள்ளது.

[பி27, 2017இன் 16]

(1அ) முதலாவது நியமனப்பத்திரத்திலும் மேலதிக நியமனப் பத்திரத்திலுமுள்ள வேட்பாளர்களிலிருந்து (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வெற்றிடமொன்றை நிரப்புவதற்கு ஆளெவரும் பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்கு எஞ்சியிராதிருக்குமிடத்து, அத்தகைய உள்ளூர் அதிகாரசபை எந்தத் தேர்தல் பிரதேசத்தில் அமைந்துள்ளதோ அந்தத் தேர்தல் பிரதேசத்துக்காக நியமிக்கப்பட்ட தெரிவத்தாட்சி அலுவலர், அவ்வேண்டுகொள் விடுக்கப்பட்டதிலிருந்து முப்பது நாட்களினுள் அவ்வெற்றிடம் ஏற்பட்டுள்ள வட்டாரத்தில் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்கு இக்கட்டளைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் தகைமை கொண்டுள்ள வேறெவரேனுமாளை பெயர்குறித்து நியமிக்கும்படி, எந்த உறுப்பினரின் வெற்றிடம் ஏற்பட்டதோ அந்த உறுப்பினர் சேர்ந்தவராகவிருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியின் செயலாளருக்கு அல்லது சுயேச்சைக்குழுவின் தலைவருக்கு அவ்வெற்றிடம் ஏற்பட்டதிலிருந்து முப்பது நாட்களினுள் அவ்வேண்டுகோளை விடுத்தல் வேண்டும்:

ஆயின், ஓர் உள்ளூர் அதிகாரசபையின் பெண் உறுப்பினர் ஒருவரின் விடயத்தில் வெற்றிடமொன்று ஏற்படுமிடத்து, அப்போது அத்தகைய வெற்றிடம், இக்கட்டளைச்சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் தகைமை கொண்டுள்ள பெண் வேட்பாளரொருவரின் நியமனத்தின்மூலம் மட்டுமே நிரப்பப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் உள்ளூர் அதிகார சபையொன்றின் எவரேனும் உறுப்பினரின் வெற்றிடத்தை நிரப்புவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர் அவர் எந்த உறுப்பினரைப் பின்னுறுகின்றாரோ அந்த உறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

[பி48, 2012இன் 22]

[பி28, 2017இன் 28]

அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்று அல்லது சுயேச்சைக் குழுவொன்று ஐம்பது சத வீதத்திற்கும் அதிகமான ஆசனங்களைப் பெறுமிடத்து மாநகர முதல்வரை வெளிப்படுத்துதல்.

66ஆ. (1) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக்குழு உள்ளூர் அதிகாரசபையொன்றின் ஆசனங்களின் மொத்த எண்ணிக்கையில் ஐம்பது சதவீதத்தை அல்லது அதனிலும் கூடுதலாகப் பெற்றுள்ளவிடத்து ஆணையாளர், உள்ளூர் அதிகார சபையின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள் 66ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின்கீழ் ஆணையாளரால் வெளியிடப்பட்ட தன்மீது விடயத்திற்கேற்ப அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்களிடையேயிருந்து அத்தகைய உள்ளூர் அதிகாரசபையின் மாநகர முதல்வராகவும் பிரதி மாநகர முதல்வராகவும் யார் தேர்ந்தெடுக்கப்பட்டதாக வெளிப்படுத்தப்பட வேண்டும் எனத் தீர்மானிக்குமாறு விடயத்திற்கேற்ப அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளருக்கு அல்லது சுயேச்சைக் குழுத்தலைவருக்கு அழைப்பு விடுத்தல் வேண்டும்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் தீர்மானிக்கப்பட்டவாறு மாநகர முதல்வரின் அல்லது பிரதி மாநகர முதல்வரின் பதவி அத்தகைய உள்ளூர் அதிகாரசபையின் பதவிக் காலத்தின்போது வெற்றிடமானதாகுமிடத்து உள்ளூராட்சி ஆணையாளர் அத்தகைய நிகழ்வை தெரிவத்தாட்சி அலுவலருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டுமென்பதுடன், தெரிவத்தாட்சி அலுவலர் இப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய விடயத்துக்கேற்ப அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவைச் சேர்ந்தவர்களான அந்த உள்ளூர் அதிகார சபையின் உறுப்பினர்களிடையேயிருந்து உள்ளூர் அதிகார சபையின் புதிய மாநகர முதல்வராக அல்லது பிரதி மாநகர முதல்வராக உறுப்பினர் யார் வரவேண்டும் என்பதனை உடனடியாகத் தீர்மானிக்குமாறு அத்தகைய மாநகர முதல்வர் அல்லது பிரதி மாநகர முதல்வர் விடயத்திற்கேற்ப எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவைச் சேர்ந்திருந்தாரோ அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளருக்கு அல்லது சுயேச்சைக் குழுத்தலைவருக்கு அழைப்பு விடுத்தல் வேண்டுமென்பதுடன் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அதனை முப்பது நாட்களுக்குள் அறிவித்தலும் வேண்டும். அத்தகைய தீர்மானம் கிடைக்கப்பெற்ற தன்மீது தெரிவத்தாட்சி அலுவலர் அத்தகைய தீர்மானத்தில் பெயர்குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினரை அந்த உள்ளூர் அதிகாரசபையின் விடயத்திற்கேற்ப புதிய மாநகர முதல்வராக அல்லது பிரதி மாநகர முதல்வராக வெளிப்படுத்துதல் வேண்டும்.

[பி28, 2017இன் 16]

(3) அத்தகைய அறிவித்தல் இரண்டாம் உட்பிரிவின்கீழ் மேற்கூறப்பட்ட முப்பது நாட்களுக்குள் கிடைக்கப்பெறாத பட்சத்தில், தெரிவத்தாட்சி அலுவலர் ஆகக்கூடுதலான வாக்குகளின் நூற்று வீதத்தைப் பெற்றுள்ளதும் எந்த மாநகர முதல்வரின் அல்லது பிரதி மாநகர முதல்வரின் பதவி (2) ஆம் உட்பிரிவின்கீழ் வெற்றிடமாக வந்துள்ளதோ அந்த மாநகர முதல்வர் அல்லது பிரதி மாநகர முதல்வர் சேர்ந்துள்ள விடயத்திற்கேற்ப அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவைச் சேர்ந்துள்ளதுமான உறுப்பினரை மாநகர முதல்வராக அல்லது பிரதி மாநகர முதல்வராக நியமிக்க முற்படுதல் வேண்டும்.

[பி28, 2017இன் 16]

(4) இப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், விடயத்திற்கேற்ப மாநகர முதல்வர் (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 215அ என்னும் பிரிவின்கீழ் அல்லது (255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 178அ என்னும் பிரிவின் கீழ் அல்லது 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, பிரதேச சபைச் சட்டத்தின் 169ஆம் பிரிவின் கீழ் அவரது பதவியை விட்டு விலகியுள்ளதாகக் கருதப்படுவதன் விளைவாக அத்தகைய மாநகர முதல்வரின் பதவியில் வெற்றிடமொன்று ஏற்படுமிடத்தும் மாநகர முதல்வர் பதவியிலான அத்தகைய வெற்றிடம் இக்கட்டளைச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கை முறையின் நியதிகளின் படி நிரப்பப்படுமிடத்தும், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு அவ்வாறு நியமிக்கப்பட்ட உறுப்பினரே தமது பதவியிலிருந்து விலகுமிடத்து அதன் பின்னர் உருவாக்கப்பட்ட வெற்றிடம் இக்கட்டளைச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கை முறையின் நியதிகளுக்கிணங்க நிரப்பப்படுதலாகாது. அத்தகைய விடயத்தில் எந்த உள்ளூர் அதிகாரசபையில் மாநகர முதல்வர் பதவியிலான வெற்றிடம் ஏற்பட்டுள்ளதோ அந்த உள்ளூர் அதிகார சபை கலைக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும். அத்துடன் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (விளைவாந்தன்மையதான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் நியதிகளின்படி விடயத்திற்கேற்ப உள்ளூரதிகாரசபை என்னும் விடயத்திற்குப் பொறுப்பான மாகாண அமைச்சர் அல்லது மாகாணத்தின் ஆளுநர் சம்பந்தப்பட்ட உள்ளூரதிகார சபைக்கு விசேட ஆணையாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும். இவர் விசேட ஆணையாளர் ஒருவராக அத்தகைய உள்ளூர் அதிகாரசபையின் எஞ்சியுள்ள பதவிக்காலத்தின் மீதிக்காலப் பகுதிக்கு பதவி வகித்தல் வேண்டும்.

[பி28, 2017இன் 16]

உள்ளூர் அதிகார சபையின் முதலாவது கூட்டம்.

66இ. (1) உள்ளூர் அதிகார சபையின் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு அத்தகைய உள்ளூர் அதிகார சபையின் ஆசனங்களின் மொத்த எண்ணிக்கையின் ஐம்பது சத வீதத்திற்கும் குறைவாகப் பெற்றிருக்குமிடத்து மாநகர முதல்வரும் பிரதி மாநகர முதல்வரும் அத்தகைய உள்ளூர் அதிகார சபையின் முதலாவது கூட்டத்தில் தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.

[பி48, 2012இன் 22]

(2) சபையின் முதலாவது கூட்டம் 66ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் கீழ் ஆணையாளரால் ஏதேனும் உள்ளூர் அதிகார சபையின் உறுப்பினர்களாக தேர்ந்தெடுத்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள் வெளியிடப்பட்ட ஒரு வாரத்திற்குள் உள்ளூராட்சி ஆணையாளரால் அதன் பொருட்டு வெளியிடப்பட்ட அறிவித்தல் மூலம் கூட்டப்படுதல் வேண்டும். அத்தகைய அறிவித்தல் கூட்டத்திற்கென நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் ஏழு நாட்களுக்குக் குறையாமல் வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன் :-

(அ) வர்த்தமானியிலும் மூன்று மொழிகளிலும் ஒவ்வொன்றும் ஒரு செய்தித்தாளிலும் வெளியிடப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) அச்சபையின் உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் பதிவுத் தபாலில் அனுப்பப்படுதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல் ஒவ்வொன்றும் முதலாவது கூட்டத்தின் தேதியையும் நேரத்தையும் இடத்தையும் குறித்துரைத்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட தேதி சபையின் தவணையின் தொடக்கத்திற்கென நியமிக்கப்பட்ட தேதியையடுத்து அடுத்துறும் தேதிக்கு ஒரு மாதத்திற்குட்பட்ட தேதியாக அல்லது காலம் கழிவதனால் அல்லாமல் வேறு வகையில் பதவியிலிருந்து வெளியேறும் சபையொன்றைப் பின்னுறுவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சபையொன்றின் விடயத்தில் புதிய சபையின் தேர்தல் அல்லது பெயர் குறித்து நியமனம் பூர்த்தியடைந்த தேதியையடுத்துப் பின்னுறு ஒரு மாதத்திற்குள்ளான ஒரு தேதியாக இருத்தல் வேண்டும்.

(4) ஏதேனும் காரணத்திற்காக (1)ஆம் உட்பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று கூட்டம் நடைபெறாதவிடத்து, உள்ளூராட்சி ஆணையாளர் அதன் பொருட்டு வெளியிடப்பட்ட மேலதிக அறிவித்தலால் அல்லது அறிவித்தல்களால் கூட்டத்தை வேறேதேனும் திகதிக்குக் கூட்டலாம், ஆயினும் அத்தகைய வேறு தேதி (2) ஆம் உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியை அடுத்து அடுத்துறும் ஒரு மாதத்திற்குட்பட்டதாயிருத்தல் வேண்டும்.

மாநகர முதல் வரையும் பிரதி முதல்வரையும் ஓர் உள்ளூர் அதிகார சபையின் முதலாவது கூட்டத்தில் அல்லது வேறு கூட்டத்தில் தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கை முறை. [பி48, 2012இன் 22]

66ஈ. (1) மாநகர முதல்வரொருவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை 66அ என்னும் பிரிவின் கீழ் கூட்டப்படக்கூடிய முதலாவது கூட்டமும், வேறேதேனும் கூட்டமும் (இப்பிரிவில் "தலைமைதாங்கும் அலுவலர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) உள்ளூராட்சி ஆணையாளரினால் தலைமை தாங்கப்படுதல் வேண்டும்.

(2) சபையின் உறுப்பினர்கள், அதன் முதலாவது கூட்டத்தில், சபையின் மாநகர முதல்வராகவிருப்பதற்கென அவர்களின் உறுப்பினர்களுள் ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் சபையின் மாநகர முதல்வரைத் தேர்ந்தெடுத்தலானது, சபையின் உறுப்பாண்மையில் அரை வாசிக்குக் குறையாதோரைக் கொண்டுள்ள ஒரு கூட்ட நடப்பெண் அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்திருந்தாலொழிய, இடம்பெறுதலாகாது.

(4) சபையின் எவரேனும் உறுப்பினர், அவரது சம்மதத்துடன், கூட்டத்தில் சமுகமளித்துள்ள வேறெவரேனும் உறுப்பினரினால் மாநகர முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்மொழியப்படலாம் அத்துடன் வழிமொழியப்படலாம்.

(5) மாநகர முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஒரு உறுப்பினரின் பெயர் மட்டுமே முன் மொழியப்படுமிடத்து, தேர்தலானது எக்கூட்டத்தில் இடம்பெறுகின்றதோ அக்கூட்டத்தில் தலைமைதாங்கும் அலுவலர், உறுப்பினரை மாநகர முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவராக வெளிப்படுத்துதல் வேண்டும்.

(6) மாநகர முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள் முன் மொழியப்பட்டு வழிமொழியப்படுமிடத்து தேர்தல் முறையானது, பகிரங்க வாக்களித்தல்மூலமானதாகவிருத்தல் வேண்டுமென தலைமை தாங்கும் அலுவலர் சமுகமளித்துள்ள ஒவ்வோர் உறுப்பினரினதும் பெயரைக் கூப்பிட்டு, அவர் எவ்வாறு வாக்களிக்க விரும்புகின்றாரென அவரிடம் கேட்டு, அதற்கிணங்க வாக்குகளைப் பதிவதன்மூலம் பெறுதல் வேண்டும். உறுப்பினரொருவர் வாக்களிக்காது விடலாம் ; அத்துடன் அத்தகையவொரு விடயத்தில் தலைமைதாங்கும் அலுவலர் அத்தகைய உறுப்பினர் வாக்களிக்காது தவிர்த்தமை பற்றிய நிகழ்வைப் பதிதல் வேண்டும்.

(7) மாநகர முதல்வரின் தேர்தல், பகிரங்க வாக்களித்தல் மூலமானதாகவிருத்தல் வேண்டுமென (6) ஆம் உட்பிரிவின்கீழ் தீர்மானிக்கப்படுமிடத்து, சமுகமளித்துள்ள ஒவ்வோர் உறுப்பினரினதும் பெயரைக் கூப்பிட்டு, அவர் எவ்வாறு வாக்களிக்க விரும்புகின்றாரென அவரிடம் கேட்டு, அதற்கிணங்க வாக்குகளைப் பதிவதன்மூலம் பெறுதல் வேண்டும். உறுப்பினரொருவர் வாக்களிக்காது விடலாம் ; அத்துடன் அத்தகையவொரு விடயத்தில் தலைமைதாங்கும் அலுவலர் அத்தகைய உறுப்பினர் வாக்களிக்காது தவிர்த்தமை பற்றிய நிகழ்வைப் பதிதல் வேண்டும்.

(8) மாநகர முதல்வரின் தேர்தல் இரகசிய வாக்களிப்பின் மூலமானதாகவிருத்தல் வேண்டுமென (6) ஆம் உட்பிரிவின்கீழ் தீர்மானிக்கப்படுமிடத்து, தேர்தலானது வாக்குச்சீட்டின் மூலமானதாகவிருத்தல் வேண்டும்.

(9) மாநகர முதல்வரொருவரைத் தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைகளின் முடிவில், தலைமை தாங்கும் அலுவலர் வாக்களிப்பின் முடிவை வெளிப்படுத்துதல் வேண்டும்.

உறுப்பினரெவரும் தேவைப்பட்ட எண்ணிக்கையினவான வாக்குகளைப் பெறாத விடத்து. [பி48, 2012இன் 22]

66உ. (1) மாநகர முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக இரண்டுக்கு மேற்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள் முன்மொழியப்பட்டு வழிமொழியப்படுமிடத்தும், தனியொரு உறுப்பினர் எவரும், முதலாவது வாக்களிப்பில், எஞ்சியுள்ள உறுப்பினர்களினாற் பெறப்பட்ட வாக்குகளின் கூட்டுமொத்தத்திலும் பார்க்கக் கூடுதலான வாக்குகளைப் பெறாத விடத்தும், இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு ஒரு உறுப்பினர் தேர்தலிலிருந்து தவிர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன், விடயத்துக்கேற்ப, வாக்களிப்பொன்றில் உறுப்பினர்களினாற் பெறப்பட்ட வாக்குகளின் கூட்டுமொத்தத்தைப் பார்க்கிலும் கூடுதலான வாக்குகளைப் பெறும்வரை, அல்லது இரு உறுப்பினர்கள் தொடர்பில் மட்டுமே வாக்களிப்பு நடாத்தப்பட்டு பூர்த்தி செய்யப்படும்வரை, அடுத்துப் பின்னரான ஒவ்வொரு வாக்களிப்பின் பின்னரும் ஒரு உறுப்பினர் தேர்தலிலிருந்து தவிர்க்கப்பட்டு, வாக்களிப்பு அதேமுறையில் தொடர்ந்து நடாத்தப்படுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறு உறுப்பினரொருவர் தேர்தலிலிருந்து தவிர்க்கப்படக்கூடிய முறை பின்வருமாறு நிறைவேற்றப்படுதல் வேண்டும்:-

(அ) ஓர் உறுப்பினரினால் பெறப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை எஞ்சியுள்ள உறுப்பினர்களுள் ஒவ்வொருவரினாலும் பெறப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையிலும் பார்க்கக் குறைவாகவிருந்தால், ஆகக் குறைந்த எண்ணிக்கையைப் பெறுகின்ற உறுப்பினர் தவிர்க்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) எல்லா உறுப்பினர்களுள் ஒவ்வொருவரும் சம எண்ணிக்கையினவான வாக்குகளைப் பெற்றால், அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களுள் ஒவ்வொருவரும் எஞ்சியுள்ள உறுப்பினரினால் அல்லது உறுப்பினர்களுள் ஒவ்வொருவரினாலும் பெறப்பட்ட வாக்குகளிலும் பார்க்கக் குறைவாகவுள்ள சம எண்ணிக்கையினவான வாக்குகளைப் பெற்றால் சம எண்ணிக்கையினவான வாக்குகளைப் பெறுகின்ற உறுப்பினர்களுள் ஒருவர் தவிர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன் உறுப்பினர்களுள் எவர் தவிர்க்கப்பட வேண்டுமென்பது பற்றிய தீர்மானம், தலைமைதாங்கும் அலுவலர் தீர்மானிக்க வேண்டியவாறான அத்தகைய முறையில், அவரின் முன்னிலையில் இழுக்கப்பட வேண்டிய திருவுளச் சீட்டின் மூலம் செய்யப்படுதலும் வேண்டும்.

(3) ஏதேனும் வாக்களிப்பில் இரு உறுப்பினர்கள் இருக்குமிடத்தும், அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை சமமாகப் பிரிக்கப்படுமிடத்தும், ஒரு வாக்கைச் சேர்த்தலானது உறுப்பினருக்குள் ஒருவர் மாநகர முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அவருக்கு

உரித்தளிக்குமிடத்தும், மேலதிக வாக்கு எந்த உறுப்பினருக்குக் கொடுக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படவேண்டுமோ, அந்த உறுப்பினர் பற்றிய தீர்மானம், தலைமைதாங்கும் அலுவலர் தீர்மானிக்கவேண்டியவாறான அத்தகைய முறையில், அவரின் முன்னிலையில் இழுக்கப்படும் திருவுளச்சீட்டின் மூலம் செய்யப்படுதல் வேண்டும்.

பிரதி மாநகர முதல்வரைத் தேர்ந்தெடுத்தல். [பி48, 2012இன் 22]

66ஊ. (1) ஓர் உள்ளூர் அதிகார சபையின் முதலாவது பிரதி மாநகர முதல்வர், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகர முதல்வரினால் தலைமைதாங்கப்பட்டதும், 66அ என்னும் பிரிவின் கீழ் நடாத்தப்பட்டதுமான சபையின் முதலாவது கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(2) பிரிவுகள் 66இ மற்றும் 66ஈ என்பவற்றின் ஏற்பாடுகள், அப்பிரிவுகளில் மாநகர முதல்வர் பற்றிய ஒவ்வொரு குறிப்பீடும் பிரதி மாநகர முதல்வருக்கான குறிப்பீடு என்றாற்போன்று அதே முறையில் பிரதி மாநகர முதல்வரொருவரைத் தேர்ந்தெடுப்பதற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

மாநகர முதல்வர் அல்லது பிரதி மாநகர முதல்வர் பதவியிலான வெற்றிடம். [பி48, 2012இன் 22]

*66எ. சபையொன்றின் பதவிக்காலத்தின்போது அத்தகைய சபையின் மாநகர முதல்வரின் அல்லது பிரதி மாநகர முதல்வரின் பதவி வறிதாகவரும் போதெல்லாம், உள்ளூராட்சி ஆணையாளர், அத்தகைய வெற்றிடம் பற்றிய அறிவித்தலைச் சபையிடமிருந்து பெற்றதிலிருந்து இரு வாரங்களினுள்ளும், 66இ என்னும் பிரிவின் (1)ஆம் அல்லது (4)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கிணங்கச் சேர்ப்பிக்கப்பட்ட அறிவித்தல் மூலம் அல்லது அறிவித்தல்கள் மூலம் விடயத்துக்கேற்ப, புதிய மாநகர முதல்வரொருவரை அல்லது பிரதி மாநகர முதல்வரொருவரைத் தேர்ந்தெடுப்பதற்காகக் கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிவித்தலில் அல்லது அறிவித்தல்களில் கூட்டத்துக்காகக் குறித்துரைக்கப்பட்ட தேதி, இவ்வெற்றிடம் ஏற்பட்டதன் அடுத்து அடுத்துறும் ஆறு வாரங்களினுள் விடயத்துக்கேற்ப, புதிய மாநகர முதல்வரொருவர் அல்லது பிரதி மாநகர முதல்வரொருவர் தேர்ந்தெடுக்கப்படுவதனை உறுதிப்படுத்துகின்றவாறான அத்தகைய தாக இருத்தலும் வேண்டும்.

வாக்கெடுப்பு முடிவடைந்த பின்னர் வாக்குச்சீட்டுக்கள் முதலியவற்றை கையாளுதல். [பி72, 1977இன் 24] [பி49, 2012இன் 22]

*67. (2) தெரிவத்தாட்சி அலுவலர், தேர்தற் பிரதேசம் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளதோ அந்த மாவட்டத்தின் தேர்தல்கள் அலுவலருக்கு, எல்லா வாக்குச்சீட்டுகளையும், ஒவ்வொரு வேட்பாளருக்கும் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை பற்றிய கூற்றொன்றையும், வாக்குச்சீட்டுக் கணக்கையும், அளிக்கப்பட்ட வாக்குகள் நிரலையும், அடியிதழ்களின் பொதிகளையும் மற்றும் 64ஆம் பிரிவின் கீழ் வாக்கெண்ணும் அலுவர்களினால் அனுப்பப்பட்ட தேருநர் நிரல்களின் அடையாளமிடப்பட்ட பிரதிகளையும் அனுப்பிவைத்தல் வேண்டும்;

* 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகளின் வெற்றிடம் நிரப்பல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 2, 3 மற்றும் 4 ஆம் பிரிவுகளை பார்க்கவும்.

* தேசிய அரசப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தின் 72 ஆம் பிரிவினால் 1 ஆம் உட்பிரிவு நீக்கஞ் செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பொதியிலும் அதன் உள்ளீடுகள் பற்றிய விவரணத்தையும், அவை எத்தேர்தல் தொடர்பானவையோ அத்தேர்தலின் தேதியையும், மற்றும் தேர்தலானது எவ்வாட்டாரங்களில் நடாத்தப்பட்டதோ அவ் வட்டாரங்களின் பெயர்களையும் அவர் புறக்குறிப்பிடுதல் வேண்டும்.".

(3) தேர்தல்கள் அலுவலர் அவரிடம் சமர்ப்பிக்கப்பட்ட வாக்குச்சீட்டுப் பொதிகளையும் எல்லா ஆவணங்களையும் அவை கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து கணக்கிடப்பட்ட ஆறு மாத காலத்திற்கு வைத்திருந்து வருதல் வேண்டும்; அதன் பின்னர், மேற்கூறப்பட்ட பொதிகளையும் ஆவணங்களையும் அழிக்கச் செய்தல் வேண்டும்.

(4) அத்தகைய அலுவலரின் கட்டுக்காவலில் அவை இருக்கின்ற பொழுது, (3) ஆம் உட்பிரிவிற் குறிப்பிடப்பட்ட வாக்குச்சீட்டு பொதிகள் அல்லது ஆவணங்கள் எதனையும் பரிசோதிப்பதற்கு ஆளெவரும் [பி50, 2012இன் 22]

* 68. நீக்கஞ் செய்யப்பட்டுள்ளது.

தேர்தல்கள் பற்றிய பொது ஏற்பாடுகள்

இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கியொழுகத் தவறியமை காரணமாகத் தேர்தலெதுவும் அத்தகைய ஏற்பாடுகளில் விதிக்கப்பட்ட நெறிகளுக்கிணங்க தேர்தல் நடாத்தப்பட்டதெனவும் அத்தகைய தவறுதல் தேர்தலின் முடிவைப் பாதிக்கவில்லையெனவும் காணப்படின், செல்லுபடியற்றதாகாதிருத்தல் வேண்டும்.

69. தேர்தல்கள் தொடர்பிலான இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கியொழுகத் தவறியமை காரணமாகத் தேர்தலெதுவும் அத்தகைய ஏற்பாடுகளில் விதிக்கப்பட்ட நெறிகளுக்கிணங்க தேர்தல் நடாத்தப்பட்டதெனவும் அத்தகைய தவறுதல் தேர்தலின் முடிவைப் பாதிக்கவில்லையெனவும் காணப்படின், செல்லுபடியற்றதாகாதிருத்தல் வேண்டும்.

இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாமை.

[பி15, 1965இன் 15]

** 69அ. நீக்கஞ் செய்யப்பட்டுள்ளது. [பி51, 2012இன் 22]

70. (1) நன்கொடை மானியம் பெறுகின்ற ஏதேனுமொரு பாட சாலையை அல்லது பாடசாலையொன்றில் பாகமெதனையும், அல்லது அதன் பொருட்டு பாராளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பணத்திலிருந்து நன்கொடை மானியம் வழங்கப்படுகின்ற பாடசாலை யெதனையும், வாக்கெடுப்பு நிலையமொன்றாகத் தெரிவத்தாட்சி அலுவலரொருவர் கட்டணமில்லாது உபயோகிக்கலாம்.

பாடசாலைகளை வாக்கெடுப்பு நிலையங்களாக உபயோகித்தல்.

* 2012 ம் ஆண்டின் 22 ஆம் இலக்க சட்டத்தின் 50 ஆம் பிரிவினால் நீக்கஞ் செய்யப்பட்டுள்ளது.

** 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சட்டத்தின் 51 ஆம் பிரிவினால் நீக்கஞ்செய்யப்பட்டது.

(2) வாக்கெடுப்பு நிலையமொன்றாக அதைப் பயன்படுத்தியதன் காரணத்தால், மேற்கூறப்பட்டவாறான அத்தகையவொரு பாடசாலைக்கு அல்லது அதன் பாகத்திற்கு ஏற்பட்ட சேதமெதனையும் தெரிவத்தாட்சி அலுவலரொருவர் ஈடுசெய்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பாடசாலை மீது அல்லது அதன் பாகத்தின் மீது கட்டுப்பாடுடைய ஆட்களுக்கு ஏற்பட்ட செலவுகளெதனையும் கொடுத்துத் தீர்த்தலும் வேண்டும்.

* 71. நீக்கஞ் செய்யப்பட்டுள்ளது.

தலைமை தாங்கும் அலுவலருக்கு உதவி புரிவதற்கென நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மூலம் தலைமை தாங்கும் அலுவலர் கடமையாற்றலாம்.

72. வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து ஆள் ஒருவரைக் கைதுசெய்யும்படி அல்லது விலக்கி வைக்கும்படி அல்லது வெளியேற்றும்படி கட்டளையிடுவதைத் தவிர, அவ்வாக்கெடுப்பு நிலையத்தில் அவரினால் செய்யப்படவேண்டுமென இக்கட்டளைச் சட்டத்தின் இப்பாகத்தினால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனுமொரு செயலை வாக்கெடுப்பு நிலையமொன்றின் தலைமை தாங்கும் அலுவலர் அவருக்கு உதவிபுரிவதற்கென நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மூலம் செய்யலாம்.

"வாக்கெடுப்பு நிலையங்களிலான குழப்பங்கள்.

72அ. (1) அத்தகைய தன்மையினவான குறித்த சில நிகழ்வுகள் ஏற்படுவதன் விளைவாக-

(அ) வாக்கெடுப்புத் தொடங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்கெடுப்பைத் தொடங்குவதற்கு இயலாதுள்ளவிடத்து;

(பி. 52, 2012 இன் 22)

(ஆ) அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்திலான வாக்கெடுப்பு, வாக்கெடுப்பு தொடங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் தொடங்கி, ஆனால் வாக்கெடுப்பு முடிவடைவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரம்வரை தொடர்ந்து நடாத்தப்பட முடியாததாக விருக்குமிடத்து;

(பி. 29, 2017 இன் 16)

(இ) தலைமைதாங்கும் அலுவலரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட ஏதேனும் காரணத்துக்காக, அவ்வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்கெடுப்பை நடாத்த முடியாதுள்ளவிடத்து;

(ஈ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வாக்கெடுப்பு முகவர்கள், வாக்கெடுப்பின்போதான ஒரு குழப்பத்தின்போது அச்சுறுத்தப்படுமிடத்து, கொல்லப்படுமிடத்து அல்லது வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து துரத்தப்படுமிடத்து;

(உ) வாக்கெடுப்புப் பணியாட்டொகுதியினர், வழியில் எவையேனும் முட்டுக்கட்டைகள் காரணமாக, வாக்கெடுப்பு நிலையத்தை வந்தடைய இயலாதுள்ளவிடத்து;

(ஊ) வாக்கெடுப்பு நிலையத்திலான ஏதேனும் சமாதானக் குழப்பம் அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்கெடுப்பை நடாத்துவதனை இயலாததாக்குமிடத்து;

*1963 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தின் 15 ஆம் பிரிவினால் 71 ஆம் பிரிவு நீக்கஞ் செய்யப்பட்டுள்ளது.

(எ) வாக்குச்சீட்டுகளைக் களவாகத் திணித்தலானது எவரேனுமாளினால் வலோத்காரமாக நிறைவேற்றப்படுமிடத்து; அல்லது

(ஏ) ஏதேனும் வாக்கெடுப்பு நிலையத்தில் உண்மையான, சுதந்திரமான, நியாயமான மற்றும் இரகசியமான வாக்கெடுப்பு இல்லாதவிடத்து,

அவ்வாக்கெடுப்பு நிலையத்தின் தலைமை தாங்கும் அலுவலர், அத்தகைய நிகழ்வு பற்றித் தெரிவத்தாட்சி அலுவலருக்கு உடனடுத்து அறிவித்தல் வேண்டுமென்பதுடன் அவர் அந்நிகழ்வை ஆணையாளருக்கு அறிவித்தலும் வேண்டும்.

(2) ஆணையாளர், (2)ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் தகவலைப் பெற்றதன்மீதும், பெறப்பட்ட அத்தகைய தகவலின் செம்மையை நிச்சயிப்பதற்கு அவசியமென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணைகளைச் செய்தபின்னரும், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்தில் நடாத்தப்பட்ட வாக்கெடுப்பு வறிதானதென வெளிப்படுத்தலாம்.

வேட்பாளர் அவரது சொந்த வாக்கெடுப்பு முகவராக அல்லது வாக்கெண்ணும் முகவராகச் செயலாற்றலாம் அல்லது அத்தகைய முகவருக்கு உதவியளிக்கலாம். [பி75, 1977இன் 24] [பி53, 2012இன் 22]

73. இக்கட்டளைச் சட்டத்தின்கீழான ஏதேனும் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான வேட்பாளரொருவர், அவரது வாக்கெடுப்பு முகவர் அல்லது வாக்கெண்ணும் முகவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பின், அவர் எந்தச் செயலை அல்லது காரியத்தைச் செய்வதற்குத் தேவைப்படுத்தப்பட்டிருக்கக்கூடுமோ அல்லது அதிகாரமளிக்கப்பட்டிருக்கக் கூடுமோ அந்த ஏதேனும் செயலை அல்லது காரியத்தைத் தானே செய்யலாம் அல்லது அத்தகைய ஏதேனும் செயலை அல்லது காரியத்தைச் செய்வதில் அத்தகைய முகவருக்கு உதவியளிக்கலாம். எவ்வாறாயினும், இப்பிரிவின் கீழ் செயலாற்று முன்னர், அவ்வேட்பாளர், அத்தகையவொரு முகவரினால் செய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட வெளிப்படுத்துகையைச் செய்தல் வேண்டும்.".

வேட்பாளர்களின் முகவர்கள் வருகை தராமை. [பி76, 1977இன் 24] [பி54, 2012இன் 22]

74. இக்கட்டளைச் சட்டத்தின்கீழான ஏதேனும் தேர்தலில் இக்கட்டளைச் சட்டத்தின் கீழான ஏதேனும் செயல் அல்லது காரியம், வேட்பாளரின் எவரேனும் முகவரின் அல்லது முகவர்களின் முன்னிலையில் செய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுமிடத்து அல்லது அதிகாரமளிக்கப்படுமிடத்து, அந்நோக்கத்துக்காக நியமிக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் அத்தகைய எவரேனும் முகவர் அல்லது முகவர்கள் வருகை தராமையானது, அத்தகைய செயல் அல்லது காரியம் வேறுவகையில் முறையாகச் செய்யப்படின், செய்யப்பட்ட செயலை அல்லது காரியத்தைச் செல்லுபடியற்றதாக்குதலாகாது.

வாக்கு வெளிக்காட்டப்படுவதனைத் தடை செய்தல். [பி76, 1987இன் 24] [பி25, 1990இன் 24] [பி55, 2012இன் 22]

75. இக்கட்டளைச் சட்டத்தின்கீழான ஏதேனும் தேர்தலில் வாக்களித்துள்ள எவரேனுமாள், அத்தகைய தேர்தலைக் கேள்விக்குட்படுத்துவதற்குத் தொடுக்கப்பட்ட ஏதேனும் சட்ட வழக்கு நடவடிக்கையில், அவர் எவருக்கு வாக்களித்தாரென்பதைக் கூறுவதற்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது.

குழுத் தலைவர். [பி25, 1987 இன் 24] [பி56, 2012இன் 22]

75அ. சுயேச்சைக் குழுவொன்றின் குழுத்தலைவராகப் பெயர் குறித்தொதுக்கப்பட்ட ஆளெவரும் உள்ளூர் அதிகார சபையொன்றின் தேர்தலொன்று முடிவுறாதிருக்கும்போது அல்லது அதன் பின்னர் இறக்குமிடத்து, தனது அதிகாரமளிக்கப்பட்ட முகவரொருவராக குழுத் தலைவரால் எவ்வாளுடைய பெயர், பெயர் குறித்து நியமிக்கப்பட்டுள்ளதோ அவ் ஆள் அந்த சுயேச்சைக் குழுவின் குழுத்தலைவராகக் கருதப்படுதல் வேண்டும்.

தேர்தல்களில் இரகசியத்தைப் பேணுதல்.

76. (1) இக்கட்டளைச் சட்டத்தின் கீழான ஏதேனும் தேர்தலில் வாக்கெடுப்பு நிலையமொன்றில் அல்லது வாக்குகள் எண்ணப்படும் போது சமுகமளிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட தெரிவத்தாட்சி அலுவலர், வாக்கெடுப்பு முகவர் அல்லது வாக்கெண்ணும் முகவர் ஆகிய ஒவ்வொருவரும் அத்தகைய தேர்தலில் வாக்கெடுப்புத் தொடங்கு முன்னர், அல்லது வாக்கெடுப்புத் தொடங்கிய பின்னர் நியமிக்கப்பட்ட முகவரொருவரின் விடயத்தில் அத்தகைய முகவராகக் கடமையாற்று முன்னர், பொருளளவில் நான்காம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் காட்டப்பட்டுள்ள இரகசியம் பேணுவதற்கான வெளிப் படுத்துகையொன்றைச் செய்தல் வேண்டும். தெரிவத்தாட்சி அலுவல ரொருவரின், சமாதான நீதிவானொருவரின் முன்னிலையில் வெளிப் படுத்துகை செய்யப்படுதல் வேண்டும்; வேறெவரேனும் அலுவல ரொருவரின் அல்லது முகவரொருவரெனின் சமாதான நீதிவா னொருவரின் முன்னிலையில் அல்லது தெரிவத்தாட்சி அலுவலரின் அல்லது தலைமை தாங்கும் அலுவலரின் முன்னிலையில் வெளிப் படுத்துகை செய்யப்படுதல் வேண்டும்.

(2) இக்கட்டளைச் சட்டத்தின் கீழான ஏதேனும் தேர்தலில் வாக் கெடுப்பு நிலையமொன்றில் அல்லது வாக்குகள் எண்ணப்படுகையில் சமுகமளிக்கின்ற தெரிவத்தாட்சி அலுவலர், அலுவலர், வாக்கெடுப்பு முகவர் அல்லது வாக்கெண்ணும் முகவர் ஆகிய ஒவ்வொருவரும் வாக்களிப்புத் தொடர்பில் இரகசியம் பேணுதல் வேண்டுமென்பதுடன் இரகசியம் பேணுவதற்கு உதவி புரிதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவிற் குறிப்பிடப்பட்ட அலுவலராக அல்லது முகவராக உள்ள ஆள் ஒருவர்-

(அ) (i) வாக்குச்சீட்டொன்றிற்கு விண்ணப்பஞ் செய்த அல்லது செய்யாத, அல்லது வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்களித்த அல்லது வாக்களிக்காத எவரேனுமொரு வாக்காளரின் தேருநர் நிரலிலுள்ள பெயர் என்ன அல்லது இலக்கம் என்ன என்பது பற்றிய; அல்லது

(ii) அலுவலக முறையான குறியீடு பற்றிய-

தகவல் எதையும் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனுமொரு நோக்கத்திற்கன்றி, இக்கட்டளைச் சட்டத்தின் கீழான ஏதேனும் தேர்தலில் வாக்கெடுப்பு முடிவடையும் முன்னர் எவ் ஆளுக்கும் அறிவித்தலாகாது; அல்லது

(ஆ) அத்தகைய தேர்தலில் வாக்குகள் எண்ணப்படுகையில் ஏதேனு மொரு வாக்குச்சீட்டின் பிற்புறத்திலுள்ள இலக்கத்தை மனதில் நிச்சயித்தலாகாது அல்லது மனதில் நிச்சயிக்க எத்தனித் தலாகாது; அல்லது [பி77, 1977இன் 24]

(இ) குறிப்பிட்டவொரு வாக்குச்சீட்டில் எவ்வேட்பாளருக்கு வாக் களிக்கப்பட்டுள்ளதென, அத்தகைய வாக்கெண்ணுகையின் போது கிடைக்கப் பெற்ற எத்தகவலையும் அறிவித்தலாகாது.

(4) ஆளெவரும், அவர் ஓராம் உட்பிரிவிற் குறிப்பிடப்பட்டவோர் அலுவலராக அல்லது முகவராக இருப்பினும் சரி இல்லாவிடினும் சரி- [பி77, 1977இன் 24]

(அ) இக்கட்டளைச் சட்டத்தின் கீழான எத்தேர்தலிலும் வாக்காள ரொருவர் வாக்களிக்கும் பொழுது தலையிடலாகாது அல்லது தலையிட எத்தனித்தலாகாது.

(ஆ) அந்நிலையத்திலுள்ள வாக்காளர் ஒருவர் அத்தகைய தேர்தலில் எந்த அங்கீகரிக்கப்பட்ட கட்சிக்கு அல்லது எந்தச் சுயேச்சைக் குழுவிற்கு வாக்களிக்கவிருக்கிறார் அல்லது வாக்களித்துள்ளார் என்ற தகவலை வாக்களிக்கும் நிலையமொன்றில் வேறு வழியில் பெறுதலாகாத அல்லது பெறுவதற்கு எத்தனித்தலாகாது; அல்லது [பி77, 1977இன் 24]

(இ) அந்நிலையத்திலுள்ள வாக்காளரொருவர், அத்தகைய தேர்தலில் எந்த அங்கீகரிக்கப்பட்ட கட்சிக்கு அல்லது எந்தச் சுயேச்சைக் குழுவிற்கு வாக்களிக்கவிருக்கிறார் அல்லது வாக்களித்துள்ளார் என்பது பற்றி, அல்லது அந்நிலையத்தில் வாக்காளரொருவருக்குக் கொடுக்கப்பட்ட வாக்குச்சீட்டின் பின்புறத்திலுள்ள இலக்கத்தைப் பற்றி வாக்கெடுப்பு நிலைய மொன்றில் கிடைக்கப்பெற்ற தகவல் எதனையும் எப்பொழு தாயினும் எவ்வாளுக்கும் அறிவிக்காதிருத்தல் வேண்டும், அல்லது [பி77, 1977இன் 24]

(ஈ) அத்தகைய தேர்தலிலுள்ள வாக்காளர் ஒருவரை எந்த அங்கீகரிக்கப்பட்ட கட்சிக்கு அல்லது எந்தச் சுயேச்சைக் குழு விற்கு ஆதரவாக அல்லது மாறாக வாக்குச்சீட்டில் குறியிட்டுள் ளாரென்று ஆள் எவரும் அறியுமாறு குறியிட்ட பின்னர் வாக்காளரின் வாக்குச்சீட்டைக் காண்பிக்குமாறு நேர்முக மாகவோ மறைமுகமாகவோ தூண்டாதிருத்தல் வேண்டும். [பி77, 1977இன் 24]

(4அ) வலிமையிழப்பிற்கு உட்பட்ட வாக்காளர் ஒருவரோடு அத்தகைய வாக்காளரின் வாக்குச்சீட்டை வாக்காளரினால் பணிக்கப்பட்டவாறு குறியிடுவதற்கும் வாக்குச்சீட்டுப் பெட்டியினுள் இடுவதற்குமென வாக்கெடுப்பு நிலையமொன்றுக்கு உடன்செல்லும் ஒவ்வோராளும் அத்தகைய வாக்களிப்பு பற்றிய இரகசியத்தைப் பேணுதலும் மற்றும் பேணுவதற்கு உதவுதலும் வேண்டும்; [பி3, 2011இன் 28]

(4ஆ) வலிமையிழப்பிற்கு உட்பட்ட வாக்காளர் ஒருவரின் வாக்குச் சீட்டை குறியிடுவதற்கு வாக்கெடுப்பு நிலையமொன்றுக்கு உடன்செல்லும்

ஒவ்வோராளினதும் இயைபான தகவல் பற்றிய பதிவேடொன்றைப் பேணுதல் தலைமைதாங்கும் அலுவலரின் கடமையாதல் வேண்டும்;

[பி3, 2011இன் 28]

(5) இக்கட்டளைச்சட்டத்தின் கீழான எத்தேர்தலிலும், அத்தகைய வாக்காளர் வாக்குச்சீட்டைப் பெற்ற பின்னரும் வாக்குச் சீட்டுப் பெட்டியுள் அதைப்போட முன்னரும் அக்கட்டளைச் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டவொரு நோக்கத்திற்காகக் கடமையாற்றுகின்ற வாக்கெடுப்பு நிலையமொன்றின் தலைமை தாங்கும் அலுவலர் ஒருவர் அல்லது மேற்கூறப்பட்ட நோக்கத்திற்காகக் கடமையாற்று கின்றவரும் தலைமை தாங்கும் அலுவலரினால் அதிகாரமளிக்கப்பட்ட வாரான ஆள் ஒருவர் தவிர்ந்தவருமான ஆள் எவரும், வாக்காளருடன் பேசாதிருத்தல் வேண்டும்.

"ஆணையாளர் பணிப்புகளை வழங்குதல். [பி56, 2012இன் 22]

76 அ. இக்கட்டளைச் சட்டத்தின் கீழான தேர்தலொன்றை நடாத்து வதில் ஏதேனும் கஷ்டம் எழுமாயின், ஆணையாளர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், எவையேனும் விசேட அல்லது எதிர்பாராச் சூழ்நிலைகளுக்காக ஏற்பாடு செய்யும் நோக்குடன் அல்லது எந்தக் கேள்வியை அல்லது கருமத்தைத் தீர்மானிப்பதற்காக அல்லது சீர்படுத்துவதற்காக இக்கட்டளைச் சட்டத்தினால் ஏற்பாடெதுவும் அல்லது பயனுள்ள ஏற்பாடெதுவும் செய்யப்படவில்லையோ அந்த ஏதேனும் கேள்வியை அல்லது கருமத்தைத் தீர்மானிப்பதற்கு அல்லது சீர்படுத்துவதற்கு அவசியமென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணிப்புகளையும் வழங்கலாம்.

தேர்தல்கள் சம்பந்தமான தவறுகள்

இரகசியம் பேணுதல் பற்றிய ஏற்பாடுகளை மீறுதல். [முதலாம் அட்டவணை 2023 இன் 21]

77. எழுபத்தாறாம் பிரிவின் ஏற்பாடுகள் எதனையும் மீறுகின்ற ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்ப தோடு நீதிவானொருவரின் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, இரண்டு இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப் பணத்திற்கு அல்லது ஆறுமாத காலத்திற்கு மேற்படாத குற்றப் பணத்திற்கு அல்லத ஆறுமாத காலத்திற்கு மேற்படாத இருவகையில் ஒருவகை மறியற்றண்டணைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

நியமனப் பத்திரங்கள், வாக்குச்சீட்டுக்கள் முதலியன தொடர்பான தவறுகள்.

*78.(1)(அ) ஏதேனுமொரு நியமனப் பத்திரத்தைப் போலியாகப் புனைகின்ற அல்லது அதை மோசடியாக உருவழிக் கின்ற அல்லது அதை மோசடியாக அழித்து விடுகின்ற அல்லது அந்நியமனப் பத்திரம் போலியானதெனத் தெரிந்து கொண்டு ஏதேனுமொரு நியமனப் பத்திரத்தைத் தெரிவத்தாட்சி அலுவலரொருவருக்கு ஒப்படைக்கின்ற, அல்லது

* 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தின் 58 ஆம் பிரிவினால் 78 (1) (அஅ) உட்பிரிவு நீக்கஞ்செய்யப்பட்டுள்ளது.

(ஆ) ஏதேனுமொரு வாக்குச்சீட்டை அல்லது அச்சீட்டிலுள்ள அலுவலக முறையான குறியீட்டைப் போலியாகப் புனைகின்ற அல்லது அவற்றைப் பொய்யாகப் புனைகின்ற அல்லது மோசடியாக உருவழிக்கின்ற அல்லது மோசடியாக அழித்துவிடுகின்ற, அல்லது

(இ) முறையான அதிகாரமின்றி ஏவரேனுமொருவருக்கு ஏதேனும் வாக்குச்சீட்டை வழங்குகின்ற, அல்லது

(ஈ) எவரேனுமொருவருக்கு வாக்குச் சீட்டெதனையும் விற்பனை செய்கின்ற அல்லது விற்பனை செய்ய முனைகின்ற அல்லது எவரேனுமொருவரிடமிருந்து வாக்குச் சீட்டெதனையும் கொள்வனவு செய்கின்ற அல்லது கொள்வனவு செய்ய முனைகின்ற, அல்லது

(உ) 52 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, அலுவலக முறையான குறியீட்டினால் குறிப்பிடப்பட்ட ஏதேனுமொரு வாக்குச் சீட்டை உடைமையாக வைத்திருப்பதற்கு இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் உரித்துடைய ஒருவராக இராமல் அத்தகைய வொரு வாக்குச்சீட்டை உடைமையாக வைத்திருக்கின்ற, அல்லது

(உஉ) வாக்கெடுப்பு நிலையமொன்றினுள் குறியிடப்பட்ட வாக்குச் சீட்டொன்றை வேண்டுமென்று வெளிக்காட்டுகின்ற, அல்லது

(ஊ) இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் ஏதேனும் வாக்குச் சீட்டுப் பெட்டியுள் போடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வாக்குச்சீட்டுத் தவிர்ந்த வேறு எதனையும் அந்த வாக்குச்சீட்டுப் பெட்டியுள் போடுகின்ற, அல்லது [பி27, 1987இன் 24]

(எ) முறையான அதிகாரமின்றி, ஏதேனுமொரு வாக்குச்சீட்டை வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்கின்ற, அல்லது

(ஏ) இக்கட்டளைச்சட்டத்தின் கீழான ஏதேனும் தேர்தலின் நோக்கங்களுக்கென உபயோகிக்கப்படுகின்ற அல்லது உபயோகிப்பதற்குக் கருதப்படுகின்ற ஏதேனுமொரு வாக்குச்சீட்டுப் பெட்டியை அல்லது வாக்குச்சீட்டுப் பொதியை முறையான அதிகாரமின்றி அழிக்கின்ற, எடுக்கின்ற, திறக்கின்ற அல்லது வேறு வகையில் அவற்றுடன் தலையிடுகின்ற, அல்லது

(ஐ) முறையான அதிகாரமின்றி வாக்குச்சீட்டெதனையும், அல்லது அதுவாகக் கருதப்படக்கூடிய எதனையும், அல்லது அத்தகைய தேர்தலில் அதுவாக உபயோகிக்கப்படக்கூடிய எதனையும் அச்சிடுகின்ற, அல்லது

(ஒ) வாக்குச்சீட்டுப் பெட்டியொன்றினுள் வாக்குச்சீட்டொன்று இடப்பட்ட பின்னர் அதை வெளியே எடுக்கக்கூடிய, அல்லது அதைப் பாதிக்கக்கூடிய அல்லது கைத்திறமையால் தாக்கக் கூடியதோர் ஆயுதத்தை அல்லது கருவியை அல்லது இயந்திரத்தை அத்தகைய தேர்தலின் நோக்கங்களுக்கென உற்பத்தி செய்கின்ற, அல்லது அமைக்கின்ற அல்லது இலங்கையுள் இறக்குமதி செய்கின்ற, அல்லது அவரது உடைமையில் வைத்திருக்கின்ற, அல்லது வழங்குகின்ற, அல்லது

உபயோகிக்கின்ற, அல்லது அத்தகைய தேர்தலின் நோக்கங்களுக்கென உற்பத்தி செய்விக்கின்ற அல்லது அமைப்பிக்கின்ற அல்லது இலங்கையுள் இறக்குமதி செய்விக்கின்ற அல்லது வழங்குவிக்கின்ற அல்லது உபயோகிக்கச் செய்கின்ற,

(ஓ) இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் அஞ்சல் வாக்களரொருவராக கணிக்கப்படுவதற்கான ஏதேனும் விண்ணப்பத்தில், அல்லது ஒன்பதாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின் கீழ் அவருக்கு அனுப்பப்பட்ட ஏதேனும் ஆளடையாளம் பற்றிய வெளிப்படுத்துகையில் வேண்டுமென்று பொய்யான கூற்றொன்றைச் செய்கின்ற, அல்லது

[பி27, 1987இன் 24]

(ஔ) ஒன்பதாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின் கருத்தெல்லையினுள் அஞ்சல் வாக்களரொருவராகக் கணிக்கப்படுவதற்கான ஏதேனும் விண்ணப்பத்தை அல்லது ஏதேனும் ஆளடையாளம் பற்றிய வெளிப்படுத்துகையை அல்லது ஏதேனும் மேலுறையை வாக்குச்சீட்டு, உறையை, முறையான அதிகாரமின்றி அழிக்கின்ற, எடுக்கின்ற திறக்கின்ற அல்லது வேறு வகையில் குழப்புகின்ற அல்லது அதனோடு தலையிடுகின்ற,

[பி27, 1987இன் 24]
[முதலாம் அட்டவணை 2023 இன் 21]

ஆள் ஒவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரினால் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து இரண்டு இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாத காலத்திற்கு மேற்படாத காலத்துக்கான இருவகையில் ஒருவகை மறியற்றண்டணைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) இப்பிரிவின் குறித்துரைக்கப்பட்டுள்ள தவறொன்றைச் செய்வதற்கு உதவிபுரிகின்ற அல்லது உடந்தையாயிருக்கின்ற அல்லது எத்தனிக்கின்ற ஆள் ஒவ்வொருவரும், அத்தவறுக்கென ஏற்பாடு செய்யப்பட்ட அதே தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

(3) இக்கட்டளைச் சட்டத்தின் கீழான எத்தேர்தலிலும் நியமனப் பத்திரங்கள், வாக்குச்சீட்டுக்கள், வாக்குச்சீட்டுப் பெட்டிகள், குறியிடுகின்ற கருவிகள் ஆகியவை சம்பந்தமான தவறொன்றிற்கான குற்ற வழக்கு எதிலும் அச்சீட்டுகள், பெட்டிகள், கருவிகள், அடியிதழ்கள் ஆகியவை, அத்தகைய தேர்தலில் கடமையாற்றும் தெரிவத்தாட்சி அலுவலரின் உடைமையாகுமெனக் கூறப்படலாம்.

வாக்கெடுக்கும் நாளன்று குறிப்பிட்ட சில செயல்கள் புரிதலை தடைசெய்தல்.
(பி 17, 1963 இன் 9)
(பி18, 1965 இன் 15)
(பி80, 1977 இன் 24)

*81அ.(1) ஆளெவரும் வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்கெடுப்பு நடாத்தப்படுகின்ற ஏதேனுமொரு தேதியில், அவ்வாக்கெடுப்பு நிலையத்தின் வாசலிலிருந்து கால் மைல் தூர எல்லைக்குள் பின்வரும் செயல்களெதனையும் செய்தலாகாது:-

(அ) வாக்குகளுக்கென ஆதரவு நாடுதல்;

(ஆ) எவரேனுமொரு வாக்காளரின் வாக்கைப் பரிந்துகேட்டல்;

* 2002 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் 79, 80, 81 ஆம் பிரிவுகள் நீக்கஞ்செய்யப்பட்டுள்ளன.

(இ) ஏதேனும் குறிப்பிட்டவொரு அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் எவரேனும் வேட்பாளருக்கு வாக்களிக்காது விடும்படி எவரேனும் வாக்காளரை வற்புறுத்துதல்; [பி59, 2012இன் 22]

(ஈ) தேர்தலில் வாக்களிக்க வேண்டாமென வாக்காளரொருவரை வற்புறுத்துதல்;

(உ) அலுவலக முறையிலான துண்டுபிரசுரம், ஓட்டு விளம்பரம், சுவரொட்டி அல்லது அறிவித்தல் எதனையும் தவிர தேர்தல் தொடர்பான துண்டுப்பிரசுரம், ஓட்டு விளம்பரம், சுவரொட்டி அல்லது அறிவித்தல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியெதற்கும் அல்லது சுயேச்சைக் குழுவெதற்கும் 37 ஆம் பிரிவின் கீழ்க் குறித்தொதுக்கப்பட்ட சின்னம் எதனையும் விநியோகித்தல் அல்லது காட்சிக்கு வைத்தல். [பி80, 1977இன் 24]

(2) ஏதேனுமொரு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்கெடுப்பு நடைபெறுகின்ற எத்தேதியிலும் ஆள் ஒருவர், வாக்களிப்பதற்காக வாக்கெடுப்பு நிலையத்திற்கு வருகின்ற எவரேனுமோர் ஆளுக்குத் தொந்தரவு செய்யும் வண்ணம் அல்லது வாக்கெடுப்பு நிலையத்திற் கடமையாற்றுகின்ற அலுவலர்களினதும் மற்றைய ஆட்களினதும் வேலையில் தலையிடும் வண்ணம்- [பி17, 1963இன் 9]

(அ) வாக்கெடுப்பு நிலையத்தினுள் அல்லது அதன் வாசலில் அல்லது அதன் அண்மையிலுள்ள ஏதேனும் பொது இடத்தில் அல்லது தனிப்பட்ட இடத்தில் ஏதேனும் ஒலிபரப்பியை அல்லது ஒலிபெருக்கியை அல்லது மனிதக் குரலின் ஒலியைப் பெரிதாக்குவதற்கான அல்லது மீளவெளியிடுவதற்கான வேறேதேனும் உபகரணத்தை உபயோகித்தலாகாது அல்லது இயக்குதலாகாது; அல்லது

(ஆ) வாக்கெடுப்பு நிலையத்தினுள் அல்லது அதன் வாசலில், அல்லது அதன் அண்மையிலுள்ள ஏதேனும் பொது இடத்தில் அல்லது தனிப்பட்ட இடத்தில் சத்தம் போடலாகாது அல்லது வேறு வகையில் ஒழுங்கீனமான முறையில் நடத்தலாகாது.

(2அ) (அ) அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியெதனாலும் அல்லது சுயேச்சைக் குழுவெதனாலும் தேர்தற் பிரதேசம் எதற்குமான எத்தேர்தலிலும் வேட்பாளராக நியமிக்கப்பட்ட ஆளெவரும், அத்தகைய தேர்தலில் வாக்கெடுப்பு நடைபெறும் நாளன்று, அங்கீகரிக்கப்பட்ட அந்த அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் வேட்பாளர் தெரிவு செய்யப்படுதலுக்கு ஆதரவு திரட்டுவதற்கான நோக்கத்திற்காக, அப்பிரதேசத்தில் அத்தகைய வேட்பாளரின் சாதாரண வதிவிடத்தைத் தவிர (தற்காலிகமாகவாயினுஞ்சரி வேறு வகையாகவாயினுஞ்சரி) ஏதேனும் கட்டடத்தை அல்லது கட்டட அமைப்பைப் பயன்படுத்தலாகாது; அல்லது [பி18, 1965இன் 15] [பி80, 1977இன் 24]

(ஆ) தேர்தல் பிரதேசம் எதற்குமான எத்தேர்தலிலும் நியமன காலப்பகுதியின் முதலாம் நாளன்று தொடங்கி அத்தகைய தேர்தலில் வாக்கெடுப்பு நடைபெறும் தேதியை உடனடுத்து [பி80, 1977இன் 24]

வரும் நாளன்று முடிவடையும் காலப்பகுதியின்போது, எப்போதாயினும் ஆளெவரும், எவ்வாண்டிலும் மே 1 ஆம் தேதிய ஊர்வலம் (மேதின ஊர்வலம்) தவிர்ந்த ஊர்வலத்தை அல்லது சமய அல்லது சமூக நோக்கங்களுக்கான ஏதேனும் ஊர்வலம் தவிர்ந்த வேறு ஊர்வலம் எதனையும் கூட்டுதல், நடாத்துதல் அல்லது அதில் பங்குபற்றுதல் ஆகாது: அல்லது

(இ) இவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட காலத்தின்போது கூட்டப்பட்ட அல்லது நடாத்தப்பட்ட ஏதேனுமோர் ஊர்வலத்தில் மேற்கூறப்பட்ட (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட தெரிவு செய்தலுக்கு ஆதரவு கோருகின்றதற்கான செயலை அல்லது கருமத்தை ஆள் எவரும் செய்தலாகாது.

(பி 17, 1963 இன் 9)
(பி 18, 1965 இன் 15)
(முதலாம் அட்டவணை 2023 இன் 21)

(3) ஓராம், இரண்டாம் உட்பிரிவுகளின் அல்லது (2அ) என்னும் உட்பிரிவின் ஏற்பாடுகளெதனையும் மீறுகின்ற ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரினால் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுமிடத்து ஐம்பதாயிரம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது ஒரு மாதகாலத்திற்கு மேற்படாத காலத்துக்கான இருவகையில் ஒருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(பி17 1963 இன் 9)

(4) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறாது தடுப்பதற்கென நியாயமாக அவசியமாகக்கூடிய அத்தகைய நடவடிக்கைகளை எவரேனுமொரு பொலிசு அலுவலர் எடுத்தல் வேண்டுமென்பதுடன் அதற்கான வலோத்காரத்தையும் உபயோகித்து, அத்தகைய மீறுதலுக்கென உபயோகிக்கப்பட்ட ஏதேனும் உபகரணத்தையும் கைப்பற்றலாம்.

(பி17 1963 இன் 9)

(5) இப்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட தவறொன்றைச் செய்வதற்கு எத்தனிக்கின்ற ஆள் ஒவ்வொருவரும் அவற்றிற்கென விதித்துரைக்கப்பட்ட தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

(பி17 1963 இன் 9)

(6) இப்பிரிவின் கீழான ஒவ்வொரு தவறும் குற்றவியல் நடவடிக்கை முறைச்சட்டக் கோவைச் சட்டத்தின் கருத்திற்குட்பட, பிடியாணையின்றிக் கைது செய்யக்கூடியவொரு தவறாதல் வேண்டும்.

துண்டுப் பிரசாரங்கள், சுவரொட்டிகள் முதலியனவற்றை வெளிக்காட்டி வைத்தல் தொடர்பான ஏற்பாடுகள் [பி17 1963 இன் 9]

81ஆ. (1) இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் ஏதேனும் தேர்தலுக்கான நியமான காலப்பகுதியின் முதலாம் நாளன்று தொடங்கி அத்தகைய தேர்தலில் வாக்கெடுப்பு நடைபெறும் நாளை அடுத்துவரும் நாளன்று முடிவடையும் காலப்பகுதியின்போது, அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் அல்லது சுயேச்சைக் குழுவொன்றின் வேட்பாளர் எவரும் அத்தகைய, தேர்தலில் தெரிவு செய்யப்படுவதற்கு ஆதரவு திரட்டும் நோக்கங்களுக்காக, ஆளெவரும் -

(அ) ஏதேனும் பொது வளவிலாயினுஞ்சரி அல்லது தனியாளுக்குரிய வளவிலாயினுஞ்சரி, அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றினால் அல்லது சுயேச்சைக் குழுவொன்றினால் அத்தகைய தேர்தலில் நியமிக்கப்பட்ட ஒரு வேட்பாளரின் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் வாகனத்தில் அல்லது அதன்மேல் அல்லாது, ஏதேனும் கொடியை அல்லது பதாகையை அல்லது: [பி19, 1965 இன் 15] [பி81, 1977 இன் 24]

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றினால் அல்லது சுயேச்சைக் குழுவொன்றினால் அத்தகைய தேர்தலில் நியமிக்கப்பட்ட வேட்பாளருக்கு ஆதரவாக ஒரு கூட்டம் வளவெதிலும் நடைபெறுவதற்குரிய நாளன்று அத்தகைய வளவில் அல்லது அத்தகைய வளவின்மேல் தவிர, பொதுமக்கள் சென்றடைவதற்கு உரிமையுள்ள அல்லது அவர்கள் சென்றடைவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள இடமெதிலும் துண்டுப் பிரசாரம், ஒட்டு விளம்பரம், சுவரொட்டி அறிவித்தல் அல்லது அடையாளம் எதனையும் : அல்லது

(இ) பொது வீதி எதன்மேலும் அல்லது பொது வீதிக்குக் குறுக்காகத் துண்டுப் பிரசுரம், ஒட்டு விளம்பரம், சுவரொட்டி அறிவித்தல் அல்லது அடையாளம், கொடி அல்லது பதாகை எதனையும் : அல்லது

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றினால் அல்லது சுயேச்சைக் குழுவொன்றினால் அத்தகைய தேர்தல் நியமிக்கப்பட்ட வேட்பாளரின் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் வாகனத்தில் அல்லது அதன்மேல் தவிர, ஏதேனும் வாகனத்தில் அல்லது வாகனத்தின்மேல் துண்டுப் பிரசாரம், ஒட்டு விளம்பரம், சுவரொட்டி அறிவித்தல் அல்லது அடையாளம் எதனையும், வெளிக்காட்டிவைத்தலாகாது.

(1அ) இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் கீழான ஏதேனும் தேர்தலுக்கான நியமன காலப்பகுதியின் முதலாவது நாளன்று தொடங்குகின்றதும், அத்தகைய தேர்தலிலான வாக்கெடுப்பு எந்தாளன்று நடைபெறுகின்றதோ அந்நாளை அடுத்துவரும் நாளன்று முடிவடைகின்றதுமான காலப் பகுதியின்போது –

(அ) அமைச்சரெவரும், பிரதியமைச்சரெவரும், பாராளுமன்ற உறுப்பினரெவரும், ஏதேனும் மாகாண சபையின் அமைச்சர்கள் சபையின் அமைச்சரெவரும் அல்லது மாகாண சபையொன்றின் உறுப்பினரெவரும் அல்லது வேறு அதிகாரியெவரும் – [பி.60.2012 இன் 22] [பி.30. 2017 இன் 16]

(அ) (i) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சிக்கு அல்லது ஏதேனும் சுயேச்சைக் குழுவுக்குச் சாதகமாக வாக்களிப்பதற்கு வாக்காளர்கள்மீது செல்வாக்குச் செலுத்துகின்ற பயனைக் கொண்டிருக்கக்கூடிய ஏதேனும் பகிரங்க நிறுவனத்திலான நியமனங்கள் எவையும் செய்யப்படுதலாகாது :

(ii) உட்பந்தி (i) இல் எது எவ்வாறிருப்பினும், அவசரமாகவுள்ள எந்த அத்தியாவசியமான சேவைகளைப் பிற்போடுதல் பொதுமக்களின் வழமையான வாழ்க்கையைப் பாதிக்குமோ அல்லது பொதுமக்களுக்குப் பாரதூரமான இடையூறுகளை அல்லது தீங்கை விளைவிக்குமோ அந்த அத்தியாவசியமான சேவைகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அத்தகைய நிறுவனத்திலான ஏதேனும் நியமனம் செய்யப்படலாம்: அத்துடன்

(ஆ) அமைச்சரெவரும் அல்லது ஏதேனும் மாகாண சமையின் அமைச்சர்கள் சபையின் அமைச்சரெவரும், வாக்கெடுப்பின் போது அல்லது வாக்குகளை எண்ணும் போது, அவரது வாக்கை அளிக்கும் நோக்கத்திற்கு தவிர ஏதேனும் வாக்கெருப்பு நிலையத்தினுள் பிரவேசித்தலாகாது.

(முதலாம் அட்டவணை 2023 இன் 21)

(2) ஓராம் அல்லது (1அ) என்னும் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுள் எவற்றையும் மீறுகின்ற ஆள் ஒவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன். நீதிவானொருவரினால் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுமிடத்து, ஐம்பதாயிரம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது ஒரு மாதகாலத்திற்கு மேற்படாத காலத்துக்கான இருவகையில் ஒருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம். மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

[பி17, 1963 இன் 9]

(3) இப்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட தவறொன்றைச் செய்வதற்கு எத்தனிக்கின்ற ஆள் ஒவ்வொருவரும். அத்தவறுக்கென விதித்துரைக் கப்பட்ட தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

[பி17, 1963 இன் 9]

(4) இப்பிரிவின்கீழ் ஒவ்வொரு தவறும், குற்றவியல் நடவடிக்கை முறைச்சட்டக் கோவையின் கருத்திற்குட்பட பிடியாணையின்றிக் கைதுசெய்யக் கூடியவொரு தவறாதல் வேண்டும்.

[பி17, 1963 இன் 9]
[பி60, 2012 இன் 22]

(5) ஓராம் உட்பிரிவின் அல்லது 1(அ) என்னும் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறாது தடுப்பதற்கென நியாயமாக அவசியமாகக்கூடிய அத்தகைய நடவடிக்கைகளை எவரேனுமொரு பொலிசு அலுவலர் எடுக்கலாம் என்பதுடன் அதற்கான வலோற்காரத்தையும் உபயோகித்து, அவ்வேற்பாடுகளை மீறுவதில் உபயோகிக்கப்பட்ட ஏதேனுமொரு துண்டு விளம்பரம், ஒட்டு விளம்பரம், சுவரொட்டி, அறிவித்தல், அடையாளம், கொடி அல்லது பதாகை என்பவற்றைக் கைப்பற்றலாம், அத்துடன் அகற்றியும் விடலாம்.

பன்முறை வாக்களித்தல்
[பி84, 1977 இன் 24]

[பி61, 2012 இன் 22]

*82. ஆளெவரும் இக்கட்டளைச் சட்டத்தின் கீழான பொதுத் தேர்தல் எதிலும் ஒரே வட்டாரத்திலாயினுஞ்சரி அல்லது ஒரே தேர்தற் பிரதேசத்திலாயினுஞ்சரி, ஒருமுறைக்குமேல் வாக்களித்தால் அல்லது அவ்வாறு வாக்களிப்பதற்காக வாக்குச் சீட்டுத் தருமாறு கேட்டால், இத்தகைய ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன். நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், ஓராண்டுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கான கடூழிய மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

ஆள்மாறாட்ட வாக்களிப்பு.
[பி5, 2002 இன் 1]
[பி6, 2002 இன் 1]

"ஊழல் பழக்கங்கள்"

82. (1) ஏதேனும் தேர்தலில்

(அ) நேரடியாக அல்லது அஞ்சல் மூலமாக வேறாளாக வாக்களிக்கும் ஆளொவ்வொருவரும், அந்த வேறு ஆள் உயிரோடிருந்தாலுஞ்

* 2002 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் 81இ, 81ஈ நீக்கப்பட்டுள்ளது.

சரி அல்லது இறந்திருந்தாலுஞ்சரி அல்லது கற்பனை ஆளாக இருப்பினுஞ்சரி : அல்லது

(ஆ) அத்தகைய தேர்தலில் ஒரு தடவைக்கு மேல், தனது சொந்தப் பெயரில் அல்லது சொந்தப் பெயரின் கீழ் வாக்களிக்கும் ஆளொவ்வொருவரும்

ஆள்மாறாட்டம் என்னும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும். அது 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் பிடியாணையின்றிக் கைது செய்யப்படக் கூடிய தவறொன்றாதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக -

(அ) நேரடியாக வாக்களிக்கும் நோக்கத்திற்காக வாக்குச் சீட்டொன்றுக்காக விண்ணப்பித்துள்ள : அல்லது

(ஆ) அஞ்சல் வாக்காளரொருவராகக் கணிக்கப்படுவதற்கான விண்ணப்பம் ஒன்றைச் செய்திருக்கும் : அல்லது

(இ) அஞ்சல் மூலம் வாக்களிக்கும் நோக்கத்துக்காக வழங்கப்பட்ட வாக்குச்சீட்டு ஒன்றைச் செல்லுபடியானவாறோ அல்லாதவாறோ குறியீடு செய்து திருப்பி அனுப்பியிருக்கும்,

ஆளொருவர் வாக்களித்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

உபசாரம் செய்தல்.

82ஆ. எவரேனும் ஆளுக்கு அல்லது ஆளுக்காக அந்த ஆளை அல்லது வேறு எவரேனும் ஆளை இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் தேர்தலொன்றில் அவரது வாக்கை அளிக்க அல்லது அளிக்காது விலகியிருக்க என ஊழலாகச் செல்வாக்குப் பிரயோகிக்கும் நோக்கத்துக்காக அல்லது அத்தகைய எவரேனும் ஆள் அல்லது வேறு எவரேனும் ஆள் அத்தகைய தேர்தலில் வாக்களித்திருந்தமை காரணமாக அல்லது வாக்களிக்காது விலகியிருந்தமை காரணமாக அல்லது வாக்களிக்க இருக்கின்றமை காரணமாக அல்லது வாக்களிக்காது விலகியிருக்கின்றமை காரணமாக, ஏதேனும் தின் பண்டத்தை, பானத்தை, சிற்றுண்டியை அல்லது உணவு வகையை சம்பாதித்தலை இயலச் செய்வதற்காக ஏதேனும் பணத்தை அல்லது சீட்டை அல்லது வேறு வழிவகைகளை அல்லது உபாயத்தை, ஒன்றில் அத்தகைய தேர்தலுக்கு முன்னர் அல்லது அத்தகைய தேர்தலின் போது அல்லது அத்தகைய தேர்தலின் பின்னர் தாமே அல்லது வேறு எவரேனும் ஆள் மூலமாக நேரடியாக அல்லது மறைமுகமாக ஊழலாக வழங்கும் அல்லது ஏற்பாடு செய்யும் அல்லது வழங்கவிருக்கும் அல்லது ஏற்பாடு செய்விக்கும் அல்லது வழங்குதலுக்கு அல்லது ஏற்பாடு செய்தலுக்குத் துணையாளியாக இருக்கும் அல்லது வழங்கலுக்கான அல்லது ஏற்பாடு செய்தலுக்கான செலவை முழுமையாக அல்லது பகுதியளவில் செலுத்தும் அல்லது செலுத்த ஒப்புக் கொள்ளும் ஒவ்வோர் ஆளும் அத்துடன், அத்தகைய ஏதேனும் தின்பண்டத்தை, பானத்தை, சிற்றுண்டியை அல்லது உணவு வகையை அல்லது [பி6, 2002 இன் 1]

ஏதேனும் அத்தகைய பணத்தை அல்லது சீட்டை ஊழலாக ஏற்றுக்கொள்ளும் அல்லது அத்தகைய தின்பண்டத்தை, பானத்தை, சிற்றுண்டியை அல்லது உணவு வகையை சம்பாதிக்க இயலச் செய்வதற்கான அத்தகைய வேறு வழிவகைகளை அல்லது உபாயத்தை ஏற்றுக் கடைப்பிடிக்கும் ஒவ்வொரு தேருநரும் உபசாரஞ் செய்தலெனும் தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

தகாத செல்வாக்கு [பி6, 2002 இன் 1]

82இ. (1) எவரேனும் ஆள்மீது அல்லது ஆளுக்கெதிராக, இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் தேர்தலொன்றில் அத்தகைய ஆள் வாக்கை அளிக்க அல்லது அளிக்காது விலகியிருக்கத் தூண்டும் பொருட்டு அல்லது வற்புறுத்தும் பொருட்டு அல்லது அத்தகைய ஆள் வாக்களித்தமை காரணமாக அல்லது வாக்களிக்காது விலகியிருந்தமை காரணமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தாமே அல்லது அவர் சார்பில் வேறெவரேனும் ஆள் மூலமாக, ஏதேனும் வலோத்காரத்தை, வன்முறையை அல்லது மட்டுப்பாட்டை பயன்படுத்துகின்ற அல்லது பயன்படுத்தப்போவதாகப் பயமுறுத்துகின்ற அல்லது தாமே அல்லது வேறெவரேனும், ஆள் மூலமாக, ஏதேனும் லௌகீக அல்லது ஆத்மீக ஊறை, சேதத்தை அல்லது தீங்கை அல்லது நட்டத்தை விளைவிக்கின்ற அல்லது விளைவிக்கப் போவதாகப் பயமுறுத்துகின்ற அல்லது ஆட்கடத்தல் மூலம், பலவந்தம் மூலம் அல்லது ஏதேனும் மோசடியான உபாயத்தினால் அல்லது சூழ்ச்சியினால், தேருநர் எவரேனும் அவரது வாக்கைச் சுயாதீனமாகப் பிரயோகித்தலைத் தடங்கல் செய்கின்ற அல்லது தடுக்கின்ற அல்லது அதன்மூலம் அத்தகைய தேர்தலில் தேருநர் எவரேனும் அவரது வாக்கை அளிக்கும்படி அல்லது அளிக்காது விலகியிருக்கும்படி அவரை வற்புறுத்துகின்ற, தூண்டுகின்ற அல்லது பற்றி நிற்கின்ற ஆளொவ்வொருவரும் தகாத செல்வாக்கு என்னும் தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இக்கட்டளைச் சட்டத்தின்கீழான ஏதேனும் தேர்தலில், நியமன காலப்பகுதியின் முதலாம் நாளன்று தொடங்குவதும் அத்தகைய தேர்தல் வாக்கெடுப்புத் தேதியை அடுத்துவரும் நாளன்று முடிவடைவதுமான காலப் பகுதியின்போது, எப்போதாயினும்-

[பி62, 2012இன் 22]

(அ) அத்தகைய தேர்தல் முடிவில் மாற்றம் உண்டு பண்ணும் நோக்கத்திற்காக எவரேனும் வேட்பாளரக்கு அத்தகைய தேர்தலில் வாக்களிக்கும்படி அல்லது வாக்களிக்காது விலகியிருக்கும்படி தேருநர் எவரையும் தூண்டும் நோக்கத்திற்காக சமயக் கூட்டமெதிலும் எவையேனும் சொற்களை உரைக்கும் ; அல்லது

(ஆ) அத்தகைய நோக்கத்திற்காக, சமயக் கூட்டம் எதிலும் துண்டுப் பிரசுரம், ஒட்டு விளம்பரம், சுவரொட்டி, சித்திரம், அறிவித்தல், வேட்பாளரொருவரின் புகைப்படம், சின்னம், அடையாளம், கொடி அல்லது

பதாகை எதனையும் விநியோகிக்கும் அல்லது வெளிக்காட்டும் ; அல்லது

(இ) வேட்பாளர் எவருக்கும் ஆதரவு திரட்டும் அல்லது தனது தேர்தல் பிரசாரத்துக்கு ஆதரவு திரட்டும் நோக்கத்திற்காக வழிபாட்டிடமொன்றில் பொதுக் கூட்டமொன்றை நடாத்தும் அல்லது நடத்தும்படி செய்யும். [பி62, 2012 இன் 22]

ஆளொவ்வொருவரும், தகாத செல்வாக்கு என்னும் தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(3) சமயப் பணித்துறை அமைப்பொன்றின் அல்லது ஒழுங்கமைப் பொன்றின் எவரேனும் உறுப்பினரை அல்லது பற்றாளரை இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் தேர்தலொன்றின் வேட்பாளர் எவருக்கும் வாக்களிக்க அல்லது வாக்களிக்காது விலகியிருக் கின்ற அல்லது அத்தகைய தேர்தலில் வேட்பாளர் எவருக்கும் ஆதரவளிக்க அல்லது ஆதரவளிக்காது விலகியிருக்கத் தூண்டும் பொருட்டு அல்லது வற்புறுத்தும் பொருட்டு அல்லது அத்தகைய உறுப்பினர் அல்லது பற்றாளர் அத்தகைய தேர்தலில் வேட்பாளர் எவருக்கும் வாக்களித்திருந்தமை காரணமாக அல்லது வாக்களிக்காது விலகியிருந்தமை காரண மாக அல்லது அத்தகைய தேர்தலில் அத்தகைய வேட்பாளர் எவருக்கும் ஆதரவளித்தமை காரணமாக அல்லது ஆதரவளிக்காது விலகியிருந்தமை காரணமாக - [பி62, 2012 இன் 62]

(அ) சமயப் பணித்துறை அமைப்பின் அல்லது ஒழுங்கமைப்பின் அத்தகைய உறுப்பினர் அல்லது பற்றாளர் அல்லது அத்தகைய உறுப்பினரின் அல்லது பற்றாளரின் குடும்ப உறுப்பினரெவருக்கும், சாதாரணமாக அத்தகைய உறுப்பினருக்கு அல்லது பற்றாளருக்கு உரித்தாயிருக்கும் ஏதேனும் ஆத்மீகத் தொண்டு, சேவை அல்லது அத்தகைய நலவுதவி எதனையும் அளிக்க மறுக்கும் அல்லது அளிக்க மறுப்பதாகப் பயமுறுத்தும் : அல்லது

(ஆ) அத்தகைய பணித்துறை அமைப்பிலிருந்து அல்லது ஒழுங்கமைப்பிலிருந்து அத்தகைய உறுப்பினரை அல்லது பற்றாளரை விலக்கும் அல்லது விலக்கப் போவதாகப் பயமுறுத்தும்.

அத்தகைய சமயப் பணித்துறை அமைப்பின் அல்லது ஒழுங்கமைப்பின் எவரேனும் உறுப்பினர் அல்லது அலுவலர் தகாத செல்வாக்கு என்னும் தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(4) வேறு எவரேனும் ஆளின் தொழில்தருநராகவிருந்துகொண்டு வேட்பாளர் எவருக்கும் இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் தேர்தலொன்றில் வாக்களிக்க அல்லது வாக்களிக்காது விலகியிருக்க அல்லது வேட்பாளர் எவரினது அத்தகைய தேர்தலில் ஆதரவளிக்க அல்லது ஆதரவளிக்காது விலகியிருக்க

அத்தகைய வேறு ஆளைத் தூண்டும் பொருட்டு அல்லது வற்புறுத்தும் பொருட்டு அல்லது அத்தகைய வேறு ஆள் வேட்பாளர் எவருக்கும் அத்தகைய தேர்தலில் வாக்களித்திருந்தமை காரணமாக அல்லது வாக்களிக்காது விலகியிருந்தமை காரணமாக அல்லது வேட்பாளர் எவருக்கும் அத்தகைய தேர்தலில் ஆதரவளித்தமை காரணமாக அத்தகைய தேர்தலில் ஆதரவளிக்காது விலகியிருந்தமை காரணமாக -

(அ) அத்தகைய தொழிலை முடிவுறுத்துகின்ற அல்லது முடிவுறுத்தப்போவதாகப் பயமுறுத்துகின்ற ; அல்லது

(ஆ) அத்தகைய தொழிற்போக்கில் சாதாரணமாக அத்தகைய வேறு ஆள் ஏற்கனவே துய்த்த அல்லது துய்த்திருக்கக்கூடிய ஏதேனும் நலவுதவியை அல்லது சேவையை அத்தகைய வேறு ஆளுக்கு அளிக்க மறுக்கும் அல்லது அளிக்க மறுக்கப்போவதாகப் பயமுறுத்தும்.

ஆளெவரும் தகாத செல்வாக்கு என்னும் தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

இலஞ்சம்.
[பி6, 2002 இன் 1]

82ஈ. பின்வரும் ஆட்கள் இலஞ்சம் என்னும் தவறுக்குக் குற்றவாளிகளெனக் கருதப்படுதல் வேண்டும்:

(அ) எவரேனும் தேருநருக்கு அல்லது தேருநருக்காக அல்லது எவரேனும் தேருநர் சார்பாக எவரேனும் ஆளுக்கு அல்லது ஆளுக்காக அல்லது வேறெவரேனும் ஆளுக்கு அல்லது ஆளுக்காக. எவரேனும் தேருநரை வாக்களிக்க அல்லது வாக்களிக்காது விலகியிருக்கத் தூண்டும்பொருட்டு ஏதேனும் பணத்தை அல்லது பெறுமதி கொண்ட பிரதி பயனை, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அவரோ அல்லது அவர் சார்பாக வேறெவரேனும் ஆள் மூலமோ கொடுக்கும், கடன் கொடுக்கும் அல்லது கொடுக்க அல்லது கடன் கொடுக்க உடன்படும் அல்லது முன்வரும், வாக்குறுதி செய்யும் பெற்றுக் கொடுக்க வாக்குறுதியளிக்கும் அல்லது இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் தேர்தல் ஒன்றில் அத்தகைய தேருநர் வாக்களித்திருந்தமை காரணமாக அல்லது வாக்களிக்காத விலகியிருந்தமை காரணமாக மேற்சொல்லப்பட்டவாறு ஊழலாக அத்தகைய எவையேனும் செயலைச் செய்யும் ஒவ்வோர் ஆளும்:

(ஆ) எவரேனும் தேருநருக்கு அல்லது தேருநருக்காக அல்லது எவரேனும் தேருநரின் சார்பாக எவரேனும் ஆளுக்கு அல்லது ஆளுக்காக அல்லது வேறெவரேனும் ஆளுக்கு அல்லது ஆளுக்காக அத்தகைய தேருநரை வாக்களிக்க அல்லது வாக்களிக்காது விலகியிருக்கத் தூண்டும் பொருட்டு ஏதேனும் பதவியை, நிலையை அல்லது தொழிலை நேரடியாகவோ அல்லது

மறைமுகமாகவோ அவரோ அவர் சார்பாக வேறெவ ரேனும் ஆள் மூலமோ கொடுக்கும், சம்பாதித்துக் கொடுக்கும், கொடுக்க அல்லது சம்பாதித்துக் முன்வரும் வாக்குறுதி செய்யும் அல்லது கொடுக்க உடன்படும் அல்லது சம்பாதித்துக் கொடுக்க வாக்குறுதி செய்யும் அல்லது சம்பாதித்துக் கொடுக்க முயற்சி செய்யும் அல்லது இக்கட்டளைச் சட்டத்தின் கீழ், தேர்தலொன்றின் எவரேனும் தேருநர் வாக்களித்திருந்தமை காரணமாக அல்லது வாக்களிக்காது விலகியிருந்தமை காரணமாக மேற்சொல்லப்பட்டவாறு ஊழலாக அத்தகைய ஏதேனும் செயலைச் செய்யும் ஒவ்வோர் ஆளும்:

(இ) எவரேனும் ஆளுக்கு அல்லது ஆளுக்காக, அத்தகைய ஆளை எவரேனுமாள் ஓர் உள்ளூரதிகாரசபை உறுப்பினரொருவராகத் தெரிந்தனுப்பப்படுதலைக் கைகூடச் செய்ய அல்ல கைகூடச் செய்ய முயற்சி செய்ய அல்லது இக்கட்டளைச் சட்டத்தின் கீழான தேர்தலொன்றில் எவரேனும் தேருநரின் வாக்கைச் சம்பாதிக்க அல்லது சம்பாதிக்க முயற்சி செய்யத் தூண்டும் பொருட்டு, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அவரோ அல்லது அவர் சார்பாக வேறு எவரேனும் ஆள்மூலமோ மேற்சொல்லப் பட்டவாறு அத்தகைய ஏதேனும் கொடையை, கடனை, முன்வருகையை, வாக்குறுதியை, சம்பாதித்தலை அல்லது உடன்படிக்கையைச் செய்யும் ஒவ்வோர் ஆளும் :

(ஈ) அத்தகைய ஏதேனும் கொடை, கடன், முன்வருகை, வாக்குறுதி, சம்பாதித்தல் அல்லது உடன்படிக்கை மீது அல்லது அதன் விளைவாக, இக்கட்டளைச் சட்டத்தின் கீழான தேர்தலொன்றில் ஓர் உள்ளூரதிகாரசபை உறுப்பினரொருவராக எவரேனுமாள் தெரிந்தனுப்பப்படுதலை அல்லது எவரேனும் தேருநரின் வாக்கைச் சம்பாதிக்கும் அல்லது சம்பாதிக்க ஈடுபடுத்தும், வாக்குறுதி செய்யும், அல்லது முயற்சி செய்யும் ஒவ்வோர் ஆளும் :

(உ) இக்கட்டளைச் சட்டத்தின்கீழான தேர்தலொன்றில், பணம் அல்லது ஏதேனும் பாகம் இலஞ்க வகையாகச் செலவழிக்கப்படுதல் வேண்டும் என்னும் முன்னத்துடன் வேறெவரேனும் ஆளுக்கு அல்லது அவரின் பயன்பாட்டுக்கு என ஏதேனும் பணத்தைச் செலுத்தும் அல்லது முற்பணமாய்க் கொடுக்கும் அல்லது அத்தகைய தேர்தலில் இலஞ்ச வகையாக முற்றாக அல்லது பகுதியளவில் செலவழிக்கப்பட்ட ஏதேனும் பணத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்காக அல்லது மீள்கொடுப்பனவாக அறிந்த கொண்டு

எவரேனும் ஆளுக்கு ஏதேனும் பணத்தைச் செலுத்து பவரான அல்லது செலுத்துவிப்பவரான ஒவ்வோர் ஆளும் :

(ஊ) இக்கட்டளைச் சட்டத்தின் கீழான தேர்தலொன்றுக்கு முன்னர் அல்லது தேர்தலின் போது நேரடியாகவேனும் அல்லது மறைமுகமாகவேனும் அவரோ அல்லது அவர் சார்பாக வேறு எவரேனும் ஆள் மூலமாகவோ அத்தகைய ஏதேனும் தேர்தலில் வாக்களிப்பதற்காக அல்லது வாக்களிக்க உடன்படுவதற்காக அல்லது வாக்களிக்காது விலகியிருப்பதற்காக அல்லது வாக்களிக்காது விலகியிருப்பதற்கு உடன்படுவதற்காக, அவருக்கென அல்லது வேறு எவரேனும் ஆளுக்கென ஏதேனும் பணத்தை, கொடையை, கடனை அல்லது பெறுமதியான பிரதிபயனை, பதவியை, நிலையை அல்லது தொழிலைப் பெறும், அதற்காக உடன்படும் அல்லது ஒப்பந்தம் செய்யும் ஒவ்வொரு தேருநரும் :

[பி63, 2012 இன் 22]

(எ) இக்கட்டளைச் சட்டத்தின் கீழான தேர்தலொன்றின் பின்னர், அத்தகைய தேர்தலில் எவரேனும் ஆள் வாக்களித்துள்ள காரணத்தால் அல்லது வாக்களிக்காது விலகியிருந்த காரணத்தால் அல்லது வேறு எவரேனும் ஆளை வாக்களிக்க அல்லது வாக்களிக்காது விலகியிருக்கத் தூண்டியுள்ள காரணத்தால், நேரடியாகவேனும் அல்லது மறைமுகமாவேனும், அவரோ அல்லது அவர் சார்பாக வேறு எவரேனும் ஆள் மூலமோ ஏதேனும் பணத்தை அல்லது பெறுமதியான பிரதிபயனைப் பெறும் ஒவ்வோர் ஆளும் :

(ஏ) இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் தேர்தல் ஒன்றில் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு வாக்களிக்கும் அல்லது வாக்களித்துள்ள அல்லது வாக்களிக்க உடன்படும் அல்லது வாக்களிக்க உடன்பட்டுள்ள காரணத்துக் காகவும் அதற்கான கொடுப்பனவாகவும் அல்லது தேர்தலொன்றில் எவரேனும் வேட்யாளரக் அவர் உதவி புரிந்துள்ள அல்லது உதவிபுரிய உடன்பட்டுள்ள காரணத்துக்காகவும் அதற்கான கொடுப்பனவாகவும், கொடைக்காக அல்லது ஏதேனும் பணக் கடனுக்காக அல்லது பெறுமதியான பிரதி பயனுக்காக அல்லது கொடைக்கான அல்லது பணக் கடனுக்கான அல்லது பெறுமதியான பிரதிபயனுக்கான, வாக்குறுதிக்காக அல்லது ஏதேனும் பதவி, நிலை அல்லது தொழிலுக்காக அல்லது ஏதேனும் பதவிக்கான, நிலைக்கான, அல்லது தொழிலுக்கான வாக்குறுதிக்காக அத்தகைய ஏவரேறும் வேட்பாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட எவரேனும் வேட்பாளருக்கு அல்லது அவரது முகவருக்கு அல்லது முகவர்களுக்கு நேரடியாகவேனும் அல்லது மறைமுகமாகவேனும் அவரோ அல்லது அவர் சார்பாக வேறு எவரேனும் ஆள் மூலமோ விண்ணப்பிக்கும் ஒவ்வோர் ஆளும் :

(ஐ) வேறெவரேனும் ஆள், இக்கட்டளைச் சட்டத்தின் கீழான தேர்தலொன்றின் வேட்பாளரொருவராகப் பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கு அல்லது ஒரு வேட்பாளராவதினின்றும் விலகியிருப்பதற்கு அல்லது அவர் வேட்பாளரொருவராகிவிட்டாரெனின் அதனின்றும் ஒதுங்கிக் கொள்வதற்கு உடன்பட அவரைத் தூண்டும் பொருட்டு நேரடியாகவோ மறைமுகமாகவோ, அவரோ அல்லது அவர் சார்பாக எவரேனும் ஆள் மூலமோ. அத்தகைய வேறு ஆளுக்கு அல்லது ஆளுக்காக ஏதேனும் பதவியை, நிலையை அல்லது தொழிலை வழங்கும் அல்லது சம்பாதித்துக் கொடுக்கும் அல்லது வழங்க அல்லது சம்பாதித்துக் கொடுக்க உடன்படும் அல்லது முன்வரும் அல்லது சம்பாதித்துக் கொடுக்க வாக்குறுதியளிக்கும் அல்லது சம்பாதித்துக் கொடுக்க முயற்சி செய்ய வாக்குறுதியளிக்கும். அல்லது ஏதேனும் பணத்தை அல்லது பெறுமதியான பிரதிபயனை, எவரேனும் ஆளுக்கு அல்லது ஆளுக்காக அல்லது அத்தகைய வேறு ஆள் சார்பாக எவரேனும் ஆளுக்கு அல்லது ஆளுக்காக வழங்கும் அல்லது கடன்கொடுக்கும் அல்லது வழங்க முன்வரும் அல்லது சம்பாதித்துக் கொடுக்க வாக்குறுதியளிக்கும் அல்லது சம்பாதித்துக் கொடுப்பதற்கு முயற்சி செய்ய வாக்குறுதியளிக்கும் ஒவ்வோர் ஆளும்.

ஊழல் பழக்கத்துக்கான தண்டனையும் தகுதியீனங்களும். [பி6, 2002 இன் 1]

82 உ. *(1)* ஊழல் பழக்கமொன்றுக்கு, அதாவது -

(அ) ஆள்மாறாட்டம் என்னும் தவறைப் புரியும் அல்லது ஆள்மாறாட்டம் என்னும் தவறைப் புரிவதற்கு உதவும், உடந்தையாயிருக்கும் அறிவுரை வழங்கும் அல்லது அது புரியப்படுதலைக் கைகூடச் செய்யும் : அல்லது

(ஆ) உபசாரம் செய்தல், தகாத செல்லாக்கு அல்லது இலஞ்சம் என்னும் தவறைப் புரியும் : அல்லது

(இ) இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் தேர்தலின் முன் அல்லது தேர்தலின் போது எவரேனும் வேட்பாளரின் தனிப்பட்ட குணவியல்பு அல்லது நடத்தை தொடர்பான ஏதேனும் பொய்யான நிகழ்வுக் கூற்றினை, அந்தத் தேர்தலின் முடிவைப் பாதிக்கும் நோக்கத்திற்காகச் செய்யும் அல்லது வெளியிடும் : அல்லது

(ஈ) இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் தேர்தலொன்றுக்கு முன்னர் அல்லது தேர்தலின்போது, அத்தகைய தேர்தலிலிருந்து எவரேனும் வேட்பாளர் ஒதுங்குவதாக ஏதேனும் பொய்யான கூற்றினை அந்தத் தேர்தலின் முடிபைப் பாதிக்கும் நோக்கத்திற்காகச் செய்யும் அல்லது வெளியிடும்.

(முதலாம் அட்டவணை 2023 இன் 21)

ஆளொவ்வொருவரும், ஊழல் பழக்கமொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தன்மேல், இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட விடயத்தில் பன்னிரண்டு மாதகாலத்துக்கு மேற்படாதவொரு காலத்திற்கான கடூழிய மறியற்றண்டனைக்கும், வேறு ஏதேனும் விடயத்தில், இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாவொரு குற்றப் பணத்திற்கு அல்லது ஆறு மாத காலத்துக்கு மேற்படாதவொரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஊழல் பழக்கமொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆளொவ்வொருவரும், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தன் மேல் அவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து ஏழு ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு தேருநரொருவராகப் பதிவு செய்திருப்பதற்கு அல்லது இக்கட்டளைச் சட்டத்தின் கீழான ஏதேனும் தேர்தலில் வாக்களிப்பதற்கு அல்லது ஓர் உள்ளூரதிகாரசபை உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகுதியற்றவராதல் வேண்டுமென்பதுடன், அந்தத் தேதியில் அவர் ஓர் உள்ளூரதிகார சபை உறுப்பினரொருவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் அத்தகைய குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து அவரது தேர்தல் வறிதாக்கப்படுதலும் வேண்டும்.

(3) சட்டத்துறைத் தலைமையதிபதியின் அனுமதியின்றி ஊழல் பழக்கமொன்றுக்கான குற்றவழக்கொன்று தொடரப்படுதலாகாது.

தேர்தலொன்றின் வெற்றியீட்டாத ஒரு வேட்பாளரின் ஊழல் பழக்கமொன்றிற்கான தண்டனையும், தகுதியீனமும் தொடர்பான சிறப்பு ஏற்பாடுகள்

[பி6, 2002 இன் 1]

(முதலாம் அட்டவணை 2023 இன் 21)

82 ஊ. (1) இக்கட்டளைச் சட்டத்தின் கீழான தேர்தலொன்று தொடர்பாக, அத்தேர்தலில் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படாத எவரேனும் வேட்பாளரினால் அல்லது அவர் அறிந்திருக்க அல்லது அவரது சம்மதத்துடன் எவரேனும் அவரது முகவரால் ஊழல் பழக்கமொன்று புரியப்படுகின்றவிடத்து, அத்தகைய வேட்பாளர், நீதிவானொருவரால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஆள்மாறாட்டத் தவறின் விடயத்தில், பன்னிரண்டு மாதகாலத்துக்கு மேற்படாதவொரு காலத்திற்கான மறியற்றண்டனைக்கு, அத்துடன் வேறு ஏதேனும் விடயத்தில், இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாத காலத்துக்கு மேற்படாதவொரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும் -

(அ) தேர்தலில், அத்தகைய வேட்பாளரினால் ஊழல் பழக்கமெதுவும் புரியப்படவில்லையெனவும் அல்லது சட்டமுரணான பழக்கமெதுவும் புரியப்பட வில்லையெனவும், அத்துடன் அத்தகைய ஏதேனும் தவறானது, அத்தகைய வேட்பாளரின் கட்டளைகளுக்கு முரணாகவும், அவருடைய அனுமதியின்றியும் அல்லது உட்கை இன்றியும் புரியப்பட்டது எனவும் : அத்துடன்

(ஆ) தேர்தலில், அத்தகைய வேட்பாளர், ஊழல் பழக்கமும் சட்டமுரணான பழக்கமும் புரியப்படுதலைத் தடுப்பதற்காக நியாயமான எல்லா வழிவகைகளையும் எடுத்தார் எனவும் : அத்துடன்

(இ) அத்தகைய ஏதேனும் தவறு அற்பமான, முக்கியமற்ற அத்துடன் மட்டுப்படுத்தப்பட்ட தன்மை கொண்டது எனவும், அத்துடன்

(ஈ) அத்தகைய வேட்பாளரையும், அவரது முகவர்களையும் பொறுத்தவரை மற்றெல்லா விதங்களிலும் தேர்தலானது எல்வூழல் பழக்கமோ அல்லது சட்டமுரணான பழக்கமோ அற்றதெனவும்,

அத்தகைய வேட்பாளர் நீதிவானுக்கு எண்பித்தால் எவரேனும் அவரது முகவரால் புரியப்பட்டதான உபசாரம் செய்தல் அல்லது தகாத செல்வாக்கு என்னும் தவறை அடக்கிய இப்பிரிவின் கீழான அத்தகைய ஊழல் பழக்கத்துக்காக அத்தகைய வேட்பாளருக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்படுதலாகாது.

(2) இப்பிரிவின் கீழ் பழக்கமொன்றுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளொவ்வொருவரும், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் அவருக்கு குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து ஏழு ஆண்டுகளுக்கானவொரு காலப்பகுதிக்கு தேருநரொருவராகப் பதிவுசெய்திருப்பதற்கு அல்லது இக்கட்டளைச் சட்டத்தின் கீழான தேர்தலொன்றில் வாக்களிப்பதற்கு அல்லது உள்ளூராதிகார சபை உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகுதியற்றவராதல் வேண்டுமென்பதுடன், அந்தத் தேதியில் அவர் அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால், அத்தகைய குற்றித்தீர்ப்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து அவரது தேர்தல் வறிதாக்கப்படுதலும் வேண்டும்.

(3) இப்பிரிவின் கீழ் ஊழல் பழக்கமொன்றிற்கான குற்ற வழக்கொன்று, இக்கட்டளைச்சட்டத்தின் கீழான தேர்தலொன்றில் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படாத, அத்தகைய தேர்தலின் வேட்பாளர் எவருக்கும் எதிராக சட்டத்துறைத் தலைமையதிபதியின் அனுமதியுடனன்றித் தொடரப்படுதலாகாது.

(4) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ள எவையும் இக்கட்டளைச் சட்டத்தின்கீழான தேர்தலொன்றில் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படாத ஒரு வேட்பாளருக்கெதிராக 82உ ஆம் பிரிவின் கீழ், அத்தகைய தேர்தல் தொடர்பான ஊழல் பழக்கமொன்றிற்காக குற்ற வழக்குத் தொடரப்படுதலை விலக்குவதாக அல்லது தடை செய்வதாகக் கருதப்படுதலோ அல்லது பொருள் கொள்ளப்படுதலோ ஆகாது.

சட்ட முரணான பழக்கங்கள்

குறித்த சில செலவினங்கள் சட்ட முரணான பழக்கமாதல். [பி6, 2002 இன் 1]

82எ. (1) இக்கட்டளைச்சட்டத்தின் கீழான தேர்தலொன்றில் -

(அ) எத்தன்மைத்தான எவையேனும் வாகனங்களை அல்லது போக்குவரத்து விலங்குகளை வாடகைக்கமர்த்துவதற்காகவோ அல்லது புகைவண்டிக் கட்டணங்களுக்காகவோ அல்லது வேறு விதமாகவோ தேருநர்களை வாக்கெடுப்புக்கும் வாக்கெடுப்பிலிருந்தும் கொண்டு செல்லும் காரணமாக; அல்லது

(ஆ) ஏதேனும் விளித்துரைப்பை, துண்டு பிரசுரத்தை அல்லது அறிவித்தலை வெளிக்காட்டி வைத்தலுக்காக ஏதேனும் வீட்டை காணியை, கட்டடத்தை அல்லது வளவை அல்லது ஏதேனும் விளித்துரைப்பை துண்டுப் பிரசுரத்தை அல்லது அறிவித்தலை வெளிக்காட்டி வைத்தல் காரணமாக தேருநரொருவருக்கு அல்லது தேருநரொருவருடன்;

கொடுப்பனவெதுவும் அல்லது கொடுப்பனவுக்கான ஒப்பந்த மெதுவும் செய்யப்படுதலாகாது.

(2) இக்கட்டளைச்சட்டத்தைப பின்பற்றி அனுமதிக்கப்படக்கூடிய அத்தகைய விதிவிலக்குக்கு அமைவாக, தேர்தலொன்றுக்கு முன்னரோ தேர்தலின்போதோ அல்லது தேர்தலின் பின்னரோ இப்பிரிவை மீறி அறிந்துகொண்டே ஏதேனும் கொடுப்பனவு அல்லது ஏதேனும் கொடுப்பனவுக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டால், அத்தகைய கொடுப்பனவை அல்லது ஒப்பந்தத்தைச் செய்யும் ஆள் சட்டமுரணான பழக்கம் ஒன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும். அத்துடன் இப்பிரிவை அது மீறுவதாயுள்ளது என அறிந்து கொண்டே அத்தகைய கொடுப்பனவைப் பெறும் அல்லதுஅத்தகைய ஏதேனும் ஒப்பந்தத்திற்கு கட்சிக்காரரொருவராயிருக்கும் எவரேனும் ஆளும் சட்டமுரணான பழக்கம் ஒன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(3) இக்கட்டளைச்சட்டத்தினால் அல்லது இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்டுள்ள அல்லது செய்யப்படக்கூடிய எவையேனும் அத்தகைய வெளிப்படையான விதிவிலக்குகளுக்கமைவாக ஏதேனும் தேர்தல் இடப்பரப்பில் -

(அ) வாக்கெடுப்புக்கும் வாக்கெடுப்பிலிருந்தும் வாக்காளர்களைக் கொண்டு செல்லும் நோக்கத்திற்காக ; அல்லது

(ஆ) பின்வருவன தவிர்ந்த வேறேதேனும் நோக்கத்திற்காக, அதாவது -

(i) ஏதேனும் சட்டமுறைப்படியான அலுவலுக்காக ; அல்லது

(ii) ஏதேனும் அலுவலகமுறையான தொழில் நோக்கத்துக்காக (அதாவது அவரால், கொண்டிருக்கப்பட்ட அல்லது பொறுப்பேற்கப்பட்ட அல்லது மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் பதவியிலிருந்து சேவையிலிருந்து

அல்லது தொழிலிருந்து வந்துறுபவையான அல்லது அதனுடன் தொடர்புபட்டவையான அல்லது அதன் இடைநேர் விளைவான ஏதேனும் கடமையைப் புரிதல் அல்லது ஏதேனும் பணியை நிறைவேற்றுதல்;

தேர்தலொன்றில் வாக்களிப்பு தொடங்கப்படும் நேரத்துக்கு ஒரு மணித்தியாலத்துக்கு முன் தொடங்குவதும் அத்தகைய வாக்கெடுப்பு முடிவடையும் நேரத்துக்கு ஒரு மணித்தியாலத்துக்குப் பின்னர் முடிவடைவதுமான காலப்பகுதியின் போது ஆளொருவர் ஏதேனும் வாகனத்தை, கலத்தை அல்லது விலங்கை வாடகைக்கு விடவோ கடனாகக் கொடுக்கவோ தொழிலிலீடுபத்தவோ, கூலிக்கு மாத்தவோ, இரவலாகப் பெறவோ அல்லது பயன்படுத்தவோ அல்லது வேறு எவரேனும் ஆள் வாடகைக்குவிட, கடனாகக் கொடுக்க, தொலிலீடுபடுத்த, கூலிக்கமர்த்தவோ, இரவலாகப் பெற அல்லது பயன்படுத்த உதவி செய்யவோ அல்லது உடந்தையாயிருக்கவோ கூடாது.

இவ்வுட்பிரிவை மீறிச் செயலாற்றும் எவரேனும் ஆள், சட்டமுரணான பழக்கம் ஒன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் எவை எவ்வித மிருப்பினும்-

(அ) தேருநரொருவர் விளம்பர முகவர் என்ற முறையில், பணக்கொடுப்பனவுக்காக. துண்டுப் பிரசுரங்களையும் விளம்பரங்களையும் வெளிக்காட்டி வைத்தலைச் சாதாரண வியாபாரப்போக்காகக் கொண்டுள்ளவிடத்து, அத்தகைய தேருநரொருவருக்குச் செய்யப்படும் கொடுப்பனவொன்று அல்லது அத்தகைய தேருநருடனான ஒப்பந்தம் அது சாதாரண வியாபாரப் போக்கில் செய்யப்பட்டிருப்பின், இப்பிரிவின் கருத்தெல்லைக்குள் ஒரு சட்ட முரணான பழக்கமாகக் கருதப் படலாகாது:

(ஆ) தேர்தலொன்றில், தேருநர்களை கடலை அல்லது கடலின் ஒரு கிளையை அல்லது அதன் கரத்தை அல்லது ஆற்றைக் கடக்காது அவர்களது வதிவிடத்திலிருந்து அவர்களது வாக்கெடுப்பு நிலையங்களை அடைவதற்கு இயலாதவிடத்து, அத்தகைய தேருநர்கள் கடல் மூலமாக அவர்களது வாக்கெடுப்பு நிலையங்களை அடையும்பொருட்டு அல்லது அதற்காக ஆற்றைக் கடக்க இயலச் செய்வதற்கு வழிவகைகள் ஏற்பாடு செய்யப் படலாம் ;

(இ) ஏதேனும் பகிரங்க போக்குவரத்துச் சேவையில் ஆள் ஒருவர் தேர்தலொன்றில் அவரது சொந்தச் செலவில் ஏதேனும் வாக்கெடுப்புக்கு அல்லது வாக்கெடுப்பில் இருந்து கொண்டு செல்லப்படுவது அல்லது தனது சொந்தச் செலவில் வாக்கெடுப்புக்கு அல்லது வாக்கெடுப்பிலிருந்து அவர் செல்லும் நோக்கத்திற்கான அச்சேவையைப் பயன்படுத்தல் இப்பிரிவின் கருத்தெல்லைக்குள் சட்டமுரணான ஒரு பழக்கமாகக் கருதப்படுதலாகாது ;

(ஈ) ஏதேனும் தேர்தல் இடப்பரப்புக்கான தெரிவத்தாட்சி அலுவலர், அந்த இடப்பரப்பில் தேர்தலொன்றில் வாக்கெடுப்பொன்று நடைபெறும் நாளுக்கு ஏழு நாட்களுக்கு முன்னராக அத்தகைய அலுவலரை அடையும் வண்ணம் எவரேனும் ஆளினால் அல்லது அத்தகைய ஆள் சார்பாக, வேட்பாளர் அல்லாத வேறு எவரேனும் ஆளினால் அதற்கெனச் செய்யப்பட்ட எழுத்திலான விண்ணப்பத்தின் மீது அத்தகைய ஆள் ஏதேனும் உடற்றகுதியீனம் காரணமாக வாக்கெடுப்புக்கும் வாக்கெடுப்பிலிருந்தும் நடந்தோ அன்று இவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பகிரங்க போக்குவரத்துச் சேவை வாகனத்திலோ செல்வதற்கு இயலாத வராயுள்ளார் என்ற திருப்திப்படுமிடத்து தெரிவத்தாட்சி அலுவலரானவர், அத்தகைய ஆள் வாக்கெடுப்புக்கும் வாக்கெடுப்பிலிருந்தும் போய்வரும் நோக்கத்திற்காக ஏதேனும் வாகனத்தை, கலத்தை அல்லது விலங்கைப் பயன்படுத்துவதற்கென அவருக்கு எழுத்தில் அதிகாரம் அளிக்கலாம் என்பதுடன், அதற்கிணங்க, அத்தகைய ஆள், போய்வரும் அத்தகைய நோக்கத்திற்காக ஒரு வாகனத்தை அல்லது விலங்கைப் பயன்படுத்துதல் இப்பிரிவின் கருத்தெல்லைக்குள் சட்டமுரணான பழக்கமொன்றாகக் கருதப்படுதலும் ஆகாது.

(5) ஏதேனும் தேர்தல் இடப்பரப்பில் நடைபெறும் ஏதேனும் வாக்கெடுப்பில் எவரேனும் பொலிசு அலுவலர் அவரது சொந்த விருப்பிலோ அல்லது எவரேனும் ஆளின் முறைப்பாட்டின் மீது செய்து முடிக்கும்படி இதன்மூலம் தேவைப்படுத்தப்பட்ட புலனாய்வொன்றின் பின்னரோ, ஏதேனும் வாகனம், கலம் அல்லது விலங்கு, (1) ஆம் உட்பிரிவினது அல்லது (3) ஆம் உட்பிரிவினது ஏற்பாடுகளை மீறி பயன்படுத்தப்படுகின்றதெனத் திருப்திப்பட்டால், அவ்வலுவலர், அத்தகைய வாகனத்தை, கலத்தை அல்லது விலங்கை நிறுத்திக் கைப்பற்றல் வேண்டும் என்பதுடன், அதைப் பொலிசு நிலையத்துக்கு எடுத்துச் சென்று வாக்கெடுப்பு முடிவடையும் வரை அதனை அங்கு தடுத்து வைத்திருத்தலும் வேண்டும்.

(6) இப்பிரிவின் கருத்தெல்லைக்குள் சட்டமுரணான பழக்கமொன்றைப் புரிந்தமைக்காக எவரேனும் ஆளுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், நீதிவானொருவர், அத்தகைய பழக்கம் புரியப்படுவதில் அல்லது புரியப்படுவது தொடர்பாகப் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் வாகனம், கலம் அல்லது விலங்கு குடியரசுக்கு இழக்கப்பட்டதாதல் வேண்டும் என வெளிப்படுத்திக் கட்டளையினை ஆக்கலாம்.

செய்தித் தாள்களிலும் இலத்திரனியல் ஊடகங்களிலும் உள்ள பொய்யான அறிக்கைகள்.

[பி6, 2002 இன் 1]

82ஏ. (1) ஏதேனும் செய்தித்தாளில் அல்லது இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாக –

(அ) இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் தேர்தலொன்றில் போட்டியிடும் எவரேனும் வேட்பாளர் அல்லது ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு அத்தகைய தேர்தலில் உரைத்தவை அல்லது செய்தவை சம்பந்தமாக அல்லது அவை தொடர்பாக ; அல்லது

(ஆ) அத்தகைய வேட்பாளரால் அல்லது அத்தகைய ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியால் அல்லது ஏதேனும் சுயேச்சைக் குழுவால் அத்தகைய தேர்தல் நடாத்தப்பட்ட முறை அல்லது முகாமை செய்யப்பட்ட முறை சம்பந்தமாக அல்லது அவை தொடர்பாக ,

பொய்யான கூற்று எதுவும் வெளியிடப்பட்டு அல்லது ஒளிபரப்பப் பட்டு அத்துடன் அத்தகைய கூற்று அத்தகைய தேர்தல் முடிவில் மாற் றத்தை உண்டு பண்ணக்கூடிய இயல்பினதாகவுள்ளவிடத்து, அப்போது அவ்வாறு வெளியிடப்படும் அல்லது ஒலிபரப்பப்படும் அல்லது ஒளிபரப்பப்படும் நேரத்தில் அத்தகைய கூற்றை வெளியிடும் அச்செய்தித் தாளின், அத்தகைய பொய்யான கூற்றை ஒலிபரப்பும் அல்லது ஒளிபரப்பும் கூட்டுத்தாபனத்தின் அல்லது உரிமம் பெற்ற வானொலி அல்லது தொலைக்காட்சி நிலையத்தின் உரிமையாளராக, முகாமையாளராக பதிப்பாசிரியராக, வெளியீட்டாளராக அல்லது அவர்களையொத்த அலுவலராக இருந்த அல்லது அத்தகைய பதவி நிலையில் கடமையாற்றியவராகக் கொள்ளப்பட்ட ஆளொவ்வொருவரும், தமது சம்மதம் அல்லது உட்கை இன்றி அத்தகைய வெளியீடு அல்லது ஒலிபரப்பு அல்லது ஒளிபரப்பு செய்யப்பட்டதென்றும் அத்துடன் அத்தகைய பதவிநிலையில் அவரது பணிகளின் தன்மையைக் கருத்திற் கொண்டும், எல்லாச் சூழ்நிலைகளிலும் அத்தகைய வெளியீட்டை அல்லது ஒலிபரப்பை அல்லது ஒளிபரப்பைத் தடுப்பதற்கு அவர் பிரயோகித்திருக்க வேண்டியதான விழிப்புக் கவனம் எல்லாவற்றையும் தாம் பிரயோகித் தாரெனவும் அத்தகைய ஆள் எண்பித்தாலொழிய, சட்டமுரணான பழக்கமொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இப்பிரிவில் "செய்தித்தாள்" என்னும் பதம், சஞ்சிகை, பருவ வெளியீடு, துண்டு வெளியீடு அல்லது வேறு வெளியீடு எதனையும் உள்ளடக்கும்.

குறித்த சில தொழிலுக் கமர்த்துகை சட்டமுரணாதல்.

[பி6, 2002 இன் 6]

82ஐ. (1) ஆளெவரும் பின்வரும் நோக்கம் அல்லது பதவிநிலைகள் தவிர்ந்த எவ்விதமான ஏதேனும் நோக்கத்திற்கென அல்லது பதவி நிலையில் கொடுப்பனவுக்காக அல்லது கொடுப்பனவுக்கான வாக்குறு திக்காக இக்கட்டளைச் சட்டத்தின் கீழான தேர்தலொன்றில் ஆதரவு கூட்டும் நோக்கத்துக்காக ஈடுபத்தப்படுதலோ அல்லது தொழிலுக்க மர்த்தப்படுதலோ ஆகாது -

(அ) ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்திற்கும், வாக்கெடுப்பின் போது அவ்வாக்கெடுப்பு நிலையத்துக்கான எவரேனும் வாக்கெடுப்பு முகவரின் நியமனத்தை இல்லாதொழிப்பதற்கான தேவையைக் கருத்திற்கொண்டு நியாயமானதொரு எண்ணிக்கை யினரான வாக்கெடுப்பு முகவர்கள், அத்துடன் ஒவ்வொரு வாக்கெண்ணும் நிலையத்திற்கும் 60 ஆம் பிரிவின் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள வாக்கெண்ணும் முகவர்களின் எண்ணிக் கைக்கு மேற்படாத வாக்கெண்ணும் முகவர்கள்.

(ஆ) தேர்தல் இடப்பரப்பின் அளவையும், அத்தகைய இடப்பரப்பின் தேருநர் இடாப்பில் உள்ள தேருநர்களின் எண்ணிக்கையையும் கருத்திற் கொண்டு நியாயமானதொரு எண்ணிக்கையினரான எழுதுவினைஞர்களும் தூதுவர்களும்.

(2) இக்கட்டளைச் சட்டத்தைப் பின்பற்றி அனுமதிக்கப்படக்கூடிய அத்தகைய விதிவிலக்குக்கு அமைவாக, எவரேனும் ஆள், ஒன்றில் தேர்தலொன்றுக்கு முன்னர், தேர்தலின் போது அல்லது தேர்தலொன்றுக்குப் பின்னர் இப்பிரிவை மீறி ஈடுபடுத்தப்பட்டால் அல்லது தொழிலுக்கமர்த்தப்பட்டால் அவரை ஈடுபடுத்தும் அல்லது தொழிலுக்கமர்த்தும் ஆள் சட்டமுரணான பழக்கம் ஒன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

தேர்தல் வெளியீடுகளை அச்சிடுதல் ஆகியன.

[பி6, 2002 இன் 1]

82ஓ. இக்கட்டளைச் சட்டத்தின் கீழான தேர்தலொன்றைக் குறிப்பீடு செய்வதும் அத்துடன் அதன் முகப்பக்கத்தில் அதனை அச்சிட்டவரதும் வெளியிட்டவரதும் பெயர்களையும் முகவரிகளையும் கொண்டிராததுமான ஏதேனும் விளம்பரத்தை, துண்டுப் பிரசுரத்தை ஒட்டு விளம்பரத்தை அல்லது சுவரொட்டியை அச்சிடும் வெளியிடும் விநியோகிக்கும் அல்லது ஒட்டும் அல்லது அச்சிடச் செய்விக்கும் வெளியிடச் செய்விக்கும், விநியோகிக்கச் செய்விக்கும் அல்லது ஒட்டச் செய்விக்கும் வேட்பாள ரொருவர் அல்லது அவரது முகவர் சட்டமுரணான பழக்கம் ஒன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

சட்டமுரணான பழக்க வழக்க மொன்றிற்கு குற்றவாளியாகு மிடத்து தண்டனை.

[பி6, 2002 இன் 1]

(முதலாம் அட்டவணை 2023 இன் 21)

82ஓ. (1) சட்டமுரணான பழக்கமொன்றினைப் புரியும் ஆளொவ் வொருவரும் நீதிவானொருவரால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதல் வேண்டும். அத்துடன், அவருக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட தேதியி லிருந்து மூன்று ஆண்டுகளுக்கானவொரு காலப்பகுதிக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், தேருநரொருவராகப்பதிவு செய்திருப்பதற்கு அல்லது இக்கட்டளைச் சட்டத்தின் கீழான தேர்தலொன்றில் வாக்களிப் பதற்கு அல்லது உள்ளூரதிகார சபையொன்றின் உறுப்பினரொரு வராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகுதியற்றவராதல் வேண்டு மென்பதுடன், அந்தத் தேதியில் அவர் அவ்வாறு தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தால், அத்தகைய குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து அவரது தேர்தல் வறிதாக்கப்படுதலும் வேண்டும்.

(2) சட்டத்துறைத் தலைமையதிபதியின் அனுமதியின்றி சட்ட முரணான பழக்கமொன்றுக்காக குற்றவழக்கொன்று தொடரப்படு தலாகாது.

தேர்தலொன்றின் வெற்றியீட்டாத வேட்பாளரின் சட்டமுரணான பழக்கமொன்றிற் கான தண்டனையும் தகுதியீனமும் தொடர்பான சிறப்பு ஏற்பாடுகள்.

[பி6, 2002 இன் 1]

(முதலாம் அட்டவணை 2023 இன் 21)

82ஔ. (1) இக்கட்டளைச் சட்டத்தின் கீழான தேர்தலொன்று தொடர்பாக தேர்தலில் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்படாத எவரேனும் வேட்பாளரினால் அல்லது அவர் அறிந்திருக்க அல்லது அவரது சம்மதத்துடன் அல்லது அவரது எவரேனும் முகவராய் சட்டமுரணான பழக்கமொன்று புரியப்பட்டுள்ளவிடத்து அத்தகைய வேட்பாளர் நீதவானொருவரால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு ஆளாதல் வேண்டும்.

ஆயின் எவ்வாறாயினும் -

(அ) தேர்தலில் அத்தகைய வேட்பாளர் ஊழல் பழக்கம் எதுவும் புரியப்படவில்லையெனவும், குற்ற வழக்கில் விடயப் பொருளாக வுள்ள சட்ட முரணான பழக்கம் அத்தகைய வேட்பாளரின்

கட்டளைகளுக்கு முரணாகவும் அவருடைய அனுமதியின்றியும் அல்லது உட்கையின்றியும் புரியப்பட்டது எனவும், அத்துடன்

(ஆ) தேர்தலில் அத்தகைய வேட்பாளர் ஊழல் பழக்கங்களும் சட்டமுரணான பழக்கங்களும் புரியப்படுதலைத் தடுப்பதற்காக நியாயமான எல்லா வழிவகைகளையும் எடுத்தார் எனவும், அத்துடன்

(இ) அத்தகைய சட்டமுரணான பழக்கமாக அமையும் தவறு அல்லது தவறுகள் அற்பமானது அல்லது அற்பமானவை எனவும் முக்கியமற்றது அல்லது முக்கியமற்றவை எனவும், மட்டுப்படுத்தப்பட்ட தன்மை கொண்டது அல்லது கொண்டன எனவும், அத்துடன்

(ஈ) அத்தகைய வேட்பாளரையும் அவரது முகவர்களையும் பொறுத்தவரை மற்றெல்லா வகையிலும், தேர்தலானது ஏதேனும் ஊழல் பழக்கமோ அல்லது சட்ட முரணான பழக்கமோ அற்றதெனவும்,

அத்தகைய வேட்பாளர், நீதிவானின் திருப்திக்கு எண்பித்தால், அவரது எவரேனும் முகவரால் புரியப்பட்ட இப்பிரிவின் கீழான அத்தகைய சட்ட முரணான பழக்கத்துக்காக அவருக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்படுதலாகாது.

(2) இப்பிரிவின் கீழ், சட்டமுரணான பழக்கமொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளொவ்வொருவரும் அவருக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கான காலப்பகுதிக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டமையால் தேருநரொருவராகப் பதிவு செய்திருப்பதற்கு அல்லது இக்கட்டளைச் சட்டத்தின் கீழான தேர்தலொன்றில் வாக்களிப்பதற்கு அல்லது உள்ளூரதிகார சபையொன்றின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகுதியற்றவராதல் வேண்டுமென்பதுடன் அந்தத் தேதியில் அவர் உள்ளூரதிகார சபையொனறின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தால் அத்தகைய குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து அவரது தேர்தல் வறிதாக்கப்படுதலும் வேண்டும்.

(3) இப்பிரிவின் கீழ் சட்டமுரணான பழக்கமொன்றிற்கான குற்றவழக்கொன்று இக்கட்டளைச் சட்டத்தின் கீழான தேர்தலொன்றில் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படாத வேட்பாளர் எவருக்கும் எதிராக சட்டத்துறைத் தலைமையதிபதியின் அனுமதியுடனன்றி தொடரப்படுதலாகாது.

(4) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ள எவையும் இக்கட்டளைச் சட்டத்தின் கீழான தேர்தலொன்றில் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படாத ஒரு வேட்பாளருக்கெதிராக 82ஓ ஆம் பிரிவின் கீழ் அத்தகைய தேர்தல் தொடர்பான சட்டமுரணான பழக்கமொன்றிற்காக குற்ற வழக்குத் தொடரப்படுதலை விலக்குவதாக

அல்லது தடைசெய்வதாக கருதப்படுதலோ அல்லது பொருள்கொள்ளப் படுதலோ ஆகாது.

குறித்த சில தவறுகளுக்கான மேலதிகத் தண்டம்.
[பி6, 2002 இன் 1]

82க. 77, 78, 81அ, 81ஆ, 82, 82அ, 82ஆ, 82இ, 82ஈ, 82எ, 81ஏ, 82ஐ அத்துடன் 82 ஓ என்னும் பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனுமாள், அத்தகைய தவறுக்கென விதித்துரைக்கப்பட்ட வேறேதேனும் தண்டத்துக்கு மேலதிகமாக, அத்தகைய குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டு காலப்பகுதியொன்றுக்கு, ஏதேனும் உள்ளூரதிகார சபைக்கு உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது ஏதேனும் உள்ளூரதிகார சபையின் உறுப்பினரொருவராக அமர்வதற்கு அல்லது வாக்களிப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

"பாகம் IV அ

தேர்தல் மனுக்கள்

வேட்பாளரின் குற்றத் தீர்ப்பினால் வறிதாக்கப்படுதல்.
[பி7, 2002 இன் 1]

82ங. (1) உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினரொருவராக வேட்பாளரொருவரின் தேர்தல், ஏதேனும் ஊழல் பழக்கத்திற்காக அல்லது சட்ட முரணான பழக்கத்திற்காக அவருக்கெதிராக குற்றத்தீர்ப்பளிக்கப் படுவதனால் வறிதானதாக்கப்படும்.

(2) உள்ளூர் அதிகார சபையொன்றின் உறுப்பினரொருவராக ஆளொருவரின் தேர்தல் வெற்றானதென வெளிப்படுத்தப்பட்டுள்ள விடத்து, அவர் அத்தகைய உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பின ரொருவராக அமர்வதற்கு அல்லது வாக்களிப்பதற்குத் தகுதியற்ற வராதல் வேண்டும்.

தேர்தல் மனுமீது தேர்தல் வறிதாக்கப்படுதல். (பி.64, 2012 இன் 22)
[பி7, 2002 இன் 1]

82ச. (1) தேர்தல் மனு ஒன்றின் மீது தேர்தல் நீதிபதி திருப்திப்படும் வகையில் எண்பிக்கப்படக்கூடிய பின்வரும் ஏதுக்கள்மீது ஏதேனும் தேர்தல் பிரதேசத்தின் ஏதேனும் வட்டாரம் தொடர்பான தேர்தல் வறிதானதென வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். அதாவது –

(அ) முன்னர் எண் வரிசைப்படுத்திக் கூறப்பட்டவற்றை ஒத்திருப் பினுஞ் சரி, அல்லாவிடினுஞ் சரி, பொதுவான இலஞ்சத்தின், பொதுவான உபசாரம் செய்தலின் அல்லது பொதுவான அச்சுறுத்தலின் அல்லது வேறு பிறழ் நடத்தை அல்லது வேறு சந்தர்ப்பங்கள் காரணமாக, தேருநர்களுள் ஒரு பிரிவினர் அது ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் அல்லது சுயேச்சைக்குழுவின் எந்த வேட்பாளருக்கு விருப்புத் தெரிவித்ததோ அந்த வேட்பாளருக்கு வாக்களிப்பதிலிருந்து தடுக்கப்பட்டனர் என்பதுடன் அதனால் தேர்தலின் முடிவு கணிசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்பது:

(ஆ) தேர்தல் தொடர்பான இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகாமை, அத்தகைய ஏற்பாடுகளில் தரப்பட்டுள்ள கோட்பாடுகளுக்கிணங்க, தேர்தல் நடாத்தப்படவில்லை யென்றும், அத்தகைய இணங்கியொழுகாமை தேர்தலின் முடிவைக் கணிசமாகப் பாதித்ததென்றும் தோன்றுமாயின் அந்த இணங்கியொழுகாமை.

(2) ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினரொருவராக வேட்பாளரொருவரின் தேர்தல், மனுவொன்றின்மீது, தேர்தல் நீதிபதி திருப்திப்படும் வகையில் எண்பிக்கப்படக்கூடிய பின்வரும் எவை யேனும் ஏதுக்களின் மீது வறிதானதென வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்; அதாவது-

(அ) வேட்பாளரின் அல்லது அவர் அறிந்திருக்கத்தக்கதாக அல்லது அவரின் சம்மதத்துடன் அல்லது வேட்பாளரின் எவரேனும் முகவரினால், தேர்தல் தொடர்பாக ஊழல் பழக்கமொன்று அல்லது சட்டமுரணான பழக்கமொன்று புரியப்பட்டது என்பது;

(ஆ) ஆள் ஒருவரை, அத்தகைய ஆள் ஆதரவு தேடுபவராக அல்லது முகவராக அல்லது அவர் சார்பாகப் பேசுவதற்கான ஆளாக ஈடுபடுத்தப்படுவதற்கு முன்பான ஏழு ஆண்டுகளுக்குள் ஊழல் பழக்கமொன்றுக்கு, சனாதிபதித் தேர்தல் தொடர்பிலான சட்டத்தின்கீழ் அல்லது மக்கள் தீர்ப்புத் தொடர்பான சட்டத்தின் கீழ் அல்லது 1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளு மன்றத் தேர்தல்கள்) அரசப்பேரவைக் கட்டளையின் கீழ் அல்லது இக்கட்டளைச்சட்டத்தின் கீழ் தகுதி வாய்ந்த நியாயாதிக்கம் கொண்ட நீதிமன்றமொன்றினால் அல்லது தேர்தல் நீதிபதி யொருவரது அறிக்கையினால் குற்றவாளியாகக் காணப்பட்டவர் என அறிந்திருக்கத்தக்கதாக ஆதரவு தேடுபவராக அல்லது முகவராக அல்லது அவர் சார்பாகப் பேசுவதற்காக வேட்பாளர் தாமே ஈடுபடுத்தினார் என்பது ;

(இ) ஆள் ஒருவரை, அத்தகைய ஆள், அரசியலமைப்பின் 81 ஆம் உறுப்புரையின் நியதிகளின் படி பாராளுமன்றத்தினால் எந்த ஆளொருவர் மீது குடியியல் தகுதியீனம் விதிக்கப்பட்டும் அத்துடன் அத்தகைய தீர்மானத்தில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய குடியியல் தகுதியீனத்தின் காலப்பகுதி முடிவுறாதுமிருந்ததோ, அந்த ஆளொருவரென அறிந்திருக்கத் தக்கதாக ஆதரவு தேடுபவராக அல்லது முகவராக அல்லது அவர் சார்பாகப் பேசுவதற்காக வேட்பாளர் தாமே ஈடு படுத்தினார் என்பது;

(ஈ) வேட்பாளரானவர், அவரது தேர்தலின் போது உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகைமையற்றிருந்தால் என்பது.

தேர்தல் மனுக்களை 154ஞ என்னும் உறுப்புரையால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றம் விளங்குதல். [பி7, 2002 இன் 1] [பி. 65, 2012 இன் 22]

82ஞ. தேர்தல் மனுவொன்று அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்தின் (இதனகத்துப் பின்னர் ''மேல் நீதிமன்றம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) நியாயாதிக்கத்தினுள் அமைந்துள்ள ஏதேனும் தேர்தற் பிரதேசத்தின் ஏதேனும் வட்டாரத்துக்கான தேர்தலொன்று தொடர்பிலானதாக இருக்குமிடத்து, அத்தகைய நீதிமன்றம், இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் நடாத்தப்பட்ட தேர்தல்கள் தொடர்பில் அத்தகைய நீதிமன்றம், இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் நடாத்தப்பட்ட தேர்தல்கள் தொடர்பில் அத்தகைய தேர்தல் மனுவொன்றை விசாரிப்பதற்கு நியாயாதிக்கம் கொண்டிருத்தலும் நியாயாதிக்கத்தைப் பிரயோகித்தலும் வேண்டும். இப்பிரிவின்கீழ் அதன் தத்துவங்கள் தொடர்பில் மேல்நீதிமன்றத்தின் நியாயாதிக்கம், அத்தகைய மேல் நீதிமன்றத்தின் நீதிபதியால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் இக்கட்டளைச் சட்டத்தில் தேர்தல் ''நீதிபதி'' யைப் பற்றிய குறிப்பீடு அதற்கிணங்க பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

எவர் மனுவைச் சமர்ப்பிக்கலாம் என்பது. [பி7, 2002 இன் 1] [பி66, 2012 இன் 22]

82ட. தேர்தல் மனுவொன்றானது, மேல் நீதிமன்றத்துக்கு பின்வரும் ஆட்களுள் ஒருவரால் அல்லது பலரால் சமரப்பிக்கப்படலாம். அதாவது-

(அ) அத்தகைய தேர்தலில் ஏதேனும் வட்டாரத்திற்காக தெரிந்தனுப்பப்படுவதற்கு அல்லது தேர்ந்தெடுக்கப்படுவதற்கு உரிமையொன்றைக் கொண்டிருந்ததாகக் கோரும் ஆள் எவரும்;

(ஆ) அத்தகைய தேர்தலில் தாம் ஏதேனும் வட்டாரத்திற்கான வேட்பாளராகவிருந்ததாக சார்த்துகின்ற ஆள் எவரும்.

கோரப்படக்கூடிய நிவாரணம். [பி7, 2002 இன் 1] [பி. 67, 2012 இன் 22]

82ண. மனுதாரர் உரித்துக்கொண்டிருக்கக்கூடியதுமான பின்வரும் நிவாரணங்கள் எல்லாமும் அல்லது அவற்றுள் எவையும் தேர்தல் மனுவொன்றில் கோரப்படலாம். அதாவது-

(அ) ஏதேனும் தேர்தல் பிரதேசத்தின் ஏதேனும் வட்டாரம் தொடர்பிலான தேர்தல் வறிதானதெனும்;

(ஆ) தேர்ந்தெடுக்கப்பட்ட எவரேனும் ஆளின் தெரிந்தனுப்புகை தகாததெனும்;

(இ) வேட்பாளர் ஒருவர் தகுந்தவாறு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென்றும், தெரிந்தனுப்பப்பட்டிருக்க வேண்டுமென்றும் கூறும்.

வெளிப்படுத்துகையொன்று.

மனுவொன்றுக்கான கட்சிக்காரர்கள். [பி7, 2002 இன் 1]

82த. (1) மனுதாரரொருவர், தமது தேர்தல் மனுவுக்கு-

(அ) மனுவானது, தெரிந்தனுப்பப்பட்ட வேட்பாளர்கள் எல்லோரதும் அல்லது எவரதும் தேர்தல் வறிதாகியுள்ளது அல்லது தகாதது எனக்கோருவதுடன், தாம் அல்லது வேறு வேட்பாளர் தக்கவாறு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்ற வெளிப்படுத்துகை

யொன்றுக்காக மேலும் கோருமிடத்து, மனுதாரர் தவிர்ந்த போட்டியிடும் எல்லா வேட்பாளர்களையும், அத்துடன் அவ்வாறான வெளிப்படுத்துகையெதுவும் கோரப்படாதுள்ள விடத்து தெரிந்தனுப்பப்பட்ட எல்லா வேட்பாளர்களையும்; அத்துடன்

(ஆ) எந்த வேட்பாளருக்கு அல்லது ஆளுக்கு எதிராக ஊழல் பழக்கங்கள் அல்லது சட்டமுரணான பழக்கங்கள் பற்றிய சார்த்துகைகள் மனுவில் செய்யப்பட்டுள்ளனவோ அந்த வேறேவரேனும் வேட்பாளரையும் அல்லது ஆளையும்.

எதிர்வாதிகளாகச் சேர்த்தல் வேண்டும்.

(2) தேர்தல் மனுவொன்றுக்கு ஏலவே எதிர்வாதியொருவராயிராத எவரேனும் வேட்பாளர், அவரால் அதன் சார்பில் தேர்தல் நீதிபதிக்குச் செய்யப்படும் விண்ணப்பத்தின் மீது, அத்தகைய மனுவுக்கு எதிர் வாதியொருவராகச் சேர்த்துக்கொள்ளப்பட உரித்துடையவராதல் வேண்டும்;

ஆயின், வேட்பாளரெவரும் தேர்தல் நீதிபதி தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய செலவுத்தொகைக்கான பிணைப்பொறுப் பைக் கொடுத்திருந்தாலொழிய, இப்பிரிவின் மேற்போந்த ஏற்பாடு களின் கீழ் அத்தகைய மனுவுக்கு எதிர்வாதியொருவராகத் தமது சொந்தப் பிரேரணையில் அவர் சேர்த்துக்கொள்ளப்பட உரித்துடைய வராதல் ஆகாது.

மனுவின் பொருளடக்கம்.
[பி7, 2002 இன் 1]

82ந. தேர்தல் மனுவொன்று-

(அ) இக்கட்டளைச்சட்டத்தின் 82ட ஆம் பிரிவின்கீழ் மனுச் செய்வதற்கு மனுதாரருக்குரிய உரிமையை எடுத்துக்கூறுதல் வேண்டும்;

(ஆ) தேர்தல் நடாத்தப்பட்டமையையும், அதன் முடிவையும் எடுத்துக்கூறுதல் வேண்டும்;

(இ) மனுதாரர் ஆதாரமாக நம்பியிருக்கும் முக்கிய நிகழ்வுகளின் சுருக்கக்கூற்றொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(ஈ) மனுதாரர் சார்த்தும் ஏதேனும் ஊழல் அல்லது சட்ட முரணான பழக்கத்தின் முழு விபரங்களையும் அத்தகைய ஊழல் பழக்கம் அல்லது சட்டமுரணான பழக்கம் அவர்களால் புரியப்பட்டதாகச் சார்த்தப்படும் கட்சிக்காரர்களின் பெயர் களையும் அத்தகைய பழக்கம் புரியப்பட்ட தேதியையும் இடத்தையும் இயன்றளவு முழுமையாகக் கொண்ட ஒரு கூற்று உட்பட எடுத்துக்கூறுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஊழல் பழக்கம் அல்லது சட்டமுரணான பழக்கத்தையும் அத்துடன் அத்தகைய பழக்கம் புரியப்பட்ட தேதியையும் இடத்தையும் ஆதாரப்படுத்துவதான சத்தியக் கடதாசி ஒன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்;

[பி68, 2012 இன் 22]

(உ) உதாரணமாக, ஏதேனும் தேர்தல் பிரதேசத்தின் ஏதேனும் வட்டாரம் தொடர்பான தேர்தல் வறிதானதென வெளிப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதும் அத்துடன், எல்லா மனுதாரர்களாலும் ஒப்பமிடப்பட்டிருக்க வேண்டியதுமான இறைஞ்சுதல் ஒன்றைக் கொண்டு முடிவடைதலும் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளைவையும் மனுவில் சான்று எடுத்துக்கூறப்படுதலைத் தேவைப்படுத்துவதாகக் கருதப்படுதலோ அல்லது பொருள் கொள்ளப்படுதலோ ஆகாது.

தேர்தல் நீதிபதியொருவர் முன்னரான குறித்த சில நடவடிக்கை முறை பற்றிய சிறப்பான ஏற்பாடுகள்.

[பி7, 2002 இன் 1]

82ப. (1) தேர்தல் நீதிபதியானவர், செலவுத் தொகைகள் பற்றிய அல்லது வேறு வகையில் பொருத்தமானதென அவர் கருதுகின்றவாறான அத்தகைய நியதிகளின் மீது தேர்தல் மனுவொன்றில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஊழல் பழக்கம் அல்லது சட்டமுரணான பழக்கம் பற்றிய விபரங்கள், மனுவின் நீதியான அல்லது செவ்வையான விளக்கத்தை உறுதிப்படுத்துவதன் பொருட்டு அவரின் அபிப்பிராயப்படி, அவசியமாகக்கூடியதான அத்தகைய விதத்தில் திருத்தப்படுவதற்கு அல்லது விரிவாக்கப்படுவதற்கு அனுமதிக்கலாம்; ஆனால், எவ்வாறாயினும் அத்தகைய திருத்தம் அல்லது விரிவாக்கம், முன்னர் மனுவில் சார்த்தப்படாத ஏதேனும் ஊழல் பழக்கம் அல்லது சட்டமுரணான பழக்கம் பற்றிய விபரங்களை அறிமுகம் செய்விப்பதாயமையுமெனின், அவர் அதை அனுமதித்தலாகாது.

(2) ஒவ்வொரு தேர்தல் மனுவும் இயன்றளவு விரைவாக விளங்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய மனு சமர்ப்பிக்கப்பட்ட தேதியின் பின்னர், ஆறுமாத காலப்பகுதிக்குள் அத்தகைய மனுவின் விளக்கத்தை முடிப்பதற்கு எல்லா பிரயத்தனங்களும் எடுக்கப்படுதலும் வேண்டும். அத்தகைய மனுவின் விளக்கத்தின் முடிவு தேதியின் பின்னர் முறையற்ற தாமதமின்றி அத்தகைய மனுவை முடிவுசெய்து, தேர்தல் நீதிபதி தமது கட்டளையை ஆக்குதல் வேண்டும்.

தேர்தல் நீதிபதியின் தீர்மானம்.

[பி7, 2002 இன் 1]

82ம. தேர்தல் மனுவொன்றின் விளக்க முடிவில், தேர்தல் நீதிபதி, எந்த உறுப்பினரது தெரிந்தனுப்புகை அல்லது தேர்தல் பற்றி முறைப்பாடு செய்யப்பட்டதோ அந்த உறுப்பினர் அல்லது வேறெவரேனும் ஆள், தகுந்த முறையில் தெரிந்தனுப்பப்பட்டாரா அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டாரா என்பதையும் அத்துடன் எந்த ஆள் தகுந்தமுறையில் தெரிந்தனுப்பப்பட்டார் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதையும், அல்லது தேர்தல் வறிதானதா என்பதையும் தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன், எழுத்தில் அத்தகைய தீர்மானத்தை சான்றுப்படுத்தலும் வேண்டும்.

அத்தகைய சான்றுப்பத்திரமானது, இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு கையாளப்படுவதற்காக மேல் நீதிமன்றத்தின் பதிவாளரின் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

ஊழல் பழக்கம் அல்லது சட்டமுரணான பழக்கம் பற்றிய நீதிபதியின் அறிக்கை.

[பி7, 2002 இன் 1]

82ய. தேர்தல் மனுவொன்றின் முடிவில்-

(அ) தேர்தலில் எவரேனும் வேட்பாளரால், அல்லது அவர் அறிந்திருக்கவும் சம்மதத்துடனும் அல்லது அவரது முகவரால் ஏதேனும் ஊழல் பழக்கம் அல்லது சட்டமுரணான பழக்கம் புரியப்பட்டது என எண்பிக்கப்பட்டது அல்லது எண்பிக்கப்பட

வில்லை என்பதையும் அப்படி ஏதுமிருப்பின் அத்தகைய ஊழல் பழக்கத்தின் அல்லது சட்ட முரணான பழக்கத்தின் தன்மையையும்; அத்துடன்

(ஆ) விளக்கத்தில், ஏதேனும் ஊழல் பழக்கத்துக்கு அல்லது சட்ட முரணான பழக்கத்துக்குக் குற்றவாளியென எண்பிக்கப்பட்ட ஆட்கள் எவரேனுமிருப்பின். அவர்களெல்லோரதும் பெயர்களையும் விவரணங்களையும்,

தருவதான ஓர் அறிக்கையையும் தேர்தல் நீதிபதி ஆக்குதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், தேர்தல் மனுவொன்றுக்குக் கட்சிக்காரர் ஒருவராகவில்லாத அல்லது வேட்பாளர் ஒருவராகவில்லாத ஆளெவரும் இப்பிரிவின் கீழ் ஒரு தேர்தல் நீதிபதியினால் அறிக்கை செய்யப்படுமுன்னர், தேர்தல் நீதிபதியானவர், அத்தகைய ஆளுக்கு, தம்பக்க வழக்கை எடுத்துரைப்பதற்கானதும் தமக்கெதிராக அப்படி அறிக்கை செய்யப்படக்கூடாதென சான்றளிப்பதற்கானதும், சான்றை அழைப்பதற்கானதும் ஆன சந்தர்ப்பமொன்றை அளித்தல் வேண்டும்.

அத்தகைய அறிக்கையானது, இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு கையாளப்படுவதற்காக மேல் நீதிமன்றத்தின் பதிவாளரின் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

82ர. (அ) 82 ம என்னும் பிரிவின் கீழ் தேர்தல் நீதிபதியின் தீர்மானத்துடன்; அல்லது

(ஆ) ஒரு தேர்தல் நீதிபதியின் வேறேதேனும் முடிவுடன் அல்லது கட்டளையுடன்.

82ம என்னும் பிரிவின் கீழான தீர்மானத்துக்கும் தேர்தல் நீதிபதியின் வேறேதேனும் முடிவுக்கும் அல்லது கட்டளைக்கும் எதிரான மேன்முறையீடு.

அதிருப்தியடைகின்ற எவரேனுமாள், உயர் நீதிமன்றத்திடமிருந்து முதலில் பெறப்பட்ட அனுமதியுடன் உயர் நீதிமன்றத்துக்கு மேன் முறையீடு செய்யலாம்.

[பி7, 2002 இன் 1]

(2) இப்பிரிவின்கீழ் செய்யப்படும் மேன்முறையீடு செய்வதற்கான விண்ணப்பத்துக்கான அனுமதி குறித்து அரசியலமைப்பின் 136 ஆம் உறுப்புரையின் கீழ் விதிகள் ஆக்கப்படும்வரை, உயர்நீதிமன்றத்துக்கு விண்ணப்பஞ்செய்வதற்கான விசேட அனுமதிக்கான விண்ணப்பம் குறித்து அவ்வுறுப்புரையின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள், இப்பிரிவின்கீழ் செய்யப்படும் மேன்முறையீடு செய்வதற்கான விண்ணப்பத்துக்கான அனுமதி ஒவ்வொன்றும் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் கீழான விண்ணப்பமொவ்வொன்றும், உயர் நீதிமன்றத்தால் கேட்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நீதிமன்றத்தின் வேறு கருமங்களுக்கு மேலாகச் சாத்தியமாகக் கூடிய அளவுக்கு அதற்கு முன்னுரிமையளிக்கப்படுதலும் வேண்டும். நீதிமன்றமானது, ஒவ்வொரு விண்ணப்பத்தையும் கேட்பதும் விளங்கித் தீர்ப்பதும் தொடர்பாக அவசியமெனக் கருதக்கூடிய அத்தகைய எல்லாப் பணிப்புகளையும் வழங்கலாம்.

(4) சட்டத்துறைத் தலைமையதிபதியானவர், இப்பாகத்தின் கீழான ஏதேனும் மேன்முறையீட்டு அனுமதிக்கான விண்ணப்பத்தில் அல்லது மேன்முறையீட்டில் தோன்றுவதற்கு அல்லது பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

விண்ணப்பத்தின் செலவுத் தொகைகளும் பிறவற்றிற்குமாக விண்ணப்பகாரர் பிணைப்பொறுப்புக் கொடுத்தல். [பி7, 2002 இன் 1]

82ல. (1) 82ம ஆம் பிரிவின்கீழ் விண்ணப்பமொன்று செய்யப்படும் நேரத்தில் அல்லது அதன் பின்னர் மூன்று நாட்களுக்குள்ளாக, விண்ணப்பகாரரால் செலுத்தப்படக்கூடியதாக வரக்கூடிய எல்லாச் செலவுத்தொகைகளுக்கும், விதிப்பனவுகளுக்கும், செலவுகளுக்கும் ஆன பிணைப்பொறுப்பு விண்ணப்பக்காரரின் சார்பாகக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(2) பிணைப்பொறுப்பானது பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாத ஒரு தொகையாக இருத்தல் வேண்டும். இப்பிரிவால் தேவைப்படுத்தப்படும் பிணைப்பொறுப்பானது, பண வைப்பீடொன்றினால் வழங்கப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு பிணைப்பொறுப்பானது, விண்ணப்பகாரரால் கொடுக்கப்படாவிடின், அத்தகைய விண்ணப்பத்தில் மேற்கொண்டு நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படலாகாதென்பதுடன், எதிர்வாதியானவர், அத்தகைய விண்ணப்பத்தை நிராகரிக்கப் பணிக்கும் கட்டளையொன்றுக்கும் எதிர்வாதியின் செலவுத்தொகையைக் கொடுப்பனவுக்கும் என உயர்நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம். அத்தகைய விண்ணப்பத்தைக் கேட்பதற்கும் முடிவு செய்வதற்குமான செலவுத்தொகை உயர்நீதிமன்றத்தால் கட்டளையிடப்பட்டவாறு செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கட்டளை இல்லாதவிடத்து, அது மேன்முறையீட்டின் பொதுச் செலவுத் தொகையின் பாகமாக அமைதலும் வேண்டும்.

(4) விண்ணப்பகாரரால் செலுத்தப்படற்பாலனவான செலவுத் தொகைகளின், இறுப்பனவுகளின், செலவுகளின் செலுத்துகைக்கான பிணைப்பொறுப்பெனும் வகையாகச் செய்யப்பட்ட பணவைப்பீடு, உயர்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுப்பனவு மூலம் செலுத்தப்படுதல் வேண்டும். அது பிரதம நீதியரசரிடம் உரித்தாக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவரால் எந்நோக்கங்களுக்காக இப்பிரிவினால் பிணைப்பொறுப்பு தேவைப்படுத்தப்பட்டதோ அந்நோக்கங்களுக்காக காலத்துக்குக் காலம் மீட்டுப் பெறப்படுதலும் வேண்டும்.

(5) உயர்நீதிமன்றப் பதிவாளர், காலத்துக்குக் காலம் பணத்தொகையும், அப்பணத்தொகை தொடர்புடையதான விண்ணப்பமும் பதிந்து வைத்திருக்கப்பட வேண்டிய புத்தகமொன்றை சம்பந்தப்பட்ட எல்லாக் கட்சிகளும் பார்வையிடுவதற்கென வைத்திருத்தல் வேண்டும்.

(6) அவ்வாறு வைப்பிலிடப்பட்ட பணம், விண்ணப்பகாரரால் செலுத்தப்படற்பாலனவான செலவுத்தொகைகள், இறுப்பனவுகள், செலவுகளின் கொடுப்பனவை நிச்சயப்படுத்துவதற்கு மேற்கொண்டு தேவைப்படாதுவிடின் அத்துடன் தேவைப்படாதபோது பிரதம நீதியரசரின் கட்டளைப்படி திருப்பிக் கொடுக்கப்படுதல் வேண்டும் அல்லது நீதி எவ்வகையில் தேவைப்படுத்துமோ அவ்வாறு கையுதிர்க்கப்படுதல் வேண்டும்.

(7) அத்தகைய கட்டளையானது, விண்ணப்பித்தற்கான முன்னம் பற்றிய அத்தகைய அறிவித்தலின் பின்னரும், அத்துடன் எல்லா நீதியான கோரிக்கைகளும் திருப்திப்படுத்தப்பட்டுள்ளன அல்லது பிரதம நீதியரசரால் தேவைப்படுத்தப்பட்டவாறு வேறுவகையாக போதுமானவாறு அவைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனும் எண்பிப்பின் பின்னரும் ஆக்கப்படலாம்.

(8) அத்தகைய கட்டளையானது, பணம் எந்தக் கட்சிக்காரரின் பெயரில் வைப்பிலிடப்பட்டுள்ளதோ அந்தக் கட்சிக்காரருக்கு அல்லது அதைப் பெறுவதற்கு உரித்துடைய எவரேனும் ஆளுக்குக் கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டுமெனப் பணிக்கலாம்.

மேன்முறை யீட்டின் கேட்பு. [பி7, 2002 இன் 1]

82வ. (1) மேன்முறையீடு செய்வதற்கான அனுமதி அளிக்கப்பட்ட தன்மீது உயர்நீதிமன்றப் பதிவாளர் மனுவை முடிவுறாதுள்ள மேன் முறையீடுகளின் இடாப்பில் பதியவேண்டும் என்பதுடன் மேன்முறை யீட்டின் விடயம், பிரதம நீதியரசரால் அத்தகைய பதிவாளருக்குக் கொடுக்கப்பட்ட பணிப்புரைகளுக்கிணங்க சம்பந்தப்பட்ட கட்சிக்காரர் களுக்கு மேலும் அறிவித்தலின்றி உயர் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகளின் குழாத்தின் முன்னிலையில் கேட்புக்கு வருதல் வேண்டும்.

(2) உயர் நீதிமன்றம் அதன் சொந்த விருப்பப்படி அல்லது அத்தகைய மேன் முறையீட்டிற்கான கட்சிக்காரரொருவரின் விண்ணப்ப மொன்றின் மீதும், சம்பந்தப்பட்ட வேறு கட்சிக்காரர்களுக்கு நியாயமான அறிவித்தலுடனும், அது பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறு அத்தகைய மேன் முறையீட்டின் செலவு தொடர்பான அத்தகைய நியதிகளின்மீது அத்தகைய மேன்முறையீட்டின் கேட்பைத் துரிதப் படுத்தலாம்.

(3) மேன்முறையீடு கேட்புக்கு எடுத்துக் கொள்ளப்படும் போது மேன்முறையீட்டாளர் மேன்முறையீட்டிற்கு ஆதரவாகவும் எதிர் வாதிகள் மேன்முறையீட்டிற்கு எதிராகவும் தம்பக்க வழக்கை எடுத்துரைத்தல் வேண்டும்.

மேன்முறை யீட்டில் உயர் நீதிமன்றத்தின் தத்துவம். [பி7, 2002 இன் 1]

82ள. (1) உயர் நீதிமன்றமானது, மேன் முறையீட்டிற்கான கட்சிக்காரர்களின் தம்பக்க வழக்கைக் கேட்டதன்மீது மேன்முறையீடு தொடர்புடையதான தேர்தல் நீதிபதியின் தீர்மானத்தை அல்லது முடிவை உறுதிப்படுத்தலாம், வேறுபடுத்தலாம் அல்லது எதிர் மாறாக்கலாம்.

(2) பிரிவு 82 ம என்பதன் கீழான தேர்தல் நீதிபதியின் தீர்மானத்தை உயர் நீதிமன்றம் மேன்முறையீட்டில் எதிர்மாறாக்குமிடத்து, அவ்வுயர் நீதி மன்றமானது, தேர்தல் மனுவில் எவ்வுறுப்பினரின் தெரிந்தனுப்புகை அல்லது தேர்தல் பற்றி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதோ அவ் வுறுப்பினர் முறையாகத் தெரிந்தனுப்பப்பட்டாரா அல்லது தேர்ந் தெடுக்கப்பட்டாரா அல்லது தேர்தல் வறிதானதா என்பதை முடிவு செய்தல் வேண்டுமென்பதுடன் அவ்வுயர் நீதிமன்றத்தினால் அத்தகைய முடிவு பற்றி ஒரு சான்றிதழ் வழங்கப்படுதலும் வேண்டும்.

(3) ஏதேனும் மேன்முறையீட்டின் விடயத்தில், உயர்நீதிமன்றமானது மேன்முறையீடு தொடர்புடையதான தேர்தல் மனு புதிதாக, முழுமையாக அல்லது அவ்வுயர்நீதிமன்றம் குறித்துரைக்கும் ஏதேனும் விடயம் தொடர்பில் விளங்கப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிடலாமென்பதுடன், அவ்வுயர்நீதிமன்றம் பொருத்தமானதெனக் கருதுவதான அது தொடர்பான அத்தகைய கணிப்புகளையும் வழங்கலாம்.

(4) உயர்நீதிமன்றமானது, மேன்முறையீட்டின் செலவுத்தொகைக்காகவும் தேர்தல் மனுவைச் சமர்ப்பித்தலுக்காகவும் அதன் மீது அதையடுத்த வழக்கு நடவடிக்கைகளுக்காகவும் ஆன செலவுத் தொகைக்காகவும் அதன் இடை நேர்விளைவானதான செலவுத் தொகைக்காகவும் அது நீதியெனக் கருதும் ஏதேனும் கட்டளையை ஆக்கலாமென்பதுடன், அத்தகைய கட்டளையால், செலவுத் தொகைக்காக தேர்தல் நீதிபதியால் ஆக்கப்பட்ட கட்டளையெதனையும் எதிர்மாறாக்கலாம் அல்லது வேறுபடுத்தலாம் : அத்துடன் உயர்நீதிமன்றத்திலான செலவுத்தொகை அளிப்பு, வரிவிதிப்பு அறவீடு பற்றிய விதிகளை உயர்நீதிமன்றம் ஆக்கலாம்.

சான்றுப்பத்திரமும் அறிக்கையும் சனாதிபதிக்கு அனுப்பப்படுதல். [பி7, 2002 இன் 1]

82ழ. (1) பிரிவு 82ம என்பதன் கீழான தேர்தல் நீதிபதியின் தீர்மானத்துக்கெதிராக அதற்கென இதனகத்து முன்னர் குறித்துரைக்கப்பட்ட காலத்துள் விண்ணப்பமெதுவும் கொடுக்கப்படாதுள்ளவிடத்து, தேர்தல் நீதிபதியானவர், அப்பிரிவின்கீழ் அத்தகைய நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழை 82ய என்னும் பிரிவின்கீழ் அவரால் செய்யப்பட்ட அறிக்கையுடன் சேர்த்து சனாதிபதிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(2) 82ர என்னும் பிரிவின் கீழ் உயர்நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்று கொடுக்கப்பட்டுள்ளவிடத்து. தேர்தல் நீதிபதி, தேர்தல் நீதிபதியால் 82ம என்னும் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழை 82ய பிரிவின்கீழ் அவரால் செய்யப்பட்ட அறிக்கையுடன் சேர்த்து உயர்நீதிமன்றத்துக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(3) தேர்தல் நீதிபதியின் தீர்மானமானது மேன்முறையீட்டில் உயர்நீதிமன்றத்தால் எதிர்மாறாக்கப்பட்டுள்ளவிடத்து. உயர்நீதிமன்றமானது. 82ள என்னும் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அந்நீதிமன்ற முடிவின் சான்றிதழை.

(அ) பிரிவு 82ய என்பதன்கீழ் தேர்தல் நீதிபதியால் செய்யப்பட்ட அறிக்கையுடன் சேர்த்து, அது மேன்முறையீட்டில் எடுக்கப்பட்ட முடிவால் பாதிக்கப்படவில்லையென உயர்நீதிமன்றம் அப்பிராயப்படின்; அல்லது.

(ஆ) உயர்நீதிமன்றம் அவசியமானதெனக் கருதினால், உயர்நீதிமன்றத்தால் செய்யப்பட்ட 82ய என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட் கருமங்கள் தொடர்பான ஓர் அறிக்கையுடன் சேர்த்து.

சனாதிபதிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

82ற. பிரிவு 82ழ என்பதில் தேவைப்படுத்தப்பட்டவாறு, தேர்தல் நீதிபதியொருவரது தீர்மானம் பற்றிய சான்றிதழ் அல்லது உயர் நீதிமன்றத்தின் முடிவு பற்றிய சான்றிதழ் சனாதிபதிக்கு அனுப்பப் பட்டதன் மீது விடயத்துக்கேற்றாற்போல, அத்தீர்மானம் அல்லது முடிவு பயனுறுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க - சான்றிதழின் பயன் [பி7, 2002 இன் 1]

(அ) தெரிந்தனுப்புகை அல்லது தேர்தல் உறுதிப்படுத்தப்படுதலும் வேண்டும் : அல்லது

(ஆ) தெரிந்தனுப்புகை அல்லது தேர்தல், விடயத்துக்கேற்றாற்போல, அத்தகைய தீர்மானத்துக்கு அல்லது முடிவுக்கு இணங்க மாற்றப்படுதலும் வேண்டும் : அல்லது

(இ) தீர்மானம் அல்லது முடிவு, ஏதேனும் தேர்தல் பிரதேசத்தின் ஏதேனும் வட்டாரம் தொடர்பான தேர்தல் வறிதானதென வெளிப்படுத்தப்பட வேண்டிய பயனைக் கொண்ட தாயுள்ளவிடத்து, சனாதிபதி, அத்தகைய சான்றிதழைப் பெற்றுக்கொண்ட ஒரு மாதத்துக்குள்ளாக, வர்த்தமானி வெளியிடப்படும் கட்டளை மூலம், அந்தத் தேர்தல் இடப்பரப்பு தொடர்பாக தேர்தலொன்று நடாத்தத் தேவைப்படுத்தலும் வேண்டும். [பி69, 2012இன் 22]

82ன. (1) (அ) சனாதிபதியானவர், 82ழ என்னும் பிரிவின்கீழ் தேர்தல் நீதிபதியின் அல்லது உயர்நீதிமன்றத்தின் அறிக்கை அவருக்கு அனுப்பப்பட்டு பெற்றுக்கொண்டதன்மேல், அவ்வறிக்கையின் பிரதியொன்றை வர்த்தமானியில் உடனடியாக வெளியிடச் செய்வித்தல் வேண்டும். அறிக்கையின் பயன். [பி7, 2002 இன் 1]

(ஆ) (i) பந்தி (அ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கை, எவரேனும் ஆளால் ஓர் ஊழல் பழக்கம் அல்லது சட்டமுரணான பழக்கம் புரியப்பட்டுள்ளதென்னும் பயனைக் கொண்டதாயுள்ள விடத்து, அந்த ஆள், சொல்லப்பட்ட அறிக்கையின் தேதியன்று அப்பழக்கத்துக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருந்தாற்போன்று அதே தகைமையீனங்களுக்குள்ளாக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், தேர்தல் மனுவின் விடயப்பொருளான தேர்தல் தொடர்பான ஏதேனும் நியமனப் பத்திரத்திலிருந்து அத்தகைய ஆளின் பெயரை தெரிவத்தாட்சி அலுவலர் அகற்றிவிடுதலும் வேண்டும்.

(ii) பந்தி (அ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கை, அத்தகைய ஊழல் பழக்கம் அல்லது சட்டமுரணான பழக்கம் தேர்தலொன்றில் வேட்பாளராயிருக்கும் ஆளொருவர் அறிந்திருக்கவும் அவரது சம்மதத்துடனும் அல்லது அவரது முகவரால் புரியப்பட்டது என்னும் பயனைக் கொண்டதாயுள்ளவிடத்து, அந்த ஆள் மேற்சொல்லப் பட்டவாறு அதே தகைமையீனங்களுக்குள்ளாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் வர்த்தமானியில் வெளியிடப்படுகின்ற அத்தகைய ஒவ்வோர் அறிக்கையையும் உடனடியாகப் பரிசீலனை செய்தலும் உடனடியாக தேருநர் இடாப்பிலிருந்து, தேர்தலொன்றில்

வாக்களிக்கத் தகைமையற்றவரானவரென அவ்வறிக்கையில் காணப் படும் ஆளொவ்வொருவாது பெயரையும் நீக்கிவிடுதலும் ஒவ்வொரு பதிவு அலுவலரதும் கடமையாதல் வேண்டும்.

சமர்ப்பித்தற்கான காலம். [பி7, 2002 இன் 1] [பி3, 2023 இன் 30]

82கா. (1) இக்கட்டளைச் சட்டத்தின் கீழான ஒவ்வொரு தேர்தல் மனுவும் தேர்தல் முடிவு கசெற்றில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து நாற்பத்திரெண்டு நாட்களுக்குள்ளாகச் சமர்பிக்கப்படுதல் வேண்டும் :

ஆயின், எவ்வுறுப்பினரின் தேர்தல் கேள்விக்குட்படுத்தப் பட்டுள்ளதோ அவ்வுறுப்பினரால் அல்லது அவ்வுறுப்பினரின் முகவரால் அல்லது அவ்வுறுப்பினரின் சட்ட உறவினரால் அத்தகைய ஊழல் பழக்கத்தை அல்லது சட்டமுரணான பழக்கத்தைப் பின்பற்றி அல்லது அதனை மேற்கொண்டு சொல்லப்பட்ட தேதியிலிருந்து பணக்கொடுப்பனவொன்று செய்யப்பட்டு அல்லது வேறு செயல் செய்யப்பட்டது அல்லது ஆற்றப்பட்டது எனக் குறிப்பாகச் சார்த்துவதும் ஓர் ஊழல் பழக்கம் அல்லது சட்டமுரணான பழக்கம் புரியப்பட்டுள்ளது என்னும் ஏதுவின்மீது தெரிந்தனுப்புகையை அல்லது தேர்தலைக் கேள்விக்குட்படுத்துவதும் ஆன தேர்தல்மனுவொன்று, அத்தகைய ஊழல் பழக்கத்துடன் அல்லது சட்டமுறையான பழக்கத்துடன் தொடர்புபடும் அந்த அளவுக்கு அத்தகைய கொடுப்பனவு அல்லது செயல் நிகழ்ந்த தேதியிலிருந்து இருபத்தெட்டு நாட்களுக்குள் எந்நேரத்திலும் சமர்ப்பிக்கப்படலாம்.

(2) ஓர் ஊழல் பழக்கம் அல்லது சட்டமுரணான பழக்கம் என்னும் சார்த்துகையொன்றின் மீது தெரிந்தனுப்புகையை அல்லது தேர்தலைக் கேள்விக்குட்படுத்தும் நோக்கத்துக்கென உரிய நேரத்தில் சமர்ப்பிக்ப்பட்ட தேர்தல் மனுவானது, தேர்தல் நீதிபதியின் அனுமதியுடன் எக்காலத்துள் அந்த ஏதுவின்மீது தெரிந்தனுப்புகையை அல்லது தேர்தலைக் கேள்விக்குட்படுத்தும் தேர்தல் மனுவொன்று சமர்ப்பிக்கப்படுதல் கூடுமோ அக்காலத்தினுள் திருத்தப்படலாம்.

"வெளியிடுவதற் கெதிரான தடை. [பி70, 2012இன் 22]

82ஙா. தேர்தலொன்றில் வாக்களித்துள்ள தேருநரெவரும், அத்தகைய தேர்தலைக் கேள்விக்குட்படுத்துவதற்கான ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் அவர் எந்த வேட்பாளருக்கு வாக்களித்துள்ளாரென கூறுவதற்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது."

பரிசீலனை யொன்றின் போது வாக்குகள் நீக்கப்படுதல்.

82சா. (1) தேர்தல் மனுவொன்றின் விளக்கத்திலான பரிசீலனை யொன்றின்மீது பின்வரும் வாக்குகள் மட்டும் அடித்து நீக்கப்படுதல் வேண்டும், அவையாவன -

(அ) வாக்கு எந்த வாக்கெடுப்பு நிலையத்தில் பதியப்பட்டுள்ளதோ அந்த வாக்கெடுப்பு நிலையத்துக்கென ஒதுக்கப்பட்ட தேருநர் இடாப்பிலிருக்காத பெயரைக்கொண்ட :

(ஆ) இலஞ்சம், உபகாரஞ்செய்தல் அல்லது தகாத செல்வாக்கு என்பவற்றால் சம்பாதித்துப் பெறப்பட்ட :

(இ) தேர்தலில் ஆள்மாறாட்டத்தைப் புரிந்த அல்லது புரியச் செய்வித்த :

(ஈ) ஒன்றுக்கு மேற்பட்ட இடப்பரப்பில் வாக்களித்துள்ளாரென எண்பிக்கப்பட்ட :

(உ) அரசியலமைப்பின் 89 ஆம் உறுப்புரையின் (உ), (ஊ), (எ), (ஏ), (ஐ), (ஓ) என்னும் பந்திகளின் செயற்பாடு காரணமாக அத்தேர்தலில் வாக்களிக்க இயலாதிருந்த :

(ஊ) பிரிவு 39 ஆ என்பதன் (1) ஆம் உட்பிரிவின் காரணமாக அத்தேர்தலில் நேரடியாக வாக்களிக்க உரித்தற்றவரா யிருந்து அத்தேர்தலில் நேரடியாக வாக்களித்த

எவரேனும் ஆளின் வாக்கு.

(2) ஓராம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட விடயத்தில் தவிர, பதிவு செய்யப்பட்ட தேருநரொருவரின் வாக்கு அவ்வாக்காளர், தேருநர் இடாப்பில் தமது பெயரைப் பதிந்து வைத்திருக்க அல்லது பதிந்துகொள்ள தகைமையற்றவர் என்னும் காரணத்துக்காக மட்டும் பரிசீலனையொன்றின்போது அடித்து நீக்கப்படுதலாகாது.

(3) பரிசீலனையொன்றின்போது, செல்லுபடியான வாக்கொன்று என எண்பிக்கப்பட்ட ஏதேனும் கேட்டுப்பெறும் வாக்கு, மனுவுக்கான ஏதேனும் கட்சிக்காரரின் விண்ணப்பத்தின்மேல், வாக்காகச் சேர்த்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.

தேர்தல் மனுக்கள் மீதான நடவடிக்கை முறையும் நடைமுறையும். [பி7, 2002 இன் 1]

82 ஞா. இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் தேர்தல் மனுக்கள் மீதான நடவடிக்கை முறையும் நடைமுறையும், அரசியலமைப்பின் 136 ஆம் உறுப்புரையின்கீழ் உயர்நீதிமன்றத்தால் ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்கவிருத்தல் வேண்டும்.

வாக்குச்சீட்டு வாக்கெண்ணும் அலுவலரால் நிராகரிக்கப்படுதல் இறுதியானதாதல். [பி7, 2002 இன் 1]

82டா. தேர்தல் மனுவொன்றின்மீது 63 ஆம் பிரிவின்கீழ் வாக்குச் சீட்டொன்று நிராகரிக்கப்படுதல் வேண்டுமா அல்லவா என்பது பற்றிய வாக்கெண்ணும் அலுவலரொருவரின் முடிபானது கேள்விக்குட்படுத்தப் படுதல் ஆகாது.

குறித்த சில ஊழல் அல்லது சட்டமுரணான பழக்கங்களின் விடயத்தில் வேட்பாளர் தொடர்பில் பழிவிலக்கும் அறிக்கை. [பி7, 2002 இன் 1]

82ணா. இக்கட்டளைச்சட்டத்தின் கீழான தேர்தல் ஒன்று தொடர்பான தேர்தல் மனுவொன்றின் விளக்கத்தின்மீது, அத்தகைய தேர்தல் தொடர்பாக உபசாரம் செய்தல் அல்லது தகாத செல்வாக்கு அல்லது ஏதேனும் சட்டமுரணான பழக்கம் என்ற தவறுக்கு, அவரது முகவர்களினால் அத்தகைய, தேர்தலில் வேட்பாளரொருவர் குற்றவாளியாயுள்ளார் என தேர்தல் நீதிபதி அறிக்கை செய்யுமிடத்து, அத்துடன் சட்டத்துறைத் தலைமையதிபதி தம் பக்க வழக்கை எடுத்துரைப்பதற்குச் சந்தர்ப்பமொன்றை அளித்த பின்னர், வேட்பாளரானவர். -

(அ) அத்தகைய தேர்தலில் வேட்பாளரினால் ஊழல் பழக்கமெதுவும் அல்லது சட்டமுரணான பழக்கமெதுவும் புரியப்படவில்லையெனவும், சொல்லப்பட்ட அறிக்கையில்: குறிப்பிடப்பட்ட தவறுகள் அத்தகைய வேட்பாளரின் கட்டளைக்கு

முரணாகவும் அனுமதியின்றியும் அல்லது உட்கையின்றியும் புரியப்பட்டன வென்றும் : அத்துடன்

(ஆ) அத்தகைய தேர்தலில், அத்தகைய வேட்பாளர், ஊழல் பழக்கங்களும் சட்டமுரணாண பழக்கங்களும் புரியப்படு தலைத் தடுப்பதற்காக நியாயமான எல்லா வழிவகை களையும் எடுத்தார் எனவும் : அத்துடன்

(இ) சொல்லப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட தவறுகள் அற்பமான, முக்கியமற்ற, மட்டுப்படுத்தப்பட்ட தன்மை கொண்டவை எனவும் : அத்துடன்

(ஈ) அத்தகைய வேட்பாளரையும் அவரது முகவர்களையும் பொறுத்தவரை, மற்றெல்லா விதங்களிலும் தேர்தலானது எவ் ஊழல் பழக்கமோ அல்லது சட்டமுரணான பழக்கமோ அற்றதெனவும்.

நீதிமன்றத்துக்கு எண்பித்துள்ளார் எனத் தேர்தல் நீதிபதி மேற் கொண்டும் அறிக்கை செய்துள்ளவிடத்து, அப்போது, அத்தகைய வேட்பாளரின் தேர்தல், அத்தகைய அறிக்கையில் குறிப்பிடப்பட்ட தவறுகளின் காரணமாக வறிதாதலாகாதென்பதுடன், இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் வேட்பாளர் எவ்விதத்தகுதியீனத்துக்கும் இடப் படுதலும் ஆகாது.

மாசற்ற செயலுக்குச் சட்டமுரணினின்றும் விதி விலக்களிக்க நீதிமன்றத்துக்குள்ள தத்துவம்.

[பி7, 2002 இன் 1]

82தா. விண்ணப்பம் செய்யப்படுவதன் மேல், விடயத்துக்கேற்றாற் போல தேர்தல் நீதிபதியொருவருக்கு அல்லது மேன் முறையீடொன்றின் விடயத்தில் உயர் நீதிமன்ற நீதிபதியொருவருக்கு, போதுமான தென தேர்தல் நீதிபதி அல்லது உயர்நீதிமன்ற நீதிபதி காணக்கூடிய தான அத்தகைய சான்று மூலம் -

(அ) ஒரு தேர்தலில் வேட்பாளர் ஒருவரின் அல்லது அவரது முகவர்களுள் எவரதும் அல்லது வேறு ஆளின் ஏதேனும் செயல் அல்லது செய்யாமையானது, இக்கட்டளைச் சட்டத்தை மீறுகின்ற கொடுப்பனவு, ஈடுபடுத்தல், தொழிலுக்கமர்த்தல் அல்லது ஒப்பந்தமாக இருக்கின்றமை காரணமாக அல்லது இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளெதனையும் வேறு வகையில் மீறுகின்றமை காரணமாக, இப்பிரிவுக்காக அல்லா விடின், சட்டமுரணான பழக்கமொன்றாகும் என்றும் : அத்துடன்

(ஆ) அத்தகைய ஏதேனும் செயல் அல்லது செய்யாமை தற்செயலாக, அல்லது எதிர்பாராத கணிப்புகளால் அல்லது அதையொத்த தன்மையுடைய வேறு சில நியாயமான காரணத்தினால் நிகழ்ந்த தென்றும் அத்துடன் எப்படி யிருப்பினும் நன்நோக்கின்மையால் நிகழ்ந்ததல்லவென்றும்.

காட்டப்பட்டு, அத்துடன், வேட்பாளர்களுக்கும், தெரிவத்தாட்சி அலுவலருக்கும், அத்தேர்தல் மாவட்டத்தினுள் இருக்கும் எவரேனும் தேருநருக்கும் தம்பக்க வழக்கை எடுத்துரைப்ப தற்கான சந்தர்ப்பமொன்றையளித்த பின்னர்,

சம்பந்தப்பட்ட வேட்பாளரையும், அவரது முகவரையும் அல்லது வேறு ஆளையும் அல்லது அவர்களுள் எவரையேனும், இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் சொல்லப்பட்ட செயலுக்கான அல்லது செய்யாமைக்கான விளைவுகளுள் எவற்றுக்கேனும் ஆளாக்காது விடுதல் நீதியானதாக அச் சூழ்நிலைகளில் விடயத்திற்கேற்ப, தேர்தல் நீதிபதிக்கு அல்லது உயர்நீதிமன்ற நீதிபதியானவர், அத்தகைய செயலை அல்லது செய்யாமையை ஒரு சட்டமுரணாண பழக்கமாக, கொடுப்பனவாக, தொழிலுக்கமர்த்துகையாக அல்லது கூலிக்கமர்த்துகையாக ஆக்குகின்றதான இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளிலிருந்து விதிவிலக்கொன்றாக அதையே அனுமதித்துக் கட்டளை யென்றை ஆக்கலாமென்பதுடன், அதன்மேல் அத்தகைய வேட்பாளர், முகவர் அல்லது ஆள் சொல்லப்பட்ட செயலால் அல்லது செய்யாமையால் இக்கட்டடைளச் சட்டத்தின் கீழான விளைவுகளெவற்றுக்கும் ஆளாக்கப்படுதலாகாது.

பாகம் V

நானாவிதமானவை

கட்டளைச் சட்டத்தைத் திரிபுசெய்வதற்கான அல்லது குறைநிரப்புவதற்கான தத்துவம். [பி26, 1977 இன் 24] [பி.71, 2012 இன் 22]

84. இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் தேர்தற் பிரதேசமொன்றின் ஒவ்வொரு வட்டாரத்திற்கான தேருநர் நிரல்களைத் தயாரித்தல் அல்லது திருத்தியமைத்தல் தொடர்பான எல்லா விடயங்களுக்கும் அல்லது இக்கட்டளைச் சட்டத்தினால் அதற்கென ஏற்பாடு செய்யப்படாத உள்ளூர் அதிகார சபையொன்றின் ஏதேனும் பொதுத் தேர்தலுடன் தொடர்பான எல்லா விடயங்களுக்கும் அல்லது எதிர்பாராத அல்லது சிறப்பான சூழ்நிலைகளை மேவுவதற்கென அவைபொருட்டு இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளில் குறை நிரப்பப்பட வேண்டிய அல்லது திரிபுசெய்யப்பட வேண்டிய எல்லா விடயங்களுக்கும் வர்த்தமானியில் வெளியிடப்படும் அமைச்சரின் கட்டளையினால் ஏற்பாடு செய்யப்படலாம் : அத்துடன் அத்தகைய ஒவ்வொரு கட்டளையும் அவ்வாறு வெளியிடப்பட்டதும் இதனகத்தே சட்டமாக்கப்பட்டாற் போன்று செல்லுபடியுள்ளதாயும், பயனுள்ளதாயும் இருத்தல் வேண்டும்.

வாக்களிப்பதற்கென வேலையாட்களுக்கு லீவு வழங்குதல் வேலைக்கமர்த்து வோரின் கடமை. [பி.23, 1965 இன் 15]

84அ. (1) இக்கட்டளைச்சட்டத்தின் கீழ் ஏதேனும் தேர்தலில் வாக்களிப்பதற்கு உரித்துடைய ஆளொருவரை வேலைக்கமர்த்தியவராக விருக்கின்ற எவ் ஆளும், அத்தகைய ஆளினால் அதற்காக எழுத்து மூலம் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பேரில், அத்தகைய ஆள் அத்தேர்தலில் வாக்களிப்பதை இயலச்செய்வதற்காக வேலைக் கமர்த்திய அவ்ஆள் போதியதெனக் கருதக்கூடிய தொடர்ச்சியான காலத்திற்கு (அக்காலம் இரண்டு மணித்தியாலயங்களுக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும்) சம்பள இழப்பை ஏற்படுத்தாத லீவை அத்தகைய, ஆளுக்கு வழங்குதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவ் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஆள் எவரும்,

* 2002 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் 83 ஆம் பிரிவு நிக்கப்பட்டுள்ளது.

(முதலாம் அட்டவணை 2023 இன் 21)

தவறொருன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதி வானொருவரினாற் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றக் தீர்ப்பளிக்கப்படுமிடத்து, இரண்டு இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப் பணத்திற்கு அல்லது ஒரு மாதகாலத்திற்கு மேற்படாத பாலத்திற்கான இருவகையில் ஒருவகை மறியற்தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

ஆட்கள், இடங்கள், பற்றித் தவறான விவரணம், [பி23,1965 இன் 15]

84ஆ. இக்கட்டளைச்சட்டத்தின் கீழ் அல்லது இதன் நோக்கங் களுக்கெனத் தயாரிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் தேருநர் நிரலில், அறிவித்தலில் அல்லது வேறு ஆவணத்தில் பெயர் குறிக்கப்பட்ட அல்லது விவரிக்கப்பட்ட எவரேனுமாளின் அல்லது ஏதேனும் இடத்தின் தவறான பெயர் அல்லது தவறான விவரணம், அத்தகைய நிரலில், அறிவித்தலில் அல்லது ஆவணத்தில் அவ் ஆளை அல்லது இடத்தை அடையாளங் கண்டுணரக்கூடிய வகையில் அவ்வாள் பற்றி அல்லது அவ்விடயம் பற்றிக் குறிக்கப்பட்டிருந்தால், அது அவ் ஆள் அல்லது அவ்விடம் தொடர்பிலான இக் கட்டளைச்சட்டத்தில் நடைமுறையை எவ்விதத்திலும் பாதித்தலாகாது.

வாக்கெடுப்பு நிலையங்களாக உபயோகிப் பதற்கென வளவுகளைத் தேவைக் கெடுத்தல் [பி.23,1965 இன் 15]

84 இ. (1) எழுபதாம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பாடசாலை அல்லது வளவுக்களெவையும் வாக்கெடுப்பு நிலையமாக உபயோகிக்கும் நோக்கத்திற்கெனத் தேவைப்படுகின்றனவென ஆணையாளர் கருத்துகின்றவிடத்து, அவ்வளவுகளின் உண்மையான உடைமையையுடைய ஆளுக்கோ அல்லது அவ்வளவுகளின் அவ்வாறான உண்மையான உடைமை ஆளெவருக்கும் இல்லாதவிடத்து. அத்தகைய வளவுகளின் சொந்தக்காரருக்கோ முகவரியிடப்பட்டுச் சேர்ப்பிக்கப்பட்ட எழுத்திலான கட்டளையின் மூலம் அந்நோக்கத்திற்கென அவ்வளவுகளை அவர் தேவைக்கெடுக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வளவுகளெவையும் தேவைக்கெடுக்கப் படுகின்றவிடத்து. அத்தகைய தேவைக்கெடுத்தற் காலம் நான்கு மாதங்களுக்கு மேற்படுதலாகாது.

(3) இப்பிரிவில் "வளவுகள்" என்பது, ஏதேனும் காணி, கட்டடம் அல்லது கட்டடப்பகுதி எனப் பொருள்படுதோடு, ஒரு குடிசையையும் கொட்டிலையும் அல்லது கட்டமைப்பையும் அல்லது அவற்றின் ஒரு பகுதியையும் உள்ளடக்கும்.

வளவுகளைத் தேவைக் கெடுப்பதற்கான நட்டஈடு [பி23,1965 இன் 15]

84ஈ. (1) பிரிவு 84 இ இன் கீழ் வளவுகளெவையும் தேவைக் கெடுக்கப்படுகின்றவிடத்து, தேவைக்கெடுப்பதற்கு நேர்முன்னராக அவ் வளவுகளின் உண்மையான உடைமையை வைத்திருந்த ஆளுக்கு அல்லது அவ்வாறு உண்மையான உடைமை ஆளெவருக்கும் இல்லாத விடத்து அவ்வளவுகளின் சொந்தக்காரருக்கு அந்நோக்கத்திற்கெனப் பாராளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பணத்தொகையிலிருந்து அவ்வாறு தேவைக்கெடுப்பதற்கான நட்டஈட்டை ஆணையாளர் கொடுத்தல் வேண்டும் ; அத்துடன் தேவைக்கெடுத்தற் காலத்தின்போது அவ்வளவு களுக்கேற்பட்ட சேதமெதனையும் அவர் ஈடுசெய்தல் வேண்டும்.

(2) எவையேனும் வளவுகள் தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின் கீழ்கொடுபடற்பாலதான நட்டஈட்டுத்தொகை பின்வருவனவற்றைக் கவனத்தில்கொண்டு தீர்மானிக்கப்படுதல் வேண்டும் : அதாவது -

(அ) எவையேனும் வளவுகள் தொடர்பிற் கொடுபடற்பாலதான வாடகையையும், அல்லது வாடகையெனில், அவ்வாறு கொடுக்கப்படத் தேவையில்லையெனில், அவ்விடத்தில் அதேவிதமான வளவுகளுக்குத் கொடுக்கப்பட வேண்டிய வாடகையையும் :
அத்துடன் -

(ஆ) எவையேனும் வளவுகள் தேவைக்கெடுக்கப்பட்டதன் விளைவாக, தேவைக்கெடுப்பதற்கு நேர்முன்னராக அவ்வளவுகளின் உண்மையான உடைமையை வைத்திருந்த ஆள், அவரது வதிவிடத்தையோ தொழில் இடத்தையோ மாற்றுவதற்குக் கட்டாயப்படுத்தப்பட்டிருப்பின், அம் மாற்றத்தின் இடைநேர் விளைவான நியாயமான செலவுகள் எவையேனுமிருப்பின் அவற்றையும்,

கவனத்திற்கொண்டு தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் கீழ் நட்டஈட்டிற்கு உரித்துடைய ஆள் எவரும் நட்டஈடுத் தொகை பற்றிய ஆணையாளரின் முடிவினால் இன்னலுறுமிடத்து, அம்முடிவிற்கெதிராக எழுத்துமூலம் அமைச்சருக்கு மேன்முறையீடு செய்யலாம். அத்தகைய மேன்முறையீடு செய்யப்பட்டதன் மேல் அமைச்சர் நடுத்தீர்ப்பாளரொருவரை நியமித்து, அவரது தீர்மானத்திற் கென அத்தகைய மேன்முறையீட்டை அவரிடம் ஆற்றுப்படுத்துதல் வேண்டும் : அத்தகைய மேன் முறையீட்டின்மீது நடுத் தீர்ப்பாளரின் தீர்மானம் இறுதியானதாயிருத்தல் வேண்டும்.

அறிவித்தல்களை வெளியிடுதல்.

85. வெளிப்படையாக வேறு வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந் தாலன்றி, வெளியிடப்படும்படி இக்கட்டளைச்சட்டத்தினால் தேவைப் படுத்தப்படும் அறிவித்தல் ஒவ்வொன்றும் -

(அ) சிங்கள மொழியிலும் தமிழ் மொழியிலும் இருத்தல் வேண்டும் என்பதுடன் அதன் ஆங்கிலமொழி பெயர்ப்பை கொண்டி ருத்தலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) அத்தகைய பிரதேசத்தின் உள்ளூர் அதிகார சபையின் அலுவலகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டு, அதற்கு விளம்பரம் கொடுப்பதற்கான மிகத்திறமையான வழியென அவ்வெளியிடு தலுக்குப் பொறுப்பாயுள்ள அலுவலர் கருதக்கூடியவாறான முறையாக வேறு வகையிலும் வெளியிடப்படுதல் வேண்டும்.

அறிவித்தல்களை அல்லது ஆவணங் களை அழித்து விடுதல் முதலியன [பி.24,1965 இன் 15]

85அ. இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் எந்தவோர் உள்ளூர் அதிகார சபையினாலும் காட்சிக்கு வைக்கப்படுகின்ற ஏதேனும் அறிவித்தலை அல்லது இக்கட்டளைச் சட்டத்திற்கிணங்கப் பார்வைக்கெனக் கிடைக்கப் பெறுகின்ற ஏதேனும் ஆவணத்தைச் சட்டமுறையான அதிகாரமின்றி

(முதலாம் அட்டவணை 2023 இன் 21)

அழித்துவிடுகின்ற, உருக்குலைத்துப் பயனற்றதாக்குகின்ற, உரு வழிக்கின்ற அல்லது அகற்றுகின்ற ஆள் ஒவ்வொருவரும், தவறொன் றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப் பளிக்கப்படுமிடத்து, இருபத்தையாயிரம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

"தேர்தல்களுக்கான செலவுகள்.
[பி86, 1977 இன் 24]
[பி.72, 2012 இன் 22]

86. ஏதேனும் உள்ளூர் அதிகார சபையின் ஏதேனும் தேர்தலின் நோக்கத்துக்காக வேட்பாளர்களைப் பெயர்குறித்து நியமித்தல் சம்பந்தமாகவும், ஒரு பொதுத் தேர்தலை நடாத்துவதிலும், ஏதேனும் தேர்தற் பிரதேசத்தின் ஒவ்வொரு வட்டாரத்தினதும் தேருநர் நிரலைத் தயாரிப்பதில் இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் உறப்பட்ட எல்லாச் செலவுகளும், திரட்டு நிதியத்திலிருந்து கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டும்.

குற்றப்பணங்கள் திரட்டு நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

87. இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லாக் குற்றப்பணங்களும் அறவிடப்பட்டதும் அந்த நீதிமன்றத்தினால் திரட்டு நிதியத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

*பொருள்கோடல்.

*89. இக்கட்டளைச் சட்டத்தின் சந்தர்ப்பம் வேறுவிதமாக தேவைப்படுத்தினாலன்றி-

[பி19, 1963 இன் 9]

"அட்டவணை" என்பது இக்கட்டளைச்சட்டத்திற்கான ஓர் அட்டவணை எனப்பொருள்படும்.

[பி28, 1987இன் 28]

"ஆணையாளர்" என்பது, தேர்தல்கள் ஆணையாளர் என்று பொருள்படும்;

[பி21, 1953இன் 25]

"அப்போதைக்கு நடைமுறையிலிருக்கின்ற பாராளுமன்ற இடாப்பு" என்பது 1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசுப் பேரவைக் கட்டளையின்கீழ், அப்போதைக்கு நடைமுறை யிலிருக்கின்ற தேருநர்களின் ஏதேனும் இடாப்பு எனப் பொருள்படும்;

[பி31, 2012 இன் 22]

"பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது, மானியக் கொடை, கடன் என்ற வகையாக அல்லது வேறு வகையாக அரசாங்கத்தினால் முழுமையாக அல்லது பகுதியளவில் வழங்கப்பட்ட நிதிகளுடன் அல்லது மூலதனத் துடன், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டம் தவிர்ந்த வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்படுகின்ற ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு என்று பொருளாகும்;

[பி31, 2012 இன் 22]

"பகிரங்க நிறுவனம்" என்பது, ஓர் அமைச்சையும், அரசாங்கத் திணைக்களத்தையும், பகிரங்கக் கூட்டுத்தாபனத்தையும் ஒரு மாகாண சபையினால் அல்லது ஒரு மாகாண சபையின் நியதிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஏதேனும் நிறுவனத்தையும், ஓர் உள்ளூர் அதிகார

* 88 ஆம் பிரிவு விட்டுவிடப்பட்டது இவ்வேற்பாடு, பயனுக்குவந்து கழிந்துவிட்டது.

சபையையும், அரசாங்கத்துக்குரித்தாக்கப்பட்ட ஏதேனும் தொழிலையும் அல்லது வேறு பொறுப்பு முயற்சியையும் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்டதாகக் கருதப்பட்டவொரு கம்பனியில், அரசாங்கம், ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபை பங்குகளின் ஐம்பது சதவீதத்துக்கு மேற்பட்டவற்றை வைத்திருக்கின்ற அக்கம்பனியையும் உள்ளடக்கும்;".

"இளைஞர்" என்பது 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தேருநர் பதிவுச் சட்டத்தின்கீழ் பயன்பாட்டிலுள்ள தேருநர் இடாப் மீளாய்வு செய்யப்பட, ஆரம்பித்த ஆண்டின் யூன் முதலாம் தேதியன்றுள்ளவாறாக பதினெட்டு வருடங்களுக்குக் குறையாததும் எந்தத் தேர்தலின் அவர் ஒரு வேட்பாளராக வர நாடுகின்றாரோ இக்கட்டளைச் சட்டத்தின் கீழான அந்தத் தேர்தலொன்றின் பெயர் நியமன காலப்பகுதியின் கடைசி நாளன்று உள்ளவாறு முப்பத்தைந்து வருடங்களுக்கு மேற்படாததுமான வயதுடைய ஆள் எனப் பொருளாகும். [பி14, 1990 இன் 25]

"பிரதேச சபை இடப்பரப்பு" என்பது பிரதேச சபைகள் சட்டத்தின் கருத்திற்குட்பட்ட ஏதேனும் பிரதேச சபை இடப்பரப்பு என்று பொருள்படும்; [பி8, 1987இன் 20]

"மாவட்டம்" என்பது, நிருவாக மாவட்டமொன்று எனப் பொருள்படம்; [பி7, 1955இன் 22]

"பட்டினம்" என்பது, நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் கருத்திற்குட்பட ஏதேனும் பட்டினம் என்று பொருள்படும். [பி8, 1987இன் 20]

"நியமித்த தேதி" என்பது 1947 ஆம் அண்டு பெப்புருவரி 10 ஆம் நாள் எனப் பொருள்படும்;

"அங்கீகரிக்கப்பட்ட சின்னம்" என்பது, வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவிப்பின்மூலம், இக்கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்டவொரு சின்னம் என்று பொருளாகும்."; [பி73, 2012 இன் 22]

"மாநகர முதல்வர்" என்பது, மாநகர சபை ஒன்றின் முதல்வர் அல்லது நகரசபை ஒன்றின் அல்லது பிரதேச சபை ஒன்றின் தவிசாளர் என்று பொருள்படும்; [பி8, 1987இன் 20]

"பிரதி மாநகர முதல்வர்" என்பது மாநகர சபை ஒன்றின் பிரதி மாநகர முதல்வர் அல்லது நகர சபை ஒன்றின் அல்லது பிரதேச சபை ஒன்றின் துணைத் தவிசாளர் என்று பொருள்படும்; [பி8, 1987இன் 20]

"தேர்தல் மாவட்டம்" என்பது, 1946 ம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளையிலுள்ள அதே கருத்தையுடையதாகும்; [பி21, 1953இன் 25]

"தேர்தல் அலுவலர்"

[பி8, 1987இன் 20] "உள்ளூர் அதிகார சபை" என்பது, ஏதேனும் மாநகர சபை நகர சபை அல்லது பிரதேச சபை என்று பொருள்படும்;

உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்

[பி19, 1963இன் 9] "பாராளுமன்றப் பொதுத் தேர்தல்" என்பது பாராளுமன்ற உறுப்பினர்களின் பொதுத்தேர்தலொன்று எனப்பொருள்படும்;

[பி31, 2017 இன் 16] "அதிகாரமளிக்கப்பட்ட முகவர்" என்பது, விடயத்துக்கேற்ப, அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்று தொடர்பாக அல்லது சுயேச்சைக் குழுவொன்று தொடர்பாக, விடயத்துக்கேற்ப, அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியின் அல்லது சுயேச்சைக்குழுவின் அதிகாரமளிக்கப்பட்ட முகவராகவிருப்பதற்கு அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியின் செயலாளரினால் அல்லது அந்தச் சுயேச்சைக் குழுவின் குழுத்தலைவரினால் எழுத்தில் வெளிப்படையாக அதிகாரமளிக்கப்பட்டவரும், அவரது அதிகாரவளிப்பு, எந்தத் தேர்தல் இடப்பரப்புத் தொடர்பில் தேர்தல் நடைபெறுகின்றதோ அந்தத் தேர்தல் இடப்பரப்பின் தெரிவத்தாட்சி அலுவலருக்குப் பெயர்நிமனக் காலப்பகுதி தொடங்குவதற்கு முன்னர் குறைந்தபட்சம் எழுபத்திரண்டு மணித்தியாலங்களுக்கு முன்னரேனும் அத்தகைய செயலாளரினால் அல்லது அத்தகைய குழுத்தலைவரினால் அறிவிக்கப்பட்டுள்ளதாகவுள்ள வருமான ஆளொருவர் என்று பொருளாகும்;".

[பி19, 1963இன் 9] "பாராளுமன்றத் தேர்தல்கள் அரசப்பேரவைக் கட்டளை" என்பது 1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளை எனப் பொருள்படும்;

[பி19, 1963இன் 9] "மாநகரப் பிரதேசம்" என்பது நியமித்த தேதியன்று உளதான ஒவ்வொரு மாநகர சபையினதும் நிருவாக எல்லைக்குள் பிரதேசம் என, அல்லது மாநகர சபைகளை அமைத்தல் பற்றி அப்போதைக்கு வலுவிலிருக்கின்ற ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கருத்திற்குட்பட்ட மாநகரமாகவிருக்கின்றவொரு பிரதேசம் எனப் பொருள்படும்.

[பி31, 2017இன் 16] "மேன்மிகை" என்பது, ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக்குழு, இக்கட்டளைச் சட்டத்தின் 65 ஆ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி தேர்ந்தெடுக்கப்படுவதற்கு உரித்துள்ளதாகவுள்ள எண்ணிக்கைக்கு விஞ்சுதலாக அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியிலிருந்து அல்லது சுயேச்சைக் குழுவிலிருந்து உள்ளூர் அதிகார சபையொன்றுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை என்று பொருளாகும்;".

[பி87, 1977இன் 24] "தேர்தல்கள் ஆணையாளர்" என்பது, இலங்கை அரசியலமைப்பின் 103 ஆம் உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட தேர்தல்கள் ஆணையாளர் என்று பொருள்படும்;

[பி73, 2012 இன் 22] "சபை" என்பது, விடயத்துக்கேற்ப, ஒரு மாநகர சபை, நகர சபை அல்லது பிரதேச சபை என்று பொருளாகும்;".

"**முதலாம் அட்டவணை** [*பிரிவு 28(2)*]

I - நியமனப்பத்திரப் படிவம்

..... *மாநகரசபை/நகரசபை/பிரதேசசபை.*

அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியொன்றாக/வேட்பாளர்களின் சுயேச்சைக் குழுவொன்றாக உள்ள (சுயேச்சைக் குழுவொன்றின் விடயத்தில் ..... [*பி32, 2017இன் 16*]
..... என்பவர் குழுத் தலைவராகவுள்ளார்), ...
..... கட்சி, ...
மாநகரசபையின்/நகரசபையின்/பிரதேசசபையின் உறுப்பினர்களினது தேர்தலுக்கான வேட்பாளர்களாகப் பின்வரும் ஆட்களை இத்தால் பெயர்குறித்து நியமிக்கின்றது.

I– வேட்பாளர்கள்

1	*2*	*3*	*4*	*5*	*6*	*7*	*8*
வட்டாரத்தின் பெயரும் இலக்கமும் ""*	*பெயர் - ஆண்கள்/பெண்கள் (தேசிய அடையாள அட்டையில் அல்லது பிறப்புச் சான்றிதழில் சுட்டிக் காட்டப் பட்டவாறு)*	*தேசிய அடையாள அட்டை இல.*	*வதிவிட முகவரி*	*தொழில்*	*இளைஞர் வேட்பாளரா அல்லரா என்பது (இ)*	*வேட்பாளரின் சம்மதத்தைக் குறிப்பிடுகின்றகையொப்பம்*	*ஆண்/பெண்*

II – மேலதிக நியமனப்பத்திரம்

1	2	3	4	5	6	7
பெயர் ஆண்கள் பெண்கள் (தேசிய அடையாள அட்டையில் அல்லது பிறப்புச் சான்றி தழில் சுட்டிக் காட்டப் பட்ட வாறு)	தேசிய அடையாள அட்டை இல.	வதிவிட முகவரி	தொழில்	இளைஞர் வேட் பாளரா அல் லரா என்பது	மேலதிக வேட்பா ளர்களின் சம்ம தத்தைக் குறிப் பிடுகின்ற கை யொப்பம்	ஆண் /பெண்

இந்நியமனப்பத்திரத்தில் பெயர்கள் காணப்படுகின்ற எல்லா இளைஞர் வேட்பாளர்களும் கட்டளைச்சட்டத்தின் 89ஆம் பிரிவில் விதிக்கப்பட்ட வயதெல்லையினுள் உள்ளானவர்களென இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் /சுயேச்சைக் குழுவின் தலைவர்.

பெயர் .....

முகவரி .....

அலுவலகமுறையான இலச்சினை

அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியின் செயலாளரான/சுயேச்சைக் குழுவின் தலைவரான மேலே பெயர் குறிப்பிடப்பட்ட ..... என்பவரினால் எனது முன்னிலையில் 20..... ஆம் ஆண்டு ..... மாதம் ..... ஆந்நாளாகிய* இன்று ..... இல் கையொப்பமிடப்பட்டது.

.....

(சமாதான நீதவான்/சத்திய ஆணையாளர்)

அலுவலக முறையான இலச்சினை

முகவரி .....

* ஒரு பல்லுறுப்பினர் வட்டாரத்தின் விடயத்தில் ஒரு நட்சத்திரக் குறியை (*) இடுவதன் மூலமும் இரண்டு உறுப்பினர்களின் தேர்தல் விடயத்தில் இயைபான கூட்டில் இரண்டு வேட்பாளர்களின் பெயர்களையும் அத்துடன் மூன்று உறுப்பினர்களின் தேர்தல் விடயத்தில் இரண்டு நட்சத்திரக் குறிகளையும் (**) இடுவதன் மூலமும் அத்தகைய மூன்று வேட்பாளர்களின் பெயர்களையும் குறிப்பிடுக.

இரண்டாம் அட்டவணை (பிரிவு 45)

[பி16, 1990 இன் 25]
[பி75, 2012இன் 22]

ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்துக்கும் வெளியே மற்றும் ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்தினதும் ஒவ்வொரு வாக்களிப்பு அறைக்கும் வெளியே வெளிக்காட்டி வைக்கப்பட வேண்டிய, வாக்களிப்பதில் வாக்காளரொருவரின் வழிகாட்டுகைக்கான பணிப்புகளின் படிவம்

வாக்காளர் ஒவ்வொருவரும், அவர் விரும்பும் வேட்பாளரொருவருக்கு அளிக்கப்படக் கூடிய ஒரு வாக்கைக் கொண்டிருத்தல் வேண்டும்.

வாக்காளர், வாக்களிப்பு அறைகளுள் ஒன்றினுட்சென்று, விடயத்திற்கேற்ப அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவின் சின்னத்துக்கு எதிராக வாக்குச்சீட்டின் வலதுபுறத்தில் (X) என்ற புள்ளடியை இடுவார்.

வாக்குச் சீட்டொன்றின் மூலம் தமது வாக்கையளித்த வாக்காளர், வாக்குச் சீட்டின் பிற்புறத்திலுள்ள அலுவலக முறையான குறியீட்டைத் தலைமை தாங்கும் அலுவலருக்குக் காட்டும் வகையில் அதனைப் பின்னர் மடித்து அவ்வாக்குச்சீட்டை வாக்குச் சீட்டுப் பெட்டியினுள் இட்டு, உடனடியாக வாக்கெடுப்பு நிலையத்தை விட்டு வெளியேறுவார்.

வாக்காளர், ஒரு வாக்குச் சீட்டைக் கவனயீனமாகப் பழுதாக்கினால், அவர் அதனைத் தலைமைதாங்கும் அலுவலரிடம் திருப்பிக்கொடுக்க முடியும்; அவ்வலுவலர் அத்தகைய கவனயீனம் பற்றித் திருப்திப்படின், அவருக்கு வேறொரு வாக்குச் சீட்டைக் கொடுப்பார்.

வாக்காளர்-

(அ) ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளருக்கு வாக்களித்தால், அல்லது

(ஆ) எந்தக் குறியீட்டின் மூலம் அவரைப் பின்னர் ஆளடையாளங் காணக்கூடுமோ அந்த ஏதேனும் குறியீட்டை வாக்குச்சீட்டில் இட்டால்,

அவரது வாக்குச்சீட்டு வறிதாகும் என்பதுடன், அது எண்ணவும் படமாட்டாது.

(முதலாம் அட்டவணை 2023 இன் 21)

வாக்காளரொருவர், வாக்குச்சீட்டொன்றை வாக்கெடுப்பு நிலையத்திற்கு வெளியே எடுத்துச் சென்றால் அல்லது வாக்குச் சீட்டுப்பெட்டியொன்றினுள் இடுவதற்கு அவர் அதிகாரமளிக்கப்படாத, வாக்குச் சீட்டொன்றைத் தவிர்ந்த வேறெதனையும் அவ்வாக்குச் சீட்டுப் பெட்டியினுள் இட்டால், அவர், நீதிவானொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாவார்.".

[பி17, 1990 இன் 25]
[பி76, 2012இன் 22]

மூன்றாம் அட்டவணை (பிரிவு 47)

வாக்குச் சீட்டின் முகப்புப் படிவம்

அடியிதழ் இல.
கட்சி "அ" சின்னம்
கட்சி "ஆ" சின்னம்
கட்சி "இ" சின்னம்
சுயேச்சைக் "குழு" 1 சின்னம்
சுயேச்சைக் "குழு" 2 சின்னம்
சுயேச்சைக் "குழு" 3 சின்னம்

நான்காம் அட்டவணை (பிரிவு 76(1))

[பி77, 2012இன் 22]

இரகசியம் பேணல் பற்றிய வெளிப்படுத்துகைப் படிவம்

.....ஆகிய நான் (பெயர்), ... மாநகர சபையின்/நகர சபையின் /பிரதேச சபையின் தேர்தற் பிரதேசத்துக்கான ..... ஆம் இலக்க, வட்டாரத்துக்கான இத்தேர்தலில், எனக்கு வாசித்துக் காட்டப்பட்டுள்ள உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 76ஆம் பிரிவினால் தடைசெய்யப்பட்ட எதனையும் செய்யமாட்டேன் என பயபக்தியாக வாக்குறுதியளித்து வெளிப்படுத்துகின்றேன்.

------ --------
வெளிப்படுத்துகையைச் செய்விக்கும் ஆளின் பெயரும் பதவிப் பெயரும். வெளிப்படுத்துபவரின் கையொப்பம்.

குறிப்பு- வெளிப்படுத்துகையைச் செய்விக்கும் ஆளினால் இப்பிரிவு வெளிப்படுத்துபவருக்கு வாசித்துக்காட்டப்படுதல் வேண்டும்.

[பி17, 2004 இன் 14]
[பி78, 2012இன் 22]

ஏழாம் அட்டவணை (பிரிவு 53அ)

வேட்பு மனு நிரலின் படிவம்

வாக்குச்சீட்டுகள் ஒப்படைக்கப்படாத வாக்காளர்கள் பற்றிய நிரல்

உள்ளூர் அதிகார சபையின் பெயர் :-----.
வட்டார இல. :-----.
தேர்தற்தேதி :-----.
வாக்கெடுப்பு நிலையம் :-----.

தேருநர் நிரலிலான இல.	வாக்காளரின் பெயர்	வாக்காளரின் முகவரி	வாக்குச் சீட்டை ஒப்படைக்காமைக்கான காரணம்			
			தோதான சோதனையை மறுத்தமை	தோதான குறியீட்டினால் ஏலவே குறியீடு செய்யப்பட்டமை	தோதான குறியீட்டினால் குறியீடு செய்யப்படுவதற்கு மறுக்கின்றமை	செல்லுபடியான ஆளடையாள ஆவணம் இல்லாமை அல்லது ஆளடையாளம் நிலை நாட்டப்படாமை

ஒன்பதாம் அட்டவணை

[*பி33, 1987 இன் 24*]
[*பி18, 1990 இன் 25*]

ஒழுங்கு விதிகள்

(பிரிவு 39ஆ)

சுருக்கப்பெயர்.

1. இந்த ஒழுங்குவிதிகள் *1987* ஆம் ஆண்டின் அஞ்சல் வாக்காளர் (அபிவிருத்திச் சபைத் தேர்தல்கள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

பொருள் கோடல்.

2. இவ்வொழுங்கு விதிகளின் நோக்கங்களுக்காக சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி–

''வழங்குகை'' என்பது ஆரம்பத்தில் வழங்கப்பட்டதும் அதை அடுத்துப் பின்னராக வழங்கப்பட்டதும் ஆன எதனையும் உள்ளடக்கும்;

''அஞ்சல் வாக்குச்சீட்டு'' என்பது, தேர்தலொன்று தொடர்பில், அத்தேர்தலில் நோக்கத்துக்காக ஓர் அஞ்சல் வாக்காளராக கணிக்கப்படுவதற்கு உரித்துடையவரான ஆளொருவர் எனப் பொருளாகும்.

''அஞ்சல் வாக்காளர்'' என்பது, தேர்தலொன்று தொடர்பில், அத்தேர்தலின் நோக்கத்துக்காக ஓர் அஞ்சல் வாக்காளராக கணிக்கப் படுவதற்கு உரித்துடையவரான ஆளொருவர் எனப்பொருளாகும்;

''அட்டவணை'' என்பது இந்த ஒழுங்கு விதிகளுக்கான அட்டவணை எனப் பொருளாகும்;

''கட்டளைச்சட்டம்'' என்பது உள்ளூரதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச்சட்டம் எனப் பொருளாகும்;

ஓர் அஞ்சல் வாக்காளராகக் கணிக்கப் படுவதற்கான விண்ணப்பத்தின் படிவம்.

3. ஓர் அஞ்சல் வாக்காளராகக் கணிக்கப்படுவதற்கான விண்ணப்ப மொன்று பொருளளவில் அட்டவணையிலுள்ள ''அ'' என்னும் படிவத்திலானதாய் இருத்தல் வேண்டும்.

4.(1) இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கட்டளைச் சட்டத்தின் கீழ் தெரிவத்தாட்சி அலுவலரினால் வைத்திருக்கப்படும்.

---

* ஐந்தாம் அட்டவணை விட்டுவிடப்பட்டது. அதன் ஏற்பாடுகள் பயனுக்கு வந்து கழிந்துவிட்டன.

* ஆறாம் அட்டவணை நீக்கஞ் செய்யப்பட்டுள்ளது. 1977 ஆம ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தில் 82 ஆம் பிரிவைப் பார்க்கவும்.

* எட்டாம் அட்டவணை நீக்கஞ் செய்யப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சட்டத்தின் 79 ஆம் பிரிவால் நீக்கப்பட்டுள்ளது.

அஞ்சல் வாக்காளர்களின் பதிவேடும் நிரலும் வசதியானதென அவருக்குத் தோன்றுகின்ற அத்தகைய வடிவத்திலானதாய் இருத்தல் வேண்டும் என்பதுடன். தெரிவத்தாட்சி அலுவலரால் இருத்தல் வேண்டும் என்பதுடன். தெரிவத்தாட்சி அலுவலரால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய எண்ணிக்கையினவான பாகங்களில் வைத்திருக்கவும் படலாம்.

அஞ்சல் வாக்காளர் ஒருவராக கருதப்படுவதற்கான விண்ணப்பத்தின் படிவம்

(2) ஓர் அஞ்சல் வாக்காளரின் வாக்குச் சீட்டானது எம்முகவரிக்கு அனுப்பப்பட வேண்டுமோ அம்முகவரி அஞ்சல் வாக்காளர் நிரலில் அவரது பெயருக்கெதிரே குறித்துரைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

3. அஞ்சல் வாக்காளர் நிரலிலுள்ள அல்லது அத்தகைய நிரலின் ஒவ்வொரு பாகத்திலுமுள்ள பெயர்கள் தொடர்ச்சியாக இலக்க மிடப்பட்டிருத்தல் வேண்டும்.

அஞ்சல் வாக்காளர் தொடர்பான அறிக்கையும் அவர்களின் நிரலும்

4. அஞ்சல் வாக்காளர் நிரல் தயாரிக்கப்பட்டவுடன் தெரிவத்தாட்சி அலுவலர், அவரது அலுவலகத்தில் பார்வையிடுவதற்குக் கிடைக்கச் செய்வதற்காகப் பிரதி ஒன்றைத் தயாரிப்பதன் மூலம் அதை வெளியிடுதல் வேண்டும்.

அஞ்சல் வாக்குச் சீட்டின் படிவம்

5. ஓர் அஞ்சல் வாக்குச்சீட்டானது அஞ்சல் வாக்காளர்களல்லாத வாக்காளர்களுக்கு ஒப்படைக்கப்படும் வாக்குச்சீட்டுகளிலிருந்து வேறுபிரித்தறிய முடியாததாயும் அதே படிவத்திலானதாயும் இருத்தல் வேண்டும்.

ஆளடையாளம் பற்றிய வெளிப்படுத்துகைப் படிவம்

6. ஓர் அஞ்சல் வாக்காளருக்கு அவரின் அஞ்சல் வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் ஆளடையாளம் பற்றிய வெளிப்படுத்துகைப் படிவமானது பொருளளவில் அட்டவணையிலுள்ள "ஆ" என்னும் படிவத்திலான தாய் இருத்தல் வேண்டும்.

எழுதுவினைஞர்களை நியமித்தல்

7. அஞ்சல் வாக்குச்சீட்டுகளின் வழங்குகை நடவடிக்கைகளில் எழுதுவினைஞர்களாகத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு உதவுவதற்காக ஆட்கள் நியமிக்கப்படலாம்.

ஆயின் தேர்தலின் அல்லது தேர்தல் சம்பந்தமான வேட்பாளரொருவரால் அல்லது அவர் சார்பாக வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஆளெவரும் அவ்வாறு நியமிக்கப்படுதலாகாது.

அஞ்சல் வாக்குச் சீட்டுகளின் வழங்குகையிலும் பெறுகையிலும் சமுகமாயிருப்பதற்கு உரித்துடையவரான ஆட்கள்

8. (1) அஞ்சல் வாக்குச்சீட்டுக்களின் வழங்குகை நடவடிக்கைகளில் -

(அ) தெரிவத்தாட்சி அலுவலரும் அவரது எழுதுவினைஞர்களும்.

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட முகவர் ஒருவருக்கும் அல்லது குழுத் தலைவர் ஒருவரும்.

(இ) அதிகாரமளிக்கப்பட்ட முகவரொருவரால் அல்லது குழுத்தலைவரொருவரால் அவரது இடத்தில் வருகை தரவென நியமிக்கப்பட்ட ஆளொருவரும் அத்துடன்

(ஈ) இந்த ஒழுங்கு விதியின் (2) ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் முகவர்களும்

தவிர்ந்த ஆளெவரும் சமூகமாயிருத்தல் கூடாது

(2) அஞ்சல் வாக்குச்சீட்டுகள் உடன் நிகழ்வாக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தொகுதிகளால் வழங்குகை செய்யப்படவுள்ளவிடத்து ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட முகவரி அல்லது குழுத்தலைவரின் விடயத்திலும் எவ்வகையிலேனும அதிகாரமளிக்கப்பட்ட எண்ணிக்கை ஒரே அளவினதாக இருக்கும்படியாக அத்தகைய தொகுதிகளின் எண்ணிக்கையை விஞ்சாது நியமிப்பதற்கு தெரிவத்தாட்சி அலுவலரால் அவர் அதிகாரமளிக்கப்படக் கூடியவாறான எண்ணிக்கைவரை ஒரு அதிகாரமளிக்கப்படக் கூடியவாறான எண்ணிக்கைவரை ஒரு முகவரை அல்லது அதற்கு மேற்பட்ட முகவர்களை ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட முகவரும் அல்லது குழுத்தலைவரும் நியமிக்கலாம்.

(3) அஞ்சல் வாக்குச் சீட்டுக்களின் வழங்குகைக்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள நேரத்திற்கு முன்னர் தெரிவத்தாட்சி அலுவலருக்கு இந்த ஒழுங்கு விதியின் (2) ஆம் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட ஆட்களின் பெயர்களையும் முகவரிகளையும், எடுத்துக்கூறி, நியமனம் பற்றிய அறிவித்தல் அதிகாரமளிக்கப்பட்ட முகவரால் அல்லது குழுத் தலைவரால் கொடுக்கப்படல் வேண்டும்.

(4) முகவரொருவர் இறந்தால் அல்லது செயலாற்றுவதற்குத் தகுதியற்றவராகவரின், அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அல்லது குழுத்தலைவர் அவரின் இடத்துக்கு இன்னொரு முகவரை நியமிக்கலாம் என்பதுடன். அவ்வாறு நியமிக்கப்பட்ட முகவரின் பெயரும், முகவரியும் பற்றிய எழுத்திலான அறிவித்தலைத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு உடனடியாகக் கொடுத்துலும் வேண்டும்.

(5) அதிகாரமளிக்கப்பட்ட முகவரால் அல்லது குழுத்தலைவரால் செய்யப்படுவதற்கும் பதிலாக நியமனம் பத்திரத்தில் பெயர் காணப்படுகின்ற வேட்பாளர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரினால் அல்லது சுயேச்சைக் குழுவின் குழுத்தலைவரினால் முறையாக அதிகாரமளிக்கப்படின், அவரினால் முகவர்கள் நியமிக்கப்படலாமென்பதுடன், தெரிவத்தாட்சி அலுவலருக்கு அவர்களின் நியமனம் பற்றிய அறிவித்தல்கள் அவரினால் கொடுக்கவும் படலாம்.

(6) இந்த ஒழுங்குவிதிகளில் முகவர்கள் பற்றிய குறிப்பீடுகள் எம்முகவர்களின் நியமனங்கள் முறைப்படி செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளனவோ அம்முகவர்களுக்கான குறிப்பீடுகளெனவும், இந்த ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட முகவர்களின் விடயத்தில் தெரிவத்தாட்சி அலுலவலரால் அதிகார மளிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு உட்பட்டவரான அம்முகவர்கள் பற்றிய குறிப்பீடுகளெனவும் கொள்ளப்படுதல் வேண்டும்.

(7) அதிகாரமளிக்கப்பட்ட முகவரொருவர் அல்லது குழுத்தலைவ ரொருவர், முகவர் எவரேனும் நியமிக்கப்பட்டிருப்பின் அவர் செய்வதற்கு

அதிகாரமளிக்கப்பட்டிருக்கக் கூடியதான ஏதேனும் செயலை அல்லது காரியத்தைச் செய்வதில் அவரது முகவருக்கு உதவலாம்.

(8) இந்த ஒழுங்குவிதிகளில் ஏதேனும் செயல் அல்லது காரியம் அதிகாரமளிக்கப்பட்ட முகவரின் அல்லது குழுத்தலைவரின் அல்லது அவர்களது முகவர்களின் முன்னிலையில் செய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்டுள்ளவிடத்து அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ள விடத்து, மற்றும்படி செயல் அல்லது காரியம் செல்லுபடியானமுறையில் செய்யப்பட்டிருப்பின், அந்நோக்கத்திற்கென நியமிக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் அத்தகைய எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் வருகை தராமையானது செய்யபட்ட செயலை அல்லது காரியத்தைச் செல்லுபடியற்ற தாக்குலாகாது.

இரகசியம் பேணல் பற்றிய வெளிப்படுத்துகை

9 (1) அஞ்சல் வாக்குச்சீட்டுகளின் வழங்குகை நடவடிக்கைகளின் வருகைதரும் ஒவ்வோர் ஆளும் அத்தகைய வாக்குச்சீட்டுக்களின் வழங்குகைக்கு முன்னர் பொருளளவில் ''இ'' என்னும் அட்டவணையிலுள்ள படிவத்தில் இருப்போர் இரகசியம் பேணுதல் பற்றிய வெளிப்படுத்துகையொன்றைச் செய்தல் வேண்டும்.

(2) இந்த ஒழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் கீழான வெளிப் படுத்துகையொன்று தெரிவத்தாட்சி அலுவலரால் சமாதான நீதிவானொருவரின் முன்னிலையின் செய்யப்படுதல் வேண்டு மென்பதுடன், வேறெவரேனும் ஆளினால் அது செய்யப்படும்போது, தெரிவத்தாட்சி அலுவலரின் அல்லது சமாதான நீதிவானொருவரின் முன்னிலையில் செய்யப்படுத்தலும் வேண்டும்.

(3) அஞ்சல் பங்குச்சீட்டுகளின் வழங்குகையின் தொடர்புபட்ட, நடவடிக்கைகளில் வருகை தரும் ஆள் ஒவ்வொருவரும் வாக்களிப்பில் இரகசியம் பேணுதலும் அது பேணப்படுவதில் உதவுதலும் வேண்டுமென்பது:-

(அ) சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு நோக்கத்துக்காகவன்றி அஞ்சல் வாக்குச்சீட்டுக்களில் பொறிக்கப்பட்ட அலுவலக முறையான குறியீடுபற்றி அந்த நடவடிக்கைகளில் கிடைக்கப் பெற்ற ஏதேனும் தகவலை எவரேனும் ஆளுக்கு வாக்கெடுப்பு முடிவடைவதற்கு முன்னர் தெரியப்படுத்தலுமாகாது: அல்லது

(ஆ) சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு நோக்கத்துக்காகவன்றி அஞ்சல் வாக்குச் சீட்டொன்றின் பின்பக்கத்திலுள்ள இலக்கம் பற்றி அந்த நடவடிக்கைகளில் கிடைக்கப் பெற்ற ஏதேனும் தகவலை எவரேனும் ஆளுக்கு எந்நேரத்திலேனும் தெரியப் படுத்துலுமாகாது.

(4) இவ்வொழுங்குவிதியின் (3) ஆம் பந்தியின் ஏற்பாடுகளை மீறிச் செயலாற்றுகின்ற ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்ற வாளியாதல் வேண்டுமென்பதுடன். நீதிவானொருவரின் முன்னரான சுருக்க முறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல்.

ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறுமாதங்களை விஞ்சாத ஒரு காலத்துக்கான இருவகையிலொரு வகையான மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

வாக்குச் சீட்டுகளின் வாங்குகை பற்றிய அறிவித்தல்

10 (1) தெரிவத்தாட்சி அலுவலர், தேர்தலொன்றின் நியமன காலப் பகுதியினது கடைசி நாளின்பின்னர் பத்து நாட்களுக்குப் பிந்தாமல், அஞ்சல் வாக்குச்சீட்டுக்களை அவர் வழங்கவுள்ள நேரத்தையும் இடத்தையும் அத்துடன் சொல்லப்பட்ட வழங்குகையில் வருகை தருவதற்கு 8 ஆம் ஒழுங்கு விதியின் (2) ஆம் பந்தியின் கீழ் அவர் நியமிக்கக் கூடிய வாறான முகவர்களின் எண்ணிக்கையையும் ஒவ்வோர் அதிகார மளிக்கப்பட்ட முகவருக்கும் குழுத்தலைவருக்கும் அறிவித்தல் வேண்டும்.

(2) அடுத்துப் பின்னராக ஏதேனும் வாக்குச்சீட்டுக்களின் வழங்குகை செய்யப்படுமிடத்து, தெரிவத்தாட்சி அலுவலர் எந்நேரத்தில் அத்துடன் எவ்விடத்தில் அத்தகையவாறான அடுத்துப்பின்னரான வழங்குகையைச் செய்யவுள்ளாரோ அந்நேரத்தையும் அவ்விடத்தையும் அத்துடன் வழங்குகையில் வருகை தருவதற்கென 8 ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் கீழ் அவர் நியமிக்கக்கூடியவாறான முகவர்களின் எண்ணிக்கையையும் செயல் முறைக்குகந்தவரை விரைவாக ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட முகவருக்கும் குழுத்தலைவருக்கும் அறிவித்தல் வேண்டும்.

அஞ்சல் வாக்குச்சீட்டுக்களில் அலுவலக முறையான குறியீடு பொறிக்கப்படுதல்

11. (1) ஒவ்வோர் அஞ்சல் வாக்காளருக்கும் வழங்கப்பட்ட அஞ்சல் வாக்குச்சீட்டு, அதன் பின்பக்கத்தில் அலுவலக முறையான குறியீட்டினால் பொறிக்கப்படுதல் அல்லது துளைக்கப்படுதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய வாக்காளரின் இலக்கமும் பெயரும் கூப்பிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு வாக்குச்சீட்டின் அடியிதழிலும், அத்தகைய வாக்காளரின் இலக்கம் குறிக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன், அத்தகைய வாக்குச்சீட்டொன்று அவருக்கு வழங்கப்பட்டுள்ளதென்பதைக் குறிப்பதற்காக, அவருக்கு வழங்கப்பட்ட குறிப்பான வாக்குச்சீட்டைக் காண்பியாது அஞ்சல் வாக்காளர் நிரலில் அத்தகைய வாக்காளரின் இலக்கத்திற்கெதிராகக் குறியீடொன்று இடப்படுதலும் வேண்டும்.

(2) அஞ்சல் வாக்காளருக்கு வழங்கப்பட்ட அஞ்சல் வாக்குச் சீட்டின் அடியிதழில் குறிப்பிடப்பட்டுள்ள அஞ்சல் வாக்காளரின் இலக்கமானது. அஞ்சல் வாக்காளர் நிரலில் உள்ள அத்தகைய வாக்காளரின் இலக்கமாதல் வேண்டும்.

(3) அஞ்சல் வாக்காளரொருவருக்கு வழங்கப்பட்ட அஞ்சல் வாக்குச்சீட்டில் அச்சிடப்பட்டுள்ள இலக்கமானது, அத்தகைய வாக்காளருக்கு அனுப்பப்பட்ட அடையாளம் பற்றிய வெளிப்படுத்துகைப் படிவத்தில் குறிப்பிடப்படுதல் வேண்டும். அவ்வாறு குறிப்பிடப்பட்ட இலக்கமானது இதனகத்துப்பின்னர் ''ஆளடையாளம் பற்றிய

வெளிப்படுத்துகையின் மீது குறிப்பிடப்பட்ட இலக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்.

அஞ்சல் வாக்குச் சீட்டை வழங்க மறுத்தல்.

12. அஞ்சல் வாக்காளர் நிரலில் உள்ள இரண்டு பதிலீடுகள் ஒரே அஞ்சல் வாக்காளரைப் பற்றிக் குறிப்பிடுகின்றன எனத் தெரிவத்தாட்சி அலுவலரொருவர் திருப்திப்படுமிடத்து, ஒன்றுக்கு மேற்பட்ட அஞ்சல் வாக்குச்சீட்டுக்களை, அவ்வாக்காளர் தொடர்பில் அவர் வழங்குதலாகாது.

"வாக்குச்சீட்டு உறையின் மீது குறிப்பிடப்பட்டுள்ள இலக்கம்" என்ற சொல்லமைப்பினதும் "மேலுறை" என்ற சொல்லமைப்பினதும் பொருள் கோடல்

13. (1) வாக்குச்சீட்டுறையின் மீது குறிப்பிடப்பட்ட இலக்கமானது, இவ்வொழுங்கு விதிகளில் "வாக்குச்சீட்டு உறையின் மீது குறிப்பிடப்பட்ட இலக்கம்" என குறிப்பீடு செய்யப்படுகின்றது.

(2) முறைப்படி குறியீடு செய்யப்பட்டதும் வாக்குச்சீட்டு உறையினுள் வைக்கப்பட்டதுமான அஞ்சல் வாக்குச்சீட்டினதும். முறைப்படி நிரப்பப்பட்ட ஆளடையாளம் பற்றிய வெளிப்படுத்துகைப் படிவத்தினதும் திருப்பி அனுப்புகைக்கான உறையானது இவ்வொழுங்கு விதிகளில் "மேலுறை" எனக் குறிப்பீடு செய்யப்படும்.

அஞ்சல் வாக்காளருக்கு முகவரியிடப்பட்ட உறைகளை அஞ்சல் அலுவலகத்திற்கு ஒப்படைத்தல்

14. அஞ்சல் வாக்காளர்களுக்கு முகவரியிடப்பட்ட எல்லா உறை களும் எண்ணப்படுதல் வேண்டுமென்பதுடன், அருகேயுள்ள அஞ்சல் அலுவலகத்திற்குத் தெரிவத்தாட்சி அலுவலரினால் உடனடியாக ஒப்படைக்கப்படுதலும் வேண்டும். அத்துடன் அவ்வாறு ஒப் படைக்கப்பட்ட உறைகளின் எண்ணிக்கையைக் குறிப்பதான தெரிவத்தாட்சி அலுவலரினால் அளிக்கப்படும் பற்றுச்சீட்டுப் படிவமொன்றை அஞ்சலதிபர் அஞ்சல் அலுவலகத்தின் தேதி முத்திரை கொண்டு பொறித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய உறைகள் எவ்வாட்களுக்கு முகவரியிடப்பட்டுள்ளனவோ, அவ்வாட்களுக்கு ஒப்படைக்கப்படுவதற்காக அவற்றை உடனடியாக அனுப்புதலும் வேண்டும்.

அஞ்சல் வாக்காளர் நிரலையும் அடியிதழ்களையும் இலச்சினையிடுதல்

15 (1) தெரிவத்தாட்சி அலுவலரானவர், அஞ்சல் வாக்குச் சீட்டுக்களின் வழங்குகை முடிவடைந்ததன் பின்னர் செயல் முறைகளுக்குகந்தவரை விரைவிலும் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களினதும் குழுத்தலைவர்களினதும் முகவர்களின் முன்னிலையிலும் -

(அ) அஞ்சல் வாக்காளர் நிரலின் குறியீடு செய்யப்பட்ட பிரதிகளையும்; அத்துடன்,

(ஆ) வழங்கப்பட்ட அஞ்சல் வாக்குச்சீட்டுகளின் அடியிதழ்களையும்,

தனித் தனியான சிப்பங்களாகக் கட்டுவதுடன் அத்தகைய சிப்பங் களை இலச்சினையிடுதலும் வேண்டும்.

(2) அஞ்சல் வாக்காளர் நிரலின் குறியீடு செய்யப்பட்ட பிரதி களைக்கொண்ட இலச்சினையிடப்பட்ட பொதியானது அஞ்சல் வாக்குச்சீட்டுகளின் அடுத்துப்பின்னரானதொரு வழங்குகையின் நோக்கத்துக்காகத் தெரிவத்தாட்சி அலுவலரினால் திறக்கப்படலாம்

என்பதுடன், வழங்குகை முடிவடைந்ததன்மீது இவ்வொழுங்கு விதியின் (1) ஆம் பந்திக்கு இணங்கப் பிரதிகள் மீண்டும் கட்டப்படுவதுடன் இலச்சினையிடப்படுதலும் வேண்டும்.

அஞ்சல் வாக்காளரின் வாக்குச் சீட்டுப் பெட்டிக்கான ஏற்பாடு

16 (1) தெரிவத்தாட்சி அலுவலர், அஞ்சல் வாக்காளருக்கு அஞ்சல் வாக்குச் சீட்டுக்களின் ஆரம்ப வழங்குகையின் நடவடிக்கைகளில் அஞ்சல் வாக்காளர்களிடமிருந்து பெறப்படக்கூடியனவான மேலுறைகளை இடுவதற்காக வாக்குச்சீட்டுப் பெட்டியை அல்லது வாக்குச்சீட்டுப் பெட்டிகளை ஏற்பாடுசெய்தல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு வாக்குச்சீட்டுப்பெட்டியும் கட்டளைச்சட்டத்தின் 61 அ என்னும் பிரிவின் நோக்கங்களுக்காக ஒரு வாக்குச்சீட்டுப் பெட்டியாகக் கணிக்கப்படுதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்கு விதியின் (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு வாக்குச்சீட்டுப் பெட்டியும், அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களினதும் குழுத்தலைவர்களினதும் சமுகமாயிருப்பவர்களான அத்தகைய முகவர்களுக்குத் திறந்தும் வெறுமையாகவும் காட்டப்பட வேண்டுமென்பதுடன், தெரிவத்தாட்சி அலுவலரின் இலச்சினையாலும் தமது இலச்சினைகளை பொறிக்க விரும்புகின்றவர்களான அத்தகைய முகவர்களினது இலச்சினைகளாலும் இலச்சினையிடப்படுதலும் வேண்டும் : அத்துடன் "அஞ்சல் வாக்காளர் வாக்குச்சீட்டுப் பெட்டி" என்றும் தேர்தலான "எந்தத் தேர்தல் இடப்பரப்புக்கென நடாத்தப் படுகின்றதோ அந்தத் தேர்தல் இடப்பரப்பின் பெயரும் குறிப்பிடப்படுதல் வேண்டும் என்பதுடன, அத்தகைய வாக்குச்சீட்டுப் பெட்டியின் பாதுகாப்பான கட்டுக் காப்புக்குத் தெரிவத்தாட்சி அலுவலர் ஏற்பாடு செய்தலும் வேண்டும்.

அஞ்சல் வாக்காளரிடமிருந்து மேலுறைகள் கிடைக்கப் பெறுதல்

17. தெரிவத்தாட்சி அலுவலர், வாக்கெடுப்பு தொடங்குவதற்கு எழுபத்திரண்டு மணித்தியாலங்களுக்கு முன்னர் மேலுறை ஒன்று கிடைக்கப்பெற்றதன்மேல் உடனடியாக அதனைத் திறக்காது அஞ்சல் வாக்காளர்கள் வாக்குச்சீட்டுப் பெட்டியினுள் அதனை இடுதல் வேண்டும்.

[பி33, 2017இன் 16]

அஞ்சல் வாக்குச் சீட்டுக்களைக் கொண்டுள்ள மேலுறைகள் வட்டாரங்களின் படி தனிவே றாக்கப்படுதல்

18. தெரிவத்தாட்சி அலுவலர், திறக்கப்படாத மேலுறைகளை அஞ்சல் வாக்காளர்கள் வாக்குச் சீட்டுப் பெட்டியினுள் இட்டபின்னரும் வாக்கெடுப்புத் தொடங்குவதற்கு முன்னரும் எந்நேரத்திலும் அஞ்சல் வாக்காளர்களின் வாக்குச்சீட்டுப் பெட்டிகளைத் திறந்து அவற்றின்கண் அடங்கியுள்ள ஒவ்வொரு வட்டாரம் தொடர்பிலுமான மேலுறைகளைத் தனிவேறாக்குதல் வேண்டும். மேலுறைகள் வெவ்வேறாக்கப்பட்டவுடன், தெரிவத்தாட்சி அலுவலர் ஒவ்வொரு வட்டாரம் தொடர்பிலுமான எல்லா மேலுறைகளையும் அத்தகைய வட்டாரத்துக்காகத் தனிவேறான ஓர் உறையிலிட்டு அதனை இலச்சினையிட்டு வாக்குச்சீட்டுக்களுடனும் வேறு பொருட்களுடனும் சேர்த்து, வாக்கெடுப்புத் தேதிக்கு நேர்முந்திய நாளன்று, இயைபான வட்டாரத்துக்கு என நியமிக்கப்பட்ட வாக்கெண்ணும் அலுவலரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

[பி33, 2017இன் 16]

அஞ்சல் வாக்குச் சீட்டுக்களை எண்ணுதல்.

[பி33, 2017இன் 16]

19. தெரிவத்தாட்சி அலுவலர், வாக்குச் சீட்டுக்களின் எண்ணுகை தொடங்குவதற்கு உடன் முன்னர், வட்டாரமொன்றுக்காக நியமிக்கப்பட்ட வாக்கெண்ணும் அலுவலரை, அத்தகைய வட்டாரத்துக்கான அஞ்சல் வாக்குச்சீட்டுக்களைக் கொண்டுள்ள இயைபான மேலுறைகளைத் திறந்து அவற்றை எண்ணுவதற்கு முற்படுமாறு செய்வித்தல் வேண்டும்.

24 (2) வாக்கெண்ணும் அலுவலர் மேலுறையொன்றைத் திறக்குமிடத்தும், அத்துடன் -

(அ) அதற்குள் -

(i) ஓர் ஆளடையாள வெளிப்படுத்துகையையும் வாக்குச்சீட்டு, உறையொன்றையும் காணுமிடத்து, அல்லது

(ii) ஓர் ஆளடையாள வெளிப்படுத்துகையையும் வாக்குச்சீட்டு, உறைக்குள் வைக்கப்படாத ஒரு வாக்குச்சீட்டையும் காணுமிடத்து, அல்லது

(iii) ஓர் ஆளடையாள வெளிப்படுத்துகையை மாத்திரம் காணுமிடத்து, அல்லது.

(iv) ஓர் வாக்குச்சீட்டு உறைக்குள் வைக்கப்படாத ஒரு வாக்குச்சீட்டை மாத்திரம் காணுமிடத்து, அல்லது

(v) வாக்குச்சீட்டு உறையொன்றை மாத்திரம் காணுமிடத்து, அல்லது

(ஆ) அதற்குள் எதனையும் காணாதவிடத்து.

இவ்வொழுங்குவிதியின் அடுத்துறும் ஏற்பாடுகள் ஏற்புடையன வாதல் வேண்டும்.

(3) இவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் (அ) (i) என்னும் உட்பந்தியிலும் (அ) (ii) என்னும் உட்பந்தியிலும் குறிப்பீடுசெய்யப்பட்ட விடயங்களில், ஆளடையாள வெளிப்படுத்துகையானது முறைப்படி ஒப்பமிடப்பட்டுச் சாட்சிப்படுத்தப்பட்டுள்ளதெனவும், முற்கூறப்பட்ட (அ) (i) என்னும் உட்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட விடயத்தில்,

ஆளடையாள வெளிப்படுத்துகையின் மீது குறிப்பிடப்பட்ட இலக்கமானது வாக்குச்சீட்டு உறையில் அதேபோன்று குறிப்பிடப்பட்ட இலக்கமொன்றுடன் நேரொத்ததாக இருக்கின்றதெனவும், அத்துடன் முற்கூறப்பட்ட (அ) (ii) என்னும் உட்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட விடயத்தில் ஆளடையாள வெளிப்படுத்துகையின் மீது குறிப்பிடப்பட்ட இலக்கமானது வாக்குச்சீட்டில் அதேபோன்று குறிப்பிடப்பட்ட இலக்கமொன்றுடன் நேரொத்ததாக இருக்கின்றதெனவும் வாக்கெண்ணு

2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சட்டத்தின் 33 ஆம் பிரிவால் 20, 21, 22, 23 மற்றும் 24(1) ஆகிய பிரிவுகள் நீக்கப்பட்டன.அத்தகைய

அலுவலர் தம்மைத் திருப்திப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். அவர் அவ்வாறு திருப்திப்படுவாரெனின், அவர் வெளிப்படுத்துகையை, (இதனகத்துப் பின்னர் "ஆளடையாள வெளிப்படுத்துகைகளுக்கான கொள்கலம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பிறிதானதொரு கொள்கலத்திலும் அத்துடன், முற்கூறப்பட்ட (அ) (i) என்னும் உட்பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட விடயத்தில் வாக்குச்சீட்டு உறையையும் அத்துடன் முற்கூறப்பட்ட (அ) (ii) என்னும் உட்பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட விடயத்தில் வாக்குச் சீட்டையும் (இதனகத்துப் பின்னர் "அஞ்சல் வாக்காளர் வாக்குச் சீட்டுக்களுக்கான கொள்கலம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இன்னொரு கொள்கலத்திலும் இடுதல் வேண்டும்.

(4) ஆளடையாள வெளிப்படுத்துகையின்மீது "ஆளடையாள வெளிப்படுத்துகை நிராகரிக்கப்பட்டது" என்ற சொற்களைக் குறித்தல் வேண்டும்.

(ஆ) சமுகமளிதிருப்பவரான அத்தகைய வாக்கெண்ணும் முகவர்களுக்கு அத்தகைய வெளிப்படுத்துகையைக் காட்டல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளிப்படுத்துகை பற்றி வாக்கெண்ணும் அலுவலரின் முடிபுக்கெதிராக எவரேனும் முகவரால் ஏதேனும் ஆட்சேபனை தெரிவிக்கப்படின், முற்போந்த (அ) என்னும் உப்பந்தியின்கீழான அத்தகைய வெளிப்படுத்துகையின்மீது குறிக்கப்பட்ட சொற்களுடன் மேலதிகமாக "நிராகரிப்புக்கு ஆட்சேபனை தெரிவிக்கப் பட்டது" என்ற சொற்களையும் சேர்த்தல் வேண்டும்;

(இ) முற்கூறப்பட்ட (அ) (i) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட விடயத்தில் வாக்குச்சீட்டு உறையை அல்லது முற்கூறப்பட்ட (அ) (ii) என்னும் உப்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட விடயத்தில் வாக்குச் சீட்டை, அத்தகைய வெளிப்படுத்துகையுடன் இணைத்தல் வேண்டும்; அத்துடன்

(ஈ) அத்தகைய வெளிப்படுத்துகையையும் முற்போந்த (இ) என்னும் உப்பந்தியில் கீழ் அத்தகைய வெளிபடுத்துகையுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களையும் (இதனகத்துப் பின்னர் அஞ்சல் வாக்காளர்களின் நிராகரிக்கப்பட்ட வாக்குகளுக்கான கொள்கலம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) கொள்கல மொன்றில் இடுதல் வேண்டும்.

(5) இவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் (அ) (iii) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட விடயத்தில், வாக்கெண்ணும் அலுவலர் ஆளடையாள வெளிப்படுத்துகையின்மீது, "ஆளடையாள வெளிப்படுத்துகை நிராகரிக்கப்பட்டது, வாக்குச்சீட்டு எதுவும், வாக்குச்சீட்டு உறை எதுவும் கிடைக்கப்பெறவில்லை" என்ற சொற்களைக் குறித்தல் வேண்டுமென்பதுடன், அஞ்சல் வாக்காளரின் நிராகரிக்கப்பட்ட வாக்குகளுக்கான கொள்கலத்தில் அத்தகைய வெளிப் படுத்துகையை இடுதலும் வேண்டும்.

(6) இவ்வொழுங்கு விதியின் (2) ஆம் பந்தியின் (அ) (iv) என்னும்

உபபந்தியின் குறிப்பீடு செய்யப்பட்ட விடயத்தில், வாக்கெண்ணும் அலுவலர், வாக்குச்சீட்டின்மீது "நிராகரிக்கப்பட்டது, ஆளடையாள வெளிப்படுத்துகை எதுவும் கிடைக்கப்பெறவில்லை" என்ற சொற்களைக் குறித்தல் வேண்டுமென்பதுடன், அஞ்சல் வாக்காளரின் நிராகரிக்கப்பட்ட வாக்குகளுக்கான கொள்கலத்தின் வாக்குச்சீட்டை இடுதலும் வேண்டும்.

(7) இவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் (அ) (V) என்னும் உட்பகுதியின் குறிப்பீடுசெய்யப்பட்ட விடயத்தில் வாக்கெண்ணும் அலுவலர், வாக்குச்சீட்டு உறைக்குள் ஆளடையாள வெளிப்படுத்துகையொன்று வைக்கப்பட்டுள்ளதா என்பதை நிச்சயிப்பதற்காக வாக்குச்சீட்டு உறையைத் திறத்தல் வேண்டும்.

(8) இவ்வொழுங்குவிதியின் (7) ஆம் பந்தியின்கீழ் வாக்குச்சீட்டு உறையைத் திறப்பதன்மேல், அத்தகைய உறையில் ஆளடையாள வெளிப்படுத்துகையொன்றும் வாக்குச்சீட்டொன்றும் காணப்படின் அத்தகைய வெளிப்படுத்துகையானது முறைப்படி ஒப்பமிடப்பட்டுச் சாட்சியப்படுத்தப்பட்டுள்ளதெனவும், ஆளடையாள வெளிப்படுத்துகையின் மீது குறிப்பிடப்பட்ட இலக்கமானது, அத்தகைய வாக்குச்சீட்டின் அதேபோன்று குறிப்பிடப்பட்ட இலக்கமொன்றுடன் நேரொத்திருக்கின்ற தெனவும் வாக்கெண்ணும் அலுவலர் தம்மை திருப்திப் படுத்துதல் வேண்டும்; அத்துடன் -

(அ) அவ்வாறு திருப்திப்படின் அத்தகைய வெளிப்படுத்துகையை ஆளடையாள வெளிப்படுத்துகைகளுக்கான கொள்கலத்தில் இடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வாக்குச்சீட்டை அஞ்சல் வாக்காளரின் வாக்கும் சீட்டுகளுக்கான கொள்கலத்தில் இடுதலும் வேண்டும், அத்துடன்

(ஆ) அவ்வாறு திருப்திப்படாவிடின் -

(i) அத்தகைய வெளிப்படுத்துகையின்மீது "ஆளடையாள வெளிப்படுத்துகை நிராகரிக்கப்பட்டது" என்ற சொற்களைக் குறித்தல் வேண்டும்;

(ii) சமுகமளித்திருப்பவர்களான அத்தகைய வாக்கெண்ணும் முகவர்களுக்கு அத்தகைய வெளிப்படுத்துகையைக் காட்டுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளிப்படுத்துகை பற்றி வாக்கெண்ணும் அலுவலரின் முடிபுக்கெதிராக எவரேனும் முகவரால் ஏதேனும் ஆட்சேபனை தெரிவிக்கப்படின், முற்போந்த (1) ஆம் உட்பந்தியின் கீழான அத்தகைய வெளிப்படுத்துகையின் மீது குறிக்கப்பட்ட சொற்களுடன் மேலதிகமாக "நிராகரிப்புக்கெதிராக ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது" என்ற சொற்களையும் சேர்த்தல் வேண்டும்;

(iii) வாக்குச்சீட்டு உறையையும் அத்தகைய வாக்குச்சீட்டையும் அத்தகைய வெளிப்படுத்துகையுடன் இணைத்தல் வேண்டும்; அத்துடன்

(iv) அத்தகைய வெளிப்படுத்துகையையும் முற்போந்த (iii) ஆம் உட்பந்தியின் கீழ் அத்தகைய வெளிப்படுத் துகையுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களையும் அஞ்சல் வாக்காளர்களின் நிராகரிக்கப்பட்ட வாக்குகளுக்கான கொள்கலத்தில் இடுதலும் வேண்டும்.

(9) இவ்வொழுங்குவிதியின் (7) ஆம் பந்தியின்கீழ் வாக்குச்சீட்டு உறையைத் திறப்பதன்மேல் வாக்கெண்ணும் அலுவலர் -

(அ) ஓர் ஆளடையாள வெளிப்படுத்துகையை மாத்திரம் காணின், அல்லது,

(ஆ) ஒரு வாக்குச்சீட்டை மாத்திரம் காணின். அல்லது

(இ) எதையுமே காணாதுவிடின்,
அவர் -

(i) முற்போந்த (அ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட விடயத்தில், அத்தகைய வெளிப்படுத்துகை யின் மீது. ''ஆளடையாள வெளிப்படுத் துகை'' வாக்குச்சீட்டெதுவும் கிடைக்கப்பெறவில்லை என்ற சொற்களைக் குறித்தல் வேண்டும்;

(ii) முற்போந்த (ஆ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட விடயத்தில், அத்தகைய வாக்குச்சீட்டின் மீது ''நிராகரிக்கப்பட்டது, ஆளடையாள வெளிப் படுத்துகை எதுவும் கிடைக்கப்பெறவில்லை'' என்ற சொற்களைக் குறித்தல் வேண்டும்;

(iii) முற்போந்த (இ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட விடயத்தில் வாக்குச்சீட்டு உறையின்மீது ''நிராகரிக்கப்பட்டது, உள்ளடக்கங்கள் கிடைக்கப்பெற வில்லை'' என்ற சொற்களைக் குறித்தல் வேண்டும்; அத்துடன்

(iv) வாக்குச்சீட்டு உறையில் ஆளடையாள வெளிப்படுத்துகை யொன்று அல்லது வாக்குச்சீட்டொன்று காணப்படின் அத்தகைய வெளிப்படுத்துகையை அல்லது வாக்குச் சீட்டை அத்தகைய உறையுடன் இணைத்தல் வெண்டுதும்; அத்துடன்

அவர் வாக்குச்சீட்டு உறையையும், முற்போந்த (iv) ஆம் உட்பந்தியின் கீழ் அத்தகைய உறையுடன், சேர்த்து இணைக்கப்பட்ட ஆவணம் அல்லது ஆவணங்கள் எவையேனுமிருப்பின், அவற்றையும் அஞ்சல் வாக்காளர் களின் நிராகரிக்கப்பட்ட வாக்குகளுக்கான கொள்கலத்தில் இடுதல் வேண்டும்.

(10) இரண்டாம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட விடயத்தில் ''நிராகரிக்கப்பட்டது, உள்ளடக்கங்கள் எவையும் கிடைக்கப்பெறவில்லை'' என்ற சொற்களை மேலுறையின் மீது வாக்கெண்ணும் அலுவலர் குறித்தல் வேண்டும் என்பதுடன், அஞ்சல்

வாக்காளர்களின் நிராகரிக்கப்பட்ட வாக்குகளுக்கான கொள்கலத்தில் அத்தகைய உறையை இடுதலும் வேண்டும்.

(11) ஓர் ஆளடையாள வெளிப்படுத்துகைப் படிவத்தின் பின் பக்கத்தில் அடங்கியுள்ள அறிவுறுத்துரைகளுடன் இணங்க ஒப்ப மிடப்பட்டும் சாட்சிப்படுத்தப்படும் இருந்தலான்றி ஆளடையாள வெளிப்படுத்துகையானது முறைப்படி ஒப்பமிடப்படும் சாட்சியப் படுத்தப்படும் இருக்கின் றதெனக் கருதப்படுதலாகாது.

வாக்குச்சீட்டு உறைகளைத் திறத்தல்.

25. (1) இருபத்து நான்காம் ஒழுங்கு விதியின் கீழான நடவடிக்கைகள் முடிவடைவதன் மேல், வாக்கெண்ணும் அலுவலர், அஞ்சல் வாக்காளர் களின் வாக்குச்சீட்டுகளுக்கான கொள்கலத்தில் இடப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்குச்சீட்டு உறையையும் தனித்தனியாகத் திறத்தல் வேண்டும்.

(2) வாக்குச்சீட்டு உறையொன்று வாக்குச்சீட்டு எதனையும் உள்ளடக்கியிராதவிடத்து, வாக்கெண்ணும் அலுவலர் அவ்வுறையின் மீது "வாக்குச் சீட்டெதுவும் உள்வைக்கப்படவில்லை" என்ற சொற்களைக் குறித்தல் வேண்டுமென்பதுடன், அஞ்சல் வாக்காளர்களின் நிராகரிக்கப் பட்ட வாக்குகளுக்கான கொள்கலத்தில் அதனை இடுதலும் வேண்டும்.

(3) வாக்குச்சீட்டு உறையொன்று வாக்குச்சீட்டொன்றைக் கொண்டிருக் கின்றவிடத்து, வாக்கெண்ணும் அலுவலர் -

(அ) அத்தகைய உறையின் மீது குறிப்பிடப்பட்டுள்ள இலக்கமானது, அத்தகைய வாக்குச்சீட்டில் குறிப்பிடப்பட்ட அதே போன்ற இலக்கத்துடன் நேரொத்திருப்பின், அத்தகைய வாக்குச்சீட்டை அஞ்சல் வாக்காளர்களின் வாக்குச்சீட்டுகளுக்கான கொள்கலத்தில் இடுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அத்தகைய உறை வாக்குச்சீட்டென்றைக் கொண்டிருப்பதுடன் அத்தகைய வாக்குச்சீட்டின் மீது குறிப்பிடப்பட்ட இலக்க மானது அத்தகைய உறையின் மீது குறிப்பிடப்பட்ட இலக்கத்துடன் நேரோத்ததாகாவிடின், அத்தகைய உறையில் "நிராகரிக்கப்பட்டது" என்ற சொல்லைக் குறித்து, அத்தகைய வாக்குச்சீட்டை அத்தகைய உறையுடன் இணைத்து, அவற்றை அஞ்சல் வாக்காளர்களின் நிராகரிக்கப்பட்ட வாக்குகளுக்கான கொள்கலத்தில் இடுதல் வேண்டும்.

நிராகரிக்கப்பட்ட வாக்குகளையும் ஆளடையாள வெளிப் படுத்துகைகளையும் இலச்சினைவிடுதல் வாக்கெண்ணுதல்

26. இருபத்தைந்தாம் ஒழுங்கு விதியின் கீழான நடவடிக்கைகள் முடிவடைவதன் மேல், அஞ்சல் வாக்காளரின் நிராகரிக்கப்பட்ட வாக்குகளுக்கான கொள்கலத்தின் உள்ளடக்கங்களையும் ஆளடையாள வெளிப்படுத்துகைக்கான கொள்கலத்தின் உள்ளடக்கங்களையும் வாக்கெண்ணும் அலுவலர், இரு தனித் தனியான பொதிகளில் வைத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பொதிகளை இலச்சினையிடுதலும் வேண்டும்.

வாக்கெண்ணல்

27. (1) வாக்கெண்ணும் அலுவலர் வாக்குகளை எண்ணத்தொடங்கு முன்னர் அவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர், எத்தகைய வாக்கெண்ணும் முகவர்கள் சமுகமாயுள்ளார்களோ அத்தகைய

வாக்கெண்ணும் முகவர்களின் முன்னிலையில், அஞ்சல் வாக்காளர்களின் வாக்குச்சீட்டுகளுக்கான கொள்கலத்தில் இடப்பட்ட வாக்குச்சீட்டுகளை வெளியே எடுப்பதுடன், அத்தகை கொள்கலத்திலுள்ள அத்தகைய சீட்டுகளை எண்ணி எண்ணிக்கையைப் பதிதலும் வேண்டும்.

(2) அஞ்சல் வாக்காளர்களின் வாக்குச்சீட்டுகளுக்கான கொள்கலத்தில் இடப்பட்ட வாக்குச் சீட்டுகளிலுள்ள வாக்குகளை எண்ணுதலின் கட்டளைச் சட்டத்தின் 62 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவினதும் 63 ஆம் பிரிவினதும் 63 அ என்னும் பிரிவினதும் ஏற்பாடுள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

28. வாக்கெண்ணுதல் முற்றுப்பெற்றதன் மேல், உடனடியாக வாக்கெண்ணும் அலுவலரானவர் இலச்சினையிடப்பட்ட பொதிகளில் வாக்கெகெண்ணுதலை முடிவுறுத்தல்

[பி 33. 2017 இன் 16]

(அ) எண்ணப்பட்ட வாக்குச்சீட்டுகளையும்;

(ஆ) நிராகரிக்கப்பட்ட வாக்குச்சீட்டுகளையும் ;

(இ) ஒவ்வொரு வேட்பாளருக்கும் அளிக்கப்பட்ட வாக்குகள் பற்றி எழுத்திலான வெளிப்படுத்துகையையும்;

(ஈ) கட்டளைச் சட்டத்தின் 63 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி தயாரிக்கப்பட்ட கூற்றையும்;

(உ) இருபத்தாறாம் ஒழுங்கு விதியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள இலச்சினையிடப்பட்ட இரு பொதிகளையும்;

(ஊ) 27 (1) ஆம் ஒழுங்குவிதியின் கீழான வாக்கெண்ணுதல் பற்றிய பதிவேட்டையும்;

தெரிவத்தாட்சி அலுவலரிடம் உடனடியாக ஒப்படைத்தல் வேண்டும்.

இவ்வொவ்வொழுங்கு விதிகளுக்கான அட்டவணை

படிவம் அ

(3 ஆம் ஒழுங்குவிதி)

ஓர் அஞ்சல் வாக்காளராக்க கணிக்கப்படுவதற்கான விண்ணப்பம் ..... உள்ளூர [பி 33. 2012 இன் 22]

திகாரசபை இடப்பரப்பின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு, (உள்ளூரதிகார சபையின் பெயரைத் தருக.)

..... ஆகிய யான், மேற்சொல்லப்பட்ட உள்ளூரதிகாரசபை இடப்பரப்பிற்கென வலுவிலுள்ள தேருநர்கள் இடாப்பில் ..... என எனது பெயர் காணப்படுகின்றதென இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இடாப்பில் எனது பெயர் பின்வரும் தொடர் இலக்கத்திலும் வாக்கொடுப்பு மாவட்டத்திலும் வட்டாரத்தின் பெயரிலும் இலக்கத்திலும் அத்துடன் தேர்தல் மாவட்டத்திலும் காணப்படுகின்றது:-

வட்டாரத்தின் பெயரும் இலக்கம் : ..... [பி 33. 2017 இன் 16]

தேர்தல் மாவட்ட இலக்கம் : .....

எனது பெயரின் தொடர் இலக்கம் : .....

*(1) எனது தொழிலின், அதாவது -

*(அ) இலங்கைத் தரைப்படையின்/ இலங்கைக் கடற்படையின்/ இலங்கை வான்படையின் உறுப்பினரொருவராக ;

*(ஆ) பொலிசுத் திணைக்களத்தில்/ இலங்கை அரசாங்கப் புகையிரதத் திணைக்களத்தில்/ அஞ்சல் திணைக்களத்தில்/ தொலைத் தொடர்புகள் திணைக்களத்தில்/இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின்/ ..... பிராந்தியப் போக்குவரத்துச் சபையில் ஓர் அலுவலராக அல்லது சேவையாளராக;

(இ) தேர்தலுடன் தொடர்புட்ட கடமைகளைப் புரிவதற்கு நியமிக்கப் பட்டுள்ள/ நியமிக்கப்படும் சாத்தியமுள்ள பகிரங்க சேவையிலுள்ள ஓர் அலுவலராக அல்லது சேவையாளராக;

(ஈ) அத்தகைய தேர்தலுடன் தொடர்புபட்ட கடமைகளைப் புரிவதற்கு நியமிக்கப்பட்டுள்ள/ நியமிக்கப்படும் சாத்திய முள்ள இலங்கை மத்திய வங்கியின் ஓர் அலுவலராக அல்லது சேவையாளராக;

இருக்கின்ற எனது தொழிலின் குறிப்பான சந்தர்ப்பங்களின் காரணமாக;

*(2) ..... உள்ளூரதிகார சபையில் எனது வேட் பாண்மை காரணமாக, (உள்ளூரதிகார சபையின் பெயரைத் தருக) எனக்குக் குறித்தொதுக்கப்பட்ட வாக்கொடுப்பு நிலையத்தில் நேரடியாக வாக்களிக்க இயலாது/இயலாது போகும் சாத்தியமுள்ளது என்பதால். மேற்கூறப்பட்ட உள்ளூரதிகாரசபை உறுப்பினர்களின் தேர்தலில் ஓர் அஞ்சல் வாக்காளராகக் கணிக்கப்படுவதற்கு இத்தால் நான் விண்ணப்பிக்கின்றேன்.

எனது வாக்குச்சீட்டும் மற்றைய ஆவணங்களும் அனுப்பப்பட வேண்டிய முகவரி பின்வருமாறு :-

கீழே காணப்படும் குறிப்புக்கிணங்க .....
ஓர் அத்தாட்சிப்படுத்தும் அலுவல .....
ராகப் பணிபுரிவதற்கு விண்ணப்பகாரர் .....
உரித்துடையவராக இல்லாவிடின் .....
விண்ணப்பகாரரின் அத்தாட்சிப் .....
படுத்தும் அலுவலரின் அலுவலக .....
முறையான பதவிப் பெயரையும் .....
முகவரியையும் குறிப்பிடுக .....

விண்ணப்பகாரர் ஓர் அத்தாட்சிப் .....
படுத்தும் அலுவலராகப் பணிபுரி .....
வதற்கு உரித்துடையவரெனின் .....
விண்ணப்பகாரரின் அலுவலக .....

முறையான பதவிப்பெயரையும் .....
முகவரியையும் குறிப்பிடுக. .....

.....
விண்ணப்பகாரரின் ஒப்பம்

தேதி : .....

இவ்விண்ணப்பத்தில் என்னால்/ அவரால் குறிப்பிடப்பட்டுள்ள காரணத்துக்காக/ எனக்கு*/ விண்ணப்பகாரருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையத்தில் நேரடியாக வாக்களிக்க நான் இயலாதவனாக இருக்கின்றேன்*/ எனக்கு இயலாது போகும் சாத்தியமுள்ளது*/ விண்ணப்பகாரர் இயலாதவராக இருக்கின்றார*/ விண்ணப்பகாரருக்கு இயலாதுபோகும் சாத்தியமுள்ளது என நான் இத்தால் அத்தாட்சிப் படுத்துகின்றேன்.

இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான எனது அலுவலக முறையான பதவிப் பெயரும் முகவரியும் சரியானவை.

.....
அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின்*/
விண்ணப்பகாரரின் ஒப்பமும் பதவிப்பெயரும்.

தேதியும் அலுவலக முறையான இலச்சினையும் .....
*பொருத்தமற்ற சொற்களை நீக்கிவிடுக.

குறிப்பு

1. விண்ணப்பம் ஒவ்வொன்றும், விண்ணப்பகாரர் தேருநரொருவராகப் பதிவு செய்யப்பட்டிருக்கும் தேர்தல் இடப்பரப்பின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு, கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் பெயர் நியமனம் பற்றிய அறிவித்தல் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் செய்யப்படுதல் வேண்டும்.

2. விண்ணப்பம் ஒவ்வொன்றும் முறைப்படி நிரப்பப்படுதல் வேண்டும்; அல்லாவிடில் தெரிவத்தாட்சி அலுவலரால் அது நிராகரிக்கப்படுவதற்கிலக்காக இருக்கும்.

3. ஒவ்வொரு விண்ணப்பகாரரும் தெரிவத்தாட்சி அலுவலரின் முடிவு பற்றி அறிவிக்கப்படுவார்.

4. எவ்விண்ணப்பகாரரின் விண்ணப்பமானது அனுமதிக்கப்பட்டுள்ளதோ அவ் விண்ணப்பகாரர் எவருக்கும் அவர் அத்தாட்சிப்படுத்தும் அலுவலரொருவராகப் பணிபுரிய உரித்துடையவராக இருந்தால் அவரின் விண்ணப்பத்தில் குறிக்கப்பட்டிருப்பதான அவரின் பெயருக்கும் முகவரிக்கும் அல்லது அவர் அவ்வாறு உரித்துடையவராக இல்லாவிடின் எந்த அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் அலுவலக முறையான பதவிப்பெயரும் முகவரியும் அவரின் விண்ணப்பத்திற்கு குறிப்பிடப்பட்டுள்ளனவோ அந்த அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் மேற்பார்த்து வாக்குச்சீட்டும் மற்றைய ஆவணங்களும் அனுப்பப்படும்.

5. "அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்" என்ற சொல்லமைப்பு -

(அ) இலங்கைத் தரைப்படையின் அல்லது இலங்கைக் கடற் படையின் அல்லது இலங்கை வான்படையின் உறுப்பின ரொருவராக இருப்பவரான எவரேனும் விண்ணப்பகாரர் தொடர்பாக -

(i) அத்தரைப்படையின் ஏவுனராக அல்லது அக்கடற் படையின் தலைவனாக அல்லது அவ்வான் படையின் ஏவுநராக அல்லது விண்ணப்பதாரர் சேவைபுரியும் கூறின் அல்லது தாபனத்தின் உடன்மேலாகப் பொறுப்பைப் கொண்டி ருக்கும் அலுவலராக இருப்பின், விண்ணப்பகாரர் எனப் பொருளாகும் ; அல்லது

(ii) அவர், இவ்வுட்பந்தியின் (i) ஆம் வாசகத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவராக இல்லாதிருப்பின் விண்ணப்ப காரர் சேவை புரியும் கூறின் அல்லது தாபனத்தின் உடன்மேலாகப் பொறுப்பைக்கொண்டிருக்கும் அலுவல ரெனப் பொருளாகும்;

(ஆ) பகிரங்க சேவையில் அல்லது இலங்கை மத்திய வங்கியில் அலுவலரொருவராக அல்லது சேவையாளரொருவராக இருப்பவரான எவரேனும் விண்ணப்பகாரர் தொடர்பாக -

(i) ஏதேனும் அலுவலகத்தின் உடன் மேலானப் பொறுப்பைக் கொண்டிருக்கும் அலுவலராகவிருப்பின் விண்ணப்பகாரர் எனப் பொருளாகும்; அல்லது

(ii) அவர், இவ்வுட்பந்தியின் (i) ஆம் வாசகத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவராக இல்லாதிருப்பின் விண்ணப்ப காரர் சேவை புரியும் அலுவலகத்தின் உடன் மேலாகப் பொறுப்பைக் கொண்டிருக்கும் அலுவல ரெனப் பொருளாகும்; அல்லது

(இ) உள்ளூரதிகார சபைத் தேர்தலொன்றில் வேட்பாளரொருவராக இருப்பவரான எவரேனும் விண்ணப்பகாரர் தொடர்பாக, விண்ணப்பகாரர் தோருநர் ஒருவராகப் பதிவு செய்யப் பட்டுள்ள தேர்தல் இடப்பரப்புக்கான தெரிவத்தாட்சி அலுவலர் எனப்பொருளாகும்.

*(6 ஆம் ஒழுங்குவிதி).

படிவம் ஆ

ஆளடையாள வெளிப்படுத்துகைப் படிவம்

படிவத்தின் முன்பக்கம்

வாக்குச்சீட்டின் தொடர் இலக்கம் .....

(தெரிவத்தாட்சி அலுவலரினால் உப்புகுத்தப்படுதல் வேண்டும்.)

*எனது ஒப்பத்துக்குச் சாட்சிகாரரொருவராக உள்ளவரான கீழே குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர் மேற்பார்த்து மேலுள்ள தொடர் இலக்கத்தைக் கொண்ட வாக்குச்சீட்டும் அத்தகைய வாக்குச்சீட்டைக் கொண்ட உறையும் (இவை இப்பொழுது எனக்குத் தரப்பட்டுள்ளன.) எவ்வாளுக்கு அனுப்பப்பட்டதோ அவ்வாள் நானே என இத்தால் நான் வெளிப்படுதுகின்றேன்.

**மேலே உள்ள தொடரிலக்கத்தைக் கொண்ட வாக்குச்சீட்டும் அத்தகைய வாக்குச் சீட்டைக்கொண்ட உறையும் (இவை இரண்டையும் நான் இப்பொழுது முன் வைக்கின்றேன்) நேரடியாக எவ்வாளுக்கு அனுப்பப்பட்டனவோ அவ்வாள் நானே என இத்தால் நான் வெளிப்படுத்துகின்றேன்.

.....

வாக்காளரின் ஒப்பம்.

தேதி : .....

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட ஆளுக்கு, அவரின் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் என்ற எனது தன்மையில் எனது மேற்பார்வையின் கீழ். குறிப்பீடு செய்யப்பட்ட வாக்குச்சீட்டும் உறையும் அனுப்பப்பட்டன. நடக்கவுள்ள உள்ளூரதிகார சபைத் தேர்தலில் வேட்பாளரொருவராக இருப்பவரான*/எனது பொறுப்பிலுள்ள கூறில்*/தாபனத்தில்*/ அலுவலகத்தில் தொழிலாற்றுகின்ற மேலே பெயர் குறிப்பிடப்பட்ட ஆளைத் தனிப்பட்ட முறையில் நான் அறிவேன்.

வாக்காளருக்குக் கையளிக்கப்பட்ட வாக்குச்சீட்டானது எனது அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட வாக்களிப்பு அறையில் அவரால் உடனடியாகக் குறியீடு செய்யபட்டது. குறியீடு செய்யப்பட்ட வாக்குச்சீட்டானது வாக் காளரால் வாக்குச்சீட்டு உறைக்குள் இடப்பட்டு எனது முன்னிலை யிலும் வாக்காளரின் முன்னிலையிலும் உறைய னது இலச்சினை யிடப்பட்டது.

மேலேயுள்ள ஆளடையாள வெளிப்படுத்துகையானது வாக்களிப்பதற்கு முன்னர் வாக்காளரால் எனது முன்னிலையில் ஒப்பமிடப்பட்டது.

**தனிப்பட்டமுறையில் நான் அறிந்தவரான மேலே பெயர் குறிப்பிடப்பட்ட ஆளானவர் மேலே குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள வாக்குச் சீட்டையும் உறையையும் எனக்குக் காட்டியுள்ளார் என்பதுடன், மேலே உள்ள வெளிப்படுத்துகையை எனது முன்னிலையில் ஒப்ப மிட்டும் உள்ளார்.

.....

சாட்சிக்காரரின் ஒப்பமும், பதவிப் பெயரும்

தேதியும் அலுவலக முறையான இலச்சினையும் :.....

(இப்படிவத்தின் பின்பக்கத்திலுள்ள அறிவுறுத்துரைகளைப் பார்க்க)

*பொருத்தமில்லாதுவிடின் நீக்கிவிடுக.

**வாக்குசீட்டும் மற்றைய ஆவணங்களும் நோடியாக வாக்காளர் களுக்கு அவர்களின் அலுவலக முறையான பதவிப்பெயரினதும் முகவரியினதும் கீழ் அனுப்பப்பட்டனவோ, அந்த வாக்காளர்கள் தொடர்பாக மட்டுமே ஏற்புடையதல்லாவிடத்து, நீக்கிவிடப்படுதல் வேண்டும். அத்தகைய வாக்காளர்கள் தொடர்பிலான வெளிப்படுத்து கைக்கான சாட்சி, மறு பக்கத்திலுள்ள அறிவுறுத்துரைகளில் விதித் துரைக்கப்பட்டவராக இருப்பார்.

படிவத்தின் பின்பக்கம்

(அ) வாக்குச்சீட்டும் மற்றைய ஆவணங்களும், எவ்வாக்காளர் தொடர்பில் அவரின் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் மேற்பார்த்து அனுப்பப்பட்டுள்ளனவோ அவ்வாக்காளருக்கான அறிவுறுத்துரைகள்.

I. எவ்வாக்காளர் தொடர்பில் வாக்குச்சீட்டும் மற்றைய ஆவணங்களும் அவரின் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் மேற்பார்த்து அனுப்பப் பட்டுள்ளனவோ அவ்வாக்காளர் வெளிப்படுத்துகையின்மீது ஒப்ப மிடுவதன் முன்னர் -

(i) அத்தகைய அலுவலரின் மேற்பார்ப்பின் கீழ் வாக்காளருக்கு ஆளடையாள வெளிப்படுத்துகைப்படிவமும் வாக்குச்சீட்டும் அனுப்பிவைக்கப்பட்ட உறையைப் பார்த்தல் வேண்டும்;

(ii) ஆளடையாள வெளிப்படுத்துகையில் குறித்துரைக்கப் பட்டுள்ள வாக்குச்சீட்டின் தொடர் இலக்கமானது. அவருக்குக் கொடுக்கப்பட்ட வாக்குச் சீட்டில் காணப்படுகின்ற, அதே இலக்கத்துடன் ஒத்ததாக உள்ளதா எனப் பார்த்தல் வேண்டும்.

வாக்காளரானவர் அதன்பின்னர் அவரின் சாட்சியாகப் பணிபுரிய வேண்டிய அத்தகைய அலுவலரின் முன்னிலையில் வெளிப்படுத்து கையை ஒப்பமிடுதல் வேண்டும்.

2. வாக்காளருக்கு ஒரு வாக்கு மட்டுமே உண்டு

3. வாக்காளர், வாக்குச்சீட்டொன்றின் வலதுகைப் பக்கத்தில் அந்நோக்கத்துக்கென ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வெற்றிடத்தில், எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு அவர் வாக்களிக்கின்றாரோ, அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் பெயருக்கும் சின்னத்துக்கும் எதிரே அத்தகைய சீட்டொன்றை புள்ளடியால் x என இவ்வாறு குறிப்பிட்டு வாக்களித்தல் வேண்டும். அத்துடன் அத்தகைய கட்சியால் அல்லது தொகுதியால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட 3 வேட்பாளர்களுக்கு மேற்படாத வேட்பாளர்களுக்குத் தமது முன்னுரிமைகளை, ஒவ்வோர் அத்தகைய வேட்பாளருக்கு குறித்தொதுக்கப்பட்ட தொடரிலக்கத்தை உள்ளடக்கிய கூட்டின்மீது அத்தகைய வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் குறித்தொதுக்கப்பட்ட தொடரி லக்கத்தை நேரொத்த தொடர் இலக்கத்தைக் கொண்ட ஓர் கூட்டின் வலது பக்கத்தில் தோன்றுகின்ற ஒரு

தொடர் இலக்கத்தினை கொண்ட ஒரு கூட்டில் அல்லது பல கூடுகளில் அல்லது ஏதேனும் ஒரு அல்லது பல வெற்றுக் கூடுகளில் மூன்றுக்கு மேற்படாத ("X") என்ற புள்ளடியை இடுவதன் மூலம் சுட்டிக்காட்டலாம்"

4. வாக்காளர், அவர் எவ்வாறு வாக்களித்துள்ளார் என்பதைப் பார்க்க எவரேனும் ஆளை அனுமதித்தலாகாது.

5. வாக்காளர் வாக்களித்ததன் பின்னர், உடனடியாக வாக்குச் சீட்டைமடித்து எவ்வுறையின் மீது "வாக்குச்சீட்டு உறை" என்ற சொற்கள் அச்சிடப்பட்டுள்ளனவோ, ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சிறிய அவ்வுறையை அவரின் சாட்சியிடமிருந்து பெற்று, வாக்குச்சீட்டின் முன்பக்கத்தைக் காட்டாது குறியீடு செய்யப்பட்ட வாக்குச்சீட்டை அதில் இட்டு அவ்வு றையை ஒட்டுதலும் வேண்டும். அதனை அடுத்து வாக்காளரினதும் அவரது சாட்சியினதும் முன்னிலையில் உறையானது இலச்சினை யிடப்படுதல் வேண்டும்.

வாக்காளர் அதன்பின்னர் இலச்சினையிடப்பட்ட வாக்குச்சீட்டு உறையை அவரது பூர்த்தி செய்யப்பட்ட ஆளடையாள வெளிப்படுத் துகையுடன் சேர்த்து தெரிவத்தாட்சி அலுவலருக்கு முகவரியிடப்பட்ட மற்றைய பெரிய உறையிலிட்டு. உறையை ஒட்டி தாமதமின்றி அனுப்பப்படுவதற்காக அவரின் சாட்சியிடம் கொடுத்தல் வேண்டும்.

6. ஓர் அஞ்சல் வாக்குச்சீட்டானது. நியமிக்கப்பட்ட வாக்கெடுப்பு நாளில் வாக்கெடுப்பு முடிவடையுமுன்னர் தெரிவத்தாட்சி அலுவலரை அடையுமாறு திருப்பியனுப்பப்பட்டாலன்றியும். முறையாக ஒப்பமிடப் பட்டதும் சாட்சிப்படுத்தப்பட்டதுமான ஆளடையாள வெளிப் படுத்துகையுடன் சேர்த்து அனுப்பிவைக்கப்பட்டாலன்றியும் முறையாகத் திருப்பியனுப்பி வைக்கப்படவில்லையெனக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) வாக்குச்சீட்டும் மற்றைய ஆவணங்களும் எவ்வாக்காளர் தொடர்பில் அவரின் அலுவலகமுறையான பதவிப் பெயரினதும், முகவரியினதும் கீழ் நேரடியாக அனுப்பப்பட்டனவோ அவ்வாக்காள ருக்கான அறிவுறுத்துரைகள்.

1. வாக்காளர் ஆளடையாள வெளிப்படுத்துகையை ஒப்பமிட முன்னர் அத்தகைய வெளிப்படுத்துகையை அவர் எவ்வாளுக்கு முன்னால் ஒப்பமிட வேண்டுமோ அவ்வாளுக்கு -

(அ) அத்தகைய வெளிப்படுத்துகையை குறித்துரைக்கப்பட்டுள்ள தான அதே இலக்கத்தைக் கொண்டிருக்கின்ற வாக்குச் சீட்டைக் காட்டுதல் வேண்டும், அத்துடன்

(ஆ) வாக்காளர் ஆளடையாள வெளிப்படுத்துகைப் படிவத்தையும் வாக்குச் சீட்டையும் கிடைக்கப்பெற்ற உறையைக் காட்டுதல் வேண்டும்.

2. பின்வருபவராக, இருக்கவேண்டிய ஒரு கட்சியின் முன்னிலையில் அதாவது -

(அ) வாக்காளரானவர் இலங்கைத் தரைப்படையின், இலங்கைக் கடற்படையின் அல்லது இலங்கை வான்படையின் உறுப்பினரொருவராக இருப்பின் அத்தகைய தரைப்படையின், கடற்படையின் அல்லது வான்படையின் ஆணை பெற்று அலுவலரொருவரின்,

(ஆ) வாக்காளரானவர் பகிரங்க சேவையில் அல்லது இலங்கை மத்திய வங்கியில் அலுவலரொருவராக அல்லது சேவையாள ரொருவராக இருப்பின் அத்தகைய சேவையின் உயர் அலுவலரொருவரின் அல்லது வாக்காளருக்கு உயர் அலுவலர் எவரும் இல்லாவிடின், அத்தகைய சேவையின் வேரெவ ரேனும் அலுவலரொருவரின், முன்னிலையில் வாக்காளர், ஆளடையாள வெளிப்படுத்துகைப் படிவத்தை ஒப்பிடுதல் வேண்டும்.

3. வாக்காளருக்கு ஒரு வாக்கு மட்டுமே உண்டு

4. வாக்காளர், வாக்குச்சீட்டென்றில் வலது கைப்பக்கத்தில் அந்நோக்கத்துக்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வெற்றிடத்தில், எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சிக்கு, அல்லது சுயேச்சைக் குழுவுக்கு அவர் வாக்களிக்கின்றாரோ, அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் பெயருக்கும் சின்னத்துக்கும் எதிரே அத்தகைய சீட்டொன்றைப் புள்ளடியாக X என இவ்வாறு குறிப்பிட்டு வாக்களித்தல் வேண்டும். அத்துடன் அத்தகைய கட்சியால் அல்லது தொகுதியால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட 3 வேட்பாளர்களுக்கு மேற்படாத வேட்பாளர்களுக்குத் தமது முன்னுரிமைகளை ஒவ்வோர் அத்தகைய வேட்பாளர்களுக்கும் குறித்தொதுக்கப்பட்ட தொடரிலக்கத் துக்கு நேரொத்த தொடரிலக்கத்தை உள்ளடக்கிய கூட்டின் மீது அத்தகைய வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் குறித்தொதுக்கப்பட்ட தொட ரிலக்கத்தை நேரொத்த தொடர் இலக்கத்தைக்கொண்ட ஒரு கூட்டின் வலது பக்கத்தில் தோன்றுகின்ற ஏதேனும் ஒரு தொடர் இலக்கத்தினைக் கொண்ட ஒரு கூட்டில் அல்லது பல கூடுகளில் அல்லது ஒரு அல்லது பல வெற்றுக் கூடுகளில் மூன்றுக்கு மேற்படாது ("X" என்ற) புள்ளடியை அல்லது புள்ளடிகளை இடுவதன் மூலம் காட்டப்படலாம்.

5. வாக்காளர், அவர் எவ்வாறு வாக்களித்துள்ளார் என்பதைப் பார்க்க எவரேனும் ஆளை அனுமதித்தலாகாது.

6. வாக்காளர், வாக்களித்தன் பின்னர் உடனடியாக உள்ளேவைக்கப் பட்டிருந்த எவ்வுறையின்மீது "வாக்குச்சீட்டு" உறை என்ற சொற்கள் அச்சிடப்பட்டள்ளனவோ, அச்சிறிய உறையில் குறியீடு செய்யப்பட்ட வாக்குச்சீட்டை இட்டு ஒட்டுதலும் வேண்டும். அதன்பின்னர், உறை யானது வாக்காளரதும் சாட்சியினதும் முன்னிலையில் இலச்சினை யிடப்படுதல் வேண்டும். அதன்பின், வாக்காளர் இலச்சினையிடப்பட்ட வாக்குச்சீட்டு உறையை ஆளடையாள வெளிப்படுத்துகையுடன் சேர்த்து தெரிவத்தாட்சி அலுவலருக்கு முகவரியிடப்பட்டதும் உள்ளே வைக்கப் பட்டிருப்பதுமான மற்றைய பெரிய உறையிலிட்டுத் தாமதமின்றி அஞ்சல் மூலம் அவற்றை அனுப்புதல் வேண்டும். வாக்காளர் வாக்குச் சீட்டை உடனேயே திருப்பி வைக்காவிடில் எண்ணப்படுவதற்கெனச் சேர்ப்ப தற்கான காலம் தவறிவிடும்.

7. ஓர் அஞ்சல் வாக்குச்சீட்டானது, நியமிக்கப்பட்ட வாக்கெடுப்பு நாளில் வாக்கெடுப்பு முடிவடையுமுன்னர் தெரிவத்தாட்சி அலுவலர் அடையுமாறு திருப்பியனுப்பப்பட்டாலன்றியும் முறையாக ஒப்பமிடம் பட்டதும், சாட்சியப்படுத்தப்பட்டதுமான ஆளடையாள வெளிப்படுத் துகையுடன் சேர்த்து அனுப்பி வைக்கப்பட்டாலன்றியும் முறையாகத் திருப்பியனுப்பி வைக்கப்படவில்லையெனக் கருதப்படுதல் வேண்டும்.

படிவம் இ 9 (1) ஆம் ஒழுங்கு விதி

இரகசியம் பேணுவதற்கான வெளிப்பத்துகைப் படிவம்

எனக்கு வாசித்துக் காட்டப்பட்டவையான இச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையிலுள்ள ஒழுங்குவிதிகளின் 9 ஆம் ஒழுங்குவிதியின் (1) ஆம் பந்தியால் தடை செய்யப்பட்டுள்ள எதையும் இந்நடவடிக்கை களில் நான் செய்யமாட்டேனென நான் பயபக்தியாக வாக்குறுதி செய்து வெளிப்படுத்துகின்றேன்.

.....
வெளிப்படுத்துகை செய்பவரின் ஒப்பம்.

.....
எவ்வாளின் முன்னிலையில்
வெளிப்படுத்துகை செய்யப்படுகின்றதோ
அவ்வாளின் ஒப்பம்.

தேதி: .....

குறிப்பு - எவ்வாளின் முன்னிலையில் வெளிப்படுத்து கையானது செய்யப்படுகின்றதோ அவ்வாளினால் வெளிப்படுத்துகை செய்பவருக்கு குறிப்பீடு செய்யப்பட்ட பந்தி வாசித்துக் காட்டப்படுதல் வேண்டும்.

பத்தாம் அட்டவணை

வலிமையிழப்பிற்கு உட்பட்ட ஆளொருவராக வாக்களிப்பதற்கென உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி [அத்தியாயம் 262 - பிரிவு 54 (2) (இ)] வழங்கப்படும் தகுதிச்சான்றிதழ் [பி4, 2011இன் 28]

பாகம் I

விண்ணப்பதாரரின்/வாக்காளரின் வெளிப்படுத்துகை

முழுப்பெயர் :.....
முகவரி :.....
.....
தொழில் : .....
பிறந்த திகதி : .....
தே.அ.அ./சாரதி உரிமம்/கடவுச் சீட்டு இல : .....
..... என்னும்
முகவரியைச் சேர்ந்த .....
ஆகிய நான் .....
மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் ஒருவராகவிருந்து
வலிமையிழப்பிற்குட்பட்டவராக இருக்கின்றமையால் மேற்கூறப்பட்ட விவரங்

கள் உண்மையானவையும் செவ்வையானவையுமாகும் என வெளிப்படுத்துவதுடன் எதிர்வரும் ..... (தேர்தலின் பெயர்) சட்டத்தால் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு வலிமையிழப்பிற்குட்பட்ட ஆளொருவராக வாக்களிப்பதற்கு என்னை உரித்துடையவராக்கும் தகுதிச் சான்றிதழொன்றின் வழங்கீட்டிற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றேன்.

திகதி : ..... வாக்காளரின் பெயர் : .....

வாக்காளரின் கையொப்பம் :.....

கிராம அலுவலரின் சான்றிதழ்

மேலே தரப்பட்டுள்ள விவரம் சரியானதெனவும் ..... (விண்ணப்பதாரரின்/வாக்காளரின் பெயர்) என்பவரின் விண்ணப்பம் தொடர்பில் பின்வரும் தகவல் என்னால் பேணப்படும் பதிவேடுகளுக்கிணங்க சரியானதெனவும் நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

பெயர் : .....

வாக்காளர் நிரலிலுள்ள இல : .....

மாகாணம் : .....

மாவட்டம் : .....

தேர்தற் பிரிவு : .....

இயைபான வேறு தகவல் : .....

தேதி : .....

கிராம அலுவலரின் கையொப்பம் :.....

கிராம அலுவலரின் பெயர் : .....

பிரிவு : .....

இலச்சினை : .....

பாகம் II

அரசாங்க மருத்துவ அலுவலரின் சான்றிதழ்

எதிர்வரும் ..... (தேர்தலின் பெயர்) வலிமையிழப்பிற்கு உட்பட்ட ஆளொருவராக வாக்களிப்பதற்கு உரித்துடையவராவதற்கென விண்ணப்பித்துள்ள..... என்ற முகவரியைச் சேர்ந்த ..... என்பவரை நான் நேரடியாகப் பரிசோதனை செய்துள்ளேன் என்பதுடன் ..... (வாக்காளரின்/விண்ணப்பதாரரின் பெயர்) சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு வலிமையிழப்பிற்கு உட்பட்ட ஆளொருவராக வாக்களிப்பதற்கு உரித்துடையவராவர்/உரித்துடையவராகமாட்டார் *எனவும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

தேதி : .....

அரசாங்க மருத்துவ அலுவலரின் பெயர் : .....

அரசாங்க மருத்துவ அலுவலரின் கையொப்பம் : .....

இலச்சினை : ..... .''.